

# தமிழ்மொழி வரலாறு

## இ.ஆ.ப. தேர்வு கருவி நூல் - 2




உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

International Institute of Tamil Studies

# இந்திய ஆட்சிப் பணி
## தமிழ் முதன்மைத் தாள்
## (கருவி நூல்)

*பதிப்பாசிரியர்கள்*

முனைவர் கோ. விசயராகவன்
முனைவர் ஆ. மணவழகன்

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை-600 113

# நூல் விவரக் குறிப்பு

13134


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | இந்திய ஆட்சிப் பணி - தமிழ் முதன்மைத் தாள் (கருவி நூல்) (தமிழ் மொழி வரலாறு (ம) தமிழ் இலக்கிய வரலாறு) |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் கோ. விசயராகவன்<br>இயக்குநர்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>தரமணி, சென்னை-600 113 |
| | : | முனைவர் ஆ. மணவழகன்<br>இணைப் பேராசிரியர்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>தரமணி, சென்னை-600 113 |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>தரமணி, சென்னை-600 113<br>தொலை பேசி எண். 044 - 22542992 |
| வெளியீட்டு எண் | : | 910 |
| பதிவு எண் (ISBN) | : | 978-93-85165-30-6 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2016 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6 கிகி டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 டம்மி |
| எழுத்தின் அளவு | : | 10 அளவு |
| பக்க எண்ணிக்கை | : | xii + 214 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | ரூ.120/- (ரூபாய் நூற்று இருபது மட்டும்) |
| அச்சகம் | : | ஸ்ரீ சரவணா அச்சகம்<br>148, தம்புத் தெரு, சென்னை-600 001<br>9444265471 |
| பாடம் | : | இ.ஆ.ப. - கருவி நூல் |

**திரு. கே.சி. வீரமணி**
மாண்புமிகு பள்ளிக்கல்வி, தமிழ்வளர்ச்சி மற்றும்
தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர்
தமிழ்நாடு அரசு
சென்னை - 600 009.

## வாழ்த்துரை

இந்தியாவைப் பல்வேறு மாநிலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மாநிலத்தையும் ஆளுகின்ற பொறுப்பை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மை பெற்ற கட்சியினர் ஏற்கின்றனர். மக்களாட்சியில் பெரும்பான்மை மக்களின் மனப்பாங்கிற்கு இடமளித்து நடத்துவதாக இந்த ஆட்சி அமையும்.

தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையின்கீழ் தமிழக நிர்வாக அமைப்பு இயங்குகிறது. இதற்குத் தலைமை வகிப்போர் தலைமைச் செயலர் உள்ளிட்ட இந்திய ஆட்சிப் பணியாளர்கள். இன்று தமிழக ஆட்சி பல செயலாளர்கள் பொறுப்பிலும் ஒரு தலைமைச் செயலாளர் பொறுப்பிலும் இருந்து இயங்கி வருகிறது. அந்த வகையில் முந்நூற்றுக்கும் மேற்பட்ட இ.ஆ.ப. அலுவலர்கள் பணியாற்றுகிறார்கள். மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாகத் தேர்வு எழுதுவோர் தங்களது பாடங்களை ஆங்கிலத்தின் வாயிலாகவோ அல்லது இந்திய மொழியின் வாயிலாகவோ எழுதுகின்றனர். அப்படி அவர்கள் எழுதும்போது, புகுநிலை என்ற தேர்வு (Preliminary Examination) எழுதி வெற்றி பெற்றாக வேண்டும். அதையடுத்து, முதன்மைத் தேர்வில் (Main Examination) வெற்றி பெற வேண்டும். இதில் வெற்றி பெற்றவர்கள் நேர்காணலுக்கு (Interview) சென்று அங்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இந்த நிலையில், சில பல ஆண்டுகளாகவே அந்தந்த மாநில மொழிகளில் இத்தேர்வை எழுத முடியும் என்ற சூழ்நிலையும் அதற்கான வாய்ப்பும் உருவாகியுள்ளன.

அதைப் போல் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு தேர்வெழுதி வெற்றிபெறுவோரின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆட்சிப்பணியில் ஈடுபட விரும்பும் ஆர்வலர்களுக்கு உதவும் வகையில் பாடநூல்களையும் திறம்பட தயாரித்து அன்னைத் தமிழுக்கு

அரும்பணியை ஆற்றிவரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில் **இந்திய ஆட்சிப் பணி தமிழ் முதன்மைத் தாள் (கருவி நூல்)** என்ற இந்த அரிய நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தயாரித்து வெளியிடுகிறது.

ஆர்வலர்கள் இத்தகைய நூல்களைப் பயன்படுத்தி இ.ஆ.ப. தேர்வுகளில் வெற்றிகளை ஈட்டிப் பெருமை சேர்க்க வேண்டும்.

மொழியியல், சங்கப் பாடல்களில் தமிழர்களின் வாழ்வியல், உரைநடை இலக்கியங்களின் தோற்றம், சமூக இயக்கங்களின் தாக்கம், திறனாய்வியல், தமிழாய்வு, ஒப்பிலக்கியம், தமிழ் இதழியலின் வரலாறு என்ற பல்வேறு பரிமாணங்கள் குறித்த வினா விடைகள் கொண்ட முதல் தாளும், பல்வேறு இலக்கியம் தொடர்பான வினாக்களும் விடைகளும் அடங்கிய இரண்டாம் தாளும் இந்நூலில் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த 10 தமிழ்ப் பேராசிரியர்கள் தயாரித்துள்ளனர்.

நாளைய இந்திய ஆட்சிப் பணியில் ஈடுபட இருப்போர் இந்நூலைப் படித்து தேர்ச்சி பெற்று பணியில் ஈடுபடவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் தொலைநோக்குச் சிந்தனைகளை மக்களுக்கு எடுத்துச் செல்லும் வகையில் ஆட்சிப் பணிகளிலும் மக்கள் நலப் பணிகளிலும் ஈடுபட வாழ்த்துகிறேன். அதற்கு இந்நூல் பெரிதும் துணைபுரியும் எனக் கருதுகிறேன்.

**கே.சி. வீரமணி**

முனைவர் மூ. இராசாராம் இஆப
அரசுச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை
தமிழ் நாடு அரசு
சென்னை 600 009

## வாழ்த்துரை

வெளிப்படையான ஒளிவுமறைவற்ற நிருவாகத்தை மக்களுக்கு அளிக்கும் நோக்குடன் செயல்பட்டுவரும் தமிழ்நாடு அரசு, எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்னும் இலக்கினை எய்திட - ஆட்சியில், ஆவணத்தில், அயலவர்தம் காட்சியில் தமிழை இடம்பெறச் செய்திடப் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. பெயர்ப்பலகைகளில் தமிழ், அரசு ஆணைகள் அனைத்தும் தமிழில் என்று ஆவணங்களில் தமிழ் இடம்பெறத் தொடங்கிவிட்டது. ஆட்சியில் தமிழைக் கொண்டுவர, கடந்த ஐம்பதாண்டுகளுக்கும் மேலாகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆட்சியில் தமிழைக் கொண்டு வருவதில் இருவகையான பணிகள் இன்றியமையாதவை. முதலாவது, நிருவாக மொழியாகத் தமிழை வளர்த்தெடுத்தல். இதற்காக ஆட்சிச்சொல் அகராதி, சிறப்புச் சொல் துணை அகராதிகள் ஆகியவற்றை அரசு வெளியிட்டு வருகிறது.

இரண்டாவதாக ஆட்சிப் பணியாளர்களிடம் தமிழைக் கொண்டு செல்வது. இதில் ஆட்சிப் பணிக்கு வந்த பின்னர் தமிழை அறிந்து பயன்படுத்தத் தொடங்குவது ஒருநிலை. ஆட்சிப் பணித் தேர்வு நிலையிலேயே தமிழைக் கொண்டுசெல்வது இன்னொரு நிலை. அகவை முதிர்ந்த தமிழறிஞர் நிதியுதவியை ரூ.2000/- ஆக உயர்த்தியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா. அத்தமிழறிஞர்கள் தமிழ்நாடெங்கும் பயணம் செய்ய கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டை தந்தவர் மாண்புமிகு அம்மா.

அறிவியல் தமிழை வளர்க்க ஆண்டுதோறும் புதிய தமிழ்க் கணினி மென்பொருள் உருவாக்குபவர்களுக்கு முதலமைச்சர் கணினித் தமிழ் விருது வழங்க ஆணையிட்டவர் நம் மாண்புமிகு அம்மா.

**தமிழ் மக்களின் பேரரசியாக வளர்ந்துவரும் நம் மாண்புமிகு அம்மா அவர்களின்** இக்கால ஆட்சியில் கபிலர் விருது, கம்பர் விருது, உ.வே.சா. விருது, ஜி.யு.போப் விருது, உமறுப் புலவர்

விருது, சொல்லின் செல்வர் விருது, ஔவையார் விருது, இளங்கோவடிகள் விருது, முதலமைச்சர் கணினித்தமிழ் விருது மற்றும் மாவட்டந்தோறும் தமிழ் அமைப்பு வைத்துத் தமிழ்த்தொண்டு ஆற்றுபவருக்கு 'தமிழ்ச் செம்மல்' விருது, தலா ரூ.25,000/- என அறிவித்துள்ளார் புரட்சித்தலைவி அம்மா.

ஆட்சிப்பணித் தேர்வு எழுதுகிறவர்கள் தமிழை விருப்பப் பாடமாகத் தேர்ந்தெடுக்கவும் தமிழிலேயே தேர்வெழுதவும் இப்போது பெருவிருப்புடன் முன்வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான தரமான குறிப்பு நூல்களும் கருவி நூல்களும் தமிழில் போதுமான அளவில் இல்லை என்ற குறையினைப் போக்கும் வகையிலும் தமிழில் தேர்வெழுத முன்வருவோரை ஊக்கப்படுத்தும் போக்கிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வாழ்த்துக்களோடு இந்நூல் வெளியிடப்படுகிறது.

அன்புடன்

(மு. இராசாராம்)

4.8.14

முனைவர் கோ. விசயராகவன், எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்., பிஎச்.டி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

# அணிந்துரை

பார் புகழும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆய்வுப் பணி, கல்விப் பணி, பதிப்புப் பணி எனப் பல்வேறு தளங்களில் செவ்வனே தமிழ்ப்பணி ஆற்றி வருகிறது. தமிழரின் கலை, இலக்கியம், இலக்கணம், பண்பாடு, மொழி எனப் பல்வேறு பொருண்மைகளில் ஆய்வுகள் நிகழ்த்தி, அவற்றை நூலாக்கம் செய்து வெளியிட்டு வருகிறது. அரிய நூல்கள் பதிப்பிப்பதில் ஆர்வம் காட்டி, தமிழகத்தில் தற்போது காணக்கிடைக்காத பல அரிய நூல்களைப் பதிப்பித்து, தமிழ்க்கூறு நல்லுலகின் எண்ணத்தை ஈர்த்துள்ளது. புது முயற்சியாக தற்போது, குடிமைப் பணித் தேர்வில் தமிழ் முதன்மைத் தாளுக்கான கருவி நூலினை வெளியிட்டு பெருமைகொள்கிறது.

இளைய தலைமுறையின் எண்ணக்கிடைக்கையாக உறைவது ஆட்சிப்பணித் தேர்வாகும். குறிப்பாக, தாய்மொழியாம் தமிழ்மொழியில் தேர்வு எழுதுவதும், தமிழ் இலக்கியத்தை முதன்மைத் தாளாகத் தேர்ந்து படிப்பதும் தற்போது அதிகரித்துள்ளது. ஆனால், அதற்கான கருவி நூல்கள் அவர்களுக்கு முறையாக கிடைப்பதில்லை. தமிழை முதன்மைப் பாடமாகக் கற்ற மாணவர்களுக்கும்கூட மூல நூலினைத் தேர்ந்து, கருத்தினை எளிதில் உணர்ந்து, அவற்றைக் கட்டுரைகளாக்கிப் படிப்பதென்பது சற்று கடினமாகவே உள்ளது.

இவ்விடர்ப்பாட்டினைக் களைய, மாணவர்களின் ம்திப்பெண்களைக் கூட்ட ஆட்சிப்பணித் தேர்வில் தமிழ் முதன்மைத் தாளுக்கானப் பாடத்திட்டங்களைக் கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ் முதன்மைத் தாளுக்கானத் தனிக் கருவிநூல் இல்லை என்ற குறையை இந்நூல் போக்கும் என்பதிலும் மாணவர்களின் உழைப்பை, தேடலை எளிமையாக்கும் என்பதிலும் ஐயமில்லை. மேலும், தமிழ் இலக்கியம் கல்லாதவர்க்கும் எளிதில் விளங்கும் வண்ணம் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நூல் உருவாக்கத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன பேராசிரியர்கள் தங்களின் பங்களிப்பைச் சீரிய முறையில் ஆற்றியுள்ளனர். மாதிரி வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சிறப்பான வடிவத்தில் கட்டுரைகள் வழங்கியுள்ளனர். அவர்களுக்கு என்

பாராட்டுகள். சமூகவியல், கலை (ம) பண்பாட்டுப் புலத்தின் இணைப் பேராசிரியர் முனைவர் ஆ.மணவழகன் அவர்கள், இப்பணியை ஒருங்கிணைப்புச் செய்ததோடு கட்டுரைகளைச் செப்பம் செய்து சிறந்த முறையில் நூலாக்கம் செய்துள்ளார். அவருக்கு என் பாராட்டுகள்.

**தமிழும், தமிழ்நாடும் வாழ்ந்திட, அல்லும் பகலும் அயராது உழைத்துவரும் தமிழ்நாடு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு இதயம் கனிந்த** நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துவரும் பள்ளிக் கல்வி மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் **மாண்புமிகு அமைச்சர் கே.சி.வீரமணி** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் **மூ.இராசாராம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ சரவணா அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.



**இயக்குநர்**

முனைவர் ஆ.மணவழகன் எம்.ஏ., எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
இணைப் பேராசிரியர்
சமூகவியல், கலை (ம) பண்பாட்டுப் புலம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## பதிப்புரை

பெரும்பான்மை இளைஞர்கள் தம் கல்விக் காலத்தில் இந்திய ஆட்சிப்பணி (இ.ஆ.ப.) குறித்த கனவினைக் கொண்டிருப்பர். அவர்களுள் சரிபாதியேனும் ஒருமுறையாவது குடிமைப் பணித் தேர்விற்கு விண்ணப்பிப்பர். ஆனால் முறையான திட்டமிடாமை, தேவையான கருவி நூல்கள் கிடைக்கப் பெறாமை போன்றவை அவர்களின் கனவை நனவாக்க தடைகளாய் அமைகின்றன. இளைஞர்களைக் கனவுகானச் சொல்வதோடு அவர்களின் கனவு நனவாக நல்வழியும் காட்டவேண்டும். குடிமைப் பணித் தேர்வில் தமிழ் இலக்கியத்தை முதன்மைப் பாடமாக எடுத்துப் படிக்கும் இளைஞர்களின் கனவை நனவாக்கும் சிறு முயற்சியே இந்நூல்.

இம்முயற்சிக்கு வித்திட்டவர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ஆற்றல்சால் இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள். பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம் தொடர்பில் எனக்கிருந்த பணிச்சுமை காரணமாக இந்நூல் வெளிவருவது சற்று தாமதமானது. ஆயினும், இயக்குநர் அவர்களின் தொடர் தூண்டுதலின் காரணமாக தற்போது வெளிவருகிறது. எங்களை இயக்கிக் கொண்டிருக்கும் இயக்குநர் அவர்களுக்கு நன்றி.

இந்நூல் வெளிவருவதில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன பேராசிரியர்களின் பங்களிப்பு முதன்மையானது. சங்க இலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு, காப்பியம், பக்தி இலக்கியம், இராமாயணம், கவிதை, சிறுகதை, புதினம், நாடகம், மொழியியல், நாட்டுப்புறவியல் எனப் பரந்துபட்ட எல்லையைக் கொண்டது இப்பாடம். ஆயினும், பிரிக்கப்பட்ட அலகுகளின் அடிப்படையில் மாதிரி வினாக்களுக்கு ஆர்வத்துடன் கட்டுரையாக்கம் செய்து வழங்கியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் என் நன்றி உரியது.

ஒருசில கருவி நூல்களும், குறிப்பிட்ட சில தரவுகளும் கிடைக்கப்பெறாத சூழலில் அவற்றைத் தேடித்தந்து, பதிப்புப் பணியில் உதவிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வு மாணவர்களுக்கு என் அன்பான நன்றி. நூலினைக் கணினி அச்சு செய்த திருமதி கௌசல்யா அவர்களுக்கும், வெளியிட்ட சரவண அச்சகத்தார்க்கும் என் நன்றி.

**ஆ.மணவழகன்**

## பங்களித்த ஆசிரியர்கள்

1. முனைவர் கோ. விசயராகவன்
2. முனைவர் தி. மகாலட்சுமி
3. முனைவர் பா. இராசா
4. முனைவர் ப. செல்வக்குமார்
5. முனைவர் ஆ. மணவழகன்
6. முனைவர் கோ. பன்னீர்செல்வம்
7. முனைவர் து. ஜானகி
8. முனைவர் சு.தாமரைப்பாண்டியன்
9. முனைவர் நா. சுலோசனா
10. முனைவர் கா.காமராஜ்
11. முனைவர் வி.இரா. பவித்ரா

# பாடத்திட்டம்

**Part : 1 History of Tamil Language**

Major Indian Language Families-The Place of Tamil among Indian languages in general and Dravidian in particular-Enumeration and Distribution of Dravidian languages.

The language of Sangam literature-The language of medieval Tamil:Pallava period only-Historical study of Nouns, Verbs, adjectives, adverbs Tense markers and case markers in Tamil.

Borrowing of words from other languages into Tamil-Regional and social dialects-difference between literary and sopken Tamil.

**Part: 2 History of Tamil Literature**

Tolkappiyam-Sangam Literature-The division of Akam and puram-The secular characteristics of Sangam Literature-The development of Ethical literature-Silappadikaram and Manimekalai.

**Part: 3 Devotional Literature** (Alwars and Nayanmars) The bridal mysticism in Alwar hymns-Minor literary forms (Tutu, Ula, Parani, Kuravanji)
Social factors for the development of Modern Tamil literature: Novel, Short story and New Poetry-The impact of various political ideologies on modern writings.

## Section-B

**Part: 1 Recent trends in Tamil Studies**

Approaches to criticism: Social, psychological, historical and moralistic-the use of criticism-the various techniques in literature: Ullurai, Iraicchi, Thonmam (Myth) Otturuvagam (allegory), Angadam (Satire), Meyppadu, Padimam (image), Kuriyeedu (Symbol), Irunmai (ambiguity)-The concept of comparative literature-the principle of comparative literature.

**Part: 2 Folk literature in Tamil :** Ballads, Songs, proverbs and riddles-Sociological study of Tamil folklore. Uses of translation-Translation of Tamil works into other languages-Development of journalism in Tamil.

**Part: 3 Cultural Heritage of the Tamils**

Concept of Love and War-Concept of aramthe ethical codes adopted by the ancient Tamils in their warfare-customs, beliefs, rituals, modes of worship in the five Thinais. The cultural changes as revealed in post sangam literature-cultural fusion in the medieval period (Jainism & Buddhism). The development of arts and architecture through the ages (Pallavas, later cholas and Nayaks). The impact of various political, social, religious and cultural movements on Tamil Society. The role of mass media in the cultural change of contemporary Tamil society

# முதன்மைத் தேர்வு

## தாள் II

## தமிழ் இலக்கியம்

### பிரிவு அ

**பகுதி 1 பழந்தமிழ் இலக்கியம்**

- குறுந்தொகை (1-25 பாடல்கள்)
- புறநானூறு (182-200 பாடல்கள்)
- திருக்குறள் பொருட்பால் : அரசியலும் அமைச்சியலும் (இறைமாட்சி முதல் அவையஞ்சாமை வரை)

**பகுதி 2 காப்பிய இலக்கியம்**

- சிலப்பதிகாரம்: மதுரைக் காண்டம் மட்டும்
- கம்பராமாயணம்: கும்பகர்ணன் வதைப் படலம்

**பகுதி 3 பக்தி இலக்கியம்**

- திருவாசகம்: நீத்தல் விண்ணப்பம்
- திருப்பாவை: (முழுவதும்)

### பிரிவு ஆ

### தற்கால இலக்கியம்

**பகுதி 1 கவிதை**

- பாரதியார் : கண்ணன் பாட்டு
- பாரதிதாசன் : குடும்ப விளக்கு
- நா. காமராசன் : கறுப்பு மலர்கள்

**உரைநடை**

- மு. வரதராசனார் : அறமும் அரசியலும்
- சி.என். அண்ணாதுரை: ஏ! தாழ்ந்த தமிழகமே

**பகுதி 2 நாவல், சிறுகதை மற்றும் நாடகம்**

- அகிலன் : சித்திரப்பாவை (நாவல்)
- ஜெயகாந்தன் : குருபீடம் (சிறுகதை)
- சோ : யாருக்கும் வெட்கமில்லை (நாடகம்)

**பகுதி 3 நாட்டுப்புற இலக்கியம்**

- முத்துப்பாட்டன் கதை, ஆசிரியர் நா. வானமாமாலை (பதிப்பு: மதுரை காமராசர் பல்கலைக்கழகம்)
- மலையருவி, ஆசிரியர் கி.வா. ஜகந்நாதன் (பதிப்பு: சரஸ்வதி மகால், தஞ்சாவூர்)

# தாள் 1

## பகுதி அ

**பின்வரும் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கத்திற்கு மிகாமல் சிறுகுறிப்பு வரைக:**

**வினா 1.**

**அ. இந்திய மொழிகளில் தமிழின் இடம்**

**முனைவர் ப. செல்வகுமார்**

உலகின் மொழிவளம் நிறைந்த நாடுகளுள் ஒன்றாக இந்தியா கருதப்படுகிறது. பல்வேறு இனக்குழுக்களின் - பண்பாடுகளின் - மொழிக்குடும்பங்களின் சங்கமமாக இந்நாடு திகழ்கிறது. இந்த நாட்டில் 1652க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுவதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. இந்தக் கணிப்பு நாள்தோறும் மாறிவருவதைக் காணலாம். புதிய புதிய மொழிகள், மொழி ஆய்வு தொடர்பான ஒவ்வொரு களப்பணியின் போதும் கண்டுபிடிக்கப்பட்டு வரும் இன்றைய நிலையில் இந்த எண்ணிக்கை மேலும் உயர்வதற்குரிய வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன.

1961ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணிப்பில் 1652 மொழிகள் இந்தியாவில் பேசப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் மூன்றில் ஒரு பங்கு, 574 மொழிகள் இந்தோ - ஆரிய மொழிகளாக உள்ளன. இவற்றைப் பேசியோர் அன்றைய மக்கள் தொகையில் 73.30 விழுக்காட்டினர் ஆவர். திபெத்தோ - சீனமொழிக் குடும்பத்தின் ஒரு பகுதியான திபெத்தோ - பர்மிய மொழியினை 0.73 விழுக்காட்டினர் பேசினர் என்ற தகவல் தெரியவந்துள்ளது. சீனோ - திபெத்திய மொழிக்குடும்பத்தில் 226 மொழிகள் கண்டறியப்பட்டுள்ளன.

திராவிட மொழிக்குடும்பத்தில் 153 மொழிகள் உள்ளன என்று இக்கணக்கெடுப்பு தெரிவித்துள்ளது. இதில் பலவற்றை மொழியியலார் தனி மொழிகளாகக் கொள்ளாது வட்டார வழக்குகளாகவே கொள்கின்றனர். இந்திய மொழிக் குடும்பத்தில், பேசுவோரை வைத்து மதிப்பிடும் திராவிட மொழிக்குடும்பம் இரண்டாவது இடத்தைப்

பெறுகின்றது. இந்திய மக்கள் தொகையின் 24.47 விழுக்காட்டினர் இம்மொழிகளைப் பேசுகின்றனர். ஆஸ்ட்ரோ- ஆசிய மொழிக் குடும்பத்தில் 65 மொழிகள் உள்ளன. 1961 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணிப்பின் படி இம்மொழிகளைப் பேசுவோர் வெறும் 61,92,495 பேர் எனத் தெரிகிறது. இவற்றொடு வகை பிரித்தறிய முடியாத 530 மொழிகளும் உள்ளன என்று இக்கணக்கெடுப்பு புலப்படுத்தியது. பேசுவோரின் எண்ணிக்கையினை அடித்தளமாகக் கொண்டு இந்திய நாட்டு மொழிக் குடும்பங்களைக் கீழ்க்கண்டவாறு வரிசைப் படுத்தலாம். அவை,

1. இந்தோ ஆரியம்
2. திராவிடம்
3. ஆஸ்திரோ ஏசியாடிக்
4. திபெத்தோ பர்மியம்
5. அந்தமானியம்

1991 ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின் படி ஐந்து மொழிக் குடும்பங்களைச் சேர்ந்த 114 தாய் மொழிகள் 80 கோடி மக்களால் பேசப்படுகின்றன.

அதாவது, இந்தியாவின் மொத்த மக்கள் தொகையான 83,85,83,988 இல் (1991 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு) இது 96.29 விழுக்காடு ஆகும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் (Constitution of India) 18 மொழிகளை எட்டாவது அட்டவணை மொழிகளாக (VIII Scheduled Languages Article 343:751) அங்கீகரித்துள்ளது.

### திராவிட மொழிகள்

திராவிட மொழிகள் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா. இவை தென் திராவிட மொழிகள் என்றும் தெலுங்கு, கூயி, கூவி, கோலாமி, பர்ஜி, கதபா, கொண்டா, நாயக்கி, பெங்கோ, மண்டா இவை நடுத்திராவிட மொழிகள் என்றும், குருக், மால்தோ, பிராகூய் இவை உள்ளிட்ட மொழிகள் வட திராவிட மொழிகள் என்றும் பிரிக்கப்பட்டுள்ளன.

### திராவிட மொழி வரிசை

திராவிடம் என்று பெயரிடப் பெறும் மொழிகள் பன்னிரண்டு. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், குடகு, துளு, இவை திருந்திய மொழிகள் என்ற பிரிவிலும், துதம், கோதம், கோண்ட், கூ ஒரியன், இராஜ்மஹால் இவை திருந்தா மொழிகள் என்ற பிரிவிலும் அடங்குகின்றன.

## தமிழ்

திராவிட மொழிகளுள், முதன் முதலில் திருந்திய நி..லைபெற்ற மொழி இதுவே. ஐயத்திற்கு இடமில்லா மிகப்பழைய சொல்லுருவங்களில் சிறந்த சொல்லுருவங்களையும் பெற்றுள்ள வளர்ந்த மொழியும் இதுவே. ஆகவே அது அம்மொழி வரிசையுள் தலைமைக்கண் வைக்கப்பட்டுள்ளது. இது, இலக்கியத் தமிழ்-பேச்சுத் தமிழ் என்றோ, பழந்தமிழ்-புதுத்தமிழ் என்றோ, செந்தமிழ்-கொடுந்தமிழ் என்றோ பெயரிடப்பெற்று, ஏறக்குறைய வேற்று மொழிகளே என மதிக்கத்தக்க வகையில் மாறுபடும் இரு வகை மொழிநடைகளைக் கொண்டுள்ளது.

புலிக்காட்டி (பழவேற்காடு) லிருந்து கன்னியாகுமரி வரையும், மேற்குமலைத் தொடரிலிருந்து வங்காள விரிகடல் வரையும் பரவியுள்ள பரந்த நிலப்பகுதி முழுவதிலும் அது வழங்குகிறது. மலைத் தொடருக்கு மேற்கில், குமரி முதல் திருவனந்தபுரம் வரையுள்ள தென்திருவிதாங்கூர் நாட்டிலும் அது பேசப்படுகிறது. ஈழநாட்டின் வட பகுதியிலும், வடமேற்குப் பகுதியிலும் அது பேசப்படுகிறது. ஈழநாடு முழுவதிலும் உள்ள தேயிலைத் தோட்ட தொழிலாளிகள் அனைவரும் தமிழர்களே. கொழும்பிலும் பெரும் பகுதி வணிக மக்கள் தமிழர்களே. சென்னை மாநில மாவட்டம் ஒவ்வொன்றிலும் மாநில ஐரோப்பிய அலுவலர்களின் வீட்டுப் பணியாளர்களிலும் அவ்வலுவலர்கள் அலுவல் குறித்துச் செல்லும் இடந்தோறும் தொடர்ந்து செல்லும் சிறு அலுவலர்களிலும் பெரும் பகுதியினர் தமிழர்களாகவே இருப்பதால் தென்னிந்தியாவில் உள்ள எல்லா இராணுவத் தளங்களிலும், ஆங்கு வழங்கும் மாவட்ட மொழி எதுவேயாயினும், பெருவாரியான மக்கள் வழங்கும் மொழி தமிழே. ஆகவே மலையாள நாட்டு கண்ணனூரிலும் கன்னட நாட்டுப் பெங்களூரிலும், தெலுங்கு நாட்டுப் பெல்லாரியிலும், உள்நாட்டு மொழியாக இந்துஸ்தானியைப் பெற்ற செக்கந்திராபாத்திலும் கடைவீதிகளில் பெருவாரியாகக் காதில் ஒலிக்கும் மொழி தமிழே.

## 1 (ஆ) பல்லவர் காலத் தமிழ்

முனைவர் ப. செல்வகுமார்

தமிழ்மொழியைப் பண்டைத் தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத் தமிழ் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். பேராசிரியர் அகத்தியலிங்கம் அவர்கள் இவற்றின் சில பண்புகளைக் கருத்தில் கொண்டு இவற்றை முறையே 'சங்கத் தமிழ்', தெய்வத் தமிழ், வளரும் தமிழ் என வழங்குவது மிகப் பொருத்தமாகும் என்கிறார். கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.பதினேழாம் நூற்றாண்டு வரை உள்ள காலப்பகுதியை இடைக்காலத் தமிழ் என்றும் வழங்குவர். காரைக்காலம்மையார் புராணம், தேவாரம், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், கம்ப இராமாயணம், வில்லி பாரதம் போன்ற நூல்களில் காணப்படும் மொழி நிலைக்கும் பண்டைத் தமிழ் மொழி நிலைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. எனவேதான் இக்காலத் தமிழை இடைக்காலத் தமிழ் என்கிறோம். தேவாரம், நாலாயிரதிவ்விய பிரபந்தம் போன்றவை பக்திச் சுவை சொட்டச் சொட்ட எழுந்தவையாகும். எனவே இக்காலத் தமிழை ' தெய்வத் தமிழ்' என்றும் வழங்குகிறோம். தமிழ் இலக்கிய வரலாற்றில் ஏராளமான இலக்கியங்கள் தோன்றிய காலமும் இதுவேயாகும். இக்கால இலக்கியங்கள் பொற்கால இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன.

இடைக்காலத் தமிழைப் பல்லவர் காலத் தமிழ், சோழர் காலத் தமிழ், நாயக்கர் காலத் தமிழ் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

பல்லவர்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழகத்தை ஆண்டனர். இவர்கள் காலத்தில்தான் ஆழ்வார்களும், நாயன்மார்களும் பக்தி இலக்கியங்களைப் பாடினர், இவ்விலக்கியங்கள் மட்டுமின்றி இக்காலக் கல்வெட்டுக்களும் பல்லவர் காலத் தமிழைப் பற்றியும் அறியப் பெரிதும் துணை செய்கின்றன.

சங்க காலத்தைப் போலவும் சங்க மருவிய காலத்தைப் போலவும் பல்லவர் காலத்திலும், இ,எ,உ,ஒ,அ என்ற ஐந்து உயிர்களும் அவற்றிக்கினமான நெடில்களும் ஒலியன்களாக இருந்தமையை அறிகிறோம். எகரமும் ஒகரமும் தவிர ஏனைய உயிர்கள் சொல்லின் எல்லா இடங்களிலும் வரும். எகர ஒகரங்கள் சொல்லின் இறுதியில் வாரா.

மெய் ஒலியன்கள்

க் ச் ட் ற் த் ப்

ஞ் ண் ன் ம்

ய் ழ் ர் ல் வ்

ள்

என்பன மெய்யெழுத்துக்களில் ஒலியன்களாக விளங்கின. ஙகரத்திற்கு நகரமும் மகரத்திற்கு ஙகரமும் மாற்றொலியன்களாகும்.

நெடில் மெய்களுக்கு அல்லது மெய்ம் மயக்கங்களுக்கு முன்னர் நெடில் குறிலாக மாறுவது என்பது பல்லவர் காலத்திலும் பின்னரும் பெருவழக்காயிற்று.

நீக்கி > நிக்கி

அழாக்கு > ஆழாக்கு

மூன்று > முன்று

பல்லவர் காலத்தில் அகரம் இகரமாதலைக் காண்கிறோம்.

மங்கலம் > மங்கிலம்

மேலன > மேலின

கடா > கிடா

இகரம் உகரமாதலையும் இக்காலத்தில் காண்கிறோம்.

வழிஞம் > அழுஞம்

ஐகாரம் அகரமாகின்றது

ஐந்து > அஞ்சு

தலை > தல

மெய்யொலி இடையண்ணமாதல்

கைந்நின்ற > கைஞ்ஞின்ற

கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த அப்பர் தேவாரத்தில் 'ந' 'ஞ' கரமாக மாறியுள்ளது.

நெகிழ்த்தது > ஞெகிழ்த்தது

நகர் > ஞகர்

இதழ்ச்சாயல் பெறல் (Labialization)

உங்கள் > உங்கொள் > உம்கொள் (அப். தேவாரம்)

**தடையொலிகளின் ஒலிப்புடைமை (Voicing of the Plosive)**

தடையொலிகளின் ஒலிப்புடையனவாக விளங்கியதைப் பல்லவர் காலக் கல்வெட்டுக்களால் அறியலாம். தமிழ் இடப் பெயர்களும் சிறப்புப்பெயர்களும் கல்வெட்டுக்களில் சமஸ்கிருதத்தில் வெட்டப்பட்டுள்ளமையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. சில தமிழ்க் கல்வெட்டுக்கள் சமஸ்கிருத, கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. சமஸ்கிருத ஒலிப்புடை ஒலி சில இடங்களில் ஒலிப்பில் ஒலியாக வெட்டப்பட்டுள்ளன. தடையொலிகளின் ஒலிப்புடைமையை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. உயிரிடைத் தடையொலி ( Plosives occurring intervocally)
2. இன மூக்கொலி முன் தடையொலி (Plosives occurring after homorganoc nasals)

தடையொலிகள் உயிர் ஒலிகளுக்கிடையில் வருகின்றன. கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த நெடுஞ்சடையன் பராந்தகனின் (165-190) வேள்விக்குடிச் செப்பேட்டில்,

Paragan > Parakan

என்று சமஸ்கிருதப் பெயர் ஒன்று காணப்படுகிறது. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த மூன்றாம் நந்திவர்மனுடைய பாகூர்ச் செப்பேடுகளில்,

நிலைதங்கி (g)

என்றும் வருகின்றது. சமஸ்கிருதச் சொற்களல்லாத தமிழ் சொற்களில் வரும் உயிரிடைத் தடையொலிகள் 11 ஆம் நூற்றாண்டு வரை ஒலிப்பில் ஒலியாக விளங்கின. ஒலிப்பில் தடையொலிகள் தன் இன மூக்கொலிக்கு முன் தோன்றும். ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த சின்னமனூர்ச் செப்பேடுகளில்,

வேம்ப (p) நாடு

செங்கு (k) டி

என்றும், மூன்றாம் நந்திவர்மனுடைய ஆவணங்களில்

நந்தி (t) வர்மன்

விளங்கா (g) டு

நந்தா (d) விளக்கு

போன்றவற்றில் நந்திவர்மன் தவிர மற்றவற்றில் ஒலிப்புடை ஒலியாக ஒலிக்கின்றன.

உயிரிடைத் தடையொலிகள் ஒன்பதாம் நூற்றாண்டில்தான் ஒலிப்புடை ஒலிகளாக விளங்கின. அதற்கு முன் ஒலிப்பின் ஒலியாகத்தான் விளங்கின.

அப்பர் தேவாரத்தில்தான் முதன்முதலாக 'தமிழன்' என்ற சொல்லாட்சியைக் காண்கிறோம். இதற்குப் பின்னர்தான் இச்சொல்லாட்சியின் வழக்குப் பல்கிப் பெருகியது. சங்க காலத்தில் தமிழ் என்ற சொல் நாடு, மக்கள், மொழி பண்பாட்டைக் குறித்து நின்றது.

பண்டைத் தமிழினின்று பல்லவர் காலத் தமிழ் சிலவகையில் வேறுபட்டிருப்பதை உணரமுடிகிறது. சங்கத் தமிழின் பல கூறுகள் தொடர்ந்தும் சில கூறுகள் மறைந்தும் வரக் காண்கிறோம். சங்கம் மருவிய காலத் தமிழின் சில புதிய கூறுகளின் எண்ணிக்கை, பல்லவர் காலத்தில் அதிகரித்தும் சில புதிய கூறுகளைப் பெற்றும் பல்லவர் காலத் தமிழ் வளர்ந்த வளர்ச்சியைக் காணமுடிகிறது.

## 1 (இ) நிலப்பகுதி அடிப்படையிலான தமிழ் வழக்குகளுக் கிடையே உள்ள வேறுபாடுகள்

முனைவர் ப. செல்வகுமார்

மனிதன் பேச்சாலும் எழுத்தாலும் தனது கருத்தைப் பிறருக்குத் தெரியப்படுத்தும் கருவியே மொழியாகும். மனித வாழ்வோடு வாழ்வாய்ப் பின்னிப் பிணைந்து வாழ்ந்து வருவது மொழியாகும். இல்லையேல் சிந்தனையால், எண்ணத்தால் பண்பாட்டுச் சிறப்பால் மனிதன் வளர்ச்சியடைய வாய்ப்பில்லாமல் போய் இருக்கும். மொழி என்றதும் எழுத்து வடிவத்துடன் இலக்கிய இலக்கணங்களை உடையதுதான் என்ற நினைவு அனைவருக்கும் வரும். எழுத்து வடிவமில்லாது பேச்சு வழக்கில் மட்டும் பயின்று வரும் ஆயிரக்கணக்கான பழங்குடி மொழிகளும் நம் நாட்டில் உண்டு. ஒரு மொழி பரந்த பரப்பில் பேசப்படும் பொழுது அதில் வேறுபாடுகள் காணப்படுதல் இயற்கையாகும். கிளைமொழி (Dialect) என்பது ஒரு குறிப்பிட்ட பேச்சு மொழியின் வகையைக் குறிப்பதாகும். ஒரு தனி மனிதர் பேசும் பேச்சு வழக்கை 'Idiolect' என்பர். அதாவது இதைத் 'தனி மனிதப் பேச்சு வழக்கு' என்று குறிப்பிடலாம். பல தனி மனிதப் பேச்சு வழக்குகள் ஒரு கிளை மொழியையும், பல கிளை மொழிகள் சேர்ந்து ஒரு மொழியையும் உருவாக்குகின்றன. மொழிக் குடும்ப (Language family) வரலாற்றிற்கு மொழியும் (Language) ஒரு மொழி வரலாற்றிற்குக் (History of Language) கிளைமொழி ஆய்வும் (Dialect Study) மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. எனவே தான், தமிழ் மொழி வரலாற்றைப்பற்றி ஆராயும் போது, தமிழ்க் கிளைமொழிகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் ஆராய வேண்டி உள்ளது.

மக்கள் சிறு சிறு குழுக்களாக வாழும்போது மலை, ஆறு, கடல் போன்ற இயற்கையமைப்பால் பிரிக்கப்பட்டு, அவர்களிடையே அதிகத் தொடர்பின்றி வாழவேண்டிய நிலை ஏற்படுகிறது. இலங்கையும் இந்தியாவும் கடலால் பிரிக்கப்பட்டிருப்பதால் இவ்விரண்டு இடங்களிலும் பேசும் தமிழ்மொழியில் மிகுந்த வேறுபாட்டைக் காணலாம். செய்தித் தொடர்பில் குறுக்கீடுகள் (Interferences) அதிகமானாலும் மொழியில் மாற்றங்கள் ஏற்படும். கிளைமொழியை வழங்கும் இடம் பற்றிய வட்டாரக் கிளைமொழிகள் (Regional Dialect) என்றும் பேசுகின்ற மக்களின் சமூகநிலை பற்றிச் சமூகக் கிளைமொழி (Social Dialect) என்றும் கூறுவர். பேச்சு மொழியை வரிவடிவத்தில் அளிக்கும் போது அதனைப் 'பார்வை கிளைமொழி' (Eye Dialect) என்றும் கூறுவர். ஒரே மொழி வட்டாரத்திற்கு வட்டாரம், சாதிக்கு சாதி, தொழிலுக்குத் தொழில் வேறுபட்டாலும் கூட அவற்றிடையே ஒரு

பொதுத்தன்மைக் காண்கிறோம். எழுத்து மொழியுடன் பெரும்பாலும் ஒத்துச் செல்லும் பேச்சு வழக்கினைப் "பொதுப் பேச்சுமொழி" (Standard Spoken Language) அல்லது பொதுக்கிளை மொழி (Standard Dialect) என்பர். கிளைமொழிகளைக் கண்டறிய மொழியியல் பேரறிஞர்கள் 'மொழிபாகுபாட்டுக் கோடு' (Isolgoss) என்ற கருத்தினை வலியுறுத்துகின்றனர். கிளைமொழி எல்லையைக் (Dialect Boundary) குறிக்கும் பாகுபாட்டுக் கோடுகள் மொழியின் எந்தவொரு கூறினையும் காட்டப் பயன்படுத்தலாம். கிளை மொழிகளுக்குள் பெரும்பான்மை ஒற்றுமையும் சிறுபான்மை வேற்றுமையும் காண்கிறோம். ஒற்றுமையை யொட்டிப் புரிந்து கொள்ளும் தன்மை (Mutual intelligibility) அமைகின்றது. பேசுகின்ற இடத்தைப் பொறுத்து வட்டாரக் கிளைமொழிகள் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாக இருக்கும். கன்னியாகுமரி வட்டாரப் பேச்சுத் தமிழுக்கும், சென்னைப் பேச்சுத் தமிழுக்கும் மிகுந்த வேற்றுமையைக் காணலாம். அதே நேரத்தில் மத்தியக் கிளைமொழிக்கும் தெற்குக் கிளைமொழிக்கும் சிறிது வேற்றுமையைக் காணலாம்.

சங்க காலத்திலேயே கிளை மொழிகள் இருந்தன என்பதற்குச் சான்றுகளை இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் காண்கிறோம். சங்க காலப் புலவர்கள் பல்வேறு பகுதிகளைச் சார்ந்தவர்களாதலால், அவ்வட்டார வழக்கினையும் அவர்கள் தம் பாடல்களில் காண்கிறோம். புறநானூற்றில், 'நெய்யுலை சொரிந்த மையூன் ஓசை' என்பதில், 'ஓசை' என்பது 'பொரியல்' என்ற பொருளில் வழங்குகிறது. கலித்தொகையில் 'செரு' என்ற சொல் 'வயல்' என்ற பொருளிலும் திருக்குறளில் 'பெற்றம்' என்ற சொல் 'பசு' என்ற பொருளிலும் வந்துள்ளது. தொல்காப்பியர் குறிப்பிடும் 'திசைச் சொல்' என்ற வழக்கு கிளை மொழியைக் குறிப்பதாகக் கூறுவர். தொல்காப்பியர் பன்னிரண்டு வட்டாரக் கிளைமொழிகளையும், உரையாசிரியர்கள் செந்தமிழுடன் கொடுந்தமிழ், சான்றோர் வழக்கு, குழுஉக்குறி, தொழில் பற்றிய வழக்கு எனப் பல நிலைகளில் பேச்சு மொழியினையும் எடுத்துக் காட்டியுள்ளனர். சங்கத் தமிழில் கிளை மொழிகளும் இருந்தன. இதனைத் தொன் மொழி, கிளை மொழி (Archaie Dialect) எனப் பேராசிரியர் செ.வை. சண்முகம் அவர்கள் வழங்குகின்றார்கள். நான்கு என்பதை நால்கு என்றும் ஒன்பது என்பதைத் தொண்டு என்றும் இக்கிளை மொழியில் வழங்கியிருக்க வேண்டும். நான்காம் வேற்றுமைக்கு முன் மகர ஈற்று அஃறினைப் பெயர்கள் அத்து சாரியை இல்லாமல் வழங்குவது (ஆசிரியம் - ஆசிரியக்கு, வேழம் - வேழக்கு போன்றவை) கிளை மொழியின் பண்பாகக் கொள்ள வேண்டும். செய, செய்யின் என்ற வாய்ப்பாட்டு வினையெச்சங்களில் 'க'கரம் உள்ளது கிளை மொழிப் பண்பாகும். செய்யாது என்ற வாய்பாட்டில் (வழங்காமல்

மறவாமல் போன்றவை) உள்ளதும் கிளைமொழிப் பண்புகளில் ஒன்றாகும். இப்பண்புகளே இடைக்காலத்தில் பெரு வழக்காயிற்று.

சங்க இலக்கியங்களில் வழங்காத சில இலக்கணக் கூறுகள் சங்க காலப் பேச்சு வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்பர். தமிழ் மொழி வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் இக்கூறுகளையுடைய கிளை மொழியை வழக்குத் தமிழ் கிளைமொழி எனலாம் என்கின்றனர். முன்னிலைப் பன்மையாக 'நீர்' என்ற வடிவம் வழங்குவது, சகரத்தை முதலாக உடைய சொற்களைப் பயன்படுத்துவது போன்ற கூறுகள் கிளைமொழியின் கூறுகளாகக் கொள்ளலாம். எனவே, சங்கத் தமிழிலும், பொதுத் தமிழ்க் கிளைமொழி, தொன்மொழிக் கிளைமொழி, வழக்குத் தமிழ்க் கிளைமொழி ஆகியவை வழங்கியிருக்க வேண்டும் எனக் கருதலாம்.

சிலப்பதிகாரத்திற்கு உரைகண்ட அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தில் வழங்கும் 'சிறுமியர்' என்ற சொல்லுக்குச் 'சிறு பெண்கள்' என்ற பொருளிலும் குடகு நாட்டு வழக்கு எனக் குறிப்பிட்டுச் செல்கின்றார். 'போர்த்தல்' என்ற பொருள் கொண்ட 'தைத்தல்' என்ற சொல்லை மலை நாட்டு வழக்கு என்றும் 'பிரித்தல்' என்ற பொருள் கொண்ட 'தெழித்தல்' என்பது குட நாட்டார் வழக்கென்றும் கூறுவர். சளிப்பிடித்தலைக் குட நாட்டார் 'பனித்து' என்ற சொல்லால் குறிப்பிடுவர் என அடியார்க்கு நல்லார் கூறுவதினின்று, வட்டார வாய்மொழி வழக்கினை பலநூறு ஆண்டுகட்கு முன்பே எடுத்தியம்பியுள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியர் செந்தமிழ் நிலத்து எல்லையையோ கொடுந்தமிழ் நிலத்து எல்லையையோ குறிப்பிடவில்லை. செந்தமிழை இயற் சொல்லாகக் கொண்டு, வட்டார வழக்கினை திசைச்சொல் என்கிறார்.

***செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்***
***தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி***

***(தொல்.சொல். 400)***

சேனாவரையர் பொங்கர் நாடு, ஒளி நாடு, தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குட நாடு, பன்றி நாடு, கற்கா நாடு, சீத நாடு, பூழி நாடு, மலை நாடு, அருவா நாடு, அருவா வடதலை எனப் பன்னிரு நிலத்தைக் குறிக்கின்றார். நன்னூல் மயிலைநாதர் உரையில் தென்பாண்டி குட்ட நாடு, குட்ட நாடு, குட நாடு, கற்கா நாடு, வேணாடு, பூழி நாடு, பன்றி நாடு, அருவா நாடு, அருவா வடதலை, சீதநாடு, மலாடு, புனனாடு எனப்

பன்னிரு நிலத்தைக் குறிப்பிடுகிறார். சேனாவரையர் கூறிய பொங்கர் நாடு, ஒளி நாடு என்ற இரண்டையும் மயிலைநாதர் குறிப்பிடவில்லை. மயிலை நாதர் குறிப்பிடும் வேணாடு, புனனாடு சேனாவரையத்தில் இல்லை. சேனாவரையர் செந்தமிழ் நிலத்திற்குக் கூறும் எல்லை, 'வையையாற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம்' என்கிறார். மயிலைநாதர், இளம்பூரணர், நச்சினார்க்கினியரின் கருத்தும் இதுவேயாகும். பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் இக் கிளைமொழிகளை இன்றைய நாட்டுப் பகுதிகளுடன் ஒப்பிட்டுக் கிளைமொழி வடிவம் அதற்குள்ள பொது வடிவம் முதலியவற்றை எடுத்துக் காட்டியுள்ளார்.

| கிளைமொழி வழங்குமிடம் | தற்காலப் பெயர் | கிளை மொழி வடிவம் | பொது வடிவம் |
|---|---|---|---|
| தென்பாண்டி நாடு | திருநெல்வேலியின் தென்பகுதி | பெற்றம், சோன்றி | ஆ, எருமை, சோறு |
| குட்ட நாடு | கோட்டயம், கொல்லம் மாவட்டங்கள் சேர்ந்த பகுதி | தள்ளை, ஞெள்ளை | தாய், நாய் |
| குட நாடு | வடக்குமலபார்பகுதி, மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்குப் பகுதி | அச்சன் | தந்தை |
| கற்கா நாடு | கோயம்புத்தூரின் குன்றுப் பகுதிகள், மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்குப் பகுதி | கையர் | வஞ்சர் |
| சீத நாடு | நீலகிரியும் கோயம்புத்தூரின் ஒரு பகுதியும் | எலுவன், இகுளை, தந்துவை | ஏடா, தோழன், தோழி, தம்மாமி |
| பூழி நாடு | வேள் நாடு - கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒரு பகுதி | ஞமலி, பாழி | நாய், சிறுகுளம் |

| கிளைமொழி வழங்குமிடம் | தற்காலப் பெயர் | கிளை மொழி வடிவம் | பொது வடிவம் |
|---|---|---|---|
| அருவா நாடு | வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, கடலோரப் பகுதி | செறு, கேணி | செய், சிறுகுளம் |
| அருவா வடதலை நாடு | தமிழ் நாட்டின் வடபகுதி | குட்டை வடகோடிப் பகுதி | குறுணி |
| வேணாடு | தென் திருவிதாங்கூர் | கிழார் | தோட்டம் |
| பாண்டி நாடு | பாண்டி நாடு | செய் | செறு |
| மலாடு | தென்னார்க்காடு மாவட்டத் திருக்கோவிலூரைச் சுற்றியுள்ள பகுதிகள் | இகுளை | தோழி |
| புனல் நாடு | சோழ நாடு | ஆய் | தாய் |

இவ்வாறு பல்வேறுபட்ட நிலப்பகுதிகளில் தமிழ் வழக்குகள் வேறுபாட்டுடன் வழங்கப்பட்டு வருகின்றன.

## 1 (ஈ) சிலப்பதிகாரத்தின் தனித் தன்மைகள்

முனைவர் வி.இரா. பவித்ரா

தொன்மைத் தமிழர்களின் கலைச்சிறப்பிற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்வது சிலப்பதிகாரமாகும். இந்நூல் தமிழ் மொழியின் பெருமைக்குரிய முதல் சான்றாகத் திகழ்கின்றது. தமிழ்த்தாய் சங்ககாலத்தில் இளங்கோவைப் பெற்று ஏற்றம்கொண்டாள். சிறந்ததன் வளர்ச்சிப் பாடல்களையே கொண்டு திகழ்ந்த சங்க இலக்கியப் போக்கை மாற்றிப் புரட்சி செய்தவர் இளங்கோவடிகள் ஆவார்.

சிலப்பதிகாரம் என்னும் செருஞ்சொற்காப்பியம் முத்தமிழின் திறமெல்லாம் காட்டி நிற்கின்றது. காப்பியத்திற்கு இட்ட பெயராலேயே அப்புரட்சியைக் காண்கிறோம். மகாகவி காளிதாசர் சாகுந்தலம் எனும் நாடகத்தை இயற்றினார். அந்நூலின் சிக்கலுக்கு ஒருகணையாழியே காரணமாயிற்று. ஆயினும் அதனை நாடகத்தின் பெயராக அமைக்காமல், நாடகத் தலைவியின் பெயரையே அந்நூலுக்கு இட்டார். ஆங்கிலக் கவிஞர் ஷேக்ஸ்பியர், ‘ஒதெல்லோ’ என்னும் நாடகத்தை இயற்றினார். கதைச் சிக்கலுக்கு ஒரு கைக்குட்டை காரணமாயிற்று. ஆயினும் அந்நூலுக்குக் கதைத் தலைவன் பெயரையே வழங்கினார்ல ஷேக்ஸ்பியர். ஆனால் இளங்கோவடிகள் தம் நூலுக்குத் தலைவியின் பெயரையோ, தலைவனின் பெயரையோ இடாமல் கதைச் சிக்கலுக்குக் காரணமான சிலம்பையே காப்பியத்தின் பெயராக வைத்துப் புரட்சி செய்துள்ளார்.

பெண்ணுக்குப் பெருமை தரும் முதல் தமிழ்க் காப்பியம் இதுவே. கண்ணகி நல்லாள், புகாரில் அமைதிப் பெண்ணாகத் தோன்றி, மதுரையில் வீரம் விளைத்து, வஞ்சியில் வானவர் வாழ்வு பெறுகிறாள். பத்தினி வழிபாட்டை இளங்கோவடிகள் இந்நூல் வாயிலாக வெற்றிகரமாக நிறைவேற்றுகிறார். மண்ணகமாந்தர்க்கு அணியான கண்ணகி, விண்ணக மாந்தர்க்கு விருந்தாகிய செய்தியை இந்நூல் திறம்படச் சித்தரித்து கூறுகின்றது. நூலின் முப்பெரும் பகுதிகளுக்கு முறையே புகார்க் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக் காண்டம் என்ற பெயர்களை அமைத்த இளங்கோவடிகள், மும்மைத் தமிழகத்தை ஒருமைத் தமிழகமாக ஒற்றுமைப்பட்ட தமிழகமாகக் காண விழைகிறார். கருணை மறவனான கோவலனைச் செவ்வேள் என்றும், ஒரு மாமணியாய் உலகில் தோன்றிய திருமாமணியான கண்ணகியை வெள்ளி என்றும் இக்காப்பியம் போற்றுகின்றது. ஆயினும் இவர்களுடைய இல்லற வாழ்வின் இன்பம் இனிது நீடிக்கவில்லை. கருங்கயர் கண்ணகியை விட்டுப் பிரிந்து, மாநெடுங்கண் மாதவியை நாடுகிறான் கோவலன். அடிக்கடி அவளையும் பிரிந்து, வம்பதைய

பரத்தையரோடும் வறுமையாளரோடும் திரிகிறான். தமிழ்க் காப்பியத் தலைவியர் யாருக்குமே நேராத மாக்கொடுமை கண்ணகி வாழ்வில் நேர்ந்து விட்டது. அத் தெய்வ மங்கை தன் கணவனை இழந்து விடுகிறாள். ஆயினும் கடமைக்காக அக்காரிகை சில நாட்கள் உயிர் வாழ்கிறாள். தன் கணவன் கள்வன் அல்லன் என்ற உண்மையை நிலை நாட்டியபின்னரே தன் பெருவாழ்வை முடித்துக் கொள்கிறாள். இந்நிகழ்ச்சியின் மூலம் கடமையுணர்வை இக்காப்பியம் உணர்த்துகிறது.

இளங்கோவடிகள் வினையின் ஆற்றலைக் காப்பியத்தில் பல இடங்களில் குறிப்பிடுகின்றார். கோவலன் குன்ற மன்னதோர் செல்வத்தைத் தொலைத்து மல்லல் மதுரையை நாடிச் செல்வது வினையின் பயனால்தான். இதே வினை விளைகாலத்தின் கோவத்தினால்தான் சினயலர் வேம்பன்யாதும் தேரானாகிக் கோவலனைக் கொன்று சிலம்பைக் கொணரப் பனித்துவிட்டான். ஊழ்வினை ஒருநாளும் ஒழிக்க முடியாது என்பது உண்மையே என்றாலும், வாழ்வில் நம்பிக்கையை இழத்தல்கூடாது என்பது இளங்கோவடிகளின் நோக்கமாகும்.

வீட்டைப் பிரிந்து உற்றார், உறவினரைப் பிரிந்து, நாட்டைப் பிரிந்து வேறுநாடு சென்ற கண்ணகி, கணவனை இழந்து துயரத்தில் மூழ்கிக் காய் கதிர்ச் செல்வனைச் சாட்சிக்கழைக்கிறாள். பின் பொங்கியெழுந்து காவலனிடம் கட்டுரைத்து வெற்றி கொண்டு மதுரை நகரை எரிக்கின்றாள். மதுரைத் தெய்வத்தை ஏவல் கொள்கிறாள் கண்ணகி.

சாதாரண குடியில் பிறந்தவளேயாயினும், காப்பியத் தொடக்கம் முதல் முடிவு வரை தெய்வமாக அனைவராலும் போற்றப்படுகிறாள். மாதரார் தொழு குணம் கொண்ட கண்ணகியை இளங்கோவடிகள் சாலி ஒரு மீன் தொழு தேத்தும் குனம் ஓசை மீன் தகையாள் என்றே குறிப்பிடுகிறார். இவ்வாறு பல்வேறு நிலைகளில் சிலப்பதிகாரம் தனித்தன்மை பெற்று விளங்குகிறது.

## 1 (உ) பக்தி இயக்கத் தோற்றத்திற்கான காரணிகள்?

முனைவர் கா. காமராஜ்

தமிழில் பக்தி இலக்கியங்களிலும், அவற்றிற்கு முற்படத் தோன்றியனவாகக் கருதப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களிலும் அவற்றிற்கும் முற்படத் தோன்றிய சங்க இலக்கியங்களிலும் கூறப்படும் சிவன், திருமால், இயல்புகளை; பெரிதும் ஒத்திருக்கின்றன. ஆயின் சங்க இலக்கியங்களை விடவும் காப்பியங்களில் பல செய்திகள் உள்ளன. அவற்றிலும் மிகப்பலவாகப் பக்திப் பாடல்களில் உள்ளன. அவ்வாறு பலவாக வளர்ந்து வந்தாலும், இவ்விலக்கியங்களால் உணர்த்தப்படும் சிவன், திருமால் இயல்புகள் ஒரு கால் வழி வாழ்ந்தனவென்றே கொள்ளத்தக்கவை. இத் தெய்வங்களின் இயல்புகளை அறியும்போது இவை இந்தியா முழுவதும் பரவியிருந்த சிந்தனைகளே என்பது விளங்கும். இவற்றின் தொடக்க நிலையினைப் புராணங்களில், இதிகாசங்களில், வேதங்களில் கண்டு கூறுமளவுக்குப் பிற நூல்களில் கண்டு கூற முடியாது. வேத காலத்துக்கு முற்பட்டதாக உள்ள சிந்து வெளி நாகரிகத்தின் சின்னங்களும் சிவன் இயல்புகளைப் பற்றிய சில உண்மைகளை விளக்குவனவே சுருக்கக் கூறிய இந்திய நாட்டின் சமய வளர்ச்சியின் எதிரொளியாகவே சிவன், திருமால் இயல்புகள் தமிழ் இலக்கியத்தில் உள்ளன என்பதில் ஐயமில்லை.

தெய்வ இயல்புகளை விளக்கும் வகையில் பண்டைய இந்திய சமய வரலாற்றினை மூன்று நிலைகளில் ஆராயலாம். 1. கி.மு. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னையவென்று கருதப்படும் சிந்துவெளி நாகரிகச் சின்னங்களால் உணர்வது. 2. வேத நூல்களால் உணர்வது 3. புராண இதிகாசங்களால், குறிப்பாக மகாபாரதத்தால் உணர்வது.

### சிந்துவெளி நாகரிகம்

சிந்துவெளி நாகரிகம் ஆரியர்களுடையதன்று என்பதை வரலாற்றறிஞர்கள் தெளிவாக எடுத்துக் கூறுவர். ஆரியரல்லாதவர் என்னும்போது ''திராவிடர்களே'' எனக் கொண்டு திராவிடர்களுடைய நாகரிகமே சிந்துவெளி நாகரிகம் எனக் கூறுகின்றனர். இங்குக் கண்டெடுக்கப்பட்ட சின்னங்களால் உணரப்படும் சமய நிலையைச் சிறிது காண்போம்.

1. திருக்கோயில்களைப் பற்றிய குறிப்பில்லை என்பர்.
2. விக்ரக வழிபாடு நிகழ்த்தப் பட்டதாகக் கூறுவர். விக்கிரகங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன.

3. பெண் தெய்வ வழிபாடு முதன்மையாகவிருந்தது என்று கூறுவர். ஒவ்வொரு வீட்டிலும் பெண் தெய்வத்தை வழிபட்டிருக்கலாம் என்பர். பல சின்னங்களைப் பெண் தெய்வமாகக் கூறுகின்றனர்.

**மூன்று முகங்கள் யோக இருக்கை, திரிசூலம், மண் (தோல்) ஆசனம் சூழ விலங்குகள் நிற்றல்.**

இவற்றைக்கொண்டு, திரிமுகன், மகாயோகி, பசுபதி என்றெல்லாம் பேசப்படும் சிவன் இங்கு வழிபடப்பட்டு வந்தமையினை எடுத்துக்காட்டுவர். லிங்கம் திரிசூலம் போன்றவை வரலாற்றுக் காலச் சிவன் சின்னங்களே ஆயின் பீடத்தோடு கூடிய நிலையில் லிங்கம் இங்குக் காணப்படவில்லை. தனித்தனி வளையங்களையே பீடங்களாகக் கருதுகின்றனர். காணப்படும் காளை மாடும் சிவனோடு தொடர்புடையதே. இங்குப் பசு காணப்படவில்லை என்பர். செப்புச் சிலைகளில் காணும் நடனம் பெண் தேவதாசி முறையினை விளக்குவதாகவும் கொள்வர் நீரால் பாதிரியார். 2. இங்குக் காணப்படும் எழுத்தைப் பழைய தமிழ் என வாசித்துச் சிவனை விளக்கும் சொற்களாகச் சிலவற்றைக் கண்டு கூறுவர்.

1. எண்ணம் (எட்டுடம்பினன்)
2. விடுகன் (திறந்த கண்ணன்)
3. பேரன் பெருமாள்
4. தாண்டவன்

சிந்துவெளி எழுத்துக்களில் இச்சொற்களைக் கண்டு இவை சிவனை உணர்த்துவன என்பர். மேலும் சில, மருத நிலக்கடவுள், மழைக்கடவுள் என்பனவற்றைக் குறிப்பிடும் என்பர். சிந்துவெளியில் சிவனைப் பற்றிய செய்திகள் சிலவே கிடைத்துள்ளன. இங்குக் காணப்படும் சிவனைப் பற்றிய செய்திகள் சில பின்னர்க் கூறப்படுவனவே. இத்தெய்வம் எப்பெயரால் வழங்கப்பட்டது என்று நம்மால் கூற முடியாது போயினும் பின்னர் புராண இதிகாசங்களில் சிறப்பிக்கப்பட்டுள்ள சிவனின் சமய வரலாற்றை மூன்று நிலையில் பாகுபடுத்தி ஆராயலாம்.

1. அறம் 2. தத்துவம் 3. வழிபாடு

**அறம்**

இந்திய நாட்டில் சமய அடிப்படையில் எழுந்த அறத்தினை "வருணாசிரம தருமம்" என்பர். வருன தருமம் சமுதாயக் கடன்கள் என்னும அடித்தளத்தில் எழுந்தது. ஆசிரம தருமம் தனி மனிதனின் ஆன்ம வளர்ச்சி என்ற அடிப்படையில் எழுந்தது. இங்கு இப்பாகுபாட்டின் நலன் தீங்குகளைச் சிந்திப்பது நோக்கமன்று 'வருணாசிரம தருமம்'

என்ற சிந்தனை தமிழ் மக்கள் நடுவே வாழ்ந்து வந்த வளர்ச்சியினைத் தமிழ் இலக்கியத்தின் துணை கொண்டு விளக்குவதே நோக்கம். நான்கு கால வருணங்கள் என்னும் கருத்தும் சங்க காலத் தமிழர்கள் அறியாததன்று. வேற்றுமை தெரிந்த நாற்பால் (புறம்.153) என்பதில் நாற்பல், நான்கு வருணமே என்பர். பார்ப்பனர்கள் வேதமோதியும் வேள்வி செய்தும் வாழ்ந்தனர். அந்நாளைய அரசர்கள் தங்களை அரச வருணத்தினர் எனக் கூறிக் கொண்டனர் என்று கூறுவதற்குப் போதுமான சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை. சில அரசர்கள் அந்தணர்களில் தூண்டுதலால் வேத-வேள்வி செய்துள்ளனர். போரில் உயிர் துறவாத அரசர்களை வைதிக அந்தணர்களிள் சில சடங்குகளைச் செய்து அடக்கம் செய்தனர் என்னும் சில இடங்களிலே அரச வரணம் என்ற சிந்தனை பிறக்கிறது. பொதுவாக அவர்கள் தங்களை ஒரு குறிப்பிட்ட வருணத்தவர் என்ற நிலையில் கருதி வாழ்ந்ததாகக் கூற முடியவில்லை.

வழிபாடு

சமயம் : காப்பியங்களில் வேதவேள்வியும் திருக்கோவில் பூசையும் குறிக்கப்பட்டுள்ளன. திருக்கோயில்கள், வழிபட்ட திருக்கோலங்கள், வழிபட்ட முறைகள் இவற்றிலும் சங்க காலத்தினும் வளர்ச்சிபெற்ற ஒரு நிலையினையே சிலப்பதிகார, மணிமேகலையில் காண்கின்றோம் எனல் வேண்டும். சைவ பௌத்தர்கள் தாங்கள் இறைவனை வழிபடாது போயினும் தங்கள் சமய உண்மையினை விளக்குவதற்கு அந்நாளிலிருந்த சமய நிலையைப் பல விடங்களிலும் கூறியே செல்கின்றனர். சிவன் கோவில்கள், திருமால் கோவில்கள், கொற்றவை கோவில்கள், முருகன் கோவில்கள், பத்தினிக் கோட்டங்கள் பல பல தீர்த்தங்கள், ஐந்தெழுத்து, எட்டெழுத்து மந்திரங்கள் இவற்றின் பெருக்கத்தினைக் காண்கின்றோம். இவற்றோடு சைவ பௌத்த நிலையங்கள், கோயில் போன்றவற்றையும் காணலாம். சைனத் தலைவர்கள் பலர் நாடு முழுவதும் சுற்றி வந்தமையினைக் காவிரிபூம்பட்டினம் மதுரை போன்ற பகுதிகளில் இவர்கள் சிறப்பாக வாழ்ந்தமையினையும் நாம் அறிய முடிகிறது. இச் செய்திகள் இதே அளவு சங்க இலக்கியங்களில் காண்டல் அரிதே. எனவே சமயச் சிந்தனைகள் தெளிவாக வளர்ந்துவிட்ட நிலையில் இந்நூல்களில் காணப்படுகின்றது. மேலும் பக்தி நெறியும் வளர்ந்து வந்துள்ளமையினை-ஆய்ச்சியர் குரவையில் வரும் பாடல்களும் பிறவும் தெளிவாகவே உணர்த்துகின்றன.

சங்க இலக்கியத்தை அடுத்து நீதி நூற்களும் அவற்றை அடுத்து சமய நூற்களும் தோன்றின என அறிஞர்கள் சிலர் கருதினாலும் நீதி நூற்களைச் சமய இலக்கியங்களுக்கு வேறாகக் கருதக் காரணம்

தெரியவில்லை. நீதி நூற்களும் சமய அடிப்படை உடையனவே. சங்க காலத்திற்குப் பின் சமய அடிப்படை உடையனவே சங்க காலத்திற்குப் பின் சமய உணர்வே பல்வேறு இலக்கியங்களை நீதி இலக்கியங்கள் காப்பியங்கள் பக்திப் பாடல்கள் என்ற மூன்று நிலைகளில் ஆராயலாம். இவற்றுள் ஒரு குறிப்பிட்ட வகை இலக்கியத்திற்குப் பின்னரே பிரிதோர் வகை இலக்கியம் தோன்றலாயிற்று எனக் கூறமுடியாது. ஓர் ஆசிரியருக்குப் பின் பிரிதோர் ஆசிரியர் தோன்றினார் எனக் கூறமுடியுமோ. இம்மூவகை இலக்கியங்களும் சமய உணர்வை வெளிப்படுத்தும் சமய இலக்கியங்களே.

பக்தி இயக்கம் உருப்பெறுவதற்கு அடிப்படையாக அமைந்த சமய வரலாற்றினை ஆராய்ந்தோம். இனி பக்தி இலக்கியத்தைத் சிந்திப்போம் ‘பக்தி இயக்கம்’ பிற இயக்கத்திலிருந்து சிறு வேறுபட்ட அடிப்படையினை உடையது.

*அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக*
*இன்புருகு சிந்தை இடுதிரியா நன்புருகி*
*ஞானச்சுடர் விளக் கேற்றினேன் நாரணற்கு*
*ஞானத் தமிழ் புரிந்த நான்*

அன்பு, தகளி, அன்பு முதிர்ச்சியாகிய ஆர்வம், நெய் பேரின்பத்தை எண்ணி உருகுகின்ற சிந்தை திரி. இத்திரியில் எரியும் விளக்கே ஞானவிளக்கு. இவ்விளக்கினை ஏற்றும் இவ்வடியவர், தம் உயிர் உருகி நிற்பதாகக் கூறுவர். அன்பு உயிர் இதனை விளக்கும். ‘பக்தி’ என்ற சொல் உணர்த்தும் பொருள் யாது? என்னும் போது பெரியோரிடத்தும் இறைவனிடத்தும் கொள்ளும் ‘அன்போ’ பக்தி எனத் தமிழ் இலக்கியங்களைக் கொண்டு விளக்க முடியவில்லை. இறைவனிடத்தும் அடியாரிடத்திலும் கொள்ளும் அன்பே ‘பக்தி’. பக்தி என்னும் போதே சமயச் சிந்தனை வந்துவிடுகிறது. அரச பக்தி, குருபக்தி, பதிபக்தி.... என்றெல்லாம் கூறுவது பண்டைய நாளைய அல்லது இடைக்காலத்தைய தமிழ் இலக்கியங்களைக் கொண்டு விளக்கக் கூடிய ஒன்று என்று தோன்றவில்லை. இச்சொல்லுக்கேற்ற தமிழ்ச்சொல்லைக் கூறலருமை. சில அறிஞர்கள் பக்திக்கு ஏற்ற தமிழ்ச் சொல்லாக அன்பைக் கூறுவர். ‘அன்பு’ சமய வட்டத்துக்குள்ளாகவே வழங்கப்படும் சொல்லன்று. ‘பக்தி’ என்ற சொல் வடமொழியில் பலவிடங்களிலும் வழங்கப்படலாம். ஆயின் நாம் ஆராய்ச்சிக்கென்று எடுத்துக்கொள்ளும் இலக்கியம் தோன்றிய நாளில் ‘சமய’ வட்டத்திலேயே பயன்படுத்தப்பட்டதெனல் வேண்டும்.

பக்தி இலக்கியங்கள் தோன்றுவதற்கு முற்பட்ட காலத்தில் ‘பக்தி’ உணர்வு இல்லை என்பது இதன் பொருளன்று. அன்பின் முதிர்ச்சியாகிய ‘ஆர்வம்’, ‘பக்தி’ என்ற பொருளிலும் வழங்கியிருத்தல்

வேண்டும். அழிவில முயலும் ஆர்வமாக்கள் வழிபடு தெய்வம் கண் கண்டாங்கு என்னும் சங்கப் பாட்டில் 'ஆர்வமாக்கள்' பக்தரையே குறிக்கும். மேலும் திருமுருகாற்றுப்படையில் '' 'ஆர்வலர்' ஏத்த அமர்ந்தினி தொழுகிக் காதலி னுவந்து வரங்கொடுத்தன்றே'' என்னும் தொடரில் ஆர்வலர் என்பது பக்தர்களைக் குறிப்பதே 'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக என்னும் ஆழ்வார் பாடலிலும் ஆர்வம் பக்தியைக் குறித்தது என்றலே பொருந்தும். இருப்பினும் விலக்கத்தக்க 'ஆசை' என்ற பொருளிலும் இச்செயல் ஆர்வம் பக்தி இலக்கிய காலத்தில் வழங்கியமை பின் இறைவனோடு கலந்து நிற்றலே பக்தி இயக்கமாகும்.

**தெரிவுசெய்யும் வினா ஒவ்வொன்றிற்கும் நான்கு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுக:**

**2 (அ) மூலத் திராவிட மொழியின் பெரும்பாலான கூறுகளைத் தமிழ் பெற்றுள்ளது என்னும் கருத்தை அரண்செய்க.**

**முனைவர் ப. செல்வகுமார்**

திராவிட மொழிகள் அனைத்தும் ஒரு மூல மொழியிலிருந்து பிறந்து வளர்ந்தவைகளாகும். மொழிக்குடும்பம் என்பது தொல்மொழி (Proto Language) ஒன்றிலிருந்து பிரிந்து, காலத்தாலும் இடத்தாலும் வெவ்வேறு மாற்றமடைந்து, ஒரு பிரிவு மொழியும் மற்றொரு பிரிவு மொழியும் வெவ்வேறு மொழியெனக் கருதும் பல மொழிகளின் தொகுதியாகும். இம்மொழிகளை இன மொழிகள் (Cognate Language) என்பர். இம்மொழிகளை ஒப்பிட்டு ஆராய்ந்து இவையனைத்தும் தொல்மொழி ஒன்றிலிருந்து பல்வேறு மொழிகளாகக் கிளைத்திருக்க வேண்டும் என ஒப்பியல் ஆய்வு மொழியியலாளர்கள் கூறுவர். எல்லா திராவிட மொழிகளுக்கும் மூலமாக இருந்த மொழியினை மூல திராவிட மொழி அல்லது தொல்திராவிட மொழி (Proto Dravidian Language) என வழங்கினர். தொல் திராவிடம் என்னும் ஒரு மொழி வழக்கில் இருந்திருக்க வேண்டும் என ஊகிக்கப்படுகிறது.

திராவிட மொழியியல் பேரறிஞர் எமினோ அவர்கள் மீட்டுருவாக்க முறை மூலம் தொல் திராவிட ஒலியனமைப்புப் பற்றி ஆராய்ந்துள்ளார். தொல்திராவிட மொழியில் காணப்படும் உயிர் ஒலியன்களைக் காண்போம்.

**தொல்திராவிட உயிர் ஒலியன்கள்**

| | |
|---|---|
| இ ஈ | உ ஊ |
| எ ஏ | ஒ ஓ |

அ ஆ

தொல்திராவிட மொழியில் உள்ள 'அ' எல்லா மொழியிலும் 'அ' என்றே உள்ளது. ஆனால், தோடா மொழியில் 'ஒ' வும் சில சொற்களில் 'அ' வும் காணப்படுகின்றன. பர்ஜி மொழியில் சில சொற்களில் 'எ' வும் சில சொற்களில் 'அ' வும் காணப்படுகின்றன. தொல்திராவிட மொழியில் உள்ள 'ஆ' எல்லா மொழிகளிலும் 'ஆ' என்றும் தோடா மொழியில் 'ஒ' வாகவும் பர்ஜியில் சில சொற்களில் 'ஏ' வாகவும் காணப்படுகின்றன. தொல்திராவிட மொழியில் உள்ள 'இ' எல்லா மொழிகளிலும் 'இ' யாகவும் தோடா மொழியில் 'ஐ' யாகவும் காணப்படுகின்றது.

தொல்திராவிட மொழியில் உள்ள 'ஈ' எல்லா மொழிகளிலும் 'ஈ'யாகவே உள்ளது. தொல்திராவிட மொழியில் உள்ள 'உ' எல்லா மொழிகளிலும் 'உ' வாகவும் தோடா மொழியில் $w_1$,$w_3$ வாகவும் காணப்படுகின்றது. தொல்திராவிட மொழியில் உள்ள 'ஊ' எல்லா மொழிகளிலும் 'ஊ' வாகவே உள்ளது. தொல்திராவிட மொழியில் உள்ள 'எ' எல்லா மொழிகளிலும் 'எ' கரமாகவும் தோடா மொழியில் பெரும்பான்மை 'ஷீ' வாகவும் பர்ஜி மொழியில் சில சொற்களில் 'அ' வாகவும் பிராய்குய் மொழியில் 'இ' அல்லது 'அ' வாகவும் உள்ளது. (பிராய்குய் மொழியில் 'எ' குறில் கிடையாது). தொல்திராவிட மொழியில் உள்ள 'ஏ' எல்லா மொழிகளிலும் 'ஏ' வாகவும் தோடாவில் பெரும்பான்மை 'o' வாகவும் பர்ஜியில் 'ஆ' வாகவும் உள்ளது. திராவிட மொழியில் உள்ள 'ஒ' எல்லா மொழிகளிலும் 'x' ஆகவும் தோடா மொழியில் wa, wi, I வாகவும் காணப்படுகின்றது. (பிராய்குய் மொழியில் 'ஒ' குறில் கிடையாது). தொல்திராவிட மொழியில் உள்ள 'ஒ' எல்லா மொழிகளிலும் 'ஒ' வாகவும் தோடா மொழியில் $w_a$, $w_i$, I வாகவும் முண்டா மொழியில் 'U' வாகவும் காணப்படுகின்றது. உயிர் எழுத்து அமைப்பில் நெடில் (Length) ஒலியன் இயல்புடையது. பொது அடிப்படையைக் கொண்டு தொல்திராவிட மொழியின் அமைப்பை விளக்குகிறோம். சில இன மொழிகளில் உள்ள ஒலியன்கள் தொல்திராவிட மொழியில் இல்லை. கூயி மொழியில் உள்ள குரல்வளை தடையொலியன் தொல்திராவிட மொழியில் இல்லை. திராவிட சொற்பிறப்பியல் அகராதி மூலம் தொல்திராவிட மொழிக்கும் இன மொழிகளுக்கும் உள்ள உறவை ஆராய்கிறோம்.

### தொல்திராவிட மெய்யொலியன்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | ச் | | | த் | ப் |
| க் | ச் | ட் | ற் | த் | |
| க்க் | ச்ச் | ட்ட் | ற்ற் | த்த் | ப்ப் |
| ங்க் | ஞ்ச் | ண்ட் | ன்ற் | ந்த் | ம்ப் |
| | ஞ் | ண | ன | ம் | |
| ய் | | | | | வ் |
| | ழ்ன் | | | ர் | வ்வ் |
| | ன் | ன் | | ல் | |
| | | | | ல் | |
| | | ன்ன் | | ல்ல் | |

திராவிட மொழிகளில் ககர மெய் மொழிக்கு முதலிலும் இடையிலும் வருவதைக் காணலாம். இக் ககர ஒலி இன்றைய திராவிட மொழிகளில் பல மாற்றங்களைப் பெற்றுள்ளது. தொல்திராவிட மொழியில் இவ்வொலி எல்லா உயிர்களுக்கு முன்னும் வந்துள்ளது. முன்னுயிர்க்கு முன் தகரம் தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சகரமாக மாறியுள்ளது. பிற மொழிகளில் இன்னும் ககரமாகவே உள்ளது. பொதுவாக திராவிட மொழிகள் அனைத்தையும் ஆராய்ந்தால் மொழிக்கு முதலில் வரும் சகரம் சில மாற்றங்களை அடைந்துள்ளதைக் காணலாம். தமிழ் மலையாள மொழிகளில் சகரமாக ஒலிக்க, பிற மொழிகளில் மாறியுள்ளது. கன்னடம், துளு போன்ற மொழிகளில் சில சொற்களில் சகரமாகவும் பல சொற்களில் ஸகரமாகவும் மாறியுள்ளது. நடு திராவிட மொழிகளில் ஸகரத்தையே கொண்டுள்ளன. பழைய திராவிட மொழிகளில் ஸகரமும் இருந்திருத்தல் வேண்டுமெனக் கருதினார் 'டட்டில்' (E.H.Tuttle). திராவிட மொழிகள் அனைத்தையும் நன்கு ஆராய்வார்க்கு இஃது உண்மையன்று என்பது விளங்கும். தமிழில் காணப்படும் 'உப்பு' என்ற சொல் தொல்திராவிட மொழியில் 'சுப்பு' என்றிருந்தது என்றும் சகர மறைவினால் உப்பு என்றாயிற்று. இத்தகைய சொற்கள் பலவற்றைத் தமிழ், மலையாளம், கன்னடம், துளு, தோடா போன்ற தென் திராவிட மொழிகளிலும் தெலுங்கு மொழியிலும் காணலாம். இத்தகைய இழப்பை மற்ற நடு திராவிட மொழிகளிலோ வட திராவிட மொழிகளிலோ காண முடியாது. பழந்தமிழ் மொழியில் ஞகரம் மொழிக்கு முதலிலும் இடையிலும் வருதல் உண்டு. பழந்தமிழ் சொற்களான நாஞ்சில், ஞாண், நாண், ஞாண்டு. ஞெமுங்கு போன்றவற்றில் அகர, ஆகார, எகரங்களின் முன்னர் வந்துள்ளமையைக் காண்கிறோம். இத்தகைய சொற்கள் கன்னடம், தெலுங்கு போன்ற பிற மொழிகளில் நகரத்தைக் கொண்டிருக்கக் காண்கிறோம்.

திராவிட சொற்பிறப்பியல் அகராதியில் (A Dravidian Etymological Dictionary) தொல்திராவிட மொழிக்கும் மற்ற திராவிட மொழிகளுக்குமிடையே உள்ள இன ஒலிகள் கொடுக்கப்பட்டுள்ளன. தொல்திராவிட மொழிக்கும் தமிழுக்குமிடையே உள்ள இன ஒலிகளைக் காண்போம்:

| தொல்திராவிட மொழி | தமிழ் |
|---|---|
| அ | அ |
| ஆ | ஆ |
| இ | இ |
| ஈ | ஈ |

| | |
|---|---|
| உ | உ |
| ஊ | ஊ |
| எ | எ |
| ஏ | ஏ |
| ஒ | ஒ |
| ஓ | ஓ |
| க்- | க்,ச் |
| -க் | க் |
| க்க் | க்க் |
| ங்க் | ங்க் |
| ச்- | ச் |
| -ச்ச் | ச்ச் |
| ஞ்ச் | ஞ்ச் |
| -ட்- | ட் |
| -ட்ட்- | ட்ட் |
| ண்ட் | ண்ட் |
| த்- | த் |
| -த்- | த் |
| த்த் | த்த் |
| ந்த் | ந்த் |
| ப்- | ப் |
| ம்ப் | ம்ப் |
| -ற்- | ற் |
| ற்ற | ற்ற |
| ன்ற் | ன்ற் |
| ம் | ம் |
| ன்ந் | ன்ன் |
| ண் | ண் |

| | |
|---|---|
| ஞ் | ஞ் |
| ய் | ய் |
| ர் | ர் |
| ல் | ல் |
| ல்ல் | ல்ல் |
| வ் | வ் |
| -வ்- | வ் |
| ழ் | ழ் |
| ன் | ன் |
| ன்ன் | ன்ன் |

## 2 (ஆ) சங்க காலத் தமிழ் மொழியமைப்பைச் சொல்நிலையில் விளக்குக.

**முனைவர் ப. செல்வகுமார்**

தொல்காப்பியத் தமிழில் காணப்பட்ட கூறுகள் சங்க காலத் தமிழில் காணப்படுகின்றன. சில மாற்றங்களைத் தவிர சங்க காலத் தமிழ் முழுக்க தொல்காப்பியத் தமிழாகும். சங்க இலக்கியத்தில் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் மொழி முதலில் வந்துள்ளன. மெய்யெழுத்துக்களுள் க ச த ப ம என்னும் ஐந்து மெய்யெழுத்துக்களும் எல்லா உயிர் எழுத்துக்களோடும் இணைந்து மொழி முதலில் வரும் எனத் தொல்காப்பியர் கூறுகிறார். சங்க இலக்கியத்திலும் இவ்வைந்து மெய்யெழுத்துக்களோடும் எல்லா உயிர்களும் இணைந்து மொழி முதல் வந்துள்ளன. சகரம் அ,ஐ,ஔ என்னும் மூன்றும் நீங்கலாக ஒன்பது உயிர் எழுத்துக்களோடும் இணைந்து மொழி முதலில் வரும் (தொ.எ.62). சங்க இலக்கியத்தில் ஒன்பது உயிர்களுடன் மட்டுமின்றி அகரத்தோடும் ஐகாரத்தோடும் இணைந்து மொழி முதலாகிறது. வகரம் உ, ஊ, ஒ, ஓர் என்னும் உயிர்கள் ஒழிந்த ஏனைய எட்டு உயிர்களோடும் இணைந்து மொழி முதலில் வரும் என்று தொல்காப்பியம் கூறுவது போன்று சங்க இலக்கியத்திலும் வருகின்றன.

வடுகர் - நற். 212

வாடை - நற் . 5

விரல் - அகம். 34

வீரர் - அகம். 36

வெகுளி - பொருந.172

வேந்தன் - அகம். 24

வையை - மது.356

சங்க இலக்கியதில் ஞகரம் 'அ, எ, ஒ' வோடு இணைந்து மொழி முதலில் வருவதுடன் 'அ, இ வோடு இணைந்து மொழி முதலாகிறது.

ஞரல - பதிற்.30

ஞிமிறு - புறம். 93

யகரம் ஆவோடு மட்டுமல்லாது அகரத்தோடும் ஊகாரத்தோடும் இணைந்து மொழி முதலில் வந்துள்ளது.

யவனர் - அகம் 149

யூபம் - பதிற் 67

பிற உயிர்களுடன் இணைந்து மொழி முதல் வருவது வடமொழித் தொடர்பால் ஏற்பட்டிருக்கலாம் என பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் கருதுகின்றார்.

பதினொரு உயிர் எழுத்துக்களும் சங்க இலக்கியத்தில் மொழி இறுதியில் வருகின்றன. 'ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள' என்னும் பதினொரு மெய்களுள் ஞ கரம் தவிர ஏனைய பத்தும் சங்க இலக்கியங்களில் மொழிக்கு இறுதியாக வந்துள்ளன. உரையாசிரியர்கள் 'உரிஞ்' என்னும் சொல்லை உதாரணம் காட்டுகின்றனர். தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ம்மயக்கங்கள் சிலவற்றைத் தவிர அனைத்து மெய்ம்மயக்கங்களும் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. உடன்படு மெய்யான யகர வகரங்களின் வருகை சங்க இலக்கியத்தில் மிகுதியாகும். இதனால் உயிர் மயக்கங்கள் தவிர்க்கப்பட்டன.

*செய்யு ளிறுதிப்போலி மொழிவயின்*
*னகார மகாரம் ஈரொற்றாகும்* **(தொல். எ. 51)**

'போலும்' என்ற சொல் 'போன்ம்' என்றாகும் என்பர். சங்க இலக்கியங்களில் வேறு சில சொற்களையும் காணலாம்.

சான்ம் - மலை 313; நற். 381

தேய்ம் - நற். 68

நன்னூலாரும் - ண், ம் ஈரொற்றாய் அமைந்து வருதலைக் குறிப்பிட்டுள்ளார்.

*லள மெய் திரிந்த ண, ன முன் மகாரம்*
*நைந்தீ ரொற்றாய் செய்யு ளுள்ளே* **(நன். 120)**

தமிழ் மொழியில் காணப்படும் திணை, பால், எண், இடம் ஆகியவற்றிற்கு அடிப்படையாக அமைவது பதிலிடு பெயர்களாகும் (Pronouns). இதைத் தான் தொல்காப்பியர்,

*தன்மை முன்னிலை படர்க்கை என்னும்*
*அம்மூவிடத்தும் உரிய என்ப* **(511)**

எனக் கூறிப்போந்தார்.

யான் யாம் நாம்

நீ நீர் நீயிர்

அவன் அவள் அவர்

அது அவை

பண்டைத் தமிழில் இருவிதமான பதிலிடு பெயர்களைக் காணலாம். சுட்டுப் பெயர்களாக உள்ள அவன், அவள், அவர், அது, அவை போன்றவை ஒரு வகையாகும். சுட்டுப்பெயரல்லாத தான், தாம் என்பவை பால் வேறுபாட்டைக் காட்டாமல் ஒருமை, பன்மை என்ற எண் வேறுபட்டை மட்டும் காட்டுகின்றன. பெயர்ச்சொற்களை உயர்திணை, அஃறிணை என இரண்டாகப் பிரிப்பர். இவற்றை ஆண்பால், பெண்பால், பலர்பால் என்றும் ஒன்றன்பால், பலவின் பால் என்றும் பிரித்து நிற்பர்.

'நீயிர்' என்பது 'நீர்' என மாறி வந்துள்ளது (புற.110:6, நற்.48:8). 'நும்' என்பது 'உம்' 'உமக்கு' என மாறியுள்ளது (நற்.368.3,புற.45.5). முன்னிலை ஒருமை வடிவமாக 'உன்' (அக.222.2) வந்துள்ளது. 'நின் (புற. 29., குறுந். 22:5) என்பது 'நுன்' என்று மாறிய பின் 'ந'கர மெய் கெட்டோ 'உம்' மிலிருந்து ஒப்புமையாக்கத்தினாலோ வந்த வடிவமாகும். 'அன்' விகுதி தன்மை ஒருமை விகுதியாகப் பயன்படுத்தப் பட்டிருப்பதும் ஒப்புவமையாக்கத்தினாலாகும். உளப்பாட்டுத்தன்மை (Exclusive Plural) போன்றவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடு சங்க இலக்கியத்தில் தெளிவாக இல்லை. யாம், நாம் என்ற வடிவங்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. முன்னிலைப் பன்மை நீயிர்(அக.26, மலை.53) காணப்படுகிறது. தான், தாம் சில இடங்களில் அழுத்த அசை நிலையாகவும் தற்சுட்டுப் பெயராகவும் பயன்படுகின்றன.

*அளிதோ தானே தோழி (நற்.114)*

*அன்னை தான் அறிந்தன்று (நற்.175)*

முன்னிலைப் பன்மை 'நீம்' பழந்தமிழில் இடம் பெறவில்லை. 'நீம்' சீவக சிந்தாமணியிலும் 'நீங்கள் அப்பர் தேவாரத்திலும் வந்துள்ளன. எனவே நீமும் நீங்களும் இடைக்காலத்தில்தான் வந்துள்ளன எனக்கூறலாம். பலர்பால் விகுதியாக பெயரியல் 'மார்' விகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

*தோழிமார் (அக. 15:9)*

*ஐயன்மார் (புற. 342:15)*

வினா இடப் பெயர்களாக (Interrogative Pronoun)

*யாண்டு (புற. 86)*

போன்றவை சங்க இலக்கியங்களில் பயின்று வருகின்றன.

'ஆன்' வேற்றுமை உருபு நீங்கற் பொருள் வேற்றுமைப் பொருளையும் இடவேற்றுமைப் பொருளையும் தருகின்றன.

*என் நெஞ்சத்தானேஞ்..போதல் ஒல்லாள் (நற்.201)*

*மன்னிய பெரும நில மிசையானே (புற.6)*

'அ'கரம் ஆறாம் வேற்றுமை உருபாகச் செயல்படுகின்றது.

*மன்ற மராத்த (குறு.87)*

*நின்ன கண்ணி (புற.45)*

'இல்', 'இன்' இடப்பொருள் வேற்றுமை உருபாகச் சங்க இலக்கியங்களில் பயின்று வருகின்றன.

*சிலம்பில் துஞ்சும் (நற்.7)*

*இரவின் வந்து (நற்.55)*

வேற்றுமை உருபு 'இன்'னிற்கு முன் 'இன்' சாரியை பயன்படுத்தப்பட்டுள்ளமை ஒப்புவமையாக்கத்தினால் ஆகும்.

தொல்காப்பியர் மூன்று காலத்தைப் பற்றிக் (தொ.சொ.199,200) குறிப்பிட்டாலும், கால இடைநிலைகளைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிடவில்லை. சங்க காலத் தமிழில் இறந்த காலம் (Past), இறப்பல்லாக்காலம்(Non-Past) என்ற வேறுபாடே காணப்படுகின்றன.

**இறந்தகாலம் (Past)**

-த்-

*செய்தனம் (குறு.304)*

*செய்து (அக.32)*

பிற்காலத்தில் 'த்' தகரத்தை மட்டும் இறந்தகால விகுதியாக ஏற்கும் வினைகள் பழந்தமிழில் 'த' கர விகுதியையும், 'இ'கர விகுதியையும் பெற்று வந்துள்ளன.

*முயலி (ஐங்.379)*

*இயலி (புற.76.15)*

-ந்த்-

*அறிந்தனென் (அக.172)*

-த்த்-

*கொடுத்த (நற்.110)*

-ட்-

*கண்டனன் (குறு.311)*

-ற்-

*அற்றனை (அக.359)*

-க்-

*புக்கோன் (புற.39)*

**இறப்பல்லாக் காலம் (Non- Past)**

-வ்-

*இடுவென் (புற.178)*

-ப்-

*காண்பேன் (நற்.259)*

-ம்-

*கொய்யுமோன் (புற.252)*

-ந்-

*காணுநர் (நற்.216)*

-க்-த்-ட்-ற்- போன்ற கால இடைநிலை தன்மையிலும் முன்னிலையிலும் வருகின்றன.

*அறிகை (புற.186)*

*உரைக்கோ (நற்.211)*

*விடுதும் (புற.9)*

*செய்திம் (புற.145)*

*காண்டும் (புற.173)*

*கேட்டி (அக.68)*

*கண்டிரோ (அக.376)*

*சேம் (புற.113)*

இறப்பல்லாத காலம் காட்ட உந், த், உம், க் ஆகிய பல விகுதிகள் உள்ளன. அறிநர், பொருநர், அறிதி, அறியும், அறிவாள், அறிகும், அறிகுவம் என்பன போன்ற பல சான்றுகள் உள.

எதிர்கால விகுதியாகக் 'கு' கரமும் 'வ' கரமும் சேர்த்துப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

*செய்குவேன் (புற .304)*

*காண்குவம் (ஐங். 112)*

*பெருகுவிர் (பத்து.3.195)*

செய்யாய் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள் உடன்பாட்டு ஏவல் வினையாகக் காணப்படும்.

*செல்லாய் (பதி.40:21)*

*வாராய் (அக.219:2)*

செய்யா அல் வாய்பாட்டு ஏவல் வினைமுற்றையும் சங்க இலக்கியங்களில் காணலாம்.

*அழாஅல் (அக.233:2)*

*விடாஅல் (அக.26:9)*

*தொடாஅல் (குறு.191:7)*

'இசின்' ஈற்றுச் சொற்கள் ஏவல் ஒருமையில் வருகின்றன.

*கண்டிசின் (நற்.202:8)*

*கேட்டிசின் (பத்து.6:208)*

'செயின்' என்னும் வினையெச்ச வாய்பாடு பின்னர் 'செயில்' என்றாகியது. 'செய்து' 'ஆல்' விகுதி பெற்று நிபந்தனை வினையெச்சமாக வருகிறது. செய்யும் என்பது ஆயின் அல்லது ஏல் என்பதுடன் சேர்ந்து நிபந்தனையைக் காட்டுகிறது. எதிர்காலத்தைக் குறிக்கும் எச்சமாகிய 'செய்யு' மெல்ல மறைந்து, செய்பான் - செய்வான், செய்பாக்கு போன்றவை நோக்கத்தைக் காட்ட வருகின்றன. 'செய்யிய' என்பது நோக்கத்தைக் காட்டும் பழைய வினையெச்ச வாய்பாடாகும். இது மறைந்து 'செய' எனும் வினையெச்சம் புறநானூற்றில் வருகிறது. 'செய்யா' என்ற வாய்பாட்டோடு 'செய்யாத' என்னும் வாய்பாடும் பயன்படுத்தப்பட்டிருப்பது, உடன்பாட்டில் 'செய்யாத' என்ற வாய்பாடு வருவது பற்றிய ஒப்புவமையாக்கத்தினால் ஆகும்.

*கெடாத துப்பு (புற.2.7:17)*

நியமப் பொருளைக் குறிக்க (Conditional) வினைமுற்றிற்குப் பின்னர் 'ஆயின்' சேர்ப்பது பெரும்பான்மை வழக்காகும்.

*இறக்குவை ஆயின் (ஐங்.301:3)*

*அகன்றனர் ஆயின் (அக.69:12)*

வியங்கோள் வடிவங்களான 'வாழிய' 'வாழி' என்ற வழக்காறுகட்கு பதிலாக 'வாழ்க' என்பது வழக்குப் பெருகின்றது.

*வருந்த வேண்டா வாழ்க அவன் தாளே (புறம்.101:10)*

சங்க காலத்திலும் திருக்குறளிலும் வியங்கோளுக்கு 'ஆல்' விகுதி வருகிறது. பிற்காலத்தில் இது காணப்படவில்லை.

சங்க கால மொழியைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள, திராவிட ஒப்பிலக்கணத்தோடும் இடக்காலத்தமிழோடும் ஒப்பிட்டுக் காணவேண்டுமெனப் பேராசிரியர் செ.வை. சண்முகம் அவர்கள் தமது கட்டுரையொன்றில் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. சிறுக்கன், முதுக்கன் என்ற சொற்களில் 'கன்' ஆண்பால் விகுதியாக தொல் திராவிடத்தில் உள்ளது. பழந்தமிழில் இவ்விரு சொற்களும் முறையே சிறுவன், முதியன் என்றே வழங்கி வந்துள்ளன. மொழியிடையில் வரும் 'ய'கரம் தொல் திராவிடத்தில் சில சொற்களில் 'ச'கரமாக இருந்திருக்க வேண்டும் என்பர் ஒப்பிலக்கணத்தார். 'பெயர்' என்ற வடிவம் 'பெசர்' என்றே இருந்திருக்க வேண்டும். அவ்வாறே 'உயிர்' என்பது 'உசிர்' என்றும் 'இயை' என்பது 'இசை' என்றும் இருந்திருக்க வேண்டும் என்பர், இடக்கால நூல்களில் 'உசிர்' 'இசை' போன்ற சொற்களைக் காணலாம். வீரசோழியம் உரையாசிரியரும் 'ய' கரம் 'ச' கரமாக மாறும் என்று கூறி, 'உசிர்' போன்ற சொற்களை எடுத்துக் காட்டுகிறார். எனவே, பழைய சகரமே இடைக்காலத்தில் வழங்கியதைக் காண்கிறோம். ஒரு காலத்தின் பேச்சு வழக்குப் பின்னர் இலக்கிய வழக்காக மாறுவதும் உண்டு.

மேற்காணும் செய்திகளிலிருந்து சங்ககாலத் தமிழ் தொல்காப்பியத் தமிழைப் பெரும்பான்மை ஒத்தும் சிறுபான்மை வேறுபட்டும் உள்ளது தெளிவாகிறது. வேறுபடுதல் என்பது மொழி வளர்ச்சியைக் காட்டுகிறது. தமிழக வரலாற்றில் சங்க காலத்தில் நிறைய இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவ்விலக்கியங்களின் அடிப்படையில் சங்ககாலத் தமிழ் இங்கு ஆராயப்பட்டுள்ளது.

## பார்வை நூல்கள்

1. சக்திவேல், க. தமிழ்மொழி வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், 2ஆம் பதிப்பு, சென்னை, 2012.
2. தெ.பொ.மீ. தமிழ் மொழிவரலாறு, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1977.

**3 (அ) தொல்காப்பியத்தின் வழி நின்று புறத்திணைக் கோட்பாட்டை விளக்குக.**

முனைவர் பா. இராஜா

எழுத்திற்கும் சொல்லிற்கும் மட்டுமன்றி வாழ்வின் பொருளுக்கும் இலக்கணம் தந்தமொழி தமிழ்மொழி. அதற்கான இலக்கண நூலாகத் திகழ்வது தொல்காப்பியம், பொருளிலக்கணம் அகம், புறம் என இருவகையாற் பிரித்துக் கூறப்பட்டுள்ளது. சுட்டி ஒருவர் பெயர் கூறாநிலை அகத்திணை எனவும், புறக்கூறுகளான கல்வி, புகழ், ஒழுக்கம் போன்றவற்றைச் சுட்டி ஒருவர் பெயர் கூறும் நிலையில் அது பொலிவு பெறும் என்பதால் அதனைப் புறத்திணை எனவும் வழங்கினர்.

திணை என்பது ஒழுக்கம் எனப்படும். அகவாழ்வின் இலக்கணத்திற்கு தந்த அதே இன்றியமையாமையைப் புறவாழ்விற்கும் தந்துள்ளார் தொல்காப்பியர். தனி இயலையும் அமைத்துள்ளார். தொல்காப்பிய புறத்திணையின் கோட்பாடுகள் எங்ஙனம் அமைந்திருந்தன என்பதை இனி விளக்கலாம்.

தொல்காப்பியர் வகுத்துள்ள புறத்திணைகள் ஏழு, அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பன. ஆடவர்க்குரிய சிறந்த இயல்பாகிய பெருமையும் வலிமையும் வீரத்தின் வெளிப்பாடாதலால் புறத்திணைகள் ஏழும் 'அமர் கொள் மரபின்' (போர் முயற்சி அடிப்படையாகக் கொண்டது) திணைகள் ஆயின.

புறத்திணைகளின் இயல்பினைக் கூறவந்த தொல்காப்பியர்,

*அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்*
*புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்*
*. . . . . . . . . .* *(தொல்.புறம்.1)*

எனத் தொடக்கம் செய்துள்ளார்.

அகத்திணை இலக்கணத்தைப் பிழையற நன்கறிந்தோராலேயே புறத்திணை இலக்கணத்தைத் தெளிவுபட பகுத்துரைக்க இயலும் என்பது தொல்காப்பியரின் கருத்தாகும். அகத்திணைகளின் இலக்கணத்தை உணர்ந்தவர்க்கன்றி, பிறர்க்கு அவற்றின் புறத்தவாகிய புறத்திணை ஒழுகலாறுகளும் அவற்றின் துறைகளாகிய செயல்வகைகளும் விளக்க முடியாது என்பதும் தொல்காப்பியரின் முடிவான கருத்தாகும்.

திணை அடிப்படையில் தொல்காப்பியர் புறப்பொருளை விளக்கியுள்ளார் என்பதை அகத்திணைக்குப் புறனாகப்

புறத்திணையைக் காட்டும் தெளிவால் விளங்கிக் கொள்ள முடிகின்றது. இதனை,

- வெட்சிதானே குறிஞ்சியது புறனே *(தொல்.புறம்.1)*
- வஞ்சிதானே முல்லையது புறனே *(தொல்.புறம்.5)*
- உழிஞை தானே மருதத்துப் புறனே *(தொல்.புறம்.9)*
- தும்பை தானே நெய்தலது புறனே *(தொல்.புறம்.14)*
- வாகை தானே பாலையது புறனே *(தொல்.புறம்.18)*
- காஞ்சிதானே பெருந்திணைப் புறனே *(தொல்.புறம்.22)*
- பாடாண் பகுதி கைக்கிளைக்குப் புறனே *(தொல்.புறம்.25)*

எனும் நூற்பாக்களின் வழி அறியலாம்.

அகத்திணையின் ஐந்து திணைகளாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய திணைகள் அகத்திற்கும் புறத்திற்கும் களமாக அமையும் சூழலைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் விளக்கி உரைக்கின்றமையைக் காண்கிறோம்.

இனி, புறத்திணைகள் ஏழின் கோட்பாடுகளின் தனித் தன்மைகளைக் காணலாம்.

## வெட்சி

புறத்திணைகளுள் முதலாவதாக அமைவது வெட்சியாகும். இதன் இலக்கணம்

> வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
> ஓம்பல் மேவற்றாகும் *(தொல்.புறம்.2)*

அஃதாவது, போர்வீரர்கள் வேற்று நாட்டின்கண் களவினால் ஆனிரையைக் கவர்ந்துவந்து தம் நாட்டிற் பாதுகாத்தல் என்பது இதன் பொருளாகும். குறிஞ்சியின் உரிப்பொருள் 'புணர்தல் புணர்தல் நிமித்தம்'. இதுகளவின்கண் நிகழ்வது ஆதலின், களவினால் ஆனிரையைக் கொண்டு வருதலால் குறிஞ்சியின் புறத்திணையாக வெட்சி அமைந்தது என உரையாசிரியர்கள் விளக்குவர். ஐந்து நூற்பாக்களில் வெட்சித்திணையின் இயல்புகள் கூறப்பட்டுள்ளன.

### வெட்சித் திணையின் இன்றியமையாமை

1. போர் துவக்கும் ஒழுக்க வகைகள் அனைத்தும் வெட்சியெனக் குறிக்கப்பெற்று, வலிமையோடு போர் புரியும் புறத்திணை தொகுப்பில் வெட்சி முதற்கண் கூறப்படுகின்றது.

2. போர் முறையின் பொது இயல்புகள் அனைத்தும் வெட்சித் திணையுள் குறிக்கப்பெற்றுள்ளன. போர் புரிவது அமர் முன்னிகழ்வு, அமர் நிகழ்வு, அமர்பின் நிகழ்வு என மூவகையில் விளக்கப்படுகின்றன. வெட்சித் திணையின் இவ்வியல்புகள் பிற திணை களங்களுக்கு ஏற்றாற் போல் மாற்றம் செய்து விளக்கப்பட்டுள்ளன.

3. வெட்சியின் அடிப்படையான ஆநிரை கவர்தலில் ஆநிரையைக் கவர்கின்ற மறவரை நிரை காவலர் மீட்க முயல்வதும், அவரோடு நிரை கொள்வார் போரிடுவதும் ஆநிரை கவர்தலின் இடை நிகழ்ச்சிகள் ஆகும். இவ்வியல்பு கருதி 'கரந்தை' என வெட்சித் துறைகளுள் அடக்கினார் தொல்காப்பியர்.

4. வெட்சித் திணைக்குரிய இலக்கியமாகச் சிலப்பதிகார வேட்டுவவரி அமைகிறது.

**வஞ்சி**

முல்லை எனும் அகத்திணைக்குப் புறனாக அமைவது வஞ்சித்திணையாகும். இதனைத் தொல்காப்பியர்,

*எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்*
*அஞ்சுதகத் தலைச் சென்று அடல் குறித்தன்றே*

***(தொல்.புறம்.7)***

என்கிறார்.

மண்மீது கொண்ட விருப்பத்தின் பேரில் நீங்காத மன்னனை அச்சம் கொள்ளுமாறு சென்று போர் புரிதலைக் குறிப்பதாக இளம்பூரணர் விளக்குகின்றார்.

முல்லைத் திணைக்குரிய புறனாக வஞ்சித்திணை அமைவதன் காரணங்கள் வருமாறு:

1. முல்லையின் உரிப்பொருள் 'இருத்தல் இருத்தல் நிமித்தமாகும்'. முல்லையிலும் வஞ்சியிலும் தலைவனைப் பிரிந்த தலைவியர் ஆற்றியிருத்தல் பொது ஒழுக்கமாக அமைகின்றது.

2. முல்லையில் தலைவன் பொருள் ஈட்டும் வினைமேற் செல்லல், வஞ்சியில் பகைமேற் செல்லும் தன்மையோடு பொருந்துகின்றது.

3. முல்லையில் தலைவன் தலைவியைப் பிரிதல் மனையறம், வஞ்சியில் தலைவன் தலைவியைப் பிரிதல் போர் அறம்.

இம்முக்கூறுகளால் வஞ்சி முல்லைக்குப் புறனாகின்றது. வஞ்சித்திணை இலக்கியத்திற்கு இலக்கியமாகச் சிலப்பதிகார வஞ்சிக்காண்டமும் பத்துப்பாட்டுள் முல்லைப்பாட்டும் அமைந்துள்ளன.

**உழிஞை**

பகைவர் அரணை (மதிலை) முற்றுகையிட்டு எதிர்த்து அழித்தல் உழிஞை எனும் திணையாகும். உழிஞைத் திணையின் இலக்கணத்தைத் தொல்காப்பியம்,

*முழுமுதலரணம் முற்றலும் கோடலும்*
*அனைநெறி மரபிற்றாகும் என்ப* *(தொல்.புறம்.10)*

என்கின்றது.

'உழிஞை' எனும் இப்புறத்திணை 'மருதம்' எனும் அகத்திணைக்குப் புறனாக அமைகின்றது.

மருதத்திற்கும் உழிஞைக்கும் மதிலை உடைய ஊர்களே நிலைக்களம் ஆதலாலும், புலத்தலும் ஊடலும் மருத ஒழுக்கம் ஆவது போல், உழிஞையில் ஊரின் கண் உள்ள அரணில் படைகள் தம்முள் மாறுபட்டு இகழுதல் அமைவதால் மருதத்திற்கு உழிஞை புறனாகின்றது.

போரின் கடுமையை விளக்கும் புறப்பாடல்களில் அரண் குறித்த கருத்துக்கள் தவறாது இடம் பெற்றமையால் பிற துறை அமைந்த பாடல்களில் மீண்டும் மீண்டும் குறிக்கப்படும் கருத்துக்களாக உழிஞைத்திணை கருத்துக்கள் அமைகின்றன. எனவே, இவை தனித்த வகைமைச் சான்று இல்லாமல் போயின எனலாம்.

**தும்பை**

நெய்தல் எனும் அகத்திணைக்குப் புறனாக அமைவது தும்பைத் திணையாகும். இதனைத் தொல்காப்பியம்,

*மைந்து பொருளாக வந்த வேந்தனைச்*
*சென்று தலையழிக்குஞ் சிறப்பிற்றென்ப* *(தொல். 1016)*

என்கிறது. அதாவது, தன் வலிமையை மதித்துப் போரிட வந்த வேந்தனை, எதிர்த்து நின்று போர் செய்யும் சிறப்பினை உடையது தும்பைத் திணை என விளக்கப்படுகிறது.

நெய்தல் எனும் அகத்திணைக்குப் புறனாகத் தும்பைத் திணை அமைவதற்கான காரணங்கள் வருமாறு:

நெய்தலின் உரிப்பொருளான 'இரங்கல் இரங்கல் நிமித்தம்' புலம்புறு தலைவியர் இரங்கல் ஓய கார்காலத்தே மீளுதல் போல, தும்பைத் திணையில் போர் ஓய்தல் கார்காலத் தாதலாலும் நெய்தல் திணையின் ஆர்ப்பு, அலைப்பு, இரங்கல் இவை தும்பைத் திணையின் போர்க்கால நிகழ்வுகளில் அமைவதாலும் நெய்தலுக்குப் புறனாகத் தும்பைத்திணை அமைகின்றது.

வெட்சி, வஞ்சி, உழிஞை ஆகிய திணைகளில் பொருவோர், எதிர்ப்போர் என்ற இரு பிரிவு நிலைகள் காணப்படுகின்றன. இவ்விரு பிரிவு நிலைகள் தும்பைத் திணையில் மாற்றம் பெற்றுப் போர் நிகழ்த்துவோர்க்குரிய பொதுவான போர்முறைகளை விளக்கும் மறப்பண்புகளாக வளர்ச்சி பெறுகின்றன. போர் முறையின் விளக்கமாகத் தொடங்கப்பெற்ற புறத்திணை இலக்கிய மூலக்கூறுகள் போர்ப்பண்பின் (வீரத்தின்) விளக்கமாக வளர்ச்சியுறுவதற்குத் தும்பைத்திணை அடிப்படையாக அமைகின்றது.

**வாகை**

'பாலை' எனும் அகத்திணைக்குப் புறனாக வாகைத் திணை அமைகின்றது. வாகைத் திணையின் இலக்கணத்தைத் தொல்காப்பியர்,

*தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்*
*பாகுபட மிகுதிப் படுத்த லென்ப* *(தொல்.1020)*

என்கிறார். அதாவது, குற்றமற்ற கோட்பாட்டளவில் மக்கள் அவரவர் துறையில் பிறருடனுறழ்ந்து மேம்பட்ட வெற்றி பெறுதல் 'வாகை' எனப்படும், உறழ்பவரின்றி ஒரு துறையில் ஒப்பற்றுயரும் பரிசும் வாகையே ஆகும்.

பாலைத் திணைக்குரிய புறனாக வாகை அமைதல்

1. பாலைத்திணை அறக்காதலை வளர்த்து மீட்டும் இன்பத்தை மிகுவிப்பது போல, வாகை மறக்காதலை வளர்த்து வெற்றியின்பம் விளைவிக்கின்றது.

2. பாலைத்திணை நிலம் வரையறையின்றி யாண்டும் நிகழ்தலைப் போல வாகையும் நிலம் வரைதலின்றி யாண்டும் நிகழும் தன்மையுடைத்தாதலின் பாலைத் திணைக்கு வாகை புறனாயிற்று, புறத்திணை இயலின் போக்கில் அறத்தின் பாற்படுத்தும் திருப்புமுனையாக வாகைத்திணை திகழ்கிறது.

**காஞ்சி**

பெருந்திணை எனும் அகத்திணைக்குப் புறனாக அமைவது காஞ்சித்திணை. இதனைத் தொல்காப்பியம்,

*பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும்*
*நில்லா உலகம் புல்லிய நெறித்தே* *(தொல்.புறம்.23)*

என உரைக்கின்றது. அதாவது,

முறை சிறவாத பலதுறையானும் நிலையற்ற உலகியலைத் தழுவியது காஞ்சித் திணையாகும். ஒப்பற்ற மறுமையின்பத்துப் பல வழியானும் நிலையற்ற உலகியலை இகழும் முறைமையினை உடைத்து காஞ்சித் திணையாகும்.

பெருந்திணைக்குப் புறனாக காஞ்சித்துறை அமைகின்ற விதம் காண்போம்.

ஐம்பொறி அவிக்கும் மனத்திடமின்றி இன்பம் மட்டுமே விழைந்து செய்யும் காமவகை பெருந்திணை ஆவது போல, முயற்சி மேற்கொள்ளும் உரமின்றி நிலையாமை சொல்லி நெஞ்சு அழிய மடிவதே காஞ்சியாவதாலும், பெருந்திணை, காஞ்சி இவ்விரண்டிற்கும் இடம் பொழுது இரண்டும் வரையறையின்மையாலும் பெருந்திணைக்குக் காஞ்சி புறனாகின்றது.

நிலையாமையை எதிர்த்து வென்று வாழும் முறையைத் தொல்காப்பியர் காஞ்சித் திணையில் குறிக்கின்றார். வாகைத் திணையில் செம்பாதித் துறைகளில் அறக் கருத்துகள் ஆட்சி செய்ய, காஞ்சித் திணையில் அறக்கருத்துகள் தலைமை ஏற்றுள்ளன எனக் குறிக்கலாம்.

பாடாண்திணை

கைக்கிளைத் திணைக்குப் புறனாக அமைவது பாடாண் திணையாகும். இதனைத் தொல்காப்பியம்,

*அமரர்கண் முடிபு மறுவகையானும்*
*புரைதீர் காமம் புல்லிய வகையினும்*
*ஒன்றன் பகுதி ஒன்றுமென்ப* *(தொல்.புறம்.26)*

என உரைக்கின்றது.

கொடிநிலை, கந்தழி, வள்ளி, புலவராற்றுப்படை, புகழ்தல், பரவல் எனும் ஆறும் கடவுள் புகழ்ச்சியன்றிப் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வருதலும் எனும் இவ்விருவகையாகும், ஒருவனைப் புகழ்தலால் இது பாடாண்திணை எனப்படுகின்றது.

கைக்கிளைக்குப் புறனாகப் பாடாண்திணை அமையும்விதம் வருமாறு:-

கைக்கிளை காதற் சிறப்பு ஒருவர்க்கே ஆவது போல, பாடாண் சிறப்பும் பொதுமையின்றி தகவுடைய ஒருவர்க்கே ஆகும் என்பதும், கைக்கிளை காதற் கூற்றுப் பாராட்டு அயலிலே அமைவது போன்று பாடாண் பாட்டும் புகழ்வோர் தம் பக்கத்தில் அமைவதாலும் நிலம், பொழுது வரையறை இரண்டிற்கும் இன்மையானும் பாடாண்திணை அகத்திணையாம் கைக்கிளைக்குப் புறனாயிற்று.

## பார்வை நூல்கள்


1. தொல்காப்பியமும், இலக்கிய வகையும் வளர்ச்சியும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
2. நாவலர் ச.சோமசுந்தர பாரதியாரின் நூல் தொகுதி தொல்காப்பியப் பொருட்படலப் புத்துரை, தொகுதி-2, வசுமதி பதிப்பகம், சென்னை.

## 3 (ஆ) சங்க அகப்பாடல்கள் தமிழர் தம் வாழ்வியல் விழுமியங்களை வெளிப்படுத்தியுள்ளன என்னும் கருத்தின் வன்மை, மென்மைகளை மதிப்பிடுக.

முனைவர் ஆ. மணவழகன்

தமிழர் தம் தொன்மை இலக்கியமாகக் கருதப்படும் சங்க இலக்கியம், மனித வாழ்வினை அகம், புறம் என இருபிரிவுகளாகப் பிரித்துவைத்துப் பார்க்கின்றது. இதில் அகம் என்பது ஒத்த அன்பினான தலைமக்கள் கூடுவதும், புறமென்பது பிறர்க்கு 'இன்னது' என்று அறிவிப்பனவாகவும் அமைவது. இவ்வாறான சங்கப்பாடல்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதில் எட்டுத்தொகை எனும் தொகை நூலில் 5 நூல்கள் அகத்தைப் பற்றியும் 3 நூல்கள் புறத்தைப் பற்றியச் செய்தியினையும் கூறுகின்றன. மேற்சுட்டப்பட்ட 5 அகநூல்களில் 'குறுந்தொகை' இரண்டாவதாக வைக்கப்பட்டுள்ளது. எட்டுத்தொகை நூல்களைப் பற்றி கூறும் பாடலொன்று இதனை 'நல்ல குறுந்தொகை' எனும் அடைமொழியிட்டு சிறப்பிக்கிறது. இந்நூலில் மொத்தம் 400 பாடல்கள் தொகுக்கப் பட்டுள்ளன (கடவுள் வாழ்த்துத் தவிர்த்து). ஒவ்வொரு பாடலுக்கும் சிற்றெல்லை 4 அடியாகவும் பேரெல்லை 8 அடியாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக அமைந்துள்ள பாடலின்வழி சங்காலத் தமிழர்தம் வாழ்வியல் விழுமியங்களை மதிப்பிடுகிறது இக்கட்டுரை. குறிப்பாக, பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள முதல் 25 பாடல்களே இக்கட்டுரையின் மூலமாக அமைகின்றன.

### விழுமியம்-வரையறை

'விழுமியம்' என்ற சொல் உயர்ந்த, சிறப்பான கருத்துக்களைக் குறிப்பிடுமிடத்துப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு பாடலில் இவ்வாறான சிறந்த கருத்துக்கள் கொண்ட அடிகள் இடம்பெறும்போது அதனை 'விழுமியம்' என்பதாக வரையறைப்படுத்தலாம். உலகில் வாழும் மனிதர்கள் அனைவரும் தங்களின் மொழி, நாடு, சூழல் போன்றவற்றிற்கு ஏற்பப் பல்வேறான மதிப்புகளைக் கடைபிடித்து வாழ்ந்து வருகின்றனர்.

'values' எனும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக தமிழில் 'மதிப்புகள்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

'மதிப்புகள்' என்பதனை சிலர் 'விழுமியங்கள்' என்று அர்த்தப்படுத்துகின்றனர். '' 'விழுமியம்' என்பது சிறந்ததை மட்டுமே குறிக்கிறது. சிறந்ததல்லாத எதுவும் 'விழுமியம்' என்ற சொல்லாட்சிக்குள் வராது'' என்பது சமூகவியலாளர் கருத்து.

### தலைவியின் அன்பு

சங்க அகக் கவிதைகளில் தலைவன்மீது காதல்வயப்பட்ட தலைவி தன் அன்பினைப் பலவாறாக வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது. அதைப்போல தான் விரும்பிய தலைவன் எத்தகைய மேன்மைக்குரியவன் என்று தோழியிடத்து தெரிவிக்கையில் பல்வேறான இயற்கையோடு இயைந்த கருப்பொருள் உவமைகளை வெளிப்படுத்துகிறாள். இத்தகைய வெளிப்பாட்டின் வாயிலாக தலைவன் மீதான தலைவியின் அன்பு விழுமியத்தை நாம் உணரலாம்.

*நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று*
*நீரினு மாரள வின்றே சாரற்*
*கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு*
*பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே* (குறு. 3)

மேற்காணும் குறுந்தொகைப் பாடல் சான்றோர்களால் பெரிதும் எடுத்தாளப்பட்ட ஒன்று. தான் காதல்கொண்ட தலைவன் எத்தகையவன் தெரியுமா? என்று தோழியிடம் கூறும் தலைவி, கரிய கொம்புகளையுடைய குறிஞ்சிப் பூக்களிலிருந்து பெரும் தேனை வண்டுகள் கொண்டுபோய் மரக்கிளைகளில் பெருந் தேனடைகளாகக் கட்டும். அத்தகைய, வளமான நாட்டிற்குத் தலைவன் அவன் என்கிறாள். அவன்மேல் தான்கொண்ட காதலை வெளிப்படுத்தி தலைவி, இவ்வுலகில் ஆண், பெண் உறவின் மைய இழையாக விளங்கும் 'அன்பு' எனும் விழுமியத்தை வெளிப்படுத்துகிறாள்.

### மடலேறுதல்

பண்டைத்தமிழர் அக வாழ்க்கையில் மிக முக்கியமான ஒன்று 'மடலேறுதல்'. சங்க அகப்பாடல்களில் இம்மடலேறுதல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் மடலேறுதல் என்பது ஆண்களுக்கு மட்டுமே உரியது, அது பெண்களுக்கு இல்லை என்றுரைக்கிறது. காரணம், அக்காலத்தில் காதலை வெளிப்படுத்தும் உரிமை ஆண்களுக்கே உரித்தான ஒன்று. தலைவியின் பெற்றோர் தங்களின் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவிக்காத நிலையில் தன்னுடைய காதலை ஊரறிய செய்யும் பொருட்டு தலைவன் பனை மட்டை (மடல்) கருக்காலான குதிரையில் மடலேறுவான்.

இதன் மூலம் அவன் காதல் ஊரார்க்குத் தெரிவிக்கப்படும். இதனால் தலைவியை வேறு ஒருவர் மணந்துகொள்ள முன்வரமாட்டார். தலைவியின் பெற்றோர் தலைவனுக்கே மணம்முடித்து வைப்பர். இவ்வாறான அகமரபுச் சிந்தனை உலக இனத்தவர்களில் வேறு யாவர்க்கும் இருந்ததாக அறியப்படவில்லை.

. . . . . . .
*அறிகதில் அம்மவில் ஊரே மறுகி*
*நல்லோள் கணவன் இவனெனப்*
*பல்லோர் கூறயாஅம் நாணுகஞ் சிறிதே* ***(குறு.14)***

தோழியாற் குறைமறுக்கப்பட்ட தலைமகன், இவ்வூர் முழுதும் அறியும்படியாக நான் மடலூர்வேன். அப்பொழுது, ஊரார் அனைவரும் அவள் (தலைவி) கணவன் இவன் என்று கூறுவர். அச்சொல்கேட்டு நான் சிறிது வெட்கமடைவேன். ஆனாலும் அவ்வெட்கத்தையெல்லா விட்டுவிட்டு இப்பொழுது மடலேறுவேன் என்கிறான்.

தற்காலத் தமிழ்ச்சமூக மரபில் ஆண் மகனை முன்னிலைப்படுத்தியே ஒரு பெண்ணானவள் மதிக்கப்பட்டு வருகிறாள். அதிலும் குறிப்பாக இல்வாழ்க்கையில் அவனே முழுதுமாய் இருக்கிறான். அவன் (தலைவன்) மனைவி என்றே அழைக்கப்படும் இன்றைய மரபிலிருந்து முற்றிலுமாய் விலகியிருப்பதைப் பழந்தமிழ்ப் பாடல்வழி அறியமுடிகிறது. அதனால்தான் அக்காலத் தலைவன் 'நல்லோள் கணவன்.....' என்று பெண்ணை முன்னிலைப்படுத்தி அழைக்கப்பட்டுள்ளான்.

இவ்வாறே குறுந்தொகையின் மற்றொரு பாடலில் காமம் முதிர்ச்சி கொண்ட தலைமகன் ஒருவன் தன் காதலை ஊரார் அறிய வேண்டும் என்ற எண்ணத்தில் 'எருக்கு' மாலையைச் சூடிக்கொண்டு மடலூர்வேன் என்கிறான்.

*மாவென மடலும் ஊர்ப பூவெனக்*
*குவிமுகி(ழ்) எருக்கங் கண்ணியுஞ் சூடுப*
*மறுகின் ஆர்க்கவும் படுப*
*பிறிதும் ஆகுப காமம் காழ்க்கொளினே* ***(குறு.17)***

தான் காதலித்த தலைவியை மணந்தே ஆகவேண்டும் என்ற உறுதியும், வேறு ஒருவர்க்கு அவள் வீட்டார் கொடுக்க கூடாது என்பதன் பொருட்டும், மடலேறி ஊரார்க்குத் தன்னுடைய காதலை வெளிப்படுத்தும் முறை உலக இலக்கியங்களில் இல்லாத ஒன்று. இவ்வாறான உயர்ந்த காதல் விழுமியத்தைக் குறுந்தொகையில் காணமுடிகிறது.

**இயற்கைப்புணர்ச்சி**

தலைவியுடன் இயற்கைப் புணர்ச்சியில் ஈடுபட்ட தலைவன் ஒருவன், புணர்ச்சியில் இடையீடுபட்டு நின்ற தலைவியின் வெட்கத்தை நீக்கும்பொருட்டு அருகிலிருந்த மலர்களில் தேன் எடுக்கும் வண்டினைப் பார்த்து, பூந்தாதையெல்லாம் ஆராய்ந்த

உண்ணுகின்ற வண்டே! என்நிலத்தே நீ உள்ளதால் நான் விரும்பியதைக் கூறாமல், நீ கண்டவற்றை சொல்வாயாக; நீ அறியும் மலர்களுள் மயில் போன்ற மென்மைகொண்ட இவளின் கூந்தலின் நறுமணத்தை ஒத்த பூக்கள் உளவோ? என்று தலைவியின் வெட்கத்தை நீக்கும் பொருட்டும் அதே நேரம் 'நடுவுநிலைமை' . தவறாதும் வண்டிடம் வினவுகிறான்.

*கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி*
*காமஞ் செப்பாது கண்டது மொழிமோ*
*.......................................... (பாடல் 2)*

மேற்காணும் வரிகளின் மூலம் தலைவன் வண்டிடம் 'காமஞ் செப்பாது கண்டது மொழிமோ' என்று, என்னிடங்கொண்ட விருப்பத்தாற் கூறாமல், நடுநிலைமையுடன் நீ கண்டவற்றைச் சொல் என வினவுவதைக் காணலாம். இவற்றின் மூலம் தலைவனின் உயர்ந்த குணம் வெளிப்பட்டுள்ளது.

## அறத்தோடு நிற்றல்

தான் கொண்ட காதலைப் பிறர்க்கு வெளிப்படுத்த (குறிப்பாக தம் நற்றாய்க்கு) நினைக்கும் தலைவி 'அறத்தோடு நிற்பாள்' தலைவியின் உடல்நலக் குறைவுகண்டு வருத்தமுற்ற பெற்றோர் கட்டுவிச்சியை அழைத்து வெறியாட்டுவர். இச்சூழலைப் பயன்படுத்திய தோழி தலைவியின் காதலைப் பெற்றோர்க்கு உணர்த்துவாள். அவ்வாறான உயரிய விழுமியம் கீழ்வரும் பாடலில் பயின்று வந்துள்ளது.

*அகவன் மகளே அகவன் மகளே*
*மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்*
*அகவன் மகளே பாடுக பாட்டே*
*இன்னும் பாடுக பாட்டே*
*அவர்நன் னெடுங்குன்றம் பாடிய பாட்டே (குறு.23)*

இப்பாடலின் மூலம் அகவன் மகளை நோக்கி தோழி, பாடுக! பாடுக! என்று குறிப்பால் தலைவி கொண்ட காதலை வெளிப்படுத்த வேண்டுவதைக் காண முடிகிறது. 'அவர்நன் னெடுங்குன்றம்' என்றதனால் தலைவன் வாழ்கின்ற அவனது நெடிய குன்றத்தைப் பாடுக! என்று தோழி கூறுவது அவள் அறத்தோடு நிற்றலை வெளிப்படுத்தி நிற்கிறது. அதனால், தலைவியின் நோய்க்கு மருந்தாகும் பொருள் (தலைவன்) அந்த மலைநாட்டில் உள்ளது என தோழி மறைமுகமாகச் சுட்டுகிறாள்.

நம்பிக்கை

கார்காலத்தில் வந்துவிடுவேன் என்று கூறிச்சென்ற தலைமகன் குறித்த காலத்தில் வரவில்லை. வெளியில் கொன்றை மலர்கள் பூத்துக் காணப்படுகின்றன. அவ்வாறு பூத்துக்கிடக்கும் மலர்களைப் பார்த்து இதனைக் கார்காலம் என்று யாரேனும் சொன்னாலும் நான் அதை நம்பமாட்டேன். காரணம், எம்தலைவர் பொய்யுரைக்க மாட்டார் என்று தலைவன் மீதான நம்பிக்கையை வெளிப்படுத்துகிறாள்.

*. . . . . . . . . . . .*
*கதுப்பில் தோன்றும் புதுப்பூங் கொன்றைக்*
*கானம் காரெனக் கூறினும்*
*யானோ தேறேனவர் பொய்வழங் கலரே* **(குறு.21)**

மேற்காணும் பாடல்வழி தலைவன்மேல் தலைவி கொண்டுள்ள மேம்பட்ட நம்பிக்கையுணர்வினைக் காணமுடிகிறது. ஆகையால்தான் வண்டுகள் மொய்க்கும் படியான பூங்கொத்தைக் கண்டும் இது கார்காலம் அல்ல என்கிறாள். இயற்கையை நம்பாமல் தன்தலைவன் மீது கொண்ட அதீத நம்பிக்கையைப் புலப்படுத்துகிறாள்.

உடன்போக்கு

தலைவன், தலைவியர்தம் காதல் நிறைவேறாத இடத்து சிலசமயங்களில் தலைவன், தலைவியை அழைத்துக்கொண்டு உடன்போக்கு (உடன்கூட்டிச் செல்வது) செல்வதும் உண்டு. அவ்வாறு அவர்கள் செல்லும் பாதை வெம்மையானதாகவும் காடுகள் நிறைந்தும் காணப்படும்.

*வில்லோன் காலன கழலே தொடியோள்*
*மெல்லடி மேலவும் சிலம்பே நல்லோர்*
*யார்கொ லளியர் தாமே ஆரியர்*
*கயிறாடு பறையின் கால்பொரக் கலங்கி*
*வாகை வெண்நெற் றொலிக்கும்*
*வேய்பயி லழுவம் முன்னி யோரே* **(குறு. 7)**

மேற்காணும் பாடல்வழி உடன்போக்கு சென்ற இருவரையும் இடைச்சுரத்து கண்டவர்கள், வில்லாளனான தலைவன் காலில் கழல்கள்; வளையினளான இவள் மெல்லிய அடிகளின் மேலிடத்தன சிலம்புகள்; நல்லோராகிய இவர்கள் யார்? மூங்கில்கள் மிக்க காட்டு நிலப்பரப்பைச் செல்லும் வழியாகக் கருதினார்கள் இவர்கள். இவ்விருவரையும் நினைத்து வருந்தமாட்டாரோ அவர்தம் பெற்றோர் என்று நினைத்தனர்.

**இல்லறம்**

சங்க கால மாந்தர்தம் கற்பு வாழ்க்கையில் 'இல்லறம்' என்பது முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. அத்தகைய இல்லறத்தைச் சிறப்புடன் தொடர்வதற்குப் பொருளாதாரம் முக்கியமானதாகிறது. அதனால் தலைவன் பொருளீட்டி வர தலைவியைப் பிரிந்து செல்கிறான். இவ்வாறு பிரிந்து சென்ற தலைவன் திரும்பிவரும்வரை தலைவி அவனையே நினைந்துக் காத்திருப்பாள். தலைவி தனது பிரிவுத்துயரைப் பொருட்படுத்தாது தலைவனுக்காக பரிந்து பேசுவதைக் காணமுடிகிறது. இதன் மூலம் இல்லறத்தின் சிறந்த விழுமியத்தைத் தலைவி கடைபிடித்து வாழ்ந்துள்ளாள் என்பதை அறிய முடிகிறது. பின் வரும் பாடல் இவ்விழுமியத்தைச் சுட்டுகிறது.

*அருளும் அன்பும் நீக்கித் துணை துறந்து*
*பொருள்வயிற் பிரிவோர் உரவோ ராயின்*
*உரவோர் உரவோ ராக*
*மடவ மாக மடந்தை நாமே (குறு.20)*

**நிறைவாக**

சங்க அகப்பாடல்கள் வழி தமிழர் பல்வேறான விழுமியங்களை வெளிப்படுத்தியுள்ளனர். குறுந்தொகையின் முதல் 25 பாடல்களில் அவ்வாறான விழுமியங்கள் புலப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றன. தலைவி தான் காதல் கொண்ட தலைவனைப் பற்றித் தோழியிடம் கூறும்போது அவனது மலைவளத்தை ஒப்பிட்டு வெளிப்படுத்துகிறாள்.

தலைவிமீது காதல் கொண்ட தலைவன் தன் காதலுக்கு இடையூறு ஏற்படும் காலத்தில் பனைமடலால் ஆன குதிரையில் ஏறி ஊரார்க்குத் தன்காதலை வெளிப்படுத்தியுள்ளான். இதன் மூலம் நல்லோள் கணவன் அவன் என்று ஊரார் பேசவேண்டும் என்று சொல்வதை அறியமுடிகிறது. மேலும் தலைவியுடன் இயற்கைப் புணர்ச்சியில் ஈடுபட்ட தலைவன் இடையீடு பட்டு நின்ற தலைவியினுடைய வெட்கத்தை நீக்கும் பொருட்டு அருகில் பூந்தாதுகளில் தேனெடுக்கும் வண்டினைப் பார்த்து நடுவுநிலைமை தவறாமல் சொல், என் நாட்டில் நீ இருக்கிறாய் என்பதால் எனக்குச் சாதகமான பதிலைச் சொல்லாதே என்கிறான். இதன் மூலம் தமிழர் தம் நடுவுநிலைமை தவறாது வாழ்ந்த, உயர்ந்த, மேன்மையான வாழ்வினை அறியமுடிகிறது.

கார்காலம் பிறந்ததைக் கொன்றை மலர்கள் பூத்து குலுங்கி ஊரார்க்கு அறிவிக்கின்றன. ஆனால் தலைவி மட்டும் இது கார்காலம் அல்ல; கார்காலமானால் எம்தலைவர் திரும்பிவந்திருப்பார். அவர்

பொய்யுரைக்க மாட்டார் என்று, கார்காலம் பிறந்ததும் திரும்பிடுவேன் எனச்சொல்லிப் போன தலைவனை நினைத்துப் பேசுகிறாள்.

தலைவியை மணம் செய்துகொள்ள முடியாக் காலத்து தலைவன் அவளைக் கூட்டிக்கொண்டு உடன்போக்கு செல்கிறான். தலைவி தலைவனுடனான இல்லறத்தைப் போற்றுபவளாக உள்ளாள். தலைவி, தலைவன்மேல் கொண்ட காதலை நற்றாய்க்கு அறிவிக்கும் பொருட்டு தோழி அறத்தோடு நிற்கிறாள். இவ்வாறான பல்வேறு விழுமியங்களைச் சங்கப்பாடல்வழி தமிழர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இதன் மூலம் அக்கால வாழ்வின் மேன்மைநிலையை நம்மால் உணரமுடிகிறது.

## பார்வை நூல்

1. சாமிநாதையரவர்கள், உ.வே. டாக்டர். குறுந்தொகை, மூன்றாம் பதிப்பு, தியாகராச விலாச வெளியீடு, 1955.

## 4 (அ) தூது இலக்கியத்தின் வளர்ச்சி வரலாற்றை விளக்குக:

முனைவர் வி.இரா. பவித்ரா

### தூது இலக்கியம்

உலகில் மனிதன் தன் வாழ்க்கைப் பயன்பாட்டிற்காகப் படைத்துக் கொண்டவை பல. அவற்றுள் மிகச் சிறந்தது மொழி. இம்மொழியில் அமைந்த இலக்கியமே மனிதன் கண்ட கலைகளில் முதன்மையானதாகும். மனித வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வுகளின் வெளிப்பாடுகளையும் இலக்கியங்கள் முழுவதுமாக புலப்படுத்த வல்லதாகின்றன.

ஐம்புலன்கள் வாயிலாகக் கலைஞன் பெறும் உணர்வுகளும் பெறும் இன்பங்களும் அவற்றிற்கு உட்பட்டும் மேற்பட்டும் அமையும். மனத்தில் நேரடி அல்லது சார்பு அனுபவங்களும் அவனுடைய படைப்பில் வெளிப்படுகின்றன. உணர்ச்சியின் வெளியீடாக மட்டும் இவை அமையாது அறிவின் புலப்பாடாகவும் அமைவதால், இவை அழகும் நிறைவும் உடையதாய் நிலைப்பெற்றிருக்கின்றன.

தமிழில் பொருள் அடிப்படையில் பெயர்பெறும் வகையான 'தூது' இலக்கியம் பற்றிய சில அடிப்படை எண்ணங்கள் நோக்கப் பெறுகின்றன.

### தூதின் பழமை

அகவாழ்க்கையில் உயர்திணையேயன்றி அஃறிணைப் பொருள்களையும் தூதுவிடும் மரபு உண்டு. பிரிவுத் துன்பம் மிகுந்த காலத்தில் 'காமம் மயக்கம் மீதுறு அஃறிணைப் பொருட்களை விழித்துத் தூது அனுப்பினர். இலக்கணியார் தூதுமிக்க 'கழிப்படர் கிளவி' என்னும் சொல்லால் இதனை உணர்த்தினர். அஃறிணைப் பொருட்களைத் தூது அனுப்பும் இம்மரபே பிற்காலத்துத் தனி இலக்கியத் தோற்றத்திற்கு வழிகோலியது.

அஃறிணைப் பொருட்களை முன்நிலைப்படுத்தி உரைப்பதைத் தொல்காப்பியம்,

*சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்*
*செய்யா மரபிற் றொறிற் படுத் தடக்கியும்*

என வழு அமைதியாக்கி உரைக்கும். இதற்கு உரைவிளக்கம் தந்த இளம்பூரனர் சொல்லா மரபின ஆவன புள்ளும், மாவும், மரனும், கடலும், காணலும் முதலாயின. செய்யா மரபு ஆவன தூதாகச் சேரலும் வருதலும், உள போலக் கூறும், அவை போல்வன பிறவும் என குறிப்பிடுவர்.

மெய்ப்பாட்டியலில் வரைந்து எய்தும் கூட்டத்திற்கு ஏதுவாகிய எண்வகை மெய்ப்பாடுகளைக் கூறுமிடத்து,

*முட்டுவயிற் கழறல் முனிவுமெய்ந் நிறுத்தல்*
*அச்சத்தின் அகறல் அவன்புணர்வு மறுத்தல்*
*தூதுமுனி வின்மை துஞ்சிச் சேர்தல்*
*காதல் கைம்மிகல் கட்டுரை யின்மை யெண்*
*ணாயிரு நான்கே அழிவில் கூட்டம்*

என்னும் நூற்பாவால் உணர்த்துவர்.

தூது முனிவின்மையை மெய்ப்பாட்டு வகையாகக் கொள்ளும் இலக்கிய நெறியும் எண்ணுதற்குரியது. பேராசிரியர், புள்ளும் மேகமும் போல்வன கண்டு சொல்லுமின் அவர்க்கென்று. தூதிரந்து பன்முறையாலும் சொல்லுதல் என இதற்கு விளக்கம் தருவர்.

காம மயக்கத்தால் அஃறிணையை முன்னிலைப்படுத்தித் தன் ஆற்றாமையை விதந்து உரைத்துத் தூது சென்று வருமாறு கூறுதலை முன்னையோர் ஒரு நெறியாகவும் கொண்டு மெய்ப்பாட்டுள் அமைத்தனர். தொல்காப்பியர் இதனைச் சொல்லதிகாரத்துள் ‘குறிப்புரை’ யாகவும் கொண்டார்.

*வாரா மரபின வரக்கூ றுதலும்*
*என்னா மரபின எனக்கூறுதலும்*
*அன்னவை எல்லாம் அவற்றவற் றியல்பான்*
*இன்ன என்னும் குறிப்புரையாகும்*

என இதை விளக்குவர்.

அஃறிணைப் பொருட்களைத் தூது விடுத்தால் அவை அவரிடத்துச் சென்று செய்தி தெரிவிப்பதில்லை என்பது தெரிந்தும் இம் மரபினை இலக்கிய நெறியாகக் கொண்டமை ஆராயத்தக்கது. முன்னையோர் பெரிதும் உளவியல் நோக்கோடு தம் படைப்புத்திறனை வெளிப்படுத்தியமைக்கு இவை சான்றாகும்.

இங்ஙனம் அஃறிணைப் பொருட்களைத் தூது விடுதலால் தலைவியின் உள்ளம் ஆறுதல் பெறுகின்றது என்பதனை நம்பியகப் பொருள் அழகுற விளக்கும்.

அவ்வாறே இளம்பூரணரும் ‘விலங்கு மரனும்’ புள்ளும் உள்ள நோய் உற்றார்க்கு மறுதலை மாற்றங் கூறுவன போலுங் குறிப்பினவாகப் புலப்படுதலால் இது சொல்லப்பட்டது என்பர்.

இறையனார் அகப்பொருள் உரையோ, ‘மூடியுள்ள கலத்தைத் திறந்தும் அதனுள்ளிருந்து வெப்பம் குறைபடுதல் போலத் தலைவியின்

சொற்கள் உள்ளிருந்து வெளிப்படுதலால் அவனுடைய துன்பமும் குறையும் என அழகிய உவமையால் கூறும் அவ்வுரை வருமாறு:

இதனைத் தலைமகன் கேளா வருமேயெனின் இங்ஙனம் வந்தொழுக இவன் ஆற்றாமை-என்று ஒருவகையான் முற்பட்டுப்பிற்றை ஞான்று வரைவொடு புகுவானும் தோழி கேட்குமேயெனில் தலைமகனை முன்னின்று வரைவு கடாவுவாளாம் யாருங் கேட்பாரில்லை யெனின் ஆறுதலைப் பயக்கும், என்ன? மூடிவாய் நின்றதோர் கலத்தை மூடி திறந்தவிடத்து அகத்து நின்ற வெப்பங்குறைபடும். அதுபோல இவட்கும் அயர்வுயிர்ப்பாம்: அச்சொற்கள் புலப்படுதலான் என்பது!

இவ் உரையால் முன்னையோர் கொண்டிருந்த நெறியினை உளவியல் நோக்கோடு ஆராய்ந்த பான்மை புலனாகும். இவ்வாறு அஃறிணைப் பொருட்களிடம் ஆற்றாதுரைத்துத் தூது விடும்போது தலைவன் அல்லது தோழிகேட்பினும் உரியன செய்து உதவுவர். அல்லது தன் உரையால் தனக்கே ஆறுதல் ஏற்படும் பயனை இந்நெறி தருகிறது என்பதைக் காணலாம்.

### தூது இலக்கியத்தின் வளர்ச்சி

தொல்காப்பியர் காலத்தில் வித்திடப்பெற்ற தூது, சங்கப் பாடல்களிலும், காப்பியங்களிலும், பக்தி இலக்கியங்களிலும், பிற இலக்கியங்களிலும் தளிர்த்து, செழித்து அரும்பி, மலர்ந்து, காய்த்து கி.பி.14ஆம் நூற்றாண்டில் தனி இலக்கியமாகக் கனிந்தது எனலாம்.

### கலம்பகங்களில் தூது

கலம்பகம், பண்டைய இலக்கிய நிலைக்கும் பிற்கால வகை வளர்ச்சிக்கும் இடைப்பட்ட நிலையில் அமைகின்றது. இதனுடைய, மறம், குறம், கைக்கிளை, தூது போன்ற கூறுகள் பிற்காலத்தில் தனி இலக்கியங்களாக வளர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கலம்பக இலக்கியங்களில் மகளிர் தூது விடுப்பதாக அமையும் பாடல் அந்நூலின் ஓர் அங்கமாகவே அமைந்து விளங்கக் காணலாம். தூது இலக்கியம் இக்கலம்பக உறுப்பின் வளர்ச்சி போலவே காணப்படுகிறது. இது உலா, மடல் முதலிய அகப்பொருள் இலக்கியங்களைப் போலத் தனி இலக்கியமாக வளரலாயிற்று இதற்கு, இலக்கணமும் தோன்றலாயிற்று.

### தூது நூலின் இலக்கணம்

தூது நூலின் இலக்கணத்தை, இலக்கணவிளக்கப் பாட்டியல், பிரபந்தத் திரட்டு, இரத்தினச் சுருக்கம், சிதம்பரப் பாட்டியல் முதலிய நூல்கள் உரைக்கின்றன. உயர்திணை இருபாலினரையும், அஃறிணைப்

பொருள்களையும் தூதாக விடுத்தும் தம் வேட்கை நிலையை உரைப்பதாகக் கலிவெண்பாவினாலே கூறுவது தூது ஆகும். ஆடவர், மகளிர் இருவர் வாக்காகவும் தூது கூறப் பெறுதல் உண்டு என்பதை இலக்கண விளக்கம்.

*பயில்தரும் கலிவெண் பாவினாலே*
*உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்*
*சந்தியின் விடுத்தல்முந்துறு தூதுதெனப்*
*பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே*

என்பது சூத்திரம். இங்கு சந்து செய்யும் நோக்கத்திற்காக உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும் தூது விடும் இலக்கியம் கலிவெண்பாவினாலே செய்யப்பட வேண்டுமென்ற விதி பாட்டியல் காலத்துப் பயின்ற இலக்கிய வகையை யொட்டிப் புதிதாக எழுந்த ஒன்றாகும்.

*ஆணும் பெண்ணும் அவரவர் காதல்*
*பாணன் முதலிய உயர்திணை யோடும்*
*கிள்ளை முதலிய அஃறிணை யோடும்*
*சொல்லித் தூது போய்வா வென்னக்*
*கலிவெண்பாவால் அறைவது தூது*

என்பது முத்துவீரியம்.

*ஆண்பாணு மாதர்பால்*
*போலு வர்காதலைப்*
*புகழ்பாணன் முதலிய உயர்திணை யொடுங்கின்னை*
*புள்ளின் முதலூறுமஃறிணைப்*
*பொருளொடுங் கலிவெள்ளை யாற்காது போய்வரல்*
*புகல்வதே காதென்பதூம்*

என இதையே பிரபந்த தீபிகையும் கூறும்.

## தூது சொல்லி விடுதற்குரிய பொருள்கள்

தூது விடுதற்குரியவை இவை என்பதைப் பத்தென்று வகைப்படுத்திக் கூறியவர்கள் உளர் ஆயின், அவ்வரையறை கடந்து எண்ணிலாப் பொருட் பெயரால் தூது நூல்கள் உலவுதல் கண்கூடு.

*எகினமயில் கின எழிலியொடு பூவை கிள்ளை*
*சகிகுயில்நெஞ் சந்தென்றல் வண்டு-தொகைபத்தை*
*வேறுவே றாகப் பிரித்து வித்தரித்து மாலைகொண்டன்பு*
*ஊறிவா வென்ற தூது*

என்பது பிரபந்த திரட்டு.

எகினம் (அன்னம்) மயில் கிள்ளை (கிளி), மேகம், பூவை (நாகணவாய்ப்புள்), பாங்கி (தோழி), குயில் நெஞ்சம் (மனம்) தென்றல், பிரமரம் (வண்டு) ஆகிய பத்துப் பொருட்கள் தூது விடுதற்குரியன என்பதை தரும் இலக்கியங்கள் பலவற்றுள்ளும் இப்பொருட்களே தூதுக்குரிய பொருட்களாகக் கூறப்பட்டுள்ளன. பிற்காலத்தில் தமிழ், பணம், புகையிலை, செருப்பு என பல்வேறு பொருள்களை தூதாகக் கொண்ட இலக்கியங்கள் தோன்றியுள்ளன.

## 4 (ஆ) உரைநடை இலக்கியங்களின் தோற்றத்திற்கான காரணிகளை ஆராய்க.

**முனைவர் கா. காமராஜ்**

மனிதன் பிற உயிரினத்தினும் வேறுபட்டவன், தன் உள்ளக் கருத்தை உடன்வாழும் மற்றவருக்கு உணர்த்தக் கடமைப்பட்டவன். வாய்திறந்து பேசும் வாய்ப்பு இவனுக்கு உண்டு. அந்த வாய்ப்பே 'மொழி' என்ற ஒன்றை உலகுக்கு அளித்தது. இருபதாம் நூற்றாண்டின் இடைப்பட்ட நாகரிக உலகில் மொழி அடிப்படையில் பல்வேறு சண்டைகளை நாம் காண்கின்றோமாயினும், இந்த மொழியே மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டி, வழி வகுத்தது. இந்த மொழிகளின் அமைப்பு நாடு தோறும் வேறுபடுவது என்றாலும், 'மொழி சமுதாயத்தை இணைக்கும் ஒரே சாதனம் அல்லது கருவி' என்பதை யாராலும் மறுக்க இயலாது. இம்மொழிகள் தத்தம் தோற்ற வளர்ச்சி அடிப்படையில் சிறந்தும், சிதைந்தும், வளர்ந்தும், வாடியும், உயர்ந்தும், தாழ்ந்தும் இன்று உலகில் உலவுகின்றன. நல்ல திருந்திய மொழிகளுள் பல்வேற இலக்கியங்கள் வாழ்கின்றன. கடந்தகால வரலாற்று வாழ்வையும் இயற்கை வளத்தையும் காட்டி, அன்று வாழ்ந்த மக்கட் சமுதாயத்தையும் வாழவைப்பனவே இலக்கியங்கள். இந்த அடிப்படையில் தோன்றிய இலக்கியங்கள் பேச்சு வழக்கில் உள்ளனவுமாகிய உரையும் பாட்டும் நாம் எண்ணத்தக்கன. 'உரை' என்ற சொல் நெடுங்காலமாக தமிழில் வழக்கத்தில் இருந்து வருகின்றது. 'உரைக்கப்படுவது உரை' என்று சுருக்கமாகப் பதில் சொல்லிடலாம். உரை என்ற சொல்லுக்குத் தமிழில் பல பொருள்கள் உள்ளன. முதல் முதல் வெறும் ஒலிக்கே இந்த உரை என்ற சொல் பயன்படுத்தப்பட்டதென்பதை உணர்கின்றோம். 'குன்றம் குமறிய உரை' (பரிபாடல் 8-35) என்றே பரிபாடல் காட்டுகின்றது.

உரை என்பது பொருளின் தன்மையை உள்ளவாறு உரைப்பதாகும். இதை விளக்க ஒரு சான்று பயன்படும். தட்டான் பொன்னுக்கு உரை காணும் வழக்கம் பல கட்டுப்பாடுகளுக்கிடையில் நம் நாட்டில் இன்றும் உள்ளதை அறிவோம். பொன் சிறந்ததா இல்லையா என்பதை அதன் உண்மை நிலை, பண்பு, தரம் முதலியன இன்ன வகையன உரைத்து காண்பது நாடறிந்த ஒன்று. அதன் தன்மையை உணர்த்தும் கல்லுக்கு 'உரைகல்' என்றே பெயர் உண்டு. எனவே பொருள்களின் இயல்பை உள்ளது உள்ளவாறே உலகுக்கு உணர்த்துவது உரையாகும். இதைத்தான் 'அடிப்படை மொழி' என்பர் ஆய்வாளர். உணர்ச்சியோ, பிற உள்ள நெகிழ்ச்சிகளோ, காய்தல், உலத்தல் என்ற வேறுபாடுகளோ கலவாததாய் ஒருபொருளின்

தன்மையை உரையிட்டு உணரத்தக்க வகையில் காட்டுவதே உரை (தட்டான் பொன்னை உரையிட்டக் காட்டுவது போன்று). ஆனால் பாட்டோ இதற்கு நேர்மாறாக உணர்ச்சி, கற்பனை முதலியவற்றின் இடையிலே தோய்ந்து அணிநலம் முதலியன பெற்றுப் பாடுவோன் உள்ளத்தளவு உயர்வோ அன்றித் தாழ்வோ பொருந்தப் பொருளை விளக்குவதாகும். இந்த உண்மையை மேலை நாட்டு அறிஞர்கள் நன்கு விளக்கியுள்ளார்கள். மொழி, இலக்கியம், இரண்டையும் வரையறுத்த ஆய்வாளர் எண்ணத்தை உணர்த்துவது மொழியென்றும் உணர்வை உணர்த்துவது இலக்கியம் என்றும் கூறுவர்.

உரைநடைத் தோற்றத்திற்கான காரணங்கள்

1. உரை இல்லாத காலம்.

முற்காலத்தில் நூல்களுக்கு உரைகள் தேவைப்படவில்லை. மூல நூல்களே எல்லோரும் கற்று மகிழும் வகையில் எளியனவாய் இருந்தன. 'உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலமும் உண்டென்பதாகும்' (பொருள். 653) என்றும் உதாரணங்காட்டல் வேண்டாமையை உணர்ந்து உரை நடந்த காலமும் உடையவாகும் முற்காலத்து நூல்களென்பது கருத்து'' (பொருள்.656) என்றும் பேராசிரியர், தொல்காப்பியப் பொருளதிகார உரையுள் கூறியுள்ள கருத்துக்கள் இவ்வகையில் மனங்கொள்ளத்தக்கவை யாகும்.

**செவிச் செல்வம்**

'கற்றலின் கேட்டலே நன்று' என்பது அக்காலத்தவர் கொள்கையாக இருந்தது. நூல்களுக்கு உரை எழுதாமல், வாயால் விளக்கிச் சொல்லும் வழக்கமும், செவியில் கேட்டு உணர்ந்து புலமை பெறும் வழக்கமும் அக்காலத்தில் நாடெங்கும் பரவி இருந்தன. ஆசிரியர் தம் மாணவர்களுக்கும், தந்தை தம் மக்களுக்கும் வாய்மொழியாகப் பழைய நூல்களுக்கு உரையும் விளக்கமும் கூறி வந்தனர். இவ்வழக்கம் வாழையடி வாழையாக வழி வழியாகத் தொடர்ந்து வந்தது. இதன் பயனாக, ஒரு நூல் பல தலைமுறைகளைத் தாண்டி வரும்போது, ஒவ்வொரு தலைமுறைக்கு உரிய கருத்துக்களையும், விளக்கங்களையும் சேர்த்துக் கொண்டு வளர்ந்து வந்தது. இங்ஙனம் வாய் மொழியாகப் பல்லாண்டுகள் வழங்கி வந்த இக்கருத்துக்களும் உரை விளக்கங்களும் காலப்போக்கில் ஏடுகளில் எழுதப்பட்டன.

**வாய்மொழியின் செல்வாக்கு**

வாய்மொழி வாயிலாக வளர்ந்து வந்த உரை, ஏட்டில் எழுதப்பட்ட பின்னரும் உரையாடுவது போன்ற நிலையிலேயே

அமைந்தது. ஆசிரியர் பாடம் கூற, அதைக் கேட்கும் மாணாக்கன் ஐயங்களை எழுப்ப, ஆசிரியர் அவற்றிற்குத் தக்க விடைகளைச் சொல்லி விளக்கும் முறையிலேயே உரைகள் அமைந்தன. நேரே ஏட்டில் உரை எழுதிய உரையாசிரியர்களும் தம்மை அறியாமலே இம்முறையினை மேற்கொண்டனர். இங்ஙனம் வாய்மொழி தன் செல்வாக்கை எழுத்திலும் நிலைநாட்டியது. உரையாசிரியர்கள் என்று நாம் போற்றும் முன்னோரெல்லாம் பாடஞ்சொல்லிய வகுப்பாசிரியர்கள் என்பதை நினைவு கொள்ள வேண்டும். பாடத்திற் சொல்லிய உரைகளே அவர்கள் எழுதிய உரைகளாம் என்பார் அறிஞர் வ.சுப. மாணிக்கம்.

இறையனார் அகப்பொருள் உரையும், சேனாவரையர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு எழுதிய உரையும், பேராசிரியர் திருக்கோவையாருக்கு எழுதிய உரையும், காலிங்கர் திருக்குறளுக்கு எழுதிய உரையும், ஆசிரியர் மாணாக்கர்களுக்குப் பாடம் கூறும் வகையில் வினா-விடையாக அமைந்துள்ளன. பிற உரையாசிரியர்களின் உரைகளிலும் ஆங்காங்கே பல இடங்கள் இவ்வாறு அமைந்துள்ளன. காட்டாக, ''நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும், வாள்அது உணர்வார்ப் பெறின்'' (குறள்.334 என்னும் குறளுக்குக் காலிங்கர் எழுதியுள்ள உரை விளக்கத்தினைக் காண்போம்.

உலகத்தோர்க்கு நாளென்று கொண்டு வேறே ஒன்றுளதுபோல் ஒரு நெறி காட்டிச் செல்கின்றது யாதோ எனில், மற்றது மரத்தினது உருபு வேறுபட்டு கழியுமாறு அதனை ஈர்ந்து செல்லும் ஈர்வாள் போல மற்று ஈண்டும் உடம்பொடு நடைபெற்று இயல்கின்ற உயிரினையும் அந்த நிலை வேறுபட்டு கழியுமாறு அதனை ஈர்ந்து செல்லும் ஈர்வாளாம்; எவ்விடத்து எனின், இதன் உண்மைப் பாட்டினை உற்றுணர்வாரைப் பெற்ற இத்து என்றவாறு''. உரையாசிரியர்கள் தம் உரைவிளக்கங்களின் இடையிடையே, 'என்னை எனின், என்னுதலிற்றோ எனின்' என்று உரைப்பது நோக்கத்தக்கது. இளம்பூரணர் தொல்காப்பியத்திற்கு எழுதிய உரைக்குப் பின்னே தோன்றிய சேனாவரையர், பேராசிரியர் நாச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் ஆகியோரது உரைகள் சிறப்பிடம் பெற்றன. நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழிக்கு இறுதியில் தோன்றிய ஈடு (36,000 படி) முதன்மை பெற்றது. திருக்குறளுக்கு ஒன்பது உரைகளுக்குப் பின் தோன்றிய பரிமேலழகர் உரை நிலைபெற்றது. 'சிவஞான பாடியம்' சிறப்புப் பெற்றது. இங்ஙனம் வளமையுள்ள உரைகள் வாழ்பெற்று நிலைத்து நிற்பதற்குச் சான்றுகள் பல காட்டலாம்.

## மேலை நாட்டார் உரைநடை

கி.பி. 16ஆம் நூற்றாண்டளவில் மேலைநாட்டார் கிறித்துவச் சமயப் பிரச்சாரம் செய்வதற்காக நம் நாடு வந்தனர். இச்சமயத்தைப் பரப்ப அந்தந்த மொழிபேசும் மக்களிடையே அந்தந்த மொழியில் பிரச்சாரம் செய்தால்தான் பலன் விளையும் எனக் கருதினர்.

அந்தந்த மொழி இலக்கண, இலக்கியங்களை கற்றும், பல துண்டுப் பிரசுரங்களையும், நூல்களையும் வெளியிட்டனர்.

அச்சு இயந்திரங்களின் வாயிலாக நூல்கள் வெளியாயின. மேலை நாட்டாரின் தொண்டுகள் பல. இலக்கியம், இலக்கணம், அகராதி போன்ற துறைகளில் அவர்களது கொடை குறிப்பிடத்தக்கது.

தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றிய மேலைநாட்டாரில் மிகவும் குறிப்பிடத்தக்கவர் வீரமாமுனிவர். இவர் தேம்பாவணி, சதுரகராதி மட்டுமின்றிப் பல உரைநடை நூல்களையும் யாத்துள்ளார்.

வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம், பேதமறுத்தல், வாமன கதை, பரமார்த்த குருகதை போன்ற உரைநடை நூல்களையும் இயற்றியுள்ளார்.

### பார்வை நூல்

1. சாமிநாதையரவர்கள், உ.வே. டாக்டர். குறுந்தொகை, மூன்றாம் பதிப்பு, தியாகராச விலாச வெளியீடு, 1955.

## பகுதி ஆ

**5. பின்வரும் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கத்திற்கு மிகாமல் சிறுகுறிப்பு வரைக:**

### 5 (அ) இருண்மை

**முனைவர் கோ. விசயராகவன்**

புதிது புதிதாகக் குறியீடுகளைக் கவிதை இலக்கியத்தில் பொருத்துகின்ற மரபு தற்போதைய நவீன கவிதைகளில் அதிகமாகிவிட்டது. மரபு மற்றும் வழக்கமான குறியீடுகள் குறிப்பிட்ட பொருளில் வழங்கி வருவதால் அவற்றைப் புரிந்து கொள்வதில் எவ்விதப் புரிதலற்ற இருண்மையும் இல்லை. ஆனால் புதிதாகப் பயன்படுத்தும் குறியீடுகளைப் புரிந்துகொள்வதென்பது சிலருக்குச் சாத்தியமானதாகவும் பலருக்குச் சாத்தியமற்றதாகவும் இருக்கலாம். புரிந்துகொள்வதில் பிணக்கு வருகிறபடி கவிதையானது குறியீட்டு முறையில் அமைந்தால் அதுவே 'இருண்மை' என்று அழைக்கப்படுகின்றது. புதுக்கவிதையில் காணும் பெரும் குறையாக 'இருண்மை' நவீன கவிதை ஆய்வாளர்களால் சுட்டப்படுகிறது. ஒரு சமூகத்துக்குத் தேவையான பொதுச்சிந்தனைகள் அடங்கிய கவிதைகளைத் தரும் படைப்பாளர்கள் பயன்படுத்தும் இருண்மையால் கருத்துப் புலப்பாட்டில் போதிய வெற்றியைப் பெறுவதில்லை. தெளிவின்மை என்பதும் இருண்மை என்பதும் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டுத் திகழ்கின்றன. வெளியீட்டுத் திறனும் தெளிவான சிந்தனையும் அற்ற ஒரு படைப்பில் வெளிப்படுவது தெளிவின்மை. உலகில் புதிதாகச் சொல்லத்தக்க வகையில் அமைந்த உணர்வுகளும் ஆழ்ந்த தத்துவங்களும் படைப்பில் செறிவாக வெளியிட முனையும்போது விளைவது இருண்மையாகும்.

**இருண்மை பற்றி மார்கரெட் ஜில்மன்**

வாசகனைச் சிந்திக்கத் தூண்டும் குறியீட்டுக் கவிதையில் இருண்மையின் சிறப்பு புலப்படுகின்றது. இக்காலத்தில் எல்லாவற்றையும் பிட்டுவைக்கும் தெள்ளத் தெளிவான வெள்ளைக் கவிதைகளை அது மதிப்பதில்லை. தெளிவற்ற இருண்மையான கடினமான கவிதைகள் பெருமையையும் சேர்த்துப் பெற்றிருந்தால் அவைகளையே திறனாய்வுக் கலை விரும்புகின்றது.

## பழம்பாடல்களில் இருண்மை

கருத்துப்புலப்பாட்டில் ஒருவித மயக்கத்தைத் தோற்றுவிக்கும் இருண்மை புதுக்கவிதைக்கு மட்டுமின்றிப் பழங்கவிதைகளுக்கும் உரியதாகவே கருதப்படுகின்றது. சங்க காலத்து அகத்திணைக் கவிதைகளின் உவமம், இறைச்சி ஆகியவற்றில் புரிதலில் இடர்ப்பாட்டை ஏற்படுத்தும் இருண்மை காணப்படுகிறது. சங்கப் புலவர்கள் பயன்படுத்திய குறியீடுகள் கல்வியறிவுக்கு உட்பட்டவர்களும் உணரவியலாத அறிவுக் குறைபாடுடையவர்க்கும் இருண்மைத் தன்மையின் பாற்பட்டதாக அமைத்துவிடுகிறது. யோக, ஞான அனுபவம் உள்ள சித்தரது பாடல்கள் அனுபவமும் அவ்வப் புலங்களில் அறிவும் உடையவர்களால் மட்டுமே புரிந்து கொள்வதற்கு இடமளிப்பதால் இருண்மைத் தன்மையுடையனவாய் திகழ்கின்றன.

## புதுக்கவிதையில் இருண்மை

தற்போது புதுக்கவிதை படைப்பவர்தம் மனநிலைக்கு ஏற்ப இருண்மை ஏற்பட்டுவிடுகிறது. கவிதைச் சூழலில் புரிதலுக்கு இடையூறாக இருக்கும் தற்குறியீடுகளின் இருண்மைத் தன்மை அதிகரித்தவண்ணம் உள்ளது.

> ‘எனது கல்லறையை மட்டும்
> பன்னீர் மரங்களின் நிழலில்
> எழுப்பி விடுங்கள்.
>
> எனக்காக யாரும் அழவேண்டாம்
> பன்னீர் மரங்கள் !
> அந்தப் பன்னீர் மரங்கள் !

என்னும் புதுக்கவிதையில் நா.காமராசன் பன்னீர் மரங்களோடு தன் ஆழ்ந்த காதல் உணர்வைத் தற்குறியீடாகக் கையாள முனைந்திருப்பதாலும், ‘பன்னீர் மரங்கள்’ எதைக் குறிக்கிறது என்பதில் இடர்ப்பாடு ஏற்படுவதாலும் இருண்மையை ஏற்படுத்தி விடுகிறது. நவீன சமுதாயத்தைப் பொறுத்தும் அச்சமுதாயத்தில் புழங்கும் புழங்கு பொருட்களைப் பொருத்தும் இருண்மை காலகாலமாய் இலக்கியங்களில் இடம்பெறுவது தவிர்க்கவியலாததாகும்.

## (ஆ) ஒட்டுருவகம்

**முனைவர் கோ. விசயராகவன்**

ஒன்றை மறைமுகமாக விளக்குதல் ஒட்டுருவகம் ஆகும். ஒரு கருத்தோ கொள்கையோ உவமையாக விளக்கப்பெறாது உருவகப்படுத்தி விளக்கப்பெறுதலே ஒட்டுருவகம். கதைமாந்தர்கள், வடிவங்கள், நிகழ்ச்சிகள் வாயிலாக இது விளக்கப்படுவதாகும். கவிதையிலோ, உரைநடையிலோ இது பயன்படுத்தப்பட்டிருக்கும். ஒரு கருத்தையோ, கொள்கையையோ ஒரு கதை கூறுதலில் படிப்பிக்க அல்லது விளக்கப்படுவதற்காகவும் இது பயன்படுத்தப்பட்டிருக்கும். ஒரு வகை நீதியைப் போதிக்கப் பயன்படுவதே இதன் குறிக்கோள்.

### ஒட்டுருவகத்திற்கும் குறியீட்டுக்கும் வேறுபாடு

ஒட்டுருவகம் குறியீட்டைப் பயன்படுத்தினாலும் அதனிலிருந்து வேறுபட்டதாகும்; எவ்வாறெனில் ஒட்டுருவகம் கதைமாந்தர் மற்றும் நிகழ்ச்சிகள் அமையும் முழுமையான ஒரு விளக்கமாகும். அதற்குமாறாக, குறியீடோ ஒரு காட்சிப்பொருளுக்கான மற்றொரு காட்சிப் பொருளாகும். ஒட்டுருவகம் போலன்றிக் குறியீடு கதையொன்றைக் கூறாது. எடுத்துக்காட்டாக, பிளேட்டோவின் ''உருவகக் குகை'' (Allegory of Cave) என்பது எவ்வாறு சிலர் அறிவிலிகளாக உள்ளனர் என்ற கதையைக் கூறுகிறதோ அதற்கு மாறாக வேறுசிலர் ''வெளிச்சத்தைப் பார்க்கின்றனர்'' (See the light) என்பது கருத்தின் வெளிப்பாடாகுமே தவிரக் கதையொன்றைக் கூறுவதாகாது.

### தினசரி வாழ்வில் ஒட்டுருவகத்திற்கான எடுத்துக்காட்டுகள்

உருவகம் என்பது மிகப் பழமையான சொல்லாட்சி ஆகும். அதனால் அது இலக்கியங்களில் சிறப்பாகக் கையாளப்படுகிறது. அன்றாட வாழ்க்கையில் அதைக் கண்டறிய இயலாது. ஆனால், தற்கால அரசியல் மேடை விவாதங்களில் உருவகத்தை உதாரணங்களில் நாம் காணமுடிகிறது.

## 5 (இ) திறனாய்வினால் விளையும் பயன்கள்

முனைவர் து. ஜானகி

இலக்கியத் திறனாய்வு முறைகளைப் பற்றித் திறனாய்வாளர்கள் பல்வேறு வகைகளைக் கூறுகின்றனர். அவர்களில் ஆலர்குரோம்பி என்பவர் திறனாய்வு முறைகளை இருவகையாகப் பிரிக்கிறார். ஒன்று இலக்கியங்களைப் பொது நிலைப்படுத்தித் திறனாய்வு செய்வது மற்றது குறிப்பிட்ட ஒரு இலக்கியத்தைத் திறனாய்வு செய்வது.

### முன்னுரை

''தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு வாழ்க்கையைப் பற்றிய பார்வை, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. அதுவும் இக்காலத் தொழிற் சமூகத்தில் ஒருவருக்கே பலவிதமாகவும் என்று மில்லாத அளவிற்குக் குழப்பமாகவும் இருக்கிறது. இந்த நிலைமைகள் இல்வாழ்க்கையில் இருந்து தோன்றும் இலக்கியத்திலும் அவ்விலக்கியத்தில் இருந்து தோன்றும் திறனாய்விலும் காணக்கிடக்கின்றன. எனவே, திறனாய்வை, ஒரு வரையறைக்குள் பிடிப்பது பெரிதும் சிக்கலாக இருக்கிறது'' என்கிறார் ஏ.ஆர். சோன்ஸ்

திறனாய்வு ஓர் எல்லையில் வெறுமனே புத்தக மதிப்புரையாகவும், மறு எல்லையில் புரிந்து கொள்ள முடியாத கடுஞ் சிக்கல் உடையதாகவும், இடைப்பட்ட நிலையில் வெறும் குழப்பமாகவும் அமைந்து கிடக்கிறது.

ஆனாலும் இங்கே பயன்படத்தக்க வகையில் மிகப்பரந்த அளவிலும் இல்லாமல் மிகக் குறுகிய அளவிலும் இல்லாமல் இலக்கியத் திறனாய்வை வரையறை செய்வது நல்லது.

''ஒரு கலையாக்கத்திலிருந்து தான் பெறுகிற அனுபவ உணர்வைத் தெளிவுபடுத்தி மதிப்பிட்டு, மற்றோர்க்கு உணர்த்துகின்ற செயற்பாடே திறனாய்வாகும். இது அழகியல் அனுபவத்தில் இயற்கையாகவும் தவிர்க்க முடியாததாகவும் அமைகின்ற ஒன்று''. என்று அமெரிக்க கலைக் களஞ்சியம் வரையறை செய்கிறது.

### முதல்வகை

இலக்கியங்களின் பல்வேறு கூறுகளையும் ஆய்வது. அதாவது, இலக்கியமாவது யாது என்னும் வினா எழுப்பி விடை கூறுவதாக இலக்கியங்களின் பொதுத் தன்மைகள், இலக்கியத்தின் பணி போன்ற

வினாக்களுக்கு விளக்கம் காணும் முறையில், இலக்கியங்களை ஆய்ந்து கண்ட முடிவுகளிலிருந்து சில விதிமுறைகள் அல்லது திறனாய்வுக் கொள்கைகள் வகுத்துக் கொள்வது ஒரு முறை. இம்முறையை இலக்கியக் கொள்கை என்பர் ஆயர்குரோமா.

குறிப்பிட்ட ஒரு இலக்கியத்தை பல்வேறு கோணங்களில் ஆய்ந்து அதன் குறை நிறைகளை கண்டறிந்து மதிப்பீடு செய்வது திறனாய்வு என்பர் ஆபர்குரோம்பி.

திறனாய்வின் பயன்கள்

கலைகளில் சிறந்ததாகக் கருதப்படுவது இலக்கியக் கலை. ஏனைய கலைகளின் உண்மைகளைப் பாதுகாப்பதாலும், அதுவே வாழ்க்கையின் விளக்கமாக அமைவதாலும், அவ்வாறு கருதப்படுகிறது! இப்படிப்பட்ட சிறந்த இலக்கியக் கலைகள் ஏராளம் உள்ளன. எல்லாவற்றையும் எல்லோரும் படித்துப் பயன்பெறுவது என்பது இயலாத ஒன்று, இந்நிலையில் திறனாய்வாளர்கள் இலக்கியத்தை அனுபவிப்பதில் வழிகாட்டிகளாய் அமைய முடியும். இது ஒரு வகைப்பயன்.

2. இத்திறனாய்வாளர் பெலின்ஸ்கி கூறுவது போல் ''திறனாய்வு என்பது அழகுணர்ச்சியின் செயல்பாடு'' ஆகும். இந்த அடிப்படையில் திறனாய்வு செய்வது என்பதே இலக்கியத்தைப் பல்வேறு கோணங்களில் பகுத்தாய்ந்து அனுபவிக்கத்தான்.

ஓர் இலக்கியத்தை ஆய்வு செய்யும் திறனாய்வாளன் அவ்விலக்கியத்தைப் பல கோணங்களில் ஆய்ந்து அவற்றினின்றும் அவ்விலக்கிய ஆசிரியனின் ஆளுமையைப் புலப்படுமாறு செய்கிறான். உண்மையில் திறனாய்வாளனும் இலக்கிய ஆசிரியனைப் போலவே வாழ்கையைப் பற்றி விளக்கம் தருகின்றான்.

திறனாய்வு நூல்களை மட்டும் தொடர்ந்து படிப்பதனால் மற்றொரு குறை உண்டு. ஓர் இலக்கியத்தைப் பற்றித் திறனாய்வாளர் கூறும் விளக்கங்களையும் மதிப்பீட்டினையும் அந்நூலைப் படிப்பவர்கள் அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடும். திறனாய்வாளரின் புலமை, ஆற்றல், ஆளுமை போன்றவற்றையொட்டி இக்குறை மிகுதியாகலாம். அவர் கூற்றே முடிவானது என்று நம்பி விடுவர். அவருடைய திறனாய்வைப் படித்த பிறகு மூலநூலைப் படிக்குங்கால் அத்திறனாய்வாளர் நோக்கிலேயே நம் நாட்டம் செல்லும். எனினும் திறனாய்வின் உண்மையான பயனை நாம் மறக்க முடியாது. இத்தகைய திறனாய்வாளன் நம்மைவிட மிகுதியான ஒரு சிறந்த இலக்கியத்தின் நுட்பத்தை விளக்க இயலாது என்ற நாம் நினைப்பது பெரிதும் தவறுடையதாகும்.

திறனாய்வாளன் தானும் கலை இன்பத்தை அனுபவிக்கிறான். மற்றவர்களுக்கும் அனுபவிக்க வழிகாட்டுகிறான். இவை திறனாய்வின் இரு பெரும் பயன் எனலாம்.

**இலக்கியத் திறனாய்வியல்**

மேத்யு ஆர்னால்டு-உலகில் சிறந்ததென்று உணர்ந்து சிந்திக்கப் பெறுவதை தன்னலமற்ற முறையில் அறிந்து பரப்புதற்கு முயற்சி செய்வது திறனாய்வாகும் என்கிறார்.

ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் - ஒரு கவிஞன் ஒரு பொருளைக் காண்கிறான். அது கருத்தை ஈர்க்கிறது. இவ்வாறு கருத்தை ஈர்க்கும் ஒரு பொருள் 'அழகுடையது' என்று சொல்வது வழக்கமாக உள்ளது. திறனாய்வாளன் மேலும் ஆழமாக ஆய்ந்து கலைஞன் உள்ளத்தில் அப்பொருள் ஏற்படுத்தும் விளைவுகள் அப்பொருளுக்கே உரிய சில இயல்புகளாக உண்டாகின்றன என்று கண்டறிகிறான். எனவே திறனாய்வாளன் பொருளைப் பற்றிச் சில கருத்துக்களைக் குறிப்பிடுவதோடு அவற்றால் கலைஞன் உள்ளத்தில் ஏற்படும் விளைவுகளையும் எடுத்துரைக்கிறான். இதுவே முழுமையான திறனாய்வு ஆகும்.

இதனின்றும் திறனாய்வைப் பற்றி இரண்டு விளக்கங்கள் புனைகின்றன. ஒன்று, ஓர் அனுபவம் சில வகைகளில் மதிப்புடையதாய் உள்ளது. மற்றொன்று, அவ்வனுபவம் உள்ளத்தைக் கவரும் பொருளின்கண் அமைந்துள்ள குறிப்பிட்ட இயல்புகளால் ஏற்படுகின்றது. அவ்வனுபவத்தின் மதிப்பினை விளக்கும் பகுதி திறனாய்வு பகுதி என்றும், அவ்வனுபவத்தை ஏற்படுத்துகின்ற பொருளைப் பற்றிய விளக்கங்களைக் கூறும் பகுதி கலை நுட்பப் பகுதி என்றும் கூறுவர் ஐ.ஏ.கி.

## பார்வை நூல்கள்

1. திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும், டாக்டர் ந.பிச்சமுத்து, சக்தி வெளியீடு, முதற்பதிப்பு, 1983.
2. இலக்கியத் திறனாய்வியல், டாக்டர் தா.ஏ. ஞானமூர்த்தி, முதற்பதிப்பு, 1920.
3. தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, டாக்டர் க.பஞ்சாங்கம், அகரம், முதற்பதிப்பு, 1996.

## 5 (ஈ) பழமொழியின் பண்பும் பயனும்

முனைவர் து. ஜானகி

### பழமொழி விளக்கம்

பழமொழி என்பது தூய தமிழ்ச் சொல். பழமொழியைப் பழமை + மொழி எனப் பிரித்துப் பண்புத்தொகையாகக் கொண்டு பழமையான மொழி எனப் பொருள் கொள்ளலாம். நமக்குத் தமிழில் கிடைத்துள்ள மிகத் தொன்மையான பழமொழி வரையறையை வகுத்தவர் கி.மு. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தொல்காப்பியரே.

### பழமொழியின் பண்புகள்

நுட்பம், சுருக்கம், விளக்கம், எளிமை, ஆகிய நான்கு இலக்கணமும் வாய்க்கப் பெற்று குறிப்பிட்ட பொருளைக் காரணத்துடன் உணர்த்தவல்லது பழமொழி என்பது தொல்காப்பியர் பழமொழிக்கு வகுத்த வரையறையாகும்.

பழமொழி ஒரு கருத்தை உணர்த்தவேண்டும். அக்கருத்து காரணத்துடன் பொருந்தியதாகவும் அறிவுக்கு ஏற்றதாகவும் அமையவேண்டும். அதில் நுட்பம், சுருக்கம், விளக்கம் (தெளிவு), எளிமை ஆகிய நான்கு இயல்புகளும் அறிந்திருத்தல் வேண்டும் இவை அமையப்பெற்றதே பழமொழி.

*நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்*
*எண்மையும் என்றிவை விளங்கத்தோன்றிக்*
*குறித்த பொருளை முடித்தற்கு வருஉம்*
*ஏது நுதலிய முதுமொழி என்ப* *(தொல்.பொரு.செய்யு.170)*

இதனைப் பேராசிரியர் கூரிதாய்ச் சுருங்கி விழுமிதாய் எளிதாகி இயற்றப்பட்டுக் குறித்த பொருளை முடித்தற்கு வருமாயின் அங்ஙனம் வந்ததனைப் பொருண் முடித்தற்குக் காரணமாகிய பொருளினைக் கருதுவது முதுமொழி என்ப புலவர் என்றவாறு.

பழமொழி, மக்கள் எல்லோரும் அறிந்த பருப்பொருளை மட்டும் உரைத்தால் போதாது. நுட்பமான பொருளையும் கூர்மையான முறையில் உணர்த்தல் வேண்டும் என்று குறிப்பிட்டார் தொல்காப்பியர். கூற வேண்டியதை இரத்தினச் சுருக்கமாகக் கூறவேண்டும். ஐயம் ஏற்படாதவாறு விளக்கமாகவும் தெளிவாகவும் அறியாமையை நீக்குகின்ற வகையில் அமைந்திருத்தல் வேண்டும்.

### பழமொழிக்குரிய வேறு பெயர்கள்

தொல்காப்பியர் பழமொழியை 'தொன்னெறி மொழி' (தொல்.சொல்.எச்ச.53),

'முதுசொல்' (தொல்.பொரு.செய்யு.73),

'முது மொழி' (தொல்.பொரு. செய்யு.170) ஆகிய பெயர்களால் குறிப்பிட்டுள்ளார்.

'தொன்றுபடு கிளவி' என்று கி.மு. 2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாலை பாடிய பெருங்கடுங்கோ கூறியுள்ளார்.

### பழமொழியின் பயன்கள்

1. இளையோருக்கு அறிவுரை பகருதல்
2. அனைவருக்கும் வாழ்நெறிகாட்டல்
3. துன்புறு காலையில் ஆற்றுவித்தல்
4. வழங்கும் சமுதாயத்தை உணர்த்தி நிற்றல்
5. உரையின் சிறப்பினை மிகுவித்தல்
6. இலக்கியத்தில் மேற்கோளாக அமைதல் எனப் பழமொழிகள் பயன்படுமாற்றைப் பகுத்துரைக்கலாம்.

## பார்வை நூல்கள்

1. பெருமாள்.வ, பல நோக்கில் பழமொழிகள், இலக்கியா பதிப்பகம், சென்னை, 1987
2. சிவகாமி.ச, பன்முகப் பார்வையில் பழமொழிகள், மாதவி பதிப்பகம், சென்னை, 1993

## 5 (உ) சமூக இயக்கங்கள் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கம்

முனைவர் து. ஜானகி

### இயக்கங்களின் தோற்றம்

இந்திய தேசியம் வளர்ச்சி நிலையை எய்துவதற்கு நாட்டகத்தே தோன்றி வளர்ந்த பல்வேறு இயக்கங்களும் காரணமென அறிய முடிகிறது. எனவே அவ்வியக்கங்களின் தோற்றம் வளர்ச்சியை அறிவது அவசியமாகிறது.

1834 ஆம் ஆண்டில் தோன்றிய வங்காள பிரிட்டீஷ் இந்தியா சங்கம், 1838 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் தோன்றிய நிலச் சொந்தக்காரர்கள் சங்கம், 1851 ஆம் ஆண்டில் தோன்றிய பிரிட்டீஷ் இந்திய சங்கம், 1852 ஆம் ஆண்டில் தோன்றிய மதராஸ் நேற்றிவ் சங்கம், மற்றும் பம்பாய் சங்கம் 1866 ஆம் ஆண்டில் தாதாபாய் நவ்ரோஜி இலண்டனில் தோற்றுவித்த கிழக்கிந்திய சங்கம் மற்றும் பம்பாய் சங்கம். 1870 ஆம் ஆண்டில் தோன்றிய சர்வ ஜனிக் சபை 1876 ஆம் ஆண்டில் தோன்றிய இந்திய சங்கம், சென்னையில் எம். வீரராகவாச்சாரி, ஜி சுப்பிரமணிய ஐயர், ஆனந்தசார்லு போன்றவர்களால் தோற்றுவிக்கப்பட்ட மகா ஜன சபை, 1885 ஆம் ஆண்டில் தோன்றிய பம்பாய் மாகாண சங்கம் என பல அமைப்புகள் குறிப்பிடத்தக்கவை.

சில நிர்வாகச் சீர்திருத்தங்களையும் வட்டார முன்னேற்றங்களையும் குறிக்கோளாகக் கொண்டு இவ்வியக்கங்கள் தோன்றினவாயினும் இந்தியர்களின் உரிமை உணர்வு வளர்வதற்கு இவை அடித்தளமிட்டன எனக்கொள்ளமுடிகிறது. இவை போன்ற சில முக்கியமான சமூக இயக்கங்களைக் காணலாம்

### இந்திய தேசியப் பேராயம்

இந்தியர்களின் உரிமையைப் பெறுவதிலிருந்து சிக்கல்களுக்குத் தீர்வு காண, நாட்டின் பல பகுதிகளில் கல்வி அறிவும்,பொது நோக்கும் விழிப்புணர்வும் கொண்ட இந்தியர்கள் தங்கள் தங்கள் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளவும் பொது மக்களிடையே அரசியல் உணர்வைப் பரப்பவும் அனைத்திந்திய அமைப்பு ஒன்று தேவை என உணர்ந்து 1885 ஆம் ஆண்டில் பம்பாய் நகரில் இந்திய தேசியப் பேராயம் தோற்றிவிக்கப்பட்டது. 1885 ஆம் ஆண்டு தலைமை தாங்கிய பேனர்ஜி முதல் 1897 ஆண்டு தலைமை ஏற்ற சங்கரன் நாயர் வரை ஆங்கில அரசுக்குப் பாராட்டும் வாழ்த்தும் கூறியுள்ளனர். உலகில் பல சங்கங்களை இது ஈர்த்தது, தன்னுடன் சேர்த்தது.

**சுதேசி இயக்கம்**

இந்தியர்களின் விடுதலைப் போராட்டம் என்ற சிக்கலுக்குத் தீர்வுகான தீவிரவாதிகள் வளர்த்த சுதேசி இயக்கம். அந்நியரின் அரசியல் ஆதிக்கத்தையும், பொருளாதாரச் சுரண்டலையும் வீழ்த்தும் நோக்கில் இச்சுதேசி இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது எனலாம். அக்காலத்தில் வைசிராயாக இருந்த எல்ஜின் பிரபு இந்திய ஆலைத்துணிகளுக்குச் சுங்கத் தீர்வை விதித்தபோது பிரிட்டீஷ் பொருட்களைப் பயன்படுத்துவதை விட்டு சுதேசிப்பொருட்களைப் பயன்படுத்த வேண்டும் என்று திலகர் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். சுதேசி இயக்கம் பொருளாதாரப் பிரச்சினையை அணுகியது என்பதற்கு வ.உ.சி யின் பாடல் சான்றாகிறது.

*விரைவினில் திரும்புவேன்; விடாதீர் சுதேசியம்;*
*தரைமிசை எதுவும் தருவதுவே*

எனும் பாடல் விளக்குகிறது. தீவிரவாதத்தால் நாட்டுப்பற்றும் பொருளாதாரச் சூழலுக்கு எதிப்புணர்வும் வளர்ந்தது எனக் கூறலாம்.

**தன்னாட்சி இயக்கம்**

சுதேசி இயக்கம் வலுவிழந்த நிலையில் அன்னிபெசண்ட் 1916 ஆம் ஆண்டில் தோற்றுவித்த தன்னாட்சி இயக்கம் தேசிய இயக்கத்தில் ஒரு வளர்ச்சிக்கட்டமாக அமைந்தது. இந்திய நாடு தன்னாட்சியை பெற ஆங்கியப் பாணியிலான போராட்ட முறைகளை அவர் புகுத்தினார். அவ்வம்மையார் தோற்றுவித்த காமன் வீல் வார ஏடு நியு இந்திய நாளேடும் தன்னாட்சிக் கொள்கையைப் பரப்பத் தொடங்கின.

அன்னிபெசண்ட் தன் அரசியல் கருத்துக்களாலும் நடைமுறையாலும் இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் ஒரு புதிய விழிப்புணர்வைத் தோற்றுவித்தார்.

**காந்தீய இயக்கம் (காந்தி வழி)**

1920ஆம் ஆண்டு திலகரின் மறைவிற்குப் பிறகு பேராயத்தின் தலைமை காந்தியடிகளைச் சார்ந்திருந்தது. பேராயத்தை மக்கள் இயக்கமாக மாற்றியதில் அவருக்கு நிறைவானதொரு பங்குண்டு. காந்தி இயக்கம் சமூகத்தில் அகலமாகவும் ஆழமாகவும் பரவத் தொடங்கியது. காந்தியடிகளின் அணுகுமுறை மக்களிடையே விழிப்புணர்வைத் தூண்டியது.

விடுதலைப் போராட்ட மார்க்கத்தில் ஒத்துழையாமை, சத்தியாகிரகம், அகிம்சை போன்ற போராட்ட நெறிகள் பரவலாக நாட்டு

மக்களைக் கவர்ந்தன. விவசாயிகள், தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள் போன்ற பாதிக்கப்பட்டோரின் பிரச்சினைகளில் அவர்காட்டிய ஆர்வம் அவரைப் பல தரப்பினரிடமும் எளிதாக அறிமுகப்படுத்தியது.தேசிய இயக்கத்தை மக்களியக்கமாக மாற்ற முனைந்த காந்தி சத்தியாகிரகங்களையும், வேலை நிறுத்தத்தையும் நடத்தி வெற்றி கண்டார். வளர்ந்து வரும் தேசிய உணர்வைக்கண்டு பொறாத ஜெனரல் டயர் என்பவர் பாஞ்சால நாட்டில் ஜாலியன் வாலாபாக் படுகொலை நடத்தினார். இவற்றில் ஆயிரக்கணக்கோர் மாண்டனர்.

**ஒத்துழையாமை இயக்கம்**

1921 ஆம் ஆண்டு தொடங்கி 1922 வரை வேகமாக நடைபெற்றது. விடுதலை இயக்க வரலாற்றில் ஒத்துழையாமை இயக்கம். ஒரு குறிப்பிடத்தகுந்த கால கட்டமாகும். காந்தியடிகளால் வகுத்து வழியமைக்கப்பட்ட இப்போராட்ட நெறி தேசிய சக்திகளின் ஆற்றலை வளர்க்கும் புதிய சிக்கலாக வடிவெடுத்தது.

நமக்கிருக்கின்ற ஒரேவழி ஒத்துழையாமை இயக்கம். இதுதான் நம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் தெளிவான வழி: பலாத்காரத்திலிருந்து அது முழுமையாக நீங்கி நிற்கும் பொழுது ஒத்துழையாமை வலுவுடையதாகிறது என்ற காந்தியடிகளின் கூற்று அந்த இயக்கத்தின் நோக்கினையும் போக்கினையும் வெளிக்காட்டுகிறது.

**கதர் இயக்கம்**

ஒத்துழையாமை இயக்கத்தைப் போலவே காந்தியடிகளால் வளர்க்கப் பெற்ற மற்றொரு இயக்கம் கதர் இயக்கம் ஆகும். ஒத்துழையாமை இயக்கக் கூட்டங்களில் காந்தியடிகள், சி.ஆர்.தாஸ், சரோஜினி நாயுடு, ஜவஹர்லால் நேரு, போன்ற தலைவர்கள் நாடெங்கும் பங்கு பெற்றனர். அக்கூட்டங்களில் அந்நிய நாட்டு ஆடைகளோடு இந்திய ஆலைத்துணிகளும் எரிக்கப்பட்டன. தேசிய ஆடையான கதரை அணிய வேண்டும் என்ற ஆர்வம் வளர்ந்தது.

**சட்ட மறுப்பு இயக்கம்**

பேராய வரலாற்றில் முழு விடுதலைக்கான நடவடிக்கைகளில் மிகச் சிறந்த ஒன்றாக சட்டமறுப்பு இயக்கம் உருவெடுத்தது. உப்பு எடுக்கும் உரிமையை மக்கள் தங்கள் கையில் எடுத்துக் கொண்டது ஒரு சிக்கலாக விளங்கியது. அரசின் சட்டத்திற்கு மறுப்பாக எழுந்த உப்புச் சத்தியாகிரகம் விடுதலை உணர்வை வளர்க்கும் வழித்தடமாக அமைந்தது.

## வெள்ளையனே வெளியேறு இயக்கம்

உலகப் போரில் அச்சு நாடுகளின் கைஓங்கி இருந்த சூழ்நிலையில், நாட்டின் விடுதலையை முதன்மையாகக் கொண்டு போராடுவதா அல்லது உலக நாடுகளின் பாதுகாப்பைக் கருதிச் செயல்படுவதா என்ற சிக்கல் தேசிய வாதிகளின் முன் எழுந்தது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் 1942 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் தீவிரப்போக்குடையதுமான வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கத்தை நடத்த காந்தியடிகள் முடிவெடுத்தார்.

இவற்றைத் தொடர்ந்து பொதுவுடைமை இயக்கம், திராவிட இயக்கம், சுய மரியாதை இயக்கம், சமதர்ம இயக்கம், தனித்தமிழ் இயக்கம், தமிழிசை இயக்கம், இந்தி எதிர்ப்பு இயக்கம் போன்ற இயக்கங்கள் தமிழ் மக்களிடையே மட்டுமின்றி இந்திய மக்கள் அனைவரிடத்தும் பெரும் செல்வாக்குப் பெற்று சாதி சமய, சமூகப் பொருளாதாரம் சார்ந்த பல சமூக விழிப்புணர்வுகளையும் நற்பலன்களையும் ஏற்படுத்தியுள்ளன.

**தெரிவுசெய்யும் வினா ஒவ்வொன்றிற்கும் நான்கு பக்கத்திற்கு மிகாமல் விடை தருக :**

## 6 (அ) தமிழாய்வின் அண்மைய செல்நெறிகளை ஆராய்க

முனைவர் கோ. பன்னீர்செல்வம்

21ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கின்ற நம்மைப் போன்றே நம்முடைய தமிழ் இலக்கிய வரலாறும் 20 நூற்றாண்டுகளைக் கடந்து அடியெடுத்து வைக்கிறது. கடந்த இருபது நூற்றாண்டு காலத் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியை ஆராயும்போது சில தெளிவுகள் நமக்குக் கிடைக்கின்றன. பத்தொன்பது நூற்றாண்டுகள் நடந்து வந்த, தொடர்ந்துவந்த ஒரு பெரிய நீண்ட இலக்கிய மரபுடன், ஒரு துரிதமான, வித்தியாசமான புதுமைகள் நிறைந்த இலக்கியப்போக்கு இந்த இருபதாம் நூற்றாண்டில் பொங்கப் பெருகியுள்ளது என்பது மறக்க முடியாத, மறுக்க முடியாத உண்மை. அதிலும் இந்திய விடுதலைக்குப்பின் இந்தப்பெருக்கு மிகுதி என்பதையும் நாம் கணித்தல் இயலுகிறது. இந்த நிலையில் இக்குறிப்பிட்ட காலத்திய இலக்கியம் என்ற ஒரு பெரிய வரலாற்று மூலத்தின் செல்நெறிகளை, அதன் வகைப்பாட்டினை அது வெளிப்படுத்தும் தனி மனித சமுதாயச் சிந்தனைகளை, தமிழரின் சிந்தனை வளத்தினை எல்லாம் நாமும் உணர்ந்து பிறருக்கும் உணர்த்த வேண்டும் எனும் அடிப்படையில் அண்மைக்காலத் தமிழ் ஆய்வில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற செல் நெறிகளைத் தொகுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

### தலித்திய ஆய்வு

மார்க்சீயம், பெண்ணியம், தலித்தியம், சூழலியம் என அமையும் ஒவ்வொரு அணுகுமுறைகளும் தேசியம், தமிழியம், திராவிட இயக்கப் பார்வை என அமையும் அரசியல் நோக்குகளும் கலை இலக்கியங்களைத் திறனாய்வு செய்வதில் மகத்தான பணிகளைச் செய்கின்றன. இவை ஒவ்வொன்றும் வரலாறு, பண்பாடு, கலை, இலக்கியம், மதிப்புகள் என அனைத்தையும் மறுவாசிப்பு செய்கின்றன. இவ்வணுகுமுறையின் மையப்பொருண்மை அதிகாரத்தை எதிர்ப்பதாகவே அமைந்துள்ளது. சமயம், இனம், சாதி, மொழி, பால் என்னும் நிலைகளில் மேலாதிக்கம் பெற்று வந்துள்ள சக்திகளையும் அவற்றின் நிறுவனங்களையும் நிறுவனக் கட்டமைப்பின் அடிப்படைகளையும் நிலைபேற்றிற்காக அவை வஞ்சகமாக விரிக்கும் வலைகளையும் அவை அம்பலப்படுத்துகின்றன. இதுவரை

நிகழ்ந்தவற்றைத் தோலுரித்து நிகழ்ந்த காலத்தை அதிர்வுக்குள்ளாக்குகின்றன. எதிர்காலத்தில் இருக்க வேண்டியவற்றை உள்ளார்ந்தும் வெளிப்படையாகவும் முன்னிருத்துகின்றன. மேலாண்மையை உடைத்தெறிவதன் மூலம் சமத்துவத்தைக் கொணர அவை முழங்குகின்றன. மற்றொரு வகையில் எண்ணிப் பார்த்தால் இவை அனைத்தும் சமூகம் சார்ந்த சிந்தனைத் தளங்களாகவே உள்ளன எனல் வேண்டும். 'அரசியல்' என்ற பொருளில் இவை அதிகாரத்தை எதிர்த்துச் சமத்துவத்தை அவாவி நிற்பன. வர்க்க நிலையில் அவை அதிகாரத்தை வென்றெடுக்கவும் பாடுபடுகின்றன.

1980-களில் தமிழகத்தின் கலை இலக்கியத் தளத்தில் 'தலித்' எனும் முன்னொட்டுடன் தலித் சிந்தனையைத் தனித்துக் கவனிக்க வைத்தது. தலித் சிறுகதை, தலித் தன் வரலாற்று நூல், தலித் கவிதை, தலித் நாடகங்கள் என அவை பல வகையாக மலர்ந்தன. தொடக்கத்தில் எழுத்தாளர்களும் விமர்சகர்களும் வாசகர்களும் முகஞ்சுளித்தவாறு எள்ளி நகையாடிய போதிலும் தொடர்ந்து தலித் படைப்பாளிகள் தங்கள் படைப்புகளை முன் வைப்பதில் கொஞ்சமும் தயக்கம் காட்டவில்லை. தலித் எழுத்தாளர் எனச் சொல்லிக் கொள்ள கூச்சப்பட்டவர்கள் எல்லாம் காலப்போக்கில் தலித் படைப்பாளிகள் எனச் சொல்லிக் கொள்வதில் பெருமை கொண்டனர்.

ஊடகங்களில் தலித் படைப்புகள் மறுதலிக்க முடியாத வண்ணம் பதிவு செய்யப்பட்டுள்ளன. தலித்துகள் மட்டுமே எழுதிக் கொள்வது தலித் படைப்புகளா? அன்றி தலித்துகளுக்காகத் தலித் அல்லாதோர் எழுவது தலித் படைப்புகளா? என்பன போன்ற வாதங்கள் புறப்பட்டன. பெண்ணிய விடுதலைக்குப் பெண்களால் எழுதப்படும் படைப்புகள் பெண்ணியப் படைப்புகளாக அங்கீகரிக்கப்பட்டன.

தலித் பெண்ணியம் என்ற வகையில் பெண்ணியவாதிகள் பலர் பல்வேறு படைப்புகளைச் செய்ய முன்வந்தனர். நாணயத்தின் இருபக்கங்களாக ஆண்களால் பெண்கள் கொடுமைக்குள்ளாவதும் தலித்தாக இருப்பதனால் தலித் பெண்கள் கொடுமைக்குள்ளாவதும் உள்ள நிலைகள் குறித்த படைப்புகளும் விமர்சனங்களும் தலித் பெண்ணியச் சிந்தனைகளும் பரவலாகத் தலித் கலை இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டன. தலித் படைப்பாளிகள் தமக்கென கலை இலக்கிய வடிவங்களை இப்பின்புலத்தில் படைத்துக் கொண்டிருக்கின்றனர். தலித் படைப்புக்கள் இவ்வாறு பல நிலைகளில் உருவெடுப்பதற்குத் தலித் இயக்கங்கள் பின்புலங்களாக அமைந்திருந்தன.

**பின்நவீனத்துவம்**

இருபதாம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதி, ஐரோப்பிய - மேற்கத்திய சிந்தனை மரபில் பல புதிய 'புத்தாக்கங்கள் கண்டது. அமைப்பியல் வாதம் (Structuralism), பின் அமைப்பியல் வாதங்கள் (Post Structuralism), என்பன 19-ஆம் நூற்றாண்டு முதல் 20-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை செல்வாக்கு உடையனவாக விளங்கிய பல சிந்தனைகளைக் கேள்விக்குள்ளாக்கின. இந்தச் சிந்தனை மாற்றம் காரணமாகக் கிளம்பியதுதான் பின்நவீனத்துவம் எனும் கோட்பாடு. பின் அமைப்பியல்வாதச் சிந்தனைகள் சிந்தனை மட்டத்திலேயே தொழிற்படுவனவாக அமைய இத்தொடரோ காலப்பெயர்வு ஒன்றைச் சுட்டுவதாகவும், அதன் வழியாக ஒரு 'புதிய இருப்பு நிலை' உருவாக்கியுள்ளது. குறிப்பாக 1920-80 களில் இது மேற்கு நாடுகள் முழுவதும் சிந்தனையாளர்கள், கலை, இலக்கிய விமர்சகர்கள், பண்பாட்டு ஆய்வாளர்கள் மத்தியில் இத்தத்துவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தமிழகத்தைப் பொறுத்தவரை 1990-களில் இத்தத்துவம் எடுத்துப் பேசப் பெற்று வந்தது. அ.மார்க்ஸ், நிறப்பிரிகை எனும் சிற்றிதழிலும் பிற இதழ்களிலும் பின் நவீனத்துவம் பற்றி எழுதினர். இவை பின்னர் (1996) பின் நவீனத்துவம் - இலக்கியம்- அரசியல் என்ற தொகுதியாக வெளிவந்தது. அ.மார்க்ஸின் பின் நவீனத்துவம் சார்ந்த கட்டுரைகள் தமிழக இயக்கங்களாலும் ஆய்வு நிலைகளிலும் தாக்கத்தைப் பெற்றன.

1994-ல் தமிழவன் 'நவீனத்தமிழும் பின் - நவீனத்துவம்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார். பின் நவீனத்துவத்துக்குப் பெயரளவில் தொடர்புடையதாக இருந்தபோதிலும் இதைத் தமிழில் வெளியான முதல் பின் நவீனத்துவ கட்டுரை எனலாம்.

தமிழவனின் 'ஸ்ட்ரக்சுரலியம்' என்ற நூல் வெளிவந்தபோதுதான் தமிழில் அமைப்பியல் மூலமாகப் பின்-நவீனத்துவம் பிரவேசித்தது எனலாம். இந்தப் பிரதியில் தமிழவன் அல்தூஸரையும், ரொலான் பார்த்தையும் கலந்து கட்டி எழுதியிருந்தார். தொடர்ந்து எம்.டி.முத்துக் குமாரசாமியின் 'பிற்கால அமைப்பியலும் குறியியலும்' என்ற கட்டுரை வெளியானது. அதைத் தொடர்ந்து நாகார்ஜுனனின் கட்டுரைகள் வெளிவர ஆரம்பித்தன. தமிழ்ப் பின்-நவீனத்துவத்தைப் பொறுத்தவரை நாகார்ஜுனனின் பங்கு முக்கியமானது எனலாம்.

நோயஸ் ஜோஸப் இருதயராஜின் 'இயக்கத்திலிருந்து ஆட்டத்துக்கு' என்ற கட்டுரை தமிழில் முக்கியத்துவம் வாய்ந்த

பின்நவீனத்துவக் கட்டுரை எனலாம். தமிழவனின் ஸ்ட்ரக்சுரலிசத்தை எதிர்த்து நோயஸ் அமைப்பியலின் பொதுப்புத்தியும் போன்ற கட்டுரைகள் ஒரு பின்-நவீன உரையாடலைத் தமிழ்ச்சூழலில் துவக்கி வைத்தன.

பூர்ண சந்திரனின் 'அமைப்பு மையவாதம்' 'கவிதைத் தகர்ப்பும் அமைப்பும்' போன்ற பிரதிகள் தமிழ்ப் பின்-நவீனத்துவ உரையாடலை தொடர்ந்து நிகழ்த்த உதவியவை. சிலப்பதிகாரம் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' போன்ற கருத்தியல்களைப் பூர்ணசந்திரன் நிர்-நிர்மாணம் செய்தார். ரமேஷ்பிரேமின் பின்-நவீனத்துவ பிரச்சனைப் பாடுகள் ஒரு முக்கிய நிகழ்வு. மேலும் நிகழ்வு இதழ் ஒரு பின்-நவீன இதழாக வெளிவந்தது. பல பின்-நவீனப் பிரதிகளை வெளியிட்டது.

- 'வித்தியாசம்' என்ற பின்-நவீனத்துவ இதழை நாகார்ஜூனனும் தமிழவனும் ஒன்று சேர்ந்து நடத்தினார்கள். அதில் பல பின் நவீனத்துவக் கட்டுரைகள் வெளிவந்தன. 'வித்தியாசம்' இதழில் எஸ்.சண்முகம் எழுதிய பின்-நவீனத்துவக் கட்டுரைகள் முக்கியமானவை.
- 1997-ல் கோவை ஞானியும் தமிழில் நவீனத்துவமும் பின்-நவீனத்துவமும் என்ற தலைப்பில் கட்டுரை எழுதியிருக்கிறார்.
- 'நிகழ்' இதழில் பல எதிர்விவாதங்கள் ஜனநாயகப் பண்புடன் முன் வைக்கப்பட்டன என்பது முக்கியமானது.
- 'லயம்' இதழில் பல அருமையான மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் வெளிவந்தன. அவை தொகுக்கப்படவில்லை.
- சாருநிவேதிதாவின் 'சிதைவு' ஒரு பின் நவீன இதழாக வெளிவந்தது.
- 'பிரதியியல் ஆய்வு' என்ற பெயரில் அ.மார்க்ஸ் மௌனி புதுமைப்பித்தன் போன்றவர்களைத் 'தகர்த்து' எழுதிய கட்டுரைகளைப் பின்-நவீனத்துவக் கட்டுரைகள் என்று சொல்லமுடியாவிட்டாலும் அவற்றின் இடம் முக்கியமானது.
- நோயல் பின்-நவீனத்துவம் பற்றி எழுதிய கட்டுரைகள் பின்-நவீனத் தொனியிலும் நடையிலும் எழுதப்பட்டவை. நையாண்டியும் சுய எள்ளலும் அவற்றின் தனிச்சிறப்பு எனலாம்.

பின்-நவீனத்துவம் தமிழகத்தில் பிரவேசித்தபோது பின்-நவீனத்துவத்துக் கேற்ற சூழ்நிலை தமிழகத்தில் இல்லை. எனவே பின்-நவீனத்துவம் ஒரு புரியாத புதிராக இருந்தது. அதை விளங்கிக் கொள்வதில் சிக்கல் இருந்தது. இன்றைக்கோ நிலைமை மாறிவிட்டது.

உலக மயமாக்கல் பன்னாட்டு மூலதனம், தாராளமயமாக்கல், உள்நாட்டுத் தொழில்களில் அந்நிய முதலீடு, எப்.டி.வி, எம்.டி.வி.களின் ஆதிக்கம் போன்றவற்றின் படையெடுப்பால் இப்போது பின்-நவீனத்துவத்தின் மீதான ஆர்வம் தமிழ்ச்சூழலில் வளர்ந்து வருகிறது எனலாம்.

### பெண்ணிய ஆய்வு

பெண்ணிய ஆய்வு என்பது, இலக்கியத்தில் பெண்ணை மையமாக வைத்துத் தொலைநோக்கு ஆய்வு மேற்கொள்ளுவதாகும் என்று மேக்கி'ம் என்ற பெண்ணிய ஆய்வாளர் விளக்கியுள்ளார். பெண்ணைப் பெண்ணாகப் படித்தறிதல் (Women to read as women) என்ற போக்கு இத்திறனாய்விற்கு மிக இன்றியமையாததாகும். இதன் அடிப்படையில்தான், பெண்ணியத் திறனாய்வைப் புரிந்து கொள்ளவும் எடுத்தாளவும் இயலும்.

அமெரிக்கா, இங்கிலாந்து, ப்ரான்ஸ் ஆகிய நாடுகளில் அறுபதுகளின் இறுதியில் தோற்றம் பெற்ற இவ்வாய்வு, எழுபதுகளின் இறுதியில் உலகம் முழுவதும் பரவத் தொடங்கியது. தமிழகத்தைப் பொறுத்தவரை மேலைநாட்டுப் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு எண்பதுகளில் தோற்றம் பெற்றது. ஆனால் பெண் பற்றிய பொதுநோக்கு ஆய்வு தமிழுக்குப் புதியதல்ல என்பதால் தமிழில் பெண்ணிய ஆய்வை

1. எண்பதுக்கு முன்
2. எண்பதுக்கு பின்

என இரண்டாகப் பகுத்து நோக்கலாம்.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் மாயூரம் வேதநாயகம் பிள்ளை, அ.மாதவையா போன்றோரும், இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதி, பாரதிதாசன், வ.ரா. போன்றோரும் பெண்களைப் பற்றி விழிப்புணர்வுடனும் விமர்சன நோக்குடனும் தம் படைப்புகளால் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர். பின் நவீன பெண்ணிய சிந்தனைகளோடு ஒப்பிட்டு நோக்கத்தக்க பெண் பற்றிய ஆய்வைச் சமூக இலக்கிய நோக்கில் முதன் முதலில் அணுகியவர் தந்தை பெரியார் ஆவார். முப்பதுகளில் பெண் ஏன் அடிமையானாள்? மதமும் மங்கையும் என்ற நூலில் பெண்ணடிமைத் தனத்தின் பரிமாணத்தையும், கற்பு என்ற பெண்ணடிமைக் கருத்தாக்கத்தையும், வள்ளுவர் தந்த கற்புக் கோட்பாட்டையும் தீவிர நோக்கில் விமர்சித்துள்ளார்.

1960-ல் இலங்கையைச் சேர்ந்த தமிழறிஞர் ந.சி.கந்தையா பிள்ளை, "பெண்கள் உலகம்" என்ற நூலை எழுதியுள்ளார். பெண்

இனவரலாறு பேசும் இந்நூல் வரலாற்று நோக்கில் ஆராயப்பட்டுள்ளது. எண்பதுக்குப் பின் செய்யப்பட்ட பெண்ணிய ஆய்வுகள் மேலைநாட்டுப் பெண்ணிய ஆய்வுகளின் வழிவந்தவை. இவ்வகை ஆய்வுப்போக்கிற்கு வித்திட்ட முதல்வர் அம்பை என்ற சி.எஸ்.லட்சுமி ஆவார். இவர் 1984-ல் முத்திரைக்குப் பின்னால் உள்ள முகம் (The face behind the mask) என்ற தலைப்பில் தமிழ்ப்பெண் எழுத்தாளர்களையும் அவர்தம் படைப்புக்களையும் ஆராய்ந்து வெளியிட்டார். இன்று தமிழகத்தில் பேசப்படும் பெண்ணியத் திறனாய்வுப் போக்கிற்கு வித்திட்டது அன்னைதெரஸா மகளிர் பல்கலைக்கழகமாகும். அப்பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை மார்ச் 1986-ல் நடத்திய ‘பெண்கள் படைப்பில் பெண்கள்’ என்ற கருத்தரங்கு முக்கிய நிகழ்வாகும்.

தொண்ணூறுகளில் ஆய்வு, நிகழ் என்ற சிற்றிதழ்கள் பெண்ணியம் பற்றிய கட்டுரைகளை வெளியிட்டன. இதில் ராஜ்கௌதமன், அ.மங்கை, சு.வேங்கடராமன், அருணா, சி.ஜெயராஜ் போன்றோர் பெண்ணியம் பற்றி எழுதினார். 1993-ல் நிறப்பிரிகை என்ற சிற்றிதழில் அ.மார்க்ஸ், எதிர்வு சிவக்குமார், ரவிக்குமார், சாருநிவேதிதா போன்றோர் இணைந்து ‘பெண்ணியம் - கூட்டுவிவாதம்’ என்ற பெயரில் ஒரு கூட்டுக் கட்டுரையை வெளியிட்டனர். நிறப்பிரிகையின் விவாதத்தால் பஞ்சாங்கம் போன்றோர் பெண்ணியம் பற்றிய உண்மையான போக்கை அறிய ஆங்கில நூல்களைத் தேடிப்பிடித்து மொழிப்பெயர்த்து கட்டுரையாக வெளியிட்டார்.

அஃது நிகழ் இதழில் வெளிவந்து பின்னால் அக்கட்டுரையையும் மற்ற இரு பெண்ணியக் கட்டுரைகளையும் இணைத்து பெண் என்னும் படைப்பு என்ற பெயரில் அவரே நூலாக வெளியிட்டார். அந்நூல் பெண்ணியத்தைப் பற்றிப் பெண்களே பரவலாகப் பேசவும் எழுதவும் தொடங்கியுள்ள சூழலை வெளிக் காட்டியது. இவை எல்லாம் தமிழ்க் கலாச்சார சூழலில் பெண் விடுதலை பற்றிய அடுத்தக்கட்ட சிந்தனை வளர்ச்சியினை அடையாளம் காட்டுகின்றன.

இந்நூல் தொடர்ந்து சாந்தி சச்சிதானந்தத்தின் பெண்களின் சுவடுகளில் என்ற நூலும், சில கட்டுரைகளும், பெண்நிலை வாதம், சிலபேர்கள், சர்வதேய பெண் நிலை வாதம், பெண்களும் தொடர்பு ஊடகங்களும் என்ற சிறுநூல்களும் தமிழ்ச் சூழலுக்கு அறிமுகமான மார்க்சிய சமூக நோக்கிலும் இனம் காட்டிய நூலும் கட்டுரையும் பரவலாக ஓவியம், நாடகம் பிறதொடர்பு ஊடகங்கள் இலக்கியத்தோடு பிற கலைத் தளங்களுடன் ஒப்பிட்டன.

தொண்ணூறுகளின் தொடக்கத்தில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தில் சில குறிப்பிடத்தக்க பெண்ணியம் பற்றிய முனைவர் பட்ட ஆய்வேடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றில் பெண்சிறைக் கைதிகள் பற்றிய தி.ஜானகி ராமனின் நாவல்களில் பெண்ணியப் பார்வை என்ற தலைப்பில் பரிமளத்தின் ஆய்வும், கரகப்பெண் கலைஞர்கள் பற்றிய ஜெயராணியின் ஆய்வும், பெண்களின் சமூக, உளவியல் தளங்களில் விரிவுபடுத்தின என்பதோடு நின்று போயின. இவை புத்தகம் வடிவம் பெற வாய்ப்பில்லாமல் போயிற்று.

1995-ஆம் வருடம் தஞ்சையில் நடந்த எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் பெண்ணியத்துக் கென்று ஒரு அமர்வு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த அமர்வு கலை இலக்கியம், பண்பாடு, சமூகம், அரசியல் என்ற தலைப்பில் கட்டுரைகள் பெறப்பட்டன. 1998ல் ஏப்பிரல் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பெண்ணியம் - கோட்பாடும் தமிழ்ச்சூழல் எனும் தலைப்பில் மூன்று நாள் ஆய்வரங்கை நிகழ்த்தியது. இதில் பெண்ணியம் பற்றிய பல தலைப்பில் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. சென்னையில் கிறித்தவக் கல்லூரி, இராணிமேரி கல்லூரி போன்ற கல்லூரிகளின் தமிழ்த்துறை சார்பில் அவ்வப்போது பெண்ணியம் பற்றி நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அவற்றில், கட்டுரை, குறும்படங்கள், இதழ்கள், திரைப்படங்கள், வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றின் பல்வேறு தளங்களில் பெண்கள் நோக்கப்படுகின்றனர்.

விடியல் பதிப்பகம் - மார்க்சிய பெண்ணிய உறவும் முரணும் நூலை வெளியிட்டது. இந்நூலில் கெய்ட் கார்மன் என்ற பெண்ணிய வாதியின் எழுத்தும் அவர் எழுத்திற்கு எதிராக வந்த எழுத்துக்களும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஈழத்திலிருந்து 'நான் ஒரு பெண்' என்ற பன்நோக்கு கட்டுரைத் தொகுப்பு நூலும் சிங்கப்பூரிலிருந்து தூத மாற்றம் காணும் சமுதாயங்களில் இளம்பெண்கள் என்ற நூலும் வெளிவந்தன.

இவ்வாறு தமிழாய்வின் அண்மை செல் நெறிகள் சமூக நோக்கோடு மானுடத்தை பண்படச் செய்ய பல்வேறு தளங்களில் புதிய புதிய செல்நெறிகளை உருவாக்கி வளர்த்து வருகின்றன.

## 6 (ஆ) ஒப்பிலக்கிய அடிப்படைக் கொள்கைகளை விளக்குக.

முனைவர் தி. மகாலட்சுமி

### முன்னுரை

ஒப்பிலக்கியம், இலக்கிய வரலாற்றின் ஒரு பகுதியாகப் பிரான்சில் தொடங்கி இலக்கியத் திறனாய்வாக அமெரிக்காவில் வளர்ந்தது. இப்போது இலக்கியக் கொள்கையை மையமாகக் கொண்டு இயங்குகின்றது. ரெனெவெல்லக்கின் கருத்துப்படி இலக்கிய வரலாறு, திறனாய்வு, இலக்கியக் கொள்கை ஆகிய மூன்றும் இலக்கிய இயலின் முக்கிய மூன்று கூறுகள். அது மட்டுமின்றி அவை ஒன்றை ஒன்று சார்ந்தவை (Literary Theory needs literary history as well as criticism just as literary history needs literary theory and criticism).

### இலக்கியக் கொள்கை-தொகுத்தாய்வது

இலக்கிய வரலாறு-இலக்கியங்களை உயரவாக்கில் (vertical axis) வைத்துப்பார்க்கின்றது. ஆனால் இலக்கியக் கொள்கைகள் இலக்கியங்களை, அகல நோக்கில் அணுகுகின்றன. இதனால் அவற்றின் பொது இயல்புகளை, வகைகளை, அவற்றின் ஊடு இயங்கும் விதிக் கூறுகளை இனம்கண்டுகொள்ள இயலும்.

### ஒப்பிலக்கியப் பொருண்மை

ஒப்பீடு என்பது மனித இனத்திற்கு இயல்பான ஒன்று. ஓர் உணர்வு, பசி, துக்கம், அழுகை போல ஒப்பீட்டு உணர்வும் மனிதனிடம் குடி கொண்டுள்ள ஓர் அடிப்படை உணர்வு ஆகும். மனிதன் விலங்குகளிலிருந்து தன்னை வேறுபடுத்தி எப்போது பார்த்தானோ அப்போதே ஒப்பீட்டு உணர்வு தோன்றத் தொடங்கிவிட்டது எனலாம்.

இவ்வாறு முளைவிட்டு வளர்ந்த ஒப்பீட்டுணர்வு காலப்போக்கில் 'ஆய்வு வளர்ந்த நிலையில்' பிரபஞ்சப் பொருட்கள் அனைத்தையுமே ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பார்த்தது. இதன் பயனாய் நிறை, குறைகளையும் வன்மை மென்மைகளையும் ஆராய்ந்து பார்க்கத் தொடங்கியது. முற்றும் துறந்த முனிவர்கள் கூட ஒப்பீட்டு உணர்வுக்கு விதிவிலக்கானவர்கள் அல்லர். அப்பர் சுவாமிகள் கூட முன்பு தான் சமணத்தில் தவித்த நிலையையும் பின்பு சைவத்தைத் தழுவிய நிலையையும் ஒப்பிட்டுப் பாடுகின்றார். திருமழிசையாழ்வாரும் திருச்சந்தவிருத்தத்தில் பாடுகின்றார். இனம், நாடு, நிலம் என்ற வேறுபாடு இன்றிப் பால், வயது, சாதி, மதம் என்ற வேற்றுமை இன்றி, ஏழை-பணக்காரன், தொழிலாளி-முதலாளி, ஒடுக்கப்படுபவர்கள்-ஒடுக்குபவர்கள் என்ற ஏற்றத் தாழ்வின்றி

அனைவர் மனத்திலும், இன்பத்திலும், துன்பத்திலும் குடிகொண்டுள்ளப் பொதுமை உணர்வு, ஒப்பீட்டு உணர்வு எனலாம்.

ஒப்பீட்டு உணர்வு வளர்ச்சி பெற்று 'உவமை செய்தல்' என்ற இலக்கண நெறிப்பட்டுப் பின்னர்க் காரண காரியத் தொடர்புடைய ஓர் அறிவியல் அணுகுமுறை என்ற முடிவுக்கு வந்தது.

1. தமிழ் இலக்கியத்தைத் தமிழ் இலக்கியத்தோடு ஒப்பிடுதல். (எ.கா.) திருப்பாவை-திருவெம்பாவை.
2. தமிழ்ப் படைப்பாளரை இன்னொரு தமிழ்ப் படைப்பாளரோடு ஒப்பிடுதல் (நம்மாழ்வார்-மாணிக்கவாசகர்).
3. ஒரு தமிழ் இலக்கிய வகையை மற்றொரு தமிழ் இலக்கிய வகையோடு ஒப்பிடுதல். (எ.கா.) தமிழில் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள்-ஒப்பீடு.

இவையெல்லாம் தமிழ் என்னும் ஒரு மொழி எல்லைக்குள் நின்று விடுகின்றன.

**ஒப்பிலக்கியம்-பயன்கள்**

ஒப்பிலக்கியம் இன்று உலக இலக்கிய வரலாற்றின் ஒருபகுதியாகக் கருதப்படுகிறது. ஒப்பிலக்கியத்திற்கான வளமான களங்கள், சூழல்கள், புதிய தேடல்கள், மாற்று வடிவங்கள் உலக மொழிகளில் காணப்படுகின்றன. ஒப்பிலக்கியத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் பிரெஞ்சு ஒப்பிலக்கிய அறிஞர்கள். இவர்கள் ஒப்பிலக்கியத்தைத் தமது தேசியப் பண்புகளைத் தேடுவதற்கும் வரையறுப்பதற்குமான ஒரு கருவியாகவே பார்த்தனர் (பா. ஆனந்தகுமார் 2003:7).

ஒப்பீட்டில் ஈடுபடுவது மனிதமனத்தின் இயல்பு. ஒத்த தன்மையுடைய இரண்டு பொருட்களை இணைத்து வைத்து நோக்குதலும், ஒருமையும் ஒற்றுமையும் புலப்படுத்துகின்ற ஏதேனும் அகன்ற இரண்டனை அண்மையில் வைத்துப் பார்த்தலுமாக இது அமையும். ஒரு வட்ட எல்லை விரிவில், வேறுபட்ட இரண்டன் சமன்மைக் கூறுகளை இனம் காணுதலும், வேற்றுமைப்பட்ட அருவகை உருவப் பொருட்களை, பண்புகளை முரணிக் காட்டுதலும் கூட இதில் உட்படும்.

ஒன்றோடு ஒன்றை ஒத்து வைத்துப் பார்ப்பதால்தான் ஒன்றைவிட ஒன்று உயர்ந்தது, சிறந்தது, மேம்பட்டது என்ற ஒப்பீடு தோன்றி (Comparison) இலக்கியச் சுவையைக் கூட்டுகின்றது. நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று; நீரினும் ஆரளவின்றே'

என்ற ஒப்பீட்டால் நட்புக்கே ஒரு புதுப்பரிமாணம் கிடைக்கிறது. உணர்வு நிலையிலுள்ள அன்புக் காட்சிப் பொருட்களால் வடிவம் கொடுக்கும் முயற்சியில் அன்பின் அளவின்மை, வளம், ஆற்றல், ஆழம் என்பன புலப்படுத்தப்படுகின்றன.

ஒப்பிலக்கியம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேம்பட்ட தேசிய இலக்கியங்களை ஒப்பிட்டு உத்திகளை அறிவியல் வழிநின்று ஆராய்ச்சி முறையில் பயன்படுத்துவதாகும். இதன்மூலமாக முறைப்படி ஆழ்ந்து கற்பதே ஒப்பிலக்கியம் ஆகும்.

ஒப்பிலக்கியம் கல்வி நிலையங்களில் காலங்காலமாகக் கற்பிக்கப்பட்டு வரும் அறிவியல், மானிடவியல் பாடத்துறைகளை ஒத்த ஒரு பாடத்துறையாகும்.

### ஒப்பிலக்கியம் என்ற தொடர்

'Comparative Literature என்னும் ஆங்கிலத் தொடர் 'Literature Compare' என்னும் பிரெஞ்சு மொழித்தொடரைப் பின்பற்றி ஆக்கப்பட்டது. முதன்முதலில் ஒப்பிலக்கியம் பற்றி எழுதிய பேராசிரியர் கைலாசபதி தம் நூலுக்கு 'ஒப்பியல் இலக்கியம்' என்ற தலைப்பைப் பயன்படுத்தினார். 'ஒப்பிலக்கியம்' என்ற தொடரையே பேராசிரியர் தமிழண்ணல் கூறுகின்றார்.

### பிறமொழி ஒப்பீடு

ஒரு மொழி இலக்கியத்துடன் மற்றொரு மொழி இலக்கியத்தையோ, ஒருமொழிப் படைப்பாளரோடு மற்றொரு மொழிப் படைப்பாளரையோ, ஒரு மொழி இலக்கிய வகையுடன், பிறமொழி இலக்கிய வகைகளையோ அறிவியல் கண்ணோட்டத்துடன் ஒப்பிட்டு நோக்குவதே ஒப்பிலக்கிய ஆய்வாகும். இவற்றுக்கான எடுத்துக்காட்டுகள் வருமாறு:

1. ஒருமொழி இலக்கியத்துடன் மற்றொரு இலக்கியத்தை ஒப்பிட்டுக் காணுதல். (எ.கா.) கம்பராமாயணமும், எழுத்தச்சன் இராமாயணமும்.
2. ஒரு மொழி ஆசிரியருடன் மற்றொரு மொழி ஆசிரியரை ஒப்பிட்டறிதல் (எ.கா.) பாரதிதாசன்-நஸ்ருல் இஸ்லாம் பாடல்களில் புரட்சிப்போக்கு.
3. ஒருமொழி இலக்கிய வகையை மற்றொரு மொழி இலக்கிய வகையோடு ஒப்பிடுதல்.
4. ஒருமொழி இலக்கியக் கொள்கையைப் பிறமொழியில் அதே நோக்குடைய இலக்கியக் கொள்கையோடு ஒப்பிடுதல்.

(எ.கா.) தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியலும் பரதரின் இரசக்கோட்பாடும் இதுபோன்றே இலக்கியத்தைப் பிற துறைகளுடன் ஒப்பிட்டு நோக்குவது ஒப்பிலக்கிய ஆய்வின் பாற்படும்.

(எ.கா.) உயிரின வளர்ச்சியும் இலக்கிய வகை வளர்ச்சியும்.

மேற்கத்திய மரபில் இலக்கிய வகைமைக் கொள்கைக்கு வித்திட்டவர்கள் பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும். இந்திய மரபில் கொள்கைக்கு வித்திட்டவர்கள் தொல்காப்பியரும், பரதரும், பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் போலச் செய்தல் அடிப்படையிலும், உணர்ச்சி அடிப்படையிலும் மேலை இலக்கியங்களைப் பகுத்தனர். பிளேட்டோவின் பகுப்பு அறநெறி சார்ந்ததாக அமைவதால் அவ்வளவு பயனுள்ளதாக அமையவில்லை என்பார் அறிஞர். ஆனால் அரிஸ்டாட்டில் காப்பியத்தையும் நாடகத்தையும் mode of imitation அடிப்படையில் இன்பியல் துன்பியல் இலக்கியங்களை வாழ்வியல் நோக்கு attitude அடிப்படையிலும் பகுத்துப் பார்க்கிறார். அரிஸ்டாட்டிலின் பாகுபாட்டில், mimetic, Bormalistic, pragmatic ஆகிய மூவகை நோக்கின் சேர்க்கையைக் காணலாம். துன்பியல் நாடகத்தின் அடிப்படையாக அவர் கூறுவது அதன் பாத்திரங்களின் தன்மையையும், அவர்தம் உணர்ச்சியினை இணைத்துக் கூறும் கதை அமைப்பையும் (Plot) பார்ப்போர் மனத்துள் ஏற்படுத்தும் தாக்கத்தையும் (Catharisis) ஆகும். அரிஸ்டாட்டில் பகுப்பின் அடித்தளம் நாடகம். எனவேதான் அவர் காப்பியத்தைத் துன்பியல் நாடகத்தின் வளர்ச்சியின் ஒரு நிலையாகக் கருதுகின்றார்.

அரிஸ்டாட்டிலும், தொல்காப்பியரும், இலக்கிய உணர்வுகளைப் பற்றிப் பேசுகின்றனர். அரிஸ்டாட்டில் நாடகத்தைக் காண்போர் மனத்தில் பரிவு/அச்சம் ஆகிய இரு உணர்வுகளும் வலுவாக்கப்படுகின்றது; பின் வெளிக்கொணரப்படும்போது ஒருவகை அமைதிநிலை (equlibrium) வருவதாகக் குறிக்கின்றார்.

## முடிவுரை

புதிய படைப்புகளுக்குப் பழமை வெளிச்சம் தரும். பழைய மரபில் புதுப்பொருள் தெரியும். அந்தப் பழமை-புதுமைப் பிணைப்புகளுக்கு, கிழக்கு, மேற்குச் சங்கமத்துக்கு ஒப்பிலக்கியம் தலையான வழி. ஏனென்றால், ஒப்பிலக்கியம்தான் 'ஒரு மனிதம், ஓர் உலகம், ஓர் இலக்கியம் என்ற ஒப்பிலா இலட்சியத்துக்கு நம்மை இட்டுச் செல்ல முடியும்.

## 7 (அ) தமிழ் இதழியலின் வளர்ச்சி வரலாற்றை விளக்குக.

முனைவர் தி. மகாலட்சுமி

### முன்னுரை

'இதழியல்' என்ற சொல் தற்காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட சொல்லாகும். மாந்தன் தன் கருத்தை முதலில் தோற்றங்கள் மூலமாகவும், சைகைகள் மூலமாகவும், தீ மூட்டிப் புகையைக் கிளப்புவதன் மூலமாகவும், தீ அம்புகளை வானத்தில் விடுவதன் மூலமாகவும், சூரிய வெளிச்சத்தைக் கண்ணாடியில் பிரதிபலிக்கச் செய்வதன் மூலமாகவும் பிறர்க்குப் புலப்படுத்தினான். அவன் நாகரிகம் அடைந்தவுடன் புறாக்களின் மூலமாகவும், மனிதர்கள் மூலமாகவும் தான் அனுப்பும் செய்திகளைத் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு எட்டச் செய்தான். (தற்போது சாரணர் கொடிகளை அசைத்தும், கப்பற்படையினர் விளக்கு வெளிச்சத்தைக் காட்டியும் செய்திகளை அனுப்புகின்றனர். இவ்வாறு தமிழில் செய்திப் பரிமாணத்தின் வளர்ச்சி, காகிதங்கள் மூலம் வளர்ச்சி அடைந்துள்ளதை இனிக் காண்போம்.

### சொல் விளக்கம்

'Journalism' என்ற ஆங்கிலச் சொல் தமிழ்மொழியில் 'இதழியல்' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. 'diramalis' என்பது இலத்தீன் மொழிச் சொல். அச்சொல் பிரெஞ்சு மொழியில் 'diurnus' என்று வழங்கப்பட்டது. 'diurnus' v;dW 'ஒரு நாளின்' (of the day) என்று பொருள்படும். 'diurnus' என்ற சொல்லிலிருந்து 'Journal' என்ற சொல் தோன்றியதாகக் கருதுவர். 'Journal' என்ற சொல் இடைக்கால ஆங்கிலத்தில் (middle English) முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டது. கோவில்களில் அன்றாட வழிபாட்டு நிகழ்ச்சிகளைக் குறிக்க அச்சொல் கையாளப்பட்டது. பின்னர் 'Journal' என்ற சொல் இடைக்காலப் பிரெஞ்சு (Middle French) மொழியில் 'நாள் தோறும்' (Daily) என்ற பொருளில் வழங்கப்பட்டது.

F.T. Wood என்ற மொழியியல் பேரறிஞர் 'Journey' 'Journal' என்ற சொற்களை ஆராய்ந்துள்ளார். அவர் 'நாள்' (day) என்ற பொருளைக் குறிக்கும் 'Jour' என்ற பிரெஞ்சு மொழிச் சொற்களிலிருந்து ஆங்கிலத்திற்கு வந்தன என்று கருதுகின்றார். மேலும் அவர் ஒருநாள் நிகழ்ச்சிக் குறிப்பின் பெயராக 'Journal' என்ற சொல் விளங்கியது என்றும், அதனால் அச்சொல் 'நாட்குறிப்பு' (Diary) வணிகக் குழுமங்களின் அன்றாட நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்யும் நூல்' என்ற

பொருள்களிலும் வழங்கியது என்றும் வழங்கப்பட்டது. அவ்வாறு பல வகையில் வழங்கப்பட்ட பொருள்களை அச்சொல் இக்காலத்தில் அறவே இழந்து நாளிதழ், வார இதழ், திங்களிதழ் என அனைத்து வகை இதழ்களைக் குறிக்கும் பொருளில் வழங்கி வருகின்றது என்றும் கூறுவர்.

"Webster's Seventh New Collegiate Dictionary" என்ற அகராதி 'Journal' என்ற சொல்லுக்கு 'வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் அன்றாட நடப்புக் கணக்குகளின் பதிவுநூல் என்றும் ஒருநாள் நிகழ்ச்சிகளின் தொகுப்பு என்றும் ஒரு தனி மனிதன் தனக்கு மட்டும் பயன்படும் வகையில் எழுதிய கலை, எண்ணங்கள், கருத்துகள் ஆகியவற்றின் பதிவு நூல் என்றும், மேலும், அன்றாட நடப்புச் செய்திகளை வெளியிடும் நாளிதழ்கள், பருவ இதழ்கள் என்றும் தொழில் நுட்பக் கல்வியில் கம்பிச் சுருள் (roll), தண்டு (spindle), அச்சு (axle), தண்டு (shaft) இவை உள்ளிட்ட உராய்தலை ஏற்படும் (Bearing) பாகம் என்றும் பொருள் கூறுகிறது.

சென்னைப் பல்கலைக்கழக அகராதி 'Journal' என்ற சொல்லுக்கு நாட்குறிப்புச் சுவடி; அன்றாட நடப்புக் குறிப்பு; தொழிற் கணக்கு முறையில் நாளேடு; செய்தித்தாள், பத்திரிகை, குறிப்புப் புத்தகம், பாராளுமன்ற அன்றாட நடவடிக்கைக் குறிப்புகள் எனப் பொருள் கூறுகிறது.

தமிழ்க் கலைக் களஞ்சியம் "பத்திரிகை இரு வகைப்படும். ஒன்று தினசரித்தாள் (News papar) மற்றது சஞ்சிகை (Magazine). தினசரித்தாள் என்பது நாள்தோறும் உலகத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் சேகரித்து அவை பற்றிய கருத்துகளை வெளியிடுவது ஆகும். சஞ்சிகை என்பது பொதுவாகப பலவகையான பொருள்கள் பற்றிக் கட்டுரைகளும் படங்களும் தருவது. இது பல வகைப்படும்" எனக் கூறுகின்றது.

'இதழியல்' என்ற சொல் பத்திரிகை இயல் என்றும் வழங்கப் பெறுகின்றது. பத்திரிகை என்ற சொல் வட சொல்லிலிருந்து வந்ததாகும். வடமொழியில் 'பத்ர' (Patra) என்ற சொல் 'இலை' என்றும் 'கடிதம்' என்றும் பொருள்படும். பண்டைக் காலத்தில் எழுதுவதற்குப் பயன்பட்ட பொருள் பனை இலை. பனை இலையையும் அந்தத் தாவர குடும்பத்தைச் சேர்ந்த மற்ற மரங்களின் இலைகளையும் 'ஓலை' என்றே அழைத்தனர்.

'ஏடு' எழுதுவதற்குரிய பனை ஓலை 'ஏடு' என வழங்கப்பட்டது. மன்னர்கள் சிறிய திரைச் சீலைகளில் தூரிகை கொண்டு கடிதங்களைத் தீட்டி அனுப்பினார்கள். அக் கடிதங்களும் ஓலை என்றே

சொல்லப்பட்டன. தொடக்கத்தில் 'இலை' என்றும் 'கடிதம்' என்றும் பொருள் தந்த பத்ரம் என்ற சொல், பின்னர் பல்வேறு செய்திகள் அடங்கிய தொகுப்புக்குப் பெயராகும்போது 'பத்திரிகா' (Patrica) என்று ஆயிற்று. அச்சொல்லே நாளடைவில் இதழியலுக்குப் பெயராக அமைந்தது. வடமொழியில் 'விபாக்' (vibakg) என்ற சொல் 'துறை' என்று பொருள்படும். 'பத்திரிகா விபாக்' என்ற வடசொல்லே தமிழ்மொழியில் 'பத்திரிகைத் துறை' என்று வழங்கப்படுகின்றது.

'கெஜட்' (Gazette) என்ற சொல்லும் இதழ் என்று தமிழ்மொழியில் வழங்கி வருகின்றது. தொடக்கத்தில் அரசு தொடர்பான செய்திகள் அடங்கிய பிரசுரம் கெஜட் என்று வழங்கப்பட்டது. பின்னர் பத்திரிகைகளும் அப்பெயரால் வழங்கப்பட்டன. பெங்கால் கெஜட், இந்தியா கெஜட், வீக்லி மெட்ராஸ் கெஜட் என்ற பத்திரிகைகளின் பெயர்கள் குறிப்பிடத்தக்கன. இக்காலத்தில் பழையபடியே அரசுத் தொடர்பான செய்திகளைத் தாங்கி வரும் இதழ் 'கெஜட்' (Gazetta) என்று வழங்கப்படுகின்றன. 'கெஜட்' என்பது ஒரு சிறிய நாணயத்தின் பெயர். 16ஆம் நூற்றாண்டில் வெனிஸ் நகரத்தில் செய்திப் பிரசுரங்களைப் படித்துக் காட்டுவதற்காக அமர்த்தப்பட்டவர்களுக்கு அவ்வகை நாணயம் வழங்கப்பட்டது. அந்த நாணயத்தின் பெயரே நாளடைவில் அவர்கள் படித்த செய்திப் பிரசுரங்களுக்குப் பெயராக அமைந்தது. சான்றாக, பீகில், இலண்டன், பெங்கால், மதராஸ், செயிண்ட் ஜார்ஜ், சிலோன், டிஸ்டிரிக்ட். ஆக, தொடக்கத்தில் ஒரு நாள் நிகழ்ச்சிகளைக் குறித்த 'இதழ்' என்ற சொல் தொழிற்புரட்சி, அறிவியல் வளர்ச்சி காரணமாக மக்களுடைய தேவைகள் பெருகியபோது அது, நாளிதழ், வாரஇதழ், மாதஇதழ், ஆண்டு இதழ், வெள்ளி விழா இதழ், பொன்விழா இதழ், பவள விழா இதழ் எனப் பல நூற்றாண்டுகள் வரை பல்வேறு காலப்பகுப்புகளை ஒட்டி வெளிவந்து கொண்டிருக்கின்றன.

**செய்திப் பரிமாற்றம்**

1. **போக்குவரத்து:** பண்டைக் காலத்தில் கால்நடையாக நடந்து, பின்னர் குதிரை, ஒட்டகம் மூலம் வண்டிகளில் சென்று போக்குவரத்தினைக் கையாண்டான். பின்னர், மிதிவண்டி, மகிழுந்து, பேருந்து, இரயில், கப்பல், ஆகாயவிமானம் இராக்கெட் என எவ்வளவோ போக்குவரத்து சாதனங்கள் குறைந்த நேரத்தில் மிகுந்த பலனடைகின்றோம். விண்வெளிக் கலத்திலும் இறங்கி ஆய்வு மேற்கொள்ளும் அளவு போக்குவரத்துப் பரிணாமம் வளர்ச்சி அமைந்துள்ளதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

2. **செய்தித் தொடர்பு:** செய்திப் பரவல், வெகு விரைவாக நடைபெற்று வரும் இந்நேரத்தில், மனிதன் படைத்துக் கொண்ட வானொலி, தொலைக்காட்சி,செய்தித்தாள், திரைப்படம், விளம்பரம் ஆகியன குறிப்பிடத்தக்கவை.

கி.பி. 1876ஆம் ஆண்டு அலெக்ஸாண்டர் கிரகாம்பெல் தொலைபேசி முறையினைக் கண்டுபிடித்தார். அதன் பிறகு செய்திப் பரவல் மிக வேகமாக நடைபெற்று வருகின்றது. செய்திகளையும், புகைப்படங்களையும் ஒரே நேரத்தில் வெளியிடும் டெலிபோட்டோ கிராப் என்ற கருவியும் கண்டுபிடிக்கப்பட்டுப் பயன்பாட்டில் இருந்து வருகின்றது.

ஓரிடத்தில் அச்சாகும் நாளிதழ் அதே வடிவமாக வேறு ஒரு நகரில் அச்சிட, 'படிவப் பதிப்பு' (Facsimile) என்ற முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இந்த முறையை 'இந்து' ஆங்கில நாளிதழும், தமிழில் 'தினமணி' நாளிதழும் அறிமுகப்படுத்தியது.

3. **செய்திகள் அனுப்பிய முறை:** செய்திகள் பரப்பிய நிலை பண்டைத் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் காணப்படுகின்றது. தொல்காப்பியம் தூதினைக் குறிப்பிடுவதோடு, 'தூதிடையிட்ட வகையினாலும்' என்று தூது பற்றிக் குறிப்பிடுகின்றது.

**தமிழ் இதழியலின் வளர்ச்சி**

தமிழின் முதல் இதழ் 'மாசத்தினச் சரிதை' என்பதாகும். முதல் தமிழ் நாளிதழ் 'லலித பிரசனோதயா' ஆகும். தமிழ் இதழியல் மிகவும் பழமையானது. இதழியல் தோற்றம் வளர்ச்சி குறித்துப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் அ.மா.சாமியின் நூல் குறிப்பிடத்தக்கதாகும். காகிதம் கண்டுபிடித்து அச்சுக்கலை தோற்றம் பெற்று வளர்ந்த பின்னர், தமிழில் இதழியல் துறை வளர்ந்து பெரும்புரட்சிக்கு வித்திட்டது. அவ்வரலாற்றுச் செய்திகளும், விடுதலைப் போராட்டக் காலத்தில் ஆற்றிய பங்களிப்பும் இந்நூலில் விளக்கப்பெறுகின்றன. செய்தித் தொடர்புக்குப் பறையையும், பனை ஓலையையும் நம்பியிருந்த தமிழ்மொழியில்தான் முதன் முதலில் இந்தியாவில் அச்சுக்கலை ஏற்பட்டது. கி.பி. 1554இல் போர்த்துக்கல், இலிஸ்பனில், 'லூசே தமிழ் வினாவிடை' என்ற 38 பக்க நூல் அச்சாயிற்று. தமிழில் அச்சேறிய முதல் நூல் இதுவேயாகும். ஆசிய மொழிகளில் அச்சேறிய முதல் நூலும் இதுவே. வெளிநாட்டில் அச்சான முதல் இந்திய மொழி நூலும் இதுவே. இந்நூலில் உள்ள ஒரு தமிழ்வரி: 'ஆகாசமும் பூமியும் படைச்சவன் சர்வமும் அவனே. பிதாவே! தம்பிரானே! விசுவாசம்!'

இந்தியாவின் முதல் அச்சகம் 1556இல் கோவாவில் அமைக்கப்பட்டது. இந்தியாவில் அச்சிடப்பட்ட முதல் நூல் பேராசிரியர் அந்தோணியால் எழுதப்பட்ட 'இறையியல் உரைகள்' 1556இல் அச்சிடப்பட்டது.

போர்த்துக்கல் மொழியில் எழுதிய நூல் ஒன்று 'தம்பிரான் வணக்கம்' என்ற பெயரில் தமிழ்ப்படுத்தப்பட்டு அச்சிடப்பட்டது. தமிழ்ப்படுத்தியவர் அண்டிறிக் பாதிரியார் ஆவார். இவர் தமிழ் படித்த முதல் ஐரோப்பியர் ஆவார். தமிழ்க் கலைக்களஞ்சியம் இவரைத் 'தமிழச்சுத் தந்தை' எனக் குறிப்பிட்டுள்ளது. இந்நூல்1577இல் அச்சிடப்பட்டது. இந்தியாவில் அச்சிடப்பட்ட முதல் தமிழ்நூலும் இதுவே. இதன் ஒருபடி, அமெரிக்க நாட்டில் ஆர்வார்டு பல்கலைக் கழக நூலகத்தில் உள்ளது.

தூத்துக்குடியை அடுத்த புன்னைக் காயலில் அண்டிறிக் பாதிரியார் 1578இல் முதல் அச்சகத்தை ஏற்படுத்தினார். இங்கு 1579இல் மீண்டும் **தம்பிரான் வணக்கம்** என்ற நூல் அச்சிடப்பட்டது. இந்நூலின் முன்னுரையில் உள்ள செய்தி குறிப்பிடத்தக்கது.

''தமிழ்மொழி அச்சுக் கண்டதால், தமிழ் இனத்தவருக்கு உலகிலே பெரும்புகழ் உண்டாகியது. முதல் செலவழித்து அச்சு உண்டாக்கியதனாலே சங்கையும் கீர்த்தியும் உலகம் முன்பாகப் பெற்றீர்கள். பல பல புத்தகங்கள் அச்சிலேயுண்டாக்க வேண்டுமென்று, முதல் அச்சு உண்டாக்க செலவழித்தீர்களே ஆகையினால் இந்தப் புத்தகம் உங்களுக்கு நன்கொடையாக வரவிட்டோம்'' 'தமிழச்சுத் தந்தை', 'தமிழ் மொழிபெயர்ப்புத் தந்தை' என்று அண்டிறிக் பாதிரியார் போற்றப்படுகின்றார்.

தமிழ் அச்சு வரலாற்றில் குறிப்பிடப்பட வேண்டிய இன்னொருவர் சீகன்பால்கு ஆவார். 1707இல் தரங்கம்பாடிக்கு வந்த இவர், முதன்முதலில் நற்செய்தியைத் (பைபிள்) தமிழில் மொழிபெயர்த்தார். 1713இல் தரங்கம்பாடியை அடுத்த பொறையாறில் அச்சு வார்ப்படச்சாலை ஒன்றை அமைத்தார். 1715இல் சீகன் பால்கு அமைத்த தாள் ஆலைதான் இந்தியாவின் முதல் தாள் ஆலை.

1819இல் 'இயல் தமிழ் விளக்க அச்சகம்'' அமைத்தவர் திருவேங்கடம் ஆவார். அச்சகம் அமைத்த முதல் தமிழர் என்ற சிறப்பைப் பெற்றார்.

1863இல் முதன்மையான அச்சக மையமாகச் சென்னை விளங்கியது. அப்பொழுது சென்னையில் பத்து அச்சகங்கள் இருந்தன.

இன்று நாம் பயன்படுத்தும் அச்சு எழுத்துக்களை வடித்தவர் பி.ஆர்.அண்ட் என்பவராவார்.

சென்னையில் 1761இல் நிறுவப்பட்ட எஸ்.பி.சி.கே. அச்சகம் இன்றும் நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டில் மிகப் பழைய அச்சகம் இதுவேயாகும். பெயர் மட்டும் 'டயோசிசன் அச்சகம்' என மாற்றப்பட்டுள்ளது. 1831இல் தமிழ்நாடு அரசால் அச்சகம் தொடங்கப்பட்டது. 1920இல் சென்னையில் தொடங்கப்பட்ட அச்சுப்பள்ளி, வட்டார அச்சுப்பள்ளியாக உயர்ந்தது. இன்று அச்சுத்தொழில் நுட்பப் பள்ளியாக வளர்ந்துள்ளது. சென்னை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் 1983இல் அச்சுக்கலையில் (பி.இ.) பட்ட வகுப்புத் தொடங்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. தென்கிழக்கு ஆசியாவிலேயே இதுவே முதல் அச்சுப் பட்டப்படிப்பாகும்.

1889ஆம் ஆண்டில் தமிழில் 'அட்சேந்திர விளக்கம்' என்னும் அச்சுக்கலை நூல் வெளியிடப்பட்டது. 1926இல் 'அச்சுத்தொழில்' என்ற தமிழ் இதழ் வெளியிடப்பட்டது.

இதழ்களின் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடும் பொழுது வாழ்வோடு இணைந்து, பெருவளர்ச்சி பெற்றுத் திகழ்கிறது. பத்திரிகைத்துறை நாழிகைதோறும் வளர்ந்து வரும் அறிவியலால் ஆக்கம் பெற்று, மலர்ந்து வரும் மக்களாட்சி முறையில் ஊக்கமடைந்து, மக்களை ஈர்க்கும் ஆற்றல் படைத்து விளங்குகின்றது. பத்திரிகை படிக்காத நாளெல்லாம் பிறவாத நாளே என்னும் அளவுக்கு மக்களின் அன்றாட நடைமுறையில் பத்திரிகை இடம்பெற்றுவிட்டது என்று சோமலெ கூறுகின்றார்.

தமிழகத்தில் இருந்த ஆங்கிலேயர்களின் தேவைக்காக ஆங்கிலச் செய்தித்தாள்களை முதன்முதலில் வெளியிட்டனர். முதன் முதலில் சென்னையில் கி.பி.1785இல் 'சென்னை கூரியர்', 'சென்னை கெசட்', 'கவர்ன்மென்டு கெசட்' என்ற மூன்று வார இதழ்கள் வெளியிடப்பட்டன. இவற்றில் 'சென்னை கூரியர்' என்ற இதழின் நோக்கம் வெள்ளையர்களுக்கு வேண்டிய செய்திகளை வழங்குவதாகும். 'சென்னை கெசட்' இதழில் முதல் முறையாகத் தமிழில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. செய்திப் போக்குவரத்து வளராமையால், செய்திகளைக் காலம் தாழ்த்தியே தொடக்ககால இதழ்கள் அச்சிட்டு வெளியிட்டன. அரசின் கெடுபிடிகளும், சட்டதிட்டங்களும் கடுமையாக இருந்தன. பொதுமக்களிடம் ஆங்கில அறிவும் மிகுந்திருக்கவில்லை. இத்தகைய காரணங்களினால் தொடக்க கால இதழ்கள் குறுகிய காலமே வாழ்ந்தன.

தமிழில் வெளிவந்த முதல் இதழ் 1831இல் கிறித்தவ சங்கத்தினர் நடத்திய தமிழ் மேகசின், 1856இல் பெர்சிவால் பாதிரியார் சென்னையில் தொடங்கி நடத்திய 'தினவர்த்தமானி' தமிழில் வெளிவந்த முதல் வார இதழாகும். இந்த இதழில் செய்திகள் மட்டுமின்றிக் கலை, இலக்கியம், அறிவியல் ஆகியவை பற்றிய கருத்துரைகளும் இடம்பெற்றன. தமிழ் இதழியல் வளர்ச்சியில் இதனை ஒரு மைல்கல் என்று கருதலாம்.

1870இல் அரசின் கல்வித்துறையின் ஆதரவில் 'ஜனவிநோதினி' என்ற தமிழ் மாத இதழை வெளியிட்டனர். ஆங்கிலத்தில் வெளிவந்த கட்டுரைகளை மொழிபெயர்த்து இதழில் வெளியிட்டனர். கல்வி வளர்ச்சிதான் இந்த இதழின் தலையாய குறிக்கோளாய் இருந்தது.

1887இல் தமிழ் முதல் நாளிதழாக 'லலித பிரசநோதயா' என்ற இதழ் வெளிவந்தது. 1882இல் ஜி.சுப்பிரமணிய ஐயரால் இதழாகத் தொடங்கப் பெற்ற 'சுதேசமித்திரன்' 1899இல் நாளிதழாக மாறியது.

1870இல் நற்சிந்தனையாளர் சங்கத்தினர் 'பிரிதிங்கர்' என்ற ஆங்கில இதழை நடத்தினர். இக்காலத்தில் வெளிவந்த இதழ்களில் 'தாய்பக்டேட்டர் (1836); 'மெட்ராஸ் டைம்ஸ்' (1860); 'மெட்ராஸ் மெயில்' (1868) ஆகியவை குறிப்பிடத்தக்கன.

சென்னையில் இந்தியர்கள் நடத்திய இதழ்கள் சென்ற நூற்றாண்டின் பின் பகுதியில் வெளிவந்தன. லெட்சுமி நரசு செட்டியார் தொடங்கிய 'கிரஸண்ட்', ராஜா சர் மாதவராவ் நடத்திய 'நேட்டிவ் பப்ளிக் ஒப்பினியன்', இராமச்சந்திர ஐயா தோற்றுவித்த 'மெட்ராஸி' பரமேசுவரம் பிள்ளை பொறுப்பேற்றிருந்த 'மெட்ராஸ் ஸ்டாண்டர்டு' ஆகிய இதழ்கள் இந்தியர்களின் கருத்துகளை ஒலித்தன. 1896இல் காந்தியடிகள் சென்னை வந்தபொழுது, அவரை வரவேற்று, அவரது தொண்டுகளைச் சிறப்பித்து எழுதிய பெருமை பரமேசுவரம் பிள்ளையையும் அவரது இதழையும் சேரும்.

தமிழக இதழியல் வளர்ச்சியில் தனியிடம் பெறுகின்ற 'ஹிந்து' இதழை, 'சுதேசமித்திர'னைத் தொடங்கிய ஜி.சுப்பிரமணிய ஐயர் தொடங்கினார். அவருக்குத் தோளோடு தோள் நின்று துணை செய்தவர் வீரராகவாச்சாரியார். முதலில் இந்த இதழ் வார இதழாக 1878ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20ஆம் நாள் வெளிவந்தது. சுப்பிரமணிய ஐயர் ஆசிரியராக இருந்து நடத்த, அவருக்குத் துணையாக சி. கருணாகர மேனன், கே.சுப்பாராவ், கே.நடராஜ ஐயர் ஆகியோர் பணிபுரிந்தனர். இன்று 'ஹிந்து உலக அளவில் உயர்ந்து நிற்பதற்கு இவர்களே காரணம். 1883இல் வார இதழாகவும், 1889இல் வாரம்

மும்முறையாகவும் இவ்விதழ் வளர்ந்தது. இந்திய தேசிய நீரோட்டத்தோடு இணைந்து இந்த இதழ் வளர்ந்தது. 1905இல் இதன் சட்ட ஆலோசகராக இருந்த கஸ்தூரிரங்க ஐயங்கார் இவ்விதழை வாங்கி நடத்தினார். இன்றுவரை இவரது குடும்பத்தினர் சீரோடும் சிறப்போடும் நடத்தி வருகின்ற இவ்விதழ் இந்தியாவில் முன்னணி நாளிதழ்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. முதன்முதலில் நமது நாட்டில் தொழில் நுட்பத்தில் சிறந்த 'நேர்படி ஒளிப்பட' அச்சு முறையைப் (Facsimile method) பின்பற்றிய பெருமையும் இதற்குரியதாகும்.

காமாட்சி நடராஜன் 1890இல் தொடங்கிய 'இந்தியன் சோசியல் ரிபார்மர்' இதழும் 1906இல் திருநெல்வேலியில் வேதமூர்த்தி முதலியார் நடத்திய 'சர்வ ஜனமித்திரன்' இதழும் குறிப்பிடத்தக்கது.

சென்ற நூற்றாண்டில் தமிழ் இதழ்கள் எத்தகைய வளர்ச்சி பெற்றிருந்ததென்பதை அன்றைய மாநில அரசு வெளியிட்டிருக்கும் அறிக்கையின்மூலம் அறிந்து கொள்ளலாம். 1887ஆம் ஆண்டின் தமிழ்நாடு அரசு 'தாய்மொழி இதழ்கள் அறிக்கை' கூறும் இதழ்கள்:-

1. இந்துஜன பூஷணம் (வார இதழ், சென்னை) - 200 படிகள்.
2. வெற்றிக்கொடியோன் (வார இதழ், சென்னை)- 250 படிகள்.
3. சுதேசாபிமானி (வார இதழ், சென்னை) - 480 படிகள்.
4. சூஜன மனோரஞ்சனி (வார இதழ், பாளையங்கோட்டை) - 220 படிகள்.
5. தத்துவவிவேகி (வார இதழ், சென்னை)- 140 படிகள்.
6. திருவாங்கூர் அபிமானி (மாதம் மும்முறை, நாகர்கோவில்)- 350 படிகள்.
7. கலாநிதி (வாரம் இருமுறை, கோவை) - 275 படிகள்.
8. சுதேசாபிமானி (வாரம் இருமுறை, சேலம்) - 150 படிகள்.
9. சுதேசமித்திரன் (வாரம் இருமுறை, சென்னை)- 1120 படிகள்.
10. லலித பிரசனோதயா (நாளிதழ்,சென்னை)-150 படிகள்.
11. பிரம்மஞானபோதினி (வாரம் இருமுறை, பெங்களூர்)-110 படிகள்.
12. திராவிட வர்த்தமானி (வாரம் இருமுறை, பெங்களூர்)-250 படிகள்.

அப்பொழுது வெளிவந்த இதழ்களில் பெரும்பாலானவை வார இதழ்கள். அவை குறைந்த அளவிலேயே பிரதிகளை வெளியிட்டு வந்தன.

விடுதலை இயக்க காலத்தில் தோன்றிய தமிழ் இதழ்களாவன சுதேசமித்திரன், தேசபக்தன், இந்தியா, நவசக்தி, திராவிடன், தமிழ்நாடு, ஜெயபாரதி, சுதந்திரச்சங்கு, தினமணி, குடியரசு, விடுதலை, ஜனசக்தி, ஜனயுகம், பாரதம், ஆனந்த விகடன், தினத்தந்தி ஆகியவையாகும்.

நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாளிதழ்கள் தோன்றின. தற்காலத்தில் வெளிவரும் நாளிதழ்களில் தினத்தந்தி, தினமணி, தினமலர், தினகரன், தினசரி, தினஇதழ், தமிழ்இந்து ஆகியவை பொதுவான நாளிதழ்களாகும்.

முரசொலி, தீக்கதிர், விடுதலை, நமது எம்.ஜி.ஆர். ஆகியவை அரசியல் இதழ்களாகும். மாலை முரசு, மாலை மலர் இவை மாலை இதழ்களாகும்.

ஆனந்த விகடன், குமுதம், ராணி, தேவி, குங்குமம் போன்றவை வார இதழ்களாகும்.

இவையல்லாமல், கலை-இலக்கிய வளர்ச்சியில் பல்வேறு சிற்றிதழ்கள் தம் பங்களிப்பை செவ்வனே ஆற்றி வருகின்றன.

**முடிவுரை**

மக்கள் கல்விக்குத் துணை செய்து, மக்களாட்சி வெற்றிபெற தமிழ் இதழ்கள் பாடுபட வேண்டும். அப்பொழுதுதான் அவற்றின் எதிர்காலம் பயனுடையதாக இருக்கும்.

## 7 (ஆ) நாட்டுப்புற இலக்கியங்களைச் சமூகவியல் நோக்கில் திறனாய்க.

**முனைவர் தி.மகாலட்சுமி**

### முன்னுரை

நாகரிகம் சென்றடையாத கிராமப்பகுதிகளையே 'நாட்டுப்புறம்' என அழைக்கிறோம். 'ஏட்டிலே எழுதா கவிதை', 'காற்றிலே மிதந்த கவிதை' என்று சிறப்பிக்கப்படும் நாட்டுப்புற இலக்கியங்கள் இயற்கையோடு பொருந்தி வாழும் மக்களின் உணர்ச்சி வெளிப்பாடுகளே பாடல்களாகவும், கதைகளாகவும், பழமொழிகளாகவும், வழங்கி வருகின்றன.

### நாட்டுப்புற இயல்

ஆங்கிலேயரின் தமிழ் ஆய்வால் தோன்றிய துறைகளில் ஒன்று நாட்டுப்புறவியல். இதற்கு நாட்டார் வழக்காற்றியல் என்ற வேறு பெயரும் உண்டு. நாட்டுப்புறவியல் என்பது நாட்டுப்புறப் பாடல்கள்,கதைகள், விளையாட்டுகள், கலைகள், சமயம், பழக்க வழக்கங்கள், அறிவியல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

நாட்டுப்புற மக்களின் அன்றாட வாழ்க்கையில் நிகழும் நிகழ்வுகளைப் படம்பிடித்து அவர்களது கலைநயங்களைப் பற்றி எடுத்துரைப்பது நாட்டுப்புற இலக்கியமாகும். இயற்கையோடு இணைந்து வாழும் சமூகத்தின் ஒட்டுமொத்த அல்லது தனிப்பட்ட உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பது. இதன்மூலம் சமூகத்தின் நிலையை அறிய நாட்டுப்புறப் பாடல்கள் உதவுகின்றன.

நாட்டுப்புற மக்களின் மரபுவழிப்பட்ட கலைகளையும், நம்பிக்கைகளையும், வாய்மொழி இலக்கியங்களையும், புராணங்களையும், பழக்க வழக்கங்களையும் பற்றி அறிவியல் முறைப்படி ஆய்வது 'நாட்டுப்புறவியல்' எனலாம்.

### சமூகம்

மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கை முறையில் தம் சூழல்களுக்கு ஏற்றவாறு வரையறுத்து மாற்றி அமைத்து வாழும் ஒரு பண்பட்ட நோக்கிற்குச் சமூகம் எனலாம். இதில் தனித்த ஒரு மனிதனுக்கும் அவனைச் சார்ந்த தொடர்புக்காரணிகளுக்கும் ஒரு இணைப்புச் சங்கிலியாகச் சமூகம் என்ற அரங்கு இருக்கின்றது.

சமூகம் என்பது பல மனிதர்கள் இணைந்த கூட்டு வாழ்க்கை என்பது பொதுவான விளக்கமாக அமைகின்றது. சமூகம் என்று ஒரு

வரையறுத்த தொடர்ச்சியான வாழ்க்கை முறை அல்லது ஒத்தப் பயன்பாட்டைப் பெற்றுத் தமக்குள் ஒற்றுமை உடையவராக வாழும் மக்களைக் கொண்டது என்கிறார் கு.வெ. பாலசுப்பிரமணியம். இவர் சமூகத்திற்கான சான்றையும் கூறுகின்றார்.

## நாட்டுப்புற நோக்கில் தமிழ்ச் சமூகம்

இன்றைய சூழலில் நாட்டுப்புறங்களில் வாழக்கூடிய தமிழ்ச் சமூக வரலாற்றை அவர்களின் பின்புலத்தை ஆராய்வது அவசியம். உலகம் முழுவதும் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆனாலும் அவர்களிடையே சில வேற்றுமைகள் இருந்து வருகின்றன. பழங்காலத்தில் திணைகள் வகுத்து வாழ்ந்த பழம் பெரும் தமிழ்ச் சமூகத்தின் நாகரிகத்தை ஒற்றுமையை உணர்வோம் என்றால் ஏற்றத்தாழ்வு அற்ற சமூகத்தைக் காண முடியும். இவ்வொற்றுமையை,

*தமிழனுக்கு வீழ்ச்சியில்லை, தமிழன் கீர்த்தி*
*தாழ்வதில்லை! தமிழ்நாடு, தமிழ்மக்கள்*
*தமிழ் என்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே*
*தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்ததில்லை*

***(பாரதிதாசன் கவிதைகள், ப.69)***

என்று பாவேந்தர் கூறுவதுபோல், தமிழ்ச் சமூகம் வீரம், கொடைத்திறன் போன்றவற்றில் சிறப்பாகக் காணப்படுகின்றது. நாட்டுப்புற வாய்மொழி இலக்கியங்களிலும் கிராமப்புற மக்களின் ஒற்றுமையிலும் ஏற்றத்தாழ்வு அற்ற நிலை, சமூகப் பின்னணி போன்றவற்றைக் காணமுடிகின்றது.

## சமுதாய நோக்கில் நாட்டுப்புறவியல்

நாட்டுப்புற இலக்கியங்கள் பெரும்பாலும் சமுதாய நிகழ்வுகளை எடுத்தியம்புவதாகவே அமைகின்றன. நாட்டுப்புறக் கவிஞன் தான் வாழும் சமுதாய அமைப்பையும், நடைமுறை நிகழ்வுகளையும் ஒட்டியே தனது படைப்பைப் படைப்பான். நாட்டுப்புறப்பாடல்களில் சமுதாய சிந்தனைகள் மேலோங்கிக் காணப்படும். சமுதாயத்தில் பெண்களை மையப்படுத்தும் போது அவளது தாய்மை, தாலாட்டு உணர்வு, பெண்கள்படும் வேதனை, அவலம், இழிசொல்லுக்குத் தள்ளப்படும் நிலை ஆகியவை புலப்படும். அதே போல, ஆண்களின் தொழில், உழைப்பவர் மேன்மை, முதலாளியின் எண்ணம் பற்றிய சிந்தனைகளும், குழந்தைத் தொழிலாளர், ஊழல் போன்ற அன்றைய காலக்கட்டத்தில் நிலவும் பிரச்சினைகளையும் குறிப்பதாகவே அமைவதால் நாட்டுப்புறவியலைச் சமூகவியல் என்றுதான் கூறவேண்டும்.

### நாட்டுப்புறப் பாடல்கள்

நாட்டுப்புறப் பாடல்களை நாட்டார் பாடல்கள், கிராமியப் பாடல்கள், நாடோடிப் பாடல்கள், வாய்மொழி இலக்கியம் என்று சொல்வர். குடும்பம், தொழில், விளையாட்டு சார்ந்த பாடல்கள், விடுகதை, பழமொழி, இதிகாசங்கள், புராணங்கள் போன்றவை இதில் அடங்கும்.

### நாட்டுப்புறப் பாடல்களின் இயல்புகள்

1. பேச்சு வழக்குடையது
2. கூறியது கூறலாக வருவது
3. வாய்மொழியாகப் பரவுவது
4. வடிவம் மாறக்கூடியது
5. படைத்தவர் பெயர் தெரியாதது
6. மக்களின் பக்தி, நீதி, உளவியல், சமுதாயம் என அனைத்துக் கூறுகள் பற்றியும் கூறுவது.

### பெண்களின் நிலை

மாமியார் மருமகள் உறவு உலகம் முழுவதும் பெரும்பாலும் சண்டையில்தான் இருக்கும். இதனை,

*மாமியார் உடைத்தால் மண் குடம்*
*மருமகள் உடைத்தால் பொன்குடம்*

என்ற பழமொழி காட்டும். இவர்களின் உறவை நாட்டுப்புற இலக்கியங்கள் பல சுவைபடக் கூறுகின்றன.

*ஏண்டி, என் வீட்டுக்கு வந்ததுக்கு அப்புறமா*
*எருமை மாதிரி தின்னு தின்னு*
*ஏத்தி போய் என்னான்னே*
*கேட்குறியா என்னையவே!*
*எம்புள்ள வரட்டுமடி*
*உம்பாடு தெரியுமடி!*

மாமியார் கொடுமையைப் பொறுத்துக் கொள்ளும் மருமகள் நிலையை,

*அத்தை என்னை வையாதே*
*அநியாயமாய்த் திட்டாதே*
*குற்றம் ஒண்ணும் செய்யலையே*
*குறை கூறி கொல்லாதே*

என்னும் பாடல் கூறுகின்றது. கொடுமை தாங்காமல் சில சமயங்களில் பொங்கி எழுவதும் உண்டு.

*அங்க இங்க போயிட்டு*
*அவ இவ பேச்சை கேட்டு*
*அசிங்கமா பேசினா பேசின*
*வாயை தெச்சுப்புடுவேன்*
*தெச்சு . . .*

வரதட்சணை கேட்கும் மாமியாரின் செயலைக் கூறும்போது,

*சிவத்த தோல பாத்து*
*சித்தம் கெட்டு போயி*
*சீர் நிறைய கொண்டு வருவான்னு*
*சீமையிலே பொன்னு எடுத்தா*
*சிவலுக்குக் கூட வக்கில்லையே. . .*

கருப்பா இருந்தாலும் கருத்தா இருக்கமுன்னு கால் சவரம் கொறைஞ்சா என்னான்னு கட்டிட்டு வந்தா,

*கஞ்சிக்கு இல்லாத ஊட்டுப்புள்ள*
*கால்மேல கால்போட்டு உட்கார்ந்திருந்தா*
*காஞ்ச பெரம்பெடுத்து கால ஒடிச்சிடுவேன்*
*தேனாகக் குடிச்சு*
*திணைமாவு தின்னு*
*பால்ல குளிச்சி*
*பலாப்பழம் விசி*
*ஆன அம்பரன்னு*
*அப்பனூட்டு பெருமை பேசி*
*யாரடி ஏமாத்தர?*
*உன் பொழப்பு தெரியாத*
*வெறும் பைய வூட்டுல*
*விதி கெட்டு நின்னவளே*

என்று பல நிலைகளில் பெண்களின் தன்மையைப் பற்றி நாட்டுப்புற இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

**விலைவாசி ஏற்றம்**

விலைவாசி கிடுகிடு என்று ஏறிக்கொண்டே இருக்கின்றது. ஏழைகளுக்குப் பலகாரங்கள் வாங்கிக்கூடச் சாப்பிட வழியில்லை. உணவுக்கு வாடி நிற்கும் வறுமை நிலையையும் இவ்விலக்கியம் படம்பிடித்துக் காட்டுகின்றது.

*பத்து ரூவாக் கூலி வாங்கி*
*பலகாரம் பார்த்து நாளாச்சு*
*மாங்கா விலை கேட்டா*
*மாடு விலை சொல்லுறாங்க*
*பாயாசம் வடை பாத்து நாளாச்சு*
*அடுப்புல பூனையும் தூங்கியாச்சு*

என்று நாட்டுப்புற இலக்கியங்கள் விலை ஏற்றத்தைப் பற்றித் தெளிவாகக் கூறுகின்றன.

தொழிலாளர் நிலை

நாட்டார் பாடல்கள் தொழில் உலகத்தின் அவல நிலையைக் காட்டுகின்றன. அவ்வகையில் எந்த இடையூறு வந்தாலும் வேலைக்குச் செல்ல வேண்டும் என்பதை,

*மழையானாலும் ஏலேலோ களையெடுக்கனும் ஐலசா*
*களை எடுக்கனும் ஐலசா கதிர் அறுக்கனும் ஐலசா*
*பால் குடிக்கிற ஏலேலோ பச்சப்பிள்ளை ஐலசா*
*பாலுக்கழுதாலும் ஏலேலோ பறந்தோடனும் ஐலசா*

என்னும் பாடல் சுட்டிக் காட்டுகின்றது.

நிலத்தில் மேடுபள்ளம் போன்று சமுதாயத்தில் மக்களிடையே ஏழை, பணக்காரன், முதலாளி, தொழிலாளி என்னும் வேறுபாடுகள் உள்ளதைப் பாட்டாளியின் குரலில்.

*ஒதுங்கி நில்லு ஒதுங்கி நில்லுன்னு*
*ஓயாம சொல்லிப்புட்டு ஒதுக்குறாங்க*
*ஒசத்தியான ஜாதின்னு சொல்லிப்புட்டு*
*ஒரேடியா பீத்தராங்க*
*நாங்க இல்லையின்னா*
*நாறிப் போயிடும் நாடு*

என்று பாடுகின்றனர். நில உடைமைக்காரன் உழைத்தவருக்குப் போதிய கூலி கொடுக்காமல் இழுத்தடிக்கும் செயலைச் சொல்லும்போது,

*காடுமேடு, கல்லு முள்ளுன்னு பாக்காம*
*கால் வலிக்க வேலை செஞ்சா*
*கால் காசு தராங்க*
*இப்பவா பொறகு வான்னு*
*இழுத்தடிச்சா என்னதான் நாங்க பண்ண*

என்று தொழிலாளி, அவனின் நிலையை நாட்டுப்புறப் பாடல் வழியாகத் தெரிவிக்கின்றார்.

**ஊழல் நிறைந்த சமூகம்**

கங்காணி வேலைக்கு வரும் ஆட்களின் எண்ணிக்கை கூட்டிக்காட்டி, பொய்கணக்குகூறிப் பணம் பெறுவான். கூலியை முழுவதுமாகத் தராமல், பணம் பிடித்துக் கொண்டுதான் தருவான்.

*வார பணம் பத்துரூபா*
*வந்ததுன்னா தொல்லை இல்லை*
*வரும் வழியிலே வாய்க்குள்ள போட்டுட்டு*
*வம்புக்கு இழுப்பான் கங்காணி*

இலஞ்சம் கொடுத்தால் வேலை ஆகிவிடும் என்பதை,

*நடையா நடை நடந்து*
*நடக்க வில்லை வேலை*
*நாலுக்காசு காட்டின உடனே*
*நடக்காத வேலையும் நடந்தாச்சு*
*நடந்த கூலியும் கட்டியாச்சு*

என்னும் பாடல் தெரிவிக்கின்றது. கூலி அதிகம் வேண்டும் என்று விவசாயத் தொழிலாளர்கள் கேட்பதை,

*களை எடுக்க காசு கட்டவில்லை ஐயா*
*காட்டு வேல செய்ய ஆள் இல்ல ஐயா*
*பணம் பத்து சேர்த்து தந்தா பார்க்கலாம்*
*படியலைன்னா பாதை வேறு இருக்கு ஐயா*

என்ற நாட்டுப்புறப்பாடல் ஊழல் நிறைந்த சமூகத்தைக் காட்டுகின்றது.

**வறுமைநிலை**

*வயிற்றுக்கு சோறில்லை*
*வழி எதுவும் தெரியவில்லை*
*கஞ்சிக்கு காசு இல்லை*
*பசி வந்தாச்சு பத்தும் போயாச்சு*
*வயிற்றுக்கு ஈரத்துணி*
*வாழ்க்கைக்கு என்ன வழி?*

என்னும் பாடலில் சோற்றுக்கு ஏங்கும் ஏழைக்குக் கஞ்சிக்குக் கூட காசு இல்லாத நிலையில் பசியால் காது அடைத்துக் கொண்டது. அனைத்துச் செயல்களும் மறந்துவிட்ட நிலையில் வழிஇல்லாமல் வயிற்றில் ஈரத்துணியைக் கட்டிக் கொண்டு இருப்பதைக் காட்டுகின்றது.

குழந்தை தொழிலாளர்

*பிஞ்சுக் கை பிசிட எடுக்க போகுது*
*சின்னக் கை செங்கல் எடுக்க போகுது*
*விளையாட வேண்டிய வயசுல*
*விதியை நினைச்சுட்டு விறகு பொறுக்க போகுது*
*எழுதப் படிக்க போகாம*
*எச்சிலை எடுக்க போகுது*
*எங்கமாச்சி இந்தக் கொடுமை நடக்குதா?*

என்று தற்போதைய நிலையில் உள்ள சமூகக் கொடுமையான குழந்தைத் தொழிலாளர்களின் நிலையை நயம்பட நவில்கின்றன.

முடிவுரை

நாட்டுப்புறப் பாடல்கள் சுவைக்காகவும், பொழுது போக்கிற்காகவும் என்று மட்டுமல்லாமல் சமூக அவலங்களை, ஏற்றத்தாழ்வுகளை, சமூக வாழ்வியலை, பண்பாட்டுக் கூறுகளை எடுத்தியம்பும் சான்றுகளாகத் திகழ்கின்றன. நம் சமூகத்தின் உண்மையான முகத்தினைக் காட்டும் சான்றுகளாக இவை அமைகின்றன.

## 8 (அ) அகத்திணைக் கோட்பாடு தமிழ்ப் பண்பாட்டின் சால்புகளைப் புலப்படுத்துகிறது என்னும் கருத்தின் வன்மை மென்மைகளை மதிப்பிடுக.

முனைவர் தி. மகாலட்சுமி

### முன்னுரை

தமிழ் இலக்கியத்தில் நீண்ட நெடிய அகப்பாடல் மரபுத் தொடர்ச்சி உண்டு. அகப்பாடல் மரபுகளைக் கட்டமைத்ததில் சங்க அகப் பாடல்களுக்கும் தொல்காப்பியத்திற்கும் பெரும்பங்களிப்பு உண்டு.

இல்லறமே நல்லறமாகப் போற்றக்கூடிய செழுமை சங்க இலக்கியங்களுக்கு மட்டுமின்றிப் பக்தி இலக்கியங்களுக்கம் உண்டு. மானுடர் இருவர் இணைந்து கூடிக் களித்து வாழும் வாழ்வில் மக்கட்பேறும், மகிழ்வுறு செல்வங்களும் நல்கியதைப் போலவே மானுட உயிர் இறைவனை அடையும்போதும் இன்பத்தில் திளைக்கின்றது. இக்கட்டுரையில் தொல்காப்பியம் முதற்கொண்டு அகத்திணைக் கோட்பாடு தமிழ்ப் பண்பாட்டின் சால்புகளைப் புலப்படுத்தும் விதம் பற்றி ஆராயப்படுகிறது.

### அக இலக்கணம்

அகப்பொருளாவது ஒத்த அன்புடைய தலைவனும், தலைவியும் தம்முள் கலந்து அனுபவிக்கும் வாழ்க்கை நெறிகளைப் பற்றிக் கூறுவது ஆகும். இது புறத்தார்க்குப் புலப்படுத்த இயலாதது. தனக்குத்தானே எண்ணி மகிழத் தக்க நிகழ்ச்சியாதலின் 'அகம்' எனப்பட்டது.

### அகத்திணை ஏழு

*கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்*
*முற்படக் கிளந்த எழுதிணை என்ப* (தொல்.பொருள்.147 )

என்ற தொல்காப்பியர் கருத்திற்கிணங்க,

கைக்கிளையாவது ஒருவர் மட்டும் வளர்த்துக்கொள்கின்ற அன்பு.

ஐந்திணையாவது இருவருக்கும் பொருந்திவரும் அன்பின் அடிப்படையில் பிறக்கும் திணையாகும்.

பெருந்திணையாவது பொருந்தாக் காமமாகும்.

### நிலம் உடையவை

குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற ஐந்திணைகளுள் பாலை நீங்கலாகக் கடலால் சூழப்பெற்ற இந்நில உலகத்தைப் பகுத்துக் கொண்டனர்.

### அகத்திணைக் கோட்பாடு

அகம் என்ற சொல்லுக்கு இயல்பான பொருள் வீடு என்பதாகும். அகவொழுக்கம் என்பது ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழும் வாழ்க்கை முறையாகும். திணை என்பது ஒழுக்கத்தையும், இடத்தையும் உணர்த்தும்.

அகத்திணை ஏழு: புறத்திணை ஏழு, இரண்டையும் தொடர்புபடுத்தியவர் தொல்காப்பியர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குறிஞ்சி | x | வெட்சி | முல்லை | x | வஞ்சி |
| மருதம் | x | உழிஞை | நெய்தல் | x | தும்பை |
| பாலை | x | வாகை | பெருந்திணை | x | காஞ்சி |
| கைக்கிளை | x | பாடாண் | | | |

| நிலம் | | இடம் |
|---|---|---|
| குறிஞ்சி | கூடல் | மலையும் மலை சார்ந்த இடமும் |
| முல்லை | இருத்தல் | காடும் காடு சார்ந்த இடமும் |
| மருதம் | ஊடல் | வயலும் வயல் சார்ந்த இடமும் |
| நெய்தல் | இரங்கல் | கடலும் கடல் சார்ந்த இடமும் |
| பாலை | பிரிவு | தனி நிலம் இல்லை |

எந்நிலம், நீர்நிலையின்றிப் போகின்றதோ அந்நிலம் பாலை என்கிறார் இளம்பூரணர்.

பண்டைய தமிழர் மேற்கொண்டொழுகிய அகத்திணை ஒழுக்கமாவது ஒத்த அன்பினரான ஒருவனும் ஒருத்தியும் பல பிறப்புகளிலும் கணவனும், மனைவியுமாக ஒன்றி வாழும் மேன்மை. இந்நல்லூழின் ஆணையால் ஓரிடத்து எதிர்பட்டுக் காதற் கேண்மையினராய் ஒழுகிப் பின் உலகத்தார் அறிய மணந்து வாழ்வது குடும்ப வாழ்வாகும். இவ்வொழுகலாற்றின் பொதுவிலக்கணத்தை உணர்த்துவது அகத்திணையாகும்.

'அகம்' என்ற சொல்லுக்கு 'உள்ளம்', 'இல்லம்' என்ற பொருள்கள் உண்டு. உள்ளத்தில் ஒன்றுபட்டு இல்லறத்தில் தலைவன்

தலைவியின் இன்ப ஒழுக்கத்தினைக் கூறுவதால் அவ்விலக்கியக் கூறு 'அகத்திணை' எனப்பட்டது. உள்ளத்தே சுவைத்து மகிழத்தக்கது இன்பம். இன்பம் சுவைத்த காதலர்கள் இல்லறம் காக்க வேண்டிய தேவையை உணர்த்தும் பாங்கே அகத்திணை ஆகும்.

'அகம்' என்பது களவு, கற்பு என்னும் இருவேறு கைக்கோள் நிலைகளிலும் பாலுணர்ச்சியோடு தொடர்புடைய நிலையில் எழும் உள்ளத்து உணர்வுகளையும் செயல்களையும் குறிப்பிடுவது.

'காதல் என்பது சமுதாயத்தில் எப்பொழுதும் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அதைச் சமுதாயத்தில் ஆதரிப்பார் யாருமிலர். விடலைப்பருவம் பாலுறவுச் சிந்தையுள் நுழையும்போது ஏற்படும் இழைவினால் தோன்றும் மெல்லிய இறக்கமே காதல். முதன் முதலாய்த் தோன்றும் அந்த மென்மையோடு காதல் மறைந்து விடுகிறது. அதற்குப் பிறகு நிகழ்ச்சிகள் தாம்.

**அகத்திணைக் கோட்பாட்டில் வன்மை, மென்மைகள்**

**வன்மை:-** வன்மை என்பது தமிழர்களின் வீரத்தைப் புலப்படுத்துகிறது. அகத்திணைக் கோட்பாட்டில் வன்மை என்று கூறப்படுவன கூடலிழைத்தல், தூது, உலா, மடலேறுதல், அலர் (தன்னிலை இரக்கம்) முதலியனவாகும்.

**மென்மை:-** மென்மை என்பது காதலன் காதலி அன்பை வெளிப்படுத்துவது. தன்னிலை இரக்கம், மாந்தர் தோழி, தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய் கூற்றுகள், கற்பு, களவு, உடன்போக்கு.

அகப்பொருள் மரபுகள் (கற்பு) (மென்மை)

இலக்கியங்கள் அகம், புறம் என்ற இரு வகைப்பாட்டிற்குள் அடங்கியிருக்கின்றன. மனித உணர்வுகள் எண்ணிறந்தவையாயினும் நுட்பமான காதல் உணர்வைப்பாடும் பகுதியை அகம் என்பர். அகம் எனும் சொல் வீடு என்ற பொருள்படும்.

***அகம் புகல் மரபின் வாயில்கள் (தொல்.பொருள்.கற்பு.11)***

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

இளம்பூரணர், அகப்பொருளாவது போக நுகர்ச்சியாகலான். அதனின் ஆயபயன்தானே அறிதலின் அகம் என்றார் எனக் கூறுகிறார்.

***அகம் என்பது மனத்தினால் அறியும் மாண்புடையது***
***அகப்பொருளாவது போக நுகச்சியாகலான் ஆதலின்***
***ஆயப் பயன்தானே அறிதலின் அகம் என்றார்***
***(தொல்.இளம்பூரணர்.உரை.13)***

நச்சினார்கினியர், ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்தில் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்தது எனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்தன்பே நுகர்ந்து இன்புறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார் (நச்.உரை.ப.3)

மேலும், ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லார்க்கும் உய்த்துரைக்கப்படுதலிலும், இவை இவ்வாறு இருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும் அவை புறம் எனப்படும் என்று விளக்கம் தருவர் (நச்.நூ.3).

அகத்தே நிகழ்கின்ற அன்பாகிய ஒழுக்கத்தைப் பற்றியது அகத்திணை. காதலை இப்படித்தான் பாடவேண்டும் என்ற கட்டுப்பாடே அகத்திணைக்குரிய சிறப்பாகும். இது அன்புக் காதலை மட்டுமே பாடும். இது களவு, கற்பு என்ற இருவகைக் கைகோள்களாகப் பிரியும்.

### களவு

பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, உருவு, பருவம், நிறை, அருள், உணர்வு, திரு ஆகிய 10 இயல்புகளில் அன்பு, அறிவு, அழகு முதலியவற்றால் ஒத்தத் தன்மையிலுள்ள தலைவனும் தலைவியும் நல் ஊழின் செயலால் தாமே ஒரு தனியிடத்தில் எதிர்ப்பட்டுப் பிறர் அறியாமல் கூடி ஒழுகுதல் ஆகும். தலைவன் ஒத்த அன்புடைய தலைவியின் உடன்பாட்டினை அறிந்து அவளது சுற்றத்தார் அறியாமல் அவளுடன் உள்ளம் கலந்து பழகுதல், ஆதலால் சிறப்புடைய அறமாகக் கருதப்படுகிறது. தலைவன், தலைவி ஆகிய இருவரும் தம்முள் வேறுபாடின்றி, ஒருவரையொருவர் இன்றியமையாத நட்பினராகி, உள்ளப்புணர்ச்சி கொண்டு, உயிர் வாழும் அளவும் அன்புடன் இயைந்த வாழ்க்கையினராய் ஆவதற்குக் களவு அடிப்படையாகின்றது.

> *களவாவது பிறர்க்குரிய பொருளை மறையிற்கோடல்*
> *இன்னதன்றி, ஒத்தார்க்கும் மிக்கார்க்கும், பொதுவாகிய*
> *கன்னியரைத் தமர்கொடுப்பக் கொள்ளாது, கன்னியர் தம்*
> *இச்சையினால் தமரை மறைத்து புணர்ந்த பின்னும்*
> *அறநிலை விழாமல் நிற்றனாலும் இது அறமாயிற்று*

என்று இளம்பூரணர் கூறுகின்றார்.

களவு பகற்குறி, இரவுக்குறி என இருவகைப்படும்.

### கற்பு

களவின்பின் கட்டாயம் கற்பொழுக்கம் நடைபெறவேண்டும் எனச் சான்றோர் கருதினார்.

*கற்பெனப்படுவது கரணமொடு புணரக்*
*கொளக்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்*
*கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே*
*(தொல்.கற்பு.1)*

தொல்காப்பியர் கூறும் இக் கற்பு நெறியைப் பரிபாடல் ஒன்பதாம் பாடலில் தமிழர் நெறியாகக் காட்டப்படுகிறது.

**நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்**
**வாய்மொழிப் புலவர் கேண்மின் சிறந்தது**
**காதல் காமம் காமத்துச் சிறந்தது**
**விடுப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி**
**அதனால் அகறல் அறியா அணியிரை நல்லார்**
**இகல்தலைக் கொண்டு துனிக்கும் தவறிலாத்**
**தள்ளாப் பொருள் இயல்பின் தண்டமிழ் ஆய்வந்நிலர்**
**கொள்ளார் இக்குன்று பயன்**

என்று களவு நெறியாகிய அகப்பொருளே தமிழர் நெறி எனச் சுட்டுகின்றது பரிபாடல்.

வாழ்வின் நிறைவில் துறவு மேற்கொண்டு வீட்டின்பம் பெற முயலவேண்டும் என்பதே இல்லறத்தின் பயன் என்று அகப்பொருள் நூல்கள் கூறுகின்றன. இதனையே,

In this age this message of these verses is couched in such a way as to appeal to the learned probably because of the disturbed conditions it is an age which desires to sage guard the chasitity of omen by not permitting the free movement on the street (Meenakshi Sundaram T.P. A History of Tamil lilterature, p.69).

என்று தெ.பொ.மீனாட்சி சுந்தரம் சுட்டுகின்றார். எனவே அகப்பொருளை உயர்த்திப் பேசிய தமிழ்மரபு அகப்பொருள் மரபே என்பது விளங்கும்.

### களவொழுக்கத்தில் வெறியாட்டுத் துறை

களவொழுக்கத்தில் வெறியாட்டு என்பது ஒரு துறை. தலைவனைப் பிரிந்த காதலியின் உடல் மெலிந்து போகும். அவர்தம் களவொழுக்கத்தை ஊரார் அறிந்து கொள்வாரோ என்ற அச்சமும் மேலோங்கி நிற்பதாலும் உடல்மெலிந்து உண்ணாது உறங்காது இருக்கக் கண்டும் கட்டுவச்சியைக் கொண்டு குறிபார்த்துக் கூறுவது.

### பொருள்வயிற் பிரிவு

'பொருள்வயிற் பிரிவு' என்பது சங்ககால நூல்களில் ஆங்காங்கு கூறப்பட்டுள்ளது. தலைவன் பொருளினனாய்ப் பிரிவுமென்பதானது,

பொருளிலன் எனின் எள்ளுநர்ப் பனித்தலும், இரந்தோர்க்கீதலும் நல்லுநர் நாட்டலும் நயவரொறுத்தலும் எனும் இவையெலாம் பொருட்குறைபாடுடையார்க்கு நிகழாமையின் தலைவனைப் பொருள் வயிர் பிரிந்தான் என்பது, பொருளிலனாய்ப் பிரிவுமென்பதன்று, குரவர்காற் படைக்கப்பட்ட பொருள் கொண்டு இல்லறம் செய்தலில் வரும் பயன் அவர்கட்கும் என்பதால் தன்பொருள் கொண்டு குடும்பம் நடத்துதல் பொருட்டுச் சென்றான் என்பதே ஆகும். பொருள்வயிற் பிரிதல் என்பது இயற்கையெனக் கூறுகிறான்.

*அருள் பொருள் செய்வினை தப்பதற்கும் உரித்தே;*
*பெருந்தேள் கரிவை தகைத்ததற்கும் உரியன்;*
*செல்லாய் ஆயினே நன்றே*
*மெல்லம் புலம்பர் இவள் அழப் பிரிந்தே* **(302)**

என்பது ஐங்குறுநூறு தரும் பாலை நிலக்காட்சி.

ஏறுகோள்கூறி வரைவு கடாதல்

முல்லை நிலத்து மரபின்படி வெளிப்படையாக விரைந்து வந்து ஏறு தழுவி மறைந்து கொள்ளும்படி தோழி தலைவனுக்குக் கூறுதல் இத்துறையின் இலக்கணம்.

*எழுந்தது துகள்*
*ஏற்றனர் மார்பு*
*கவிழ்ந்தன மருப்பு*
*கலங்கினர் பலர்* *(முல்லைக்கலி 102)*

இயற்கைப் புணர்ச்சியாலும் பிரிந்த தலைவனைத் தோழியேனும் அல்லது தலைவியேனும் குறிப்பால் உணர்த்தி ஏறுதழுவி மறைந்து கொள்ள விரைவுபடுத்துதல் இத்துறையின் சிறப்பு ஆகும். இது ''ஏறுகொள் கூறி வரைவு கடாதல்'' என்பதாம்.

அகத்திணை முப்பிரிவுகளான கைக்கிளை அன்பின் ஐந்திணை, பெருந்திணை ஆகியனவாகும்.

*கைக்கிளை யுடையது ஒருதலைக் காமம்*

*ஐந்திணை யுடையது அன்புடைக் காமம்*

*பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்*

ஒருதலை, அன்புடை, பொருந்தா என்ற அடைகளால் திணைகளில் காமத்தன்மையையும் வேறுபாட்டையும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகியவற்றை அன்பின் ஐந்திணை என்றும், பொருந்தாக் காதலைப் பெருந்திணை

என்றும், ஒருதலை காமத்தைக் கைக்கிளை என்றும் அக ஒழுக்கத்தை ஏழு திணைகளாகப் பகுப்பர்.

**குறிஞ்சித் திணையில் தலைவியின் காதல்**

ஒருவனும் ஒருத்தியும் பிறர் உதவியின்றித் தாமே எதிர்ப்பட்டு ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர். மனத்தால் கூடிய பிறகு உடலாலும் கூடுகின்றனர். இவ்வாறு பிறர் அறியாமல் பன்முறை கூடுகின்றனர். இதுவே குறிஞ்சித் திணை இலக்கணமாகும்.

கபிலர் பாடிய 'வேரல் வேலி' எனத் தொடங்கும் குறிஞ்சித்திணைப் பாடலில் தலைவியின் காதலை மிகவும் மென்மையாக எடுத்துரைக்கின்றார். பலாமரத்தின் சிறிய கிளையில் பெரியபழம் பழுத்துத் தொங்கிக் கொண்டிருப்பதைப் போன்று தலைவியின் சிறிய உயிர் அவள் தலைவன்மீது கொண்டிருக்கும் பெரிய காதலைச் சுமந்து கொண்டிருக்கிறது.

**பாலைத் திணையில் தலைவியின் இயல்பு**

தலைவியைப் பிரிந்து தலைவன் பொருள் தேடச் செல்கிறான். திருமணத்திற்கு முன்பும், திருமணம் நிகழ்ந்த பின்னும் பொருள் தேடிச் செல்வதுண்டு. இவ்வாறு தலைவன் பிரிந்து செல்வதையும், அதற்குரிய ஏற்பாடுகளையும் கூறுவது பாலைத் திணையாகும்.

பெருங்கடுங்கோ கலித்தொகையில், பாலைத்திணையில், 'மரையா மரல் கவர' என்னும் பாடலில் தலைவியின் அன்பை வலியுறுத்துகின்றார். நீவிர் செல்லக் கூடிய பாலை நிலத்தில் நுமக்கு ஏற்படக்கூடிய துன்பத்துக்குத் துணையாக என்னையும் அழைத்துச் செல்லுங்கள் துன்பத்தில் துணையாய் உன்னுடன் வருவதைவிட எனக்கு இன்பம் தருவது உண்டோ? என்று கூறுகின்றாள்.

**நெய்தல் திணையில் தலைவியின் பிரிவு**

சென்ற தலைவன் குறித்த காலத்தில் மீளாவிடின், தலைவி மிகவும் வருந்துவாள், அவள் வருத்தம் அடக்கும் நிலை நீங்கி வாய்விட்டு அரற்றும் அளவிற்குச் செல்லுதலும் உண்டு. இவ்வாறு அரற்றுவதை நெய்தல் திணை என்பர்.

நற்றிணையில் உலோச்சனார் இயற்றிய இனிமையான பாடல்,

*பொய்யாது வைகிய கோதை போல*
*மெய்சாயினை அவர்செய் குறிபிழைப்ப*

தலைவன் சிறைப்புறமிருந்தான், காப்பு மிகுதியால் கூடல் தடைப்பட்டு ஆற்றாதிருந்த தலைவிக்குத் தோழி கூறியது, தலைவியே அணியாமலிருந்த நவமாலைபோல நீ உடல் மெலிந்தாய். அயலார்,

உறுதியாய் அவர்கள் வாரார் என்று சொன்ன உரையை நினைத்து உனது நெஞ்சத்தில் வெறுப்புக் கொள்ளுதலை விடுக, தலைவன் வருவது உறுதி என்கிறார்.

**முல்லைத் திணையில் தலைவனின் இயல்பு**

திருமணம் முடிந்து இல்லறம் நடத்தும் நாளில் தலைவன் பிரிந்து செல்வதும் உண்டு. அந்நிலையில் தலைவி தன் கடமைகளைச் செய்து கொண்டு வீட்டில் இருப்பார். இதனை முல்லைத் திணை என்பர்.

அகநானூற்றில் வெள்ளக் கண்ணத்தனார், தலைவி தனிமைத் துயரில் இருப்பாள் அதனால் பாகனே தேரினை விரைவாக செலுத்தி, அவளது பிரிவை அகற்ற வேண்டும் என்று தலைவன் கூறுவதாக,

***புலம்கொள் மாலை கேட்டொறும்***
***கலங்கினள் உறைவோள் கையறு நிலையே***

எனும் இப்பாடல் அமைந்துள்ளது. தலைவனும் தலைவியின்மீது காதலை மிகுந்து செலுத்துகிறான் என்பது புலனாகும்.

**மருதத் திணையில் பரத்தையர் பிரிவு**

பரத்தையர் நட்பைத் தேடிச் செல்லும் அவனுக்கும் தலைவிக்கும் மனவேறுபாடு தோன்றுகிறது. அது காரணமாகப் பூசலும் புலவியும் ஏற்படுகின்றன. இது பற்றிக் கூறுவதை மருதத்திணை என்பர்.

*பொய்கை ஊரன் கேண்மை*
*செய்து இன்புற்றாமை செறிந்தன வளையே*

இது குறுந்தொகையில் தும்பிசேக்கீரன் இயற்றிய பாடலாகும். பரத்தையிற் பிரிந்த தலைமகனுக்குத் தூதாக வந்த பாணர் முதலியோரை நோக்கி, தலைவி தலைவனோடு வாழ்ந்த காலத்தை எண்ணி குறைவற்று இருக்கிறார் என்று கூறித் தோழி வாயில் மறுத்தது.

**சகுனம் பார்த்தல்**

பழங்காலந் தொட்டே சகுனம் பார்க்கும் வழக்கம் இருந்து வருகின்றது. தலைவி, தலைவன் வரவை எண்ணி நன்னிமித்தம் சொல்லுதற்குரிய பல்லியின் ஒலியைக் கேட்ட வண்ணம் வீட்டில் இருந்தாள் (அகம்.9; 19-20) என்பதை அறியமுடிகின்றது.

எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளை மணி ஒலித்தல் போன்று தெளிந்த குரலில் சோதிடம் கூறுவதைப்போல வழிப்போக்கர்களுக்குப் பல்லி நிமித்தம் சொல்லுவதை,

*மணிஓர்த் தன்ன தெண்குரல்*
*கணிவாய்ப் பல்லிய*

என்னும் அடிகளால் அறியமுடிகின்றது.

**தமிழரின் காதல் வாழ்க்கை**

பூரிக்கோ என்பவர் தொகுத்துத் தந்த குறுந்தொகையில் ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் சிந்தித்துப் பழகித் தம் களவு வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகினர். தலைவன் தன்னைப் பிரிந்து விடுவானோ என அஞ்சிய தலைவியின் ஐயத்தைப் போக்கும் விதமாகத் தலைவன் கூறுகின்றான்.

*யாயும் ஞாயும் யார் ஆகியரோ*
*எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்*
*யானும் நீயும் எவ்வழி அறிதும்*
*செம்புலப் பெயல்நீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே* *(குறுந்.40)*

என் தாயும் தந்தையும் நின் தாயும் தந்தையும் எவ்வகையில் உறவினர்? நானும் நீயும் எவ்வாறு முன்பு அறிந்தோம்? செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர் செம்மண்ணுடன் கலந்து செந்நீராவதுபோல, நம் இருவர் உள்ளங்களும் ஒன்றுபட்டு விட்டன. எனவே இனிப் பிரிவென்பதே இல்லை என்று கூறித் தலைவன் தலைவியைத் தெளிவுபடுத்துகின்றான்.

தலைமகள் தோழியிடம் தலைவனின் அன்புடைமை வற்புறுத்தும் சூழலில் அக்காதல் நிலத்தைவிடப் பரந்ததாக, வானைவிட உயர்ந்ததாக, நீரைவிட ஆழமானதாகத் திகழ்கிறதெனக் கூறித் தன் அன்பின் அளவை வெளிப்படுத்துகிறாள்.

*நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று*
*நீரினும் ஆரள வின்றே சாரல்*
*கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு*
*பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே* *(குறுந். 3)*

தலைவனுடன் உடன்போக்கு மேற்கொண்ட தலைவியைத் தேடிச் செல்கிறாள் செவிலித்தாய், வழியில் முக்கோற் பகற்பவரைக் கண்டு வினவுகிறாள். அதற்கு அவர், சந்தனம் மலையில் பிறந்தாலும் அது மலைக்குச் சொந்தமில்லை. முத்துக் கடலிற் பிறந்தாலும் அது கடலுக்குச் சொந்தமில்லை. அவையவை அதைப் பயன்படுத்துபவர்க்கே உரியனவாதல்போல், நும் மகள் நுமக்கு ஆங்கு அனையளே என்று அறிவுரைக் கூறி வழி அனுப்புகிறார்.

*பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை*
*மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என்செய்யும்*
*நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே*

என்ற கலித்தொகையில் இக்கருத்துப் பொதிந்த பாடல் இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. இதிலிருந்து பிறந்த வீட்டிற்குப் பயன்படாமல் புகுந்த வீட்டிற்குப் பயன்பட்டு வாழ்பவள் பெண் என்ற நடைமுறை வழக்கம் மிக அருமையாக விளக்கப்படுகிறது.

முடிவுரை

அகத்திணை கோட்பாடுகளான களவு, கற்பு, வாழ்வியல் நெறிகள் ஆகியவை பழந்தமிழ்ப் பண்பாட்டின் உயர் வாழ்வியல் நெறிகளைப் புலப்படுத்துவதை மேற்கண்ட கூற்றுகளாள் புலப்படுத்துகின்றன.

## 8 (ஆ) சங்கமருவிய இலக்கியங்கள் வழி அறியலாகும் தமிழ்ப்பண்பாட்டு மாற்றங்களைப் புலப்படுத்துக?

முனைவர் கோ. பன்னீர்செல்வம்

### சங்கம் மருவிய காலம்: பின்புலம்

கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை சங்க காலம் எனலாம். கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை சங்க காலம் எனும் கருத்தும் உள்ளது. களப்பிரர் பாண்டிய நாட்டைக் கைப்பற்றிய காலம் முதல் சங்கம் மருவிய காலம் தொடங்குகிறது. களப்பிரர் ஆட்சியால் தமிழர் நாகரீகத்தில் மாற்றம் ஏற்பட்டது. சமயத்தில் புதிய சிந்தனைகள் தோன்றின. வட இந்தியாவில் வேரூன்றிய சமணமும் பௌத்தமும் தமிழகத்தில் காலூன்றி வளரத் தொடங்கின. களப்பிரர்கள் சமண சமயத்தைப் பேணினர்.

கி.பி. 470-இல் சமண முனிவர் வச்சிரநந்தி என்பவர் திராவிடச் சங்கத்தை நிறுவினார். இக்காலத்தில் அறவொழுக்கங்களைப் பற்றிய சிறு இலக்கியங்கள் தோன்றலாயின. நீதி நூல்கள் எளிய வெண்பாவில் தோன்றின. சங்க இலக்கிய காலத்தில் அகவற்பா செல்வாக்குப் பெற்றது போன்று சங்கம் மருவிய காலத்தில் வெண்பா செல்வாக்குப் பெற்றது.

இக்காலத்தில் தனிப்பாடல்களும் செல்வாக்குப் பெற்றன. அதுபோல, காப்பியங்களும் அரும்பத் தொடங்கின. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இக்காலத்தில் தோன்றின. அறக் கருத்துக்களைப் பெரிதும் விளக்கும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் இக்காலத்தில்தான் தோன்றின.

### அறநூல்களும் தமிழர் பண்பாட்டு மதிப்பீடுகளும்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் காலத்தால் முற்பட்டது திருக்குறள். சங்கம் மருவிய காலத்தின் தொடக்க நிலையில் திருக்குறள் தோன்றியது எனலாம். சமண பௌத்தக் கருத்துகள் வளரத் தொடங்கிய நிலையில் திருக்குறள் உதயமாகிறது. சங்க இலக்கியங்கள் கள் குடித்தலையும். புலால் உண்ணுதலையும், பரத்தையர் தொடர்பையும் இயல்பாகக் காட்டுகின்றன. ஆயின் திருக்குறளும் ஏனைய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் இவற்றை வன்மையாகக் கண்டிக்கின்றன. எந்த மாற்றமும் இல்லாது ஒரு புதிய கோட்பாடு தோன்ற இயலாது. சங்கம் மருவிய காலத்தில் நாட்டையாண்ட களப்பிரர்கள் வைதீக நெறியைக் கைவிட்டுச் சமண, பௌத்த சமயங்களை ஆதரிக்கத் தொடங்கிய நிலையில் சங்க காலத்தில் விரும்பப்பட்ட மூன்றும் (கள், புலால், பரத்தமை) கண்டிக்கப்பட்டன. கடவுள் நெறியை விட ஒழுக்க நெறியைப் போதிப்பதில் முதன்மை

பெற்றுச் சமணம் விளங்கியதால் இக்காலத்தில் தோன்றிய அறநூல்களும் அவற்றை நன்கு வலியுறுத்தின. இதை விடுத்துக் களப்பிரர்கள் ஆண்ட இருண்ட காலத்தில் ஒழுக்கக் கேடுகள் மிகுந்துவிட்டதால் அதனைப் போக்க அறநூல்கள் பல தோன்றின என்று கூறப்படும் கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. வைதீக நெறியை வெறுத்த களப்பிரரைப் பழிக்கு ஆளாக்கப் பரப்பப்பட்ட செய்தி அது எனின் தவறில்லை எனலாம்.

வேள்வியில் உயிரைப் பலி கொடுத்தல் ஆரிய மரபு. சங்ககால மன்னர்களில் சிலரும் இதில் நாட்டம் கொண்டனர். வள்ளுவம்,

***அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்***
***உயிர்செகுத்து உண்ணாமை நன்று*** *(குறள் : 259)*

என்கிறது. தீயவன் தவக்கோலம் பூணுவதால் பயனில்லை. வெளிவேடம் தேவையில்லை எனும் கருத்தில்,

***மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்***
***பழித்தது ஒழித்து விடின்*** *(குறள் : 280)*

எனவும் கூறும். மேலும், நீதியுடைய மன்னன் தெய்வத்திற்குச் சமம் என்கிறது. நாடு எப்படி இருக்க வேண்டும் என்பதையும், நாட்டு மக்கள் இயல்பு யாது என்பதையும் குறள் தெளிவாகச் சுட்டுகிறது. ஊழ்தான் பெரிது என்று கூறி அதையும் முயற்சியால் முறியடிக்கலாம் எனக் கூறும் குறட் கருத்துக்கள் வாழ்விற்கு நம்பிக்கை ஊட்டுவன.

கணவன் மனைவி உறவு மகிழ்வாக இருக்கச் செய்ய வேண்டிய பணிகளை இந்நூல் நன்கு எடுத்துரைக்கின்றது. இல்லறத்தின் பெருமை மிகுதியும் பேசப்படுகிறது. வருவாயில் காற்பகுதி அறத்திற்குச் செலவிட வேண்டும். நீராடிய பின்பே உணவருந்த வேண்டும். வேள்விக்காக உயிர்க்கொலை செய்தல் கூடாது ஆகிய அறக் கருத்துக்கள் நன்கு வலியுறுத்தப்படுகின்றன. எனினும் எல்லா அறக் கருத்துக்களும் இக்காலத்திற்கு ஏற்றவை எனக் கூற முடியாது.

மனைவியை அடித்தல் கூடாது, மாட்டு மந்தைக்குள் கோலின்றிச் செல்லக் கூடாது, குடிகாரன் குடும்பம் வாழாது, விலைமாதர் சொற்களை நம்பக் கூடாது, பிறர் மனைவியை விரும்புதல் கூடாது, கொடுக்கும் பணத்திற்கு வட்டி வாங்கக் கூடாது போன்ற கருத்துக்களில் பல இன்றும் ஏற்புடையனவே.

திரிகடுகமும் அக்காலத்தில் மக்களிடம் இருந்த சில நம்பிக்கைகளைச் சுட்டுகின்றது. அருந்ததியே சிறந்த கற்புடையவள், வேதியர் சொற்படி நடக்க வேண்டும், எமன் தெய்வம், அடைக்கலம் கொடுத்த பொருளைத் திருப்பிக் கொடுக்காதவனுக்கு மக்கள்பேறு

இல்லை, குடும்பத்திலிருந்து தகாத ஒழுக்கத்தில் ஈடுபடும் பெண்ணிருப்பின் அவ்வூரில் மழை பெய்யாது போன்ற கருத்தாடல்களை வலியுறுத்துகின்றது. இக்கருத்தாடல்கள் அக்கால மக்களிடம் தோன்றிய சமூக ஒழுக்கங்களையும் அவைகளை நீக்குவதற்குரிய மார்க்கங்களையும் முன்மொழிவதையும் அறியலாம். மேலும் இக்காலகட்டத்தின் சமண, பௌத்த மதங்களின் கோட்பாடுகளின் தாக்கத்தால் மக்களிடம் இத்தகைய பண்பாட்டு நெறிமுறைகள் வலியுறுத்தப்பட்டமையினை அறியமுடிகிறது.

***தன்னை வியந்து தருக்கலுந்; தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும் - முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும் இம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை (திரிகடுகம்,38)***

இன்னா நாற்பது நூலிலும் பரத்தமை தொடர்பு, நீண்ட நாள் விருந்தினராக இருப்பது, கொடுங்கோல் மன்னனின் ஆட்சியின் கீழ் வாழ்வது, கருமொழியாளர் நட்பு, சோம்பி இருத்தல், கல்வியிலார் கூறும் கருத்து, பெற்ற தாயைப் பேணாமை, புலால் உண்ணுதல் போன்றவை விலக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இவ்வாறு வலியுறுத்துவதன் மூலம்; அக்காலக்கட்டத்தில் சமூகத்தில் ஏற்பட்ட மாறுதலை உய்த்துணர முடிகிறது. இம்மாறுதல் தமிழ்ப்பண்பாட்டின் மாறுதல் நிலையினை நமக்குத் தெளிவுறுத்துகிறது.

திரிகடுகம் நூலிலும் சூதாட்டப் பொருளை விரும்பாமை, பெண்தன்மை மாறுதலால் ஏற்படும் அவலம், குடிக்கொன்று இறை கொள்ளும் மன்னனின் இழிநிலை, பொய் பேசுதலாய் ஏற்படும் கீழ்மை நிலை, கள் உண்ணுதலின் தீமை, பலியிடுதலின் தீமை, பிறர் பொருளை அபகரிப்பதன் விளைவு முதலிய கருத்தாடல்கள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இந்நூலும் அக்காலத்தில் மக்களிடம் வாழ்க்கை நிலையில் ஏற்பட்ட மாறுதல்களை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. இந்நூலின் மூலம் பண்பாட்டு மாறுதல் நிலையினை அறிந்துகொள்ள முடிகிறது.

***செந்தீ முதல்வர் அறம் நினைந்து வாழ்தலும்
வெஞ்சின வேந்தன் முறைநெறியில் சேர்தலும்
பெண்பால் கொழுநன் வழிச் செலவும் இம்மூன்றும்
திங்கள் மும்மாரிக்கு வித்து (திரிகடுகம்,98)***

பழமொழி நானூறு நூலில் கல்வியின் சிறப்பு, அவை அறிந்து ஒழுகும் தன்மை, நல்ஒழுக்கம், வெகுளாமை, பெரியாரை பிழையாமை, சான்றோர் சிறப்பு, கீழ்மக்கள் செய்கை, நட்பு, முயற்சி, தெரிந்து செய்தல், ஊழ்வினை, சமய நல்லறம், இல்லறவாழ்வின் மாண்பு

முதலிய அறநெறிக் கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இந்நூலில் கூறப்பட்டுள்ள அறக்கருத்துக்கள் அச்காலத்து சமூக மாற்றத்தை நமக்கு உய்த்துணர வழிவகுத்துத் தருகின்றன.

பிற அறநூல்களிலும் பெரும்பாலும் மக்களின் வாழ்வினையும் சமூகத்தின் அவலநிலையினையும் சீர்படுத்தும் அறக்கருத்துக்களே மிகுந்து காணப்படுகின்றன. பல நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்தாடல்கள் பெரும்பாலும் மேற்கண்ட நூல்களின் ஒத்த தன்மையிலேயே காணப்படுகின்றன. இவ்வாறு அறநூற்கள் பேசும் அறச்செய்திகள் சமண, பௌத்த மார்க்கத்தின் அடிப்படைத் தத்துவங்களின் மூலம் தமிழகத்தின் பண்பாட்டுக் கூறுகள் சிதைந்து புதிய பண்பாட்டுச் சூழல் உருவாகியுள்ளது என்பதனை நமக்கு விளக்குகின்றன. அறஇலக்கியங்கள் கடைச்சங்க காலத்திற்குப் பின்பு தமிழகத்தில் ஏற்பட்ட சமூக மாற்றங்களையும் அச்சமூக மாற்றங்களால் தமிழரின் பண்பாட்டுக் கூறுகளில் நிகழ்ந்த மாற்றங்களையும் தெளிவாக நமக்கு எடுத்துரைக்கின்றன என்றால் மிகையல்ல.

## முடிவுரை

இவ்விலக்கியங்கள் காட்டும் பண்பாட்டு மதிப்பீடுகளைப் பார்க்கும் போது இவ்விலக்கிய செல்வாக்கு பெற்ற காலத் தமிழகம் களப்பிரர் தமிழகமாகும். களப்பிரர் தமிழகத்தில் வைதீக மதம் செல்வாக்கு இழந்து பௌத்தமும் சமணமும் வளரத் தொடங்கியன. இதனால் கள் குடித்தலும், பரத்தையர் தொடர்பும் கண்டிக்கப்பட்டன. சங்க காலத்தில் இவை பெரிதும் கண்டிக்கப்பட்டவில்லை. இதன் அடிப்படையில் தமிழக மக்கள் மத்தியில் நீதி இலக்கியங்கள் வழி பண்பாட்டு மாற்றத்தை விளையச் செய்தனர். சங்கம் மருவிய காலத் தமிழக இலக்கியங்களான பதினெண்கீழ்கணக்கு நூல்களைத் தொகுத்துப் பார்த்தால் மக்கள் வாழ வேண்டிய நெறிமுறைகள் பண்பாட்டு மாற்றுகள் எடுத்துரைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

# தாள் 2

## பகுதி அ

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக:-

10x5 = 50

1 (அ) 1. புதல்வன்தாய், நாலூர்க்கோசர், உயிர் தவச்சிறிது, ஆரல் பார்க்கும் குருகு ஆகிய தொடர்களைக் குறுந்தொகை கொண்டு விளக்குக.

முனைவர் ஆ. மணவழகன்

**புதல்வன்தாய்:-** 'புதல்வன் தாய்' எனும் தொடர் குறுந்தொகையில் வரும் மருதத்திணைக்குரிய பாடலில் இடம்பெற்றதாகும்.

பாடல் எண்:359 பாடியவர் : பேயன்

*கண்டிசின் - பாண! பண்பு உடைத்து அம்ம;*
*மாலை விரிந்த பசுவெண் நிலவின்*
*குறுங்காற் கட்டில் நறும்பூஞ் சேக்கை*
*பள்ளி யானையின் உயிர்த்தனன் நசைஇப்*
*புதல்வன் தழீஇயினன் விறலவன்;*
*புதல்வன்தாய் அவன்புறம் கவைஇயினனே*

**துறை**

பரத்தையின் பொருட்டு காமுற்றுச் சென்று, மீண்டும் தலைவியை நாடிவந்த தலைவன் பாணனைத் தூதுரைக்க வேண்ட, அதற்குப் பாணன் மறுக்கிறான். எனவே தலைவன் தானே தலைவியிடம் சென்று ஊடல் தனித்து கூடி இன்புற்றதைக் கண்ட தோழி பாணனுக்குக் கூறியதாய் அமைந்த தோழி கூற்றுப்பாடலாகும்.

**தொடரின் பொருள் விளக்கம்**

புதல்வன் தாய் என்பது தலைவியைக் குறிக்கும் தொடராகும். புதல்வனின் தாயே புதல்வன்தாய் எனக் குறிப்பிடுவதால் அது

தலைவியைக் குறிக்கும் தொடராகிறது. பரத்தையின் பொருட்டு பிரிந்து வந்த தலைவன்பால் தலைவியானவள் ஊடல் கொண்டுள்ளாள். அவ்வூடலைத் தவிர்த்து தலைவியுடன் கூடும்வண்ணம் தலைவன், மாலைக்காலத்தில், ஒளிபொருந்திய வெண்ணிலவின் ஒளியில், குறுகிய கால்களையுடைய கட்டிலில், நறுமணம் பரப்பும் மலர்கள் பரப்பியுள்ள படுக்கையிடத்தில் பள்ளிகொள்ளும் யானையைப் போல, பெருமூச்சுவிட்டவனாகத் தன் புதல்வனைத் தழுவிக்கொண்டான். அச்செய்தியைக் கண்ட புதல்வனின் தாயாகிய தலைவி தன் புதல்வனை அணைத்தபடியே தலைவனின் முதுகுப்புறத்தை அணைத்துக் கொண்டாள்.

தலைவன் தவறு செய்தாலும் தவறுக்கு மனம் வருந்தி திரும்பி வரும்பொழுது, அவனை மன்னித்து ஏற்று மகிழும் மாண்புடையவளாகத் தலைவி காட்டப்படுகிறாள்.

உவமை

நறுமணம் சூழ்ந்த கட்டிலில் பள்ளிகொள்ளும் யானையாக தலைவன் உவமிக்கப்பட்டுள்ளான்.

நாலூர்க்கோசர்

நாலூர்க்கோசர் என வரும் தொடர் குறுந்தொகையுள் வரும் பாலைத்திணைக்குரிய பாடலில் பயின்று வந்துள்ளது.

பாடல் எண்:15 பாடியவர் : ஔவையார்

*பறைபட பணிலம் ஆர்ப்ப இறை கொள்பு*
*தொல்மூ தாலத்துப் பொதியில் தோன்றிய*
*நால் ஊர்க்கோசர் நன்மொழி போல*
*வாய்ஆ கின்றே - தோழி!-ஆய்கழல்*
*செயிலை வெள்வேல் விடலையொடு*
*தொகுவளை முன்கை மடந்தை நட்பே!*

துறை

தலைவி தலைவனுடன் உடன் போக்கினை மேற்கொண்டதைத் தோழி செவிலித்தாய்க்கும், செவிலித்தாய் நற்றாய்க்கும் கூறும் அறத்தோடு நிற்றல் எனும் துறையாகும். அதாவது அறத்தோடு நிற்றல் என்பது காதல் செய்தவனையே மணக்கவேண்டி களவுக்காதலை வெளிப்படுத்தும் நிலையாகும். தலைவனுடன் தலைவி உடன்போக்கு மேற்கொண்டுவிட்டால் அவர்களுக்குத் திருமணமானதாக ஏற்றுக்கொள்ளப்படும். இதைத் தோழி செவித்தாய்க்கு உரைக்கச்

செவிலித்தாய் நற்றாய்க்கு உரைக்குமாறு அமைந்த செவிலித்தாய் கூற்றுப்பாடல் இது.

**தொடரின் பொருள் விளக்கம்**

பறையெனப்படும் மத்தளம் முழங்க, சங்குகள் ஒலிக்க, மிகப்பழமையான ஆலமர நிழலமைந்த பொதுமன்ற அம்பலத்தில் தோன்றிய பெருமை கொண்டவர்களும், நான்கு ஊர்களில் வாழ்ந்து வந்தவர்களுமான கோசர்களின் வாய்மொழி எப்படி உண்மையானதோ அதைப்போல, அழகிய வீரக்கழலையும், சிவந்த இலைப் பகுதியையும், வெள்ளிய வேலையும் கொண்ட இளைஞனோடு, பலவாகத் தொடுக்கப்பட்ட வளையல்களைப் பூண்ட கைகளையுடைய தம் மகள் கொண்ட காதலானது உண்மையானது என்பது பொருளாகும். அதாவது, நாலூர்க்கோசரின் வாக்கின் உண்மையைப் போன்று நம்மகளின் காதலும் உண்மையென்பது பாடல் உணர்த்தும் பொருளாகும்.

**நாலூர்க்கோசர் - பெயர்க்காரணம்**

நான்கு ஊர்களில் வாழ்ந்து வந்தவர்களாதலாலும், கோசர் என்பவர்கள் சொன்ன வாக்கை நிறைவேற்றுபவர்கள் என்பதாலும், அவர்களின் சொல் பொய்க்காது என்பதாலும் நாலூர்க்கோசர் எனும் பெயர் ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளது. அதே போன்று நாலூர்க்கோசர் கூடும் மன்றத்திற்கும், அவர்களின் வாக்கிற்கும் இருந்த செல்வாக்கு ஒரு மரபாக இருந்து வந்துள்ளமையும் அறியத் தக்க செய்தியாகும்.

**உயிர்தவச் சிறிது**

'உயிர்தவச் சிறிது' என வரும் தொடர் குறுந்தொகையுள் அமைந்த குறிஞ்சித்திணைப் பாடலில் பயின்று வந்துள்ளது.

பாடல் எண்: 18 பாடியவர் : கபிலர்

*வேரல் வேலி வேர்க்கோட் பலவின்*
*சாரல் நாட! செவ்வியை ஆகுமதி!*
*யார் அஃது அறிந்திசி னோரே? - சாரல்*
*சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கு இவள்*
*உயிர்தவச் சிறிது; காமமோ பெரிதே*

**துறை**

இரவுக் குறி வந்து செல்லும் தலைவனைத் தோழி எதிர்பட்டு வரைவு கடாவியது. அதாவது, களவுக் கூட்டத்தின் கண் பகற் குறி பெற்று இன்புற்றத் தலைவன் இரவுக் குறி வருவதைக் கண்ட தோழி

விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டி தலைவனுக்கு உரைப்பதாய் அமைந்த தோழிகூற்றுப் பாடலாகும்.

### தொடரின் பொருள் விளக்கம்

இயல்பாகவே வளர்ந்த சிறு மூங்கில் வேலியையும், வேரில் குலைகளை உடைய பலா மரங்களையும் பெற்ற மலைச் சாரலையும் உடைய நாட்டினனே, நின் மலைப் பகுதியில் உள்ள பல மரத்தின் சிறு காம்பினில் தொங்கும் பெரும் பலாக்கனியைப் போல தலைவியின் உயிர் சிறியதுதான். ஆனால் அவளைப் பற்றி இருக்கும் காமமான நோயோ பலாக்கனியைப் போல பெரியது. அதாவது, பெருத்த பலாக்கனியைப் போல தலைவியின் காமநோய் பெருத்துள்ளது. பளுதாங்காமல் விழுந்து சிதறும் பலாக்கனியைப் போல எப்பொழுது வேண்டுமானாலும் அவளின் நோய் முற்றி உயிர் முறிந்து விடும். அது முறியும் நேரத்தை அறிந்தவரும் யாரும் இல்லை. எனவே விரைந்து திருமணம் செய்துக் கொள்வீர் என்பது பாடல் தரும் பொருளாகும்.

இதில் தலைவன் மேல்கொண்ட தலைவியின் காதலானது பலாபழத்துக்கும் அவனுடைய உயிரானது சிறிய காம்பிற்கும் அழகாக உவமிக்கப்பட்டுள்ளது.

### வெளிப்படும் கருத்து

தலைவியின் சிறிய உயிரைக் காக்கவேண்டியாவது அவளை விரைந்து திருமணம் செய்து கொள்ள வேண்டும். களவுக் கூட்டம் இன்றி முறைப்படி திருமணம் செய்து இல்லறம் ஒழுக வேண்டும் என்பது பாடல் உணர்த்தும் கருத்தாகும்.

### ஆரர்பார்க்கும் குருகு

'ஆரர்பார்க்கும் குருகு' என வரும் தொடர் குறுந்தொகையில் அமைந்த குறிஞ்சித்திணை பாடலில் பயின்று வந்துள்ளது.

பாடல் எண்: 25 பாடியவர் : கபிலர்

*யாரும் இல்லை; தானே கள்வன்;*
*தான் அது பொய்ப்பின், யானெவன் செய்கோ?*
*தினைத்தாள் அன்ன சிறுபசுங்கால*
*ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்*
*குருகும் உண்டு, தான் மணந்த ஞான்றே!*

### துறை

தலைவியிடம் களவுக்காலத்தே இன்பம் துய்த்து ஒழுகிய காதலன், தன்னை விரைந்து மணந்து கொள்வதாக கூறிய காலம்

வந்தும் அவன் வராததால் மனம் வருந்திய தலைவி தன் நிலையைத் தோழிக்குக் கூறுவதாய் அமைந்த தலைவி கூற்றுப்பாடலாகும்.

## தொடரின் பொருள் விளக்கம்

தலைவன் தலைவியைக் களவு மணத்தில் இன்புற்ற போது வேறு யாரும் இல்லை. அவன் ஒருவனே அதற்குச் சான்று. அவனே தன்னை மணந்து கொள்கிறேன் என்று சூளுரைத்தான். ஆனால் இன்றோ அவன் நான் அன்று என்று பொய்ப்புரை செய்தால் நான் என்ன செய்வேன். அன்று அவனைத் தவிர்த்து, திணையின் தாள் போன்ற சிறிய பசுமையான கால்களைக் கொண்ட நாரை ஒன்று ஒழுகுகின்ற நீரிடத்தே உணவிற்காக ஆரல் மீனை எதிர்பார்த்து நின்றிருந்தது. எனவே, தலைவனையன்றி குருகும் சான்றாகும் என்பதையே ஆரல்பார்க்கும் குருகும் உண்டு எனவரும் தொடர் விளக்குகின்றது. குருகும் உண்டு என்று சொன்னாலும் ‘ஆரல் பார்க்கும் குருகு’ என்று வருவதால் நாரையானது தனது உணவிற்காகவே மீனை உற்றுநோக்கியுள்ளது. எனவே அதன் கவனம் மீனின் மீது மட்டுமே இருந்திருக்கும். அதனால் நாரையைச் சான்றாகக் கொள்வது பொருத்தமாக இருக்காது என்பது உற்று நோக்க வேண்டிய கருத்தாகும்.

இதில், சாட்சியாக குருகு இருந்தும் அது எங்களைக் கவனிக்காது தன் தேவையில் கவனம் செலுத்தியது என்ற கருத்தமைத்த ‘ஆரல் பார்க்கும் குருகு’ என்ற தொடர் இலக்கிய நயமிக்கதாக அமைந்துள்ளது.

## 1 (ஆ) ஆருயிர் முறைவழிப் படுமென்பதைக் கணியன் பூங்குன்றனார் சுட்டுமாறு காட்டுக.

**முனைவர் ஆ. மணவழகன்**

தமிழில் இயற்றப்பட்ட தொன்மை இலக்கியமாகச் சங்க இலக்கியம் சுட்டப்படுகிறது. இவ்விலக்கியம் வாய்மொழி மரபாகப் பலகாலம் நிலைத்து, பின்னாளில் புலவர் மரபு உருவான காலத்தில் திணை, துறை, வாயிலாக தொகுக்கப்பட்டது என்பது அறிஞர் கருத்து. இவ்வாறாகத் தொகுக்கப்பட்ட சங்க இலக்கியம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனும் முறைமை கொண்டுள்ளது. இதில் எட்டுத்தொகையில் நற்றிணை முதலாக புறநானூறு ஈறாக எட்டுத்தொகை நூல்கள் அடங்கியுள்ளன. இக்கட்டுரைக்கு மூலமாக அமைகின்ற புறநானூற்றில் புறச் செய்திகள் சார்ந்த நானூறு பாடல்கள் அமைந்துள்ளன. இதில் கணியன் பூங்குன்றனார் எனும் புலவர் ஒரு பாடலை மட்டும் (192ஆம் பாடல்) பாடியுள்ளார். இந்நூல் மட்டுமன்றி நற்றிணையில் ஒருபாடலும் (226ம் பாடல்) பாடியுள்ளார். இதன் மூலம் எட்டுத்தொகை நூலில் மிக குறைவான பாடல்களைப் பாடிய புலவர் இவரென நம்மால் உணரமுடிகிறது. இவர் இராமநாதபுர மாவட்டத்திலுள்ள மகிபாலன்பட்டியென இப்போது வழங்கும் ஊரினர். இவ்வூர்ப் பூங்குன்றமெனப் பண்டை நாளிலும் இடைக்காலத்தும் வழங்கிற்றென்பதை, அவ்வூர்க் கோயில் கல்வெட்டால் அறிகின்றோம். பூங்குன்றம் இப்போது குடகு மலையென வழங்குகிறது இவ்வூரினரான பூங்குன்றனார் சோதிடத் தொழிலில் ஈடுபட்டவராக இருக்கலாம் என்பர். கணியன் என்பதன் பொருள் சோதிட வல்லோன் என்பதாகும். எனவே தொழில் அடிப்படையிலும் அவர் பிறந்த ஊரின் பொருட்டும் 'கணியன் பூங்குன்றன்' என வழங்கியிருக்கலாம் என்று உ.வே. சாமிநாதையர் கருதுவர்.

எட்டுத்தொகையில் அமைந்துள்ள புறப்பொருள் நூலான புறநானூற்றில் இவர் பாடிய பாடல் (192) 'பொதுவியல்' திணையிலும் 'பொருண் மொழிக் காஞ்சி' எனும் துறையிலும் அமைந்துள்ளது.

### துறை விளக்கம்

''நீர் வழிப் படூஉம் புனைபோல் ஆருயிர் முறை வழிப்படூஉம்'' எனக் கூறியதால் இப்பாடல் பொருண்மொழிக் காஞ்சித் துறையாயிற்று'' என்று உரையாசிரியர்கள் பொருள் உரைக்கின்றனர்.

பாடல்

*யாதும் ஊரே யாவரும் கேளிர்;*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா;*
*நோதலும் தணிதலும் அவற்றோரன்ன;*
*சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்*
*இனிது என மகிழ்ந்தன்றும் இலமே;முனிவின்,*
*இன்னாது என்றலும் இலமே; 'மின்னொடு*
*வானம் தன் துளி தலைஇ, ஆனாது*
*கல் பொருது இரங்கும் மல்லல் பேர் யாற்று*
*நீர்வழிப்படூஉம் புணைபோல், ஆர் உயிர்*
*முறை வழிப் படூஉம்' என்பது திறவோர்*
*காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்*
*பெரியோரை வியத்தலும் இலமே;*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே* ***(புறம். 192)***

பாடல் விளக்கம்

பூங்குன்றனார் இப்பாடலில் மனிதநிலையாமையின் தத்துவத்தை உள்ளாந்த நோக்கில் புலப்படுத்தியுள்ளார். மனிதர்கள் இயங்குகின்ற இச்சமூகத்தில் அனைத்து ஊரும் யாவர்க்கும் உரியது; எவ்விடத்தில் வாழ்பவரும் நமக்கு உறவினர்தான். இவ்வாறான வாழ்க்கையில் துன்பமும் இன்பமும் நமக்கு பிறரால் வருவதும் இல்லை. மனிதனுக்கு வருகின்ற இறப்பு என்பதும் திடீரென வருவது இல்லை. அது, தாய்வயிற்றில் கரு உருவாகும் காலந்தொட்டே உறுதி செய்யப்பட்டது. ஆகையினால் வாழ்க்கை இனிமையானது என்று மகிழ்வதும் இல்லை, துன்பமானது என்று வருந்துவதும் இல்லை. தெப்பமானது எவ்வாறு பெரிய ஆற்று நீரோடு இணைந்து செல்கிறதோ அதைப்போன்று, இந்த அரிய உயிரும் ஊழின் வழி செல்வதும் இயல்பு. இதனைச் சான்றோர் தம்நூலில் கூறியுள்ளனர். ஆகையால், நன்மை தரும் பெரியோர்களை வியந்து நிற்றலும் இல்லை. அதேபோல், அவரினும் கீழான சிறியவரைக் கண்டு குறைத்து மதிப்பதும் இல்லை.

**ஆருயிர் முறைவழிப் படூஉம்**

கணியன் பூங்குன்றனார், இப்பாடலில் தொடர்ந்து கருத்தினை முன்வைத்துள்ளார் என்பது மேற்காணும் பாடல்வழி தெளிவாகிறது. இவ்வாறான வாழ்வியல் தத்துவக் கருத்தினைப் புலப்படுத்துகையில் அவர் மனித உயிரானது இறப்பது என்பது ஒன்றும் புதியது அல்ல, அது ஊழ் வழியே கருவிலேயே தீர்மானிக்கப்பட்ட ஒன்று என்று கூறுகிறார். அதற்காக அவர் பாடலில்,

*. . . . . . . .பேர் யாற்று*
*நீர் வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர்*
*முறை வழிப் படூஉம்*

என்று உவமை கூறுகிறார். கற்களை அடித்துச் செல்லும் பெரியதொரு ஆற்று வெள்ளத்தில் மிதவையானது (தெப்பம்) எவ்வாறு இயைந்து செல்லுமோ அதுபோல் இம்மனித உயிரும் ஊழின் வழி இணைந்து செல்வதும் இயல்பு என்று இணைத்து மிக அழகாகச் சித்தரித்துள்ளார்.

**நிறைவாக**

யாதும் ஊரே . . . . .எனத் தொடங்கும் பூங்குன்றனாரது பாடல் மனித வாழ்க்கையை மிக இயல்பான ஒன்றாகப் பார்த்துச் செல்கிறது. நமக்கு வரும் இன்பத்துன்பங்களுக்கு நாமே காரணமாக அமைகிறோம் என்பதை வலியுறுத்துகிறது. மனிதர்களில் ஏற்றத்தாழ்வு எண்ணாது சமநிலையில் பார்க்கும் பக்குவத்தை உணர்த்துகிறது.

## 1 (இ) திருக்குறளில் மணற்கேணி, பீலிபெய் சாகாடு, வெள்ளத்தனைய மலர் நீட்டம், இணர் ஊழ்த்தும் நாறா மலர் ஆகியன உவமைகளாகக் கூறப்பெறும் நுட்பத்தை விளக்குக.

**முனைவர் பா. இராஜா**

ஒப்பிட்டுப் பார்க்கத் தோன்றிய உணர்வின் அடிப்படையில் உவமை தோன்றியது. இரு பொருள்களின் இடையே காணப்பெறும் தொடர்பு உவமையின் சிறப்பை விளக்க உதவுகிறது. மேலும், பொருளின் உண்மைத் தன்மையினை அறிந்து கொள்வதற்கும் உவமை உதவுகின்றது.

ஒரு பொருளுக்கு ஒரு பாருளை உவமையாகச் சொல்லும் போது அவ்விரண்டு பொருள்களுக்கும், பொதுவாகிய வினை (தொழில்) காரணமாகவும், அவ்வினையில் பெறும் பயன் காரணமாகவும், அப்பொருள்களின் மெய்யாகிய வடிவு காரணமாகவும், மெய்யின்கண் நிலை பெற்றுத் தோன்றும் உரு காரணமாகவும் ஒப்புமை கூறப்பட்டு உவமையால் பொருள் தோன்றும் என்பர் தொல்காப்பியர். அதாவது,

*வினை பயன்மெய் உரு என்ற நான்கே*
*வகை பெற வந்த உவமத் தோற்றம்* **(தொல்.உவமஇயல்,1)**

என்கிறார்.

இந்நான்கு உவமைகளும் சிறப்பு, நலன், காதல், வலி எனும் நான்கை நிலைக்களனாகக் கொண்டு பிறக்கும் எனவும் விளக்குகின்றார். உவமையானது உயர்ந்த பொருள் வாய்ந்து மேல் சொல்லப்படும் தன்மை என்றும் தொல்காப்பியர் விளக்குகின்றார்.

உவமையில் நான்கு பொருள்கள் அடங்கியுள்ளன. அவை உவமேயம், உவமானம், பொதுப்பண்பு, உவம உருபு என்பன.

உவமையும், பொருளும் அவற்றிற்கிடையேயான பொதுத்தன்மையும், உவம உருபும் ஆகிய இவை இன்னவென வெளிப்படையாக வந்தால் ''வெளிப்படை உவமம்'' என்றும் கருத்து வகையால் உட்பொருள் கூறப்பெற்றால் அது 'உள்ளுறை உவமம்' என்றும் கூறப்படும். உவமையின் இப்பொதுக் கூறுகளின் அடிப்படையில் திருக்குறளின் உவமைச் சிறப்பைக் காணலாம்.

மணற்கேணி

இவ்வுவமை திருக்குறளில் கல்வி எனும் அதிகாரத்தில் பயின்று வருகின்றது.

*தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத்து ஊறும் அறிவு (குறள். 396)*

இதன் பொருளாவது,

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும். அதுபோல் மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும் என்பது.

இக்குறளில் உவமையும் பொருளும் தவிர ஏனைய உருபும் பொதுத்தன்மையும வெளிப்பட இடம்பெறவில்லை. இவ்வாறு வருவது 'தொகை உவமம்' எனக் கூறப்பெறும். இதனை,'எடுத்துக்காட்டு உவமை' என்றும் சொல்லுவர்.

மணலில் தோண்டிய அளவில் வெளிப்படும் நீர் உவமையாகும். மனிதனுக்குக் கற்க அறிவு வளரும் என்பது பொருளாகும். இதில் இடம்பெறும் உவமையின் நுட்பம் சிந்திக்கத் தக்கதாகும். மணலில் தோண்டுகிற அளவே நீர் ஊறும். அதுவும் சிறிது சிறிதாக ஊறி நீர் பெருகும். அதுபோல் கற்க கற்க அறிவு வளரும். சிறிது சிறிதாக வளர்ந்து அறிவானது பெருகும் என்பது இதன் நுட்பமான செய்தியாகும்.

பீலிபெய் சாகாடு

இவ் உவமை திருக்குறளில் ''வலி அறிதல்'' எனும் அதிகாரத்தில் இடம்பெறுகின்றது.

*பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்*
*சால மிகுத்துப் பெயின் (குறள். 425)*

மயிலிறகு ஏற்றிய வண்டியே ஆனாலும் அம்மயிலிறகை அளவு கடந்து மிகுதியாக ஏற்றினால், வண்டியின் அச்சானது முறிந்துவிடும் என்பது இதன் பொருளாகும். தாம் கருதிய பொருளைக் கூறாது அதற்கு உவமையான பொருளை மட்டும் கூறுதல் 'பிறிது மொழிதல்' எனும் வகைபாற்படும். இப்பிறிது மொழிதல் அணியினை 'நுவலா நுவற்சி' என்றும் 'ஓட்டு' என்றும் பரிமேலழகர் விளக்குவார்.

''பீலிபெய் சாகாடும் அச்சிறும்'' என்ற தொடர், மெல்லிய மயிலிறகால் நிரப்பப்பட்ட வண்டியாயினும் அளவிற்கு மேலாயின் அது அவ்வண்டியின் அச்சினை முறிவுறச் செய்யும் என்பது. இந்த

உவமையைக் கூறி அதனுள் கருத்தமைந்த உவமேயத்தைப் பெற வைக்கிறார் வள்ளுவர். எளியர் பலர் ஒன்று சேர்ந்தால் வலியவரை எளிதாகவும், விரைவாகவும் வென்றுவிட முடியும் என்பதைத் திருவள்ளுவர் பிறிது மொழிதலாகக் கூறுகின்றார். வலியன் என்று தன்னைத் தருக்குதல் கூடாது என்பது இதன் கருத்தாகும். தான் கூறவந்த கருத்தை உவமானத்தின் மேல் ஏற்றிக் கூறுவதால் பொருள் காண்பதில் ஒரு புதுமையை இத் திருக்குறளில் திருவள்ளுவர் ஏற்படுத்தி விடுகிறார் எனலாம்.

### வெள்ளத்தனைய மலர்நீட்டம்

இவ் உவமை திருக்குறளின் 'ஊக்கமுடைமை' என்னும் அதிகாரத்தில் இடம் பெறுகின்றது. நீர்ப்பூக்களின் தாளின் நீளம் அவைநின்ற நீரின் அளவினவாகும். மக்களின் ஊக்கத்தின் அளவினதாகும் வாழ்க்கையின் உயர்வு என்பது இக்குறளின் பொருளாகும்.

*வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*
*உள்ளத் தனையது உயர்வு (குறள். 595)*

உவமானத்தையும் உவமேயத்தையும் தனித்தனி வாக்கியங்களாகக் கூறி, இன்னது உவமானம் இன்னது உவமேயம் என்பது தோன்ற இடையில் உவம உருபு கெடாமற் கூறுவது 'எடுத்துக்காட்டு உவமை' எனக் கூறப்பெறும்.

மேற்சுட்டிக் காட்டிய குறளில் எடுத்துக்காட்டு உவமை பயின்று வந்துள்ளது. குளத்தில் உள்ள நீரின் ஆழத்தைப் பொறுத்து நீர்ப்பூக்களின் தாள்களும் உயர்ந்து விடுகின்றது. அதுபோன்று மக்களின் வாழ்க்கை உயர்வு என்பது அவர்கள் மனதில் தோன்றும் ஊக்கத்தின் அளவினதாகும். உவமை உருபு கூறாமல் இக்குறளில் உவமேயப் பொருள் விளக்கப்படுவதால் இது எடுத்துக்காட்டு உவமையின் பாற்படுகிறது.

### இணரூழ்த்தும் நாறா மலரனையர்

இவ்உவமை திருக்குறளின் 'சொல்வன்மை' எனும் அதிகாரத்தில் இடம் பெறுகின்றது.

*இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது*
*உணர விரித்துரையா தார் (குறள். 650)*

செம்மை பெற மலர்ந்தும் மணம் இல்லாத பூக்கள் சூடப்பெறாமல் வறிதே இருப்பது போல், பல நூல்களைக் கற்றவர் ஆயினும்

அவையின்கண் சொல்லும் ஆற்றல் இல்லாதவர்கள், மதிக்கப்பட மாட்டார்கள் என்பது இதன் பொருளாகும்.

இக்குறளில் *'அன்ன'* எனும் உவம உருபுக்கு இணையாகக் கூறப்பெறுகின்ற 'அனைய' எனும் உருபு அமைந்துள்ளது. *அனைய, அனைத்து* எனும் உவம உருபுகள் தொல்காப்பியரால் சுட்டப் பெறவில்லை. எனினும், அன்ன பிறவும் என்றதனால் 'அனைய' என்பதும் உவம உருபாகும் என்பர் உரையாசிரியர்.

உவமையின் கூறுபாடுகளான வினை, பயன், மெய், உரு எனும் நான்கு வகை கூறுகளில் இக்குறள் *வினை உவமத்தின்* பாற்படும். மணத்தல் என்பது பூக்களின் வினையாகும். அவ்வினை உவமை, கற்றதை விரித்துரையாத தன்மை உடையார்க்கு உவமிக்கப்படுகிறது. உவமானமும் உவமேயமும் தெளிவாக வெளிப்படுவதுடன், 'அனைய' எனும் உவம உருபும் பெற்று, *'வினை உவமம்'* எனும் வகையில் இக்குறள் அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

## பார்வை நூல்கள்

1. திருக்குறள்-உரைவளம்-பொட்பால், தண்டபாணி தேசிகர் (தொ.ஆ.), தருமபுர ஆதின வெளியீடு.
2. திருக்குறள்-அணிநலம், மு. வரதராசனார் (தொ.ஆ.), சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, சென்னை, 1971.
3. மு.வ. திருக்குறள் தெளிவுரை (கையடக்கநூல்).
4. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், அறத்துப்பால், மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை, 1972.
5. தொல்காப்பியப் பொருளதிகாரம்-இளம்பூரணம்-3, பேரா. மு.சண்முகம்பிள்ளை (ப.ஆ.), முல்லை நிலையம்.

**1 (ஈ) கும்பகருணன் வீடணன் அழைப்புக்கு இணங்காத நிலைக்குரிய காரணங்களைக் காட்டுக.**

முனைவர் பா. ராஜா

**வீடணன் அழைப்புக்கு இணங்காது கும்பகருணன் உரைப்பவை**

இராமனுக்கும் இராவணனுக்கும் போர் ஏற்பட்ட சூழலில், இராவணனின் தம்பியாகிய வீடணன், மற்றொரு தம்பியாகிய கும்பகருணனை இராமனுடன் சேர்த்துக் கொள்ள அழைக்கிறான், அதற்கு கும்பகருணன் பின்வருமாறு உரைக்கிறான்.

மார்பில் மாலையணிந்த அழகிய உடம்பினை உடைய மைந்தனே! என்னை நீண்ட நாள் அருமையாக வளர்த்து, இன்று தன் கையாலேயே போர்க்கோலம் பூணுவித்துப் போருக்குச் சென்று வா என விட்ட இராவணனுக்காகப் போரில் என்னுயிரைக் கொடுக்காமல் ''நீரில் எழுதிய கோலத்தைப் போல் விரைந்து அழியும் செல்வ வாழ்க்கையை விரும்பி அந்த இராமனிடம் போய்ச் சேரமாட்டேன்'' என் துன்பத்தைப் போக்க விரும்பினால் காளமேகம் போல் கரிய அழகிய திருமேனியையுடைய இராமனை விரைவில் சென்றடைவாய்.

தாமரை மலரின் மேல் இருக்கும் பிரம்மதேவனது வரத்தினால் என்றும் அழிவில்லாத தருமத்தை நீ கைக்கொண்டாய். உலகம் உள்ளவரை அழியாமல் வாழ உள்ளாய். நீ உலகுக்கெல்லாம் தலைவனாய் உள்ளவன். அப்படிப்பட்ட உனக்கு இராமனைச் சேர்தல் என்னும் அது தகுதியானது. இழிவு பொருந்திய மரணத்தை அடைதல் எனக்குப் புகழை விளைவிக்கக் கூடியது.

மந்திரம் கேட்கும் சூழ்தல் இல்லாத தலைவன் தீத்தொழில் செய்ய எண்ணினால் அவன் அவ்வாறு செய்யாமல் தடுத்து திருத்துதல் கூடுமாயின் அன்றோ திருத்தலாம். அவ்வாறு திருத்த முடியாது போனால் அவனுக்கு எதிர் சென்று நின்று அடையத்தக்க பெரும்பொருள் உண்டோ? ஒருவனுடைய உணவை உண்டு வளர்ந்தவர் செய்ய உரிய செயல் அவனுக்காகப் போர் செய்யும் தொழிலுக்கு உரிமையுடையவர் ஆகி ஒப்பற்ற தலைவனுக்கு முன்னர்ச் சாதலே! கேட்பாயாக!

தேவர்களும் மற்றுள்ளோரும் போற்றி வணங்குமாறு மூன்று உலகங்களையும் ஒப்பற்றவனாய் ஆண்டவனாகிய அண்ணன், வண்டுகள் மொய்க்கின்ற அழகிய மலர்மாலையை அணிந்த வீரனாகிய இராமன் சுடுகின்ற அம்புகளைச் செலுத்துவதால் வாடுகின்ற சினம் மிக்க படைகளுடனும் பிற உறவினர்களுடனும் தனக்காக இறக்கத் தம்பியும் இன்றி மண் மேல் இறந்து கிடப்பதற்கு உரியவனா? பெண்மானின்

கண்ணையொத்த கண் உடைய உமையம்மையை இடப்பாகத்தில் கொண்ட சிவபிரானது பெரிய மலையாகிய கைலாயத்தை நெருங்கிப் பெயர்த்தெடுத்தப் பெருமை பொருந்திய திரண்ட தோள்கள், இயமனது கால பாசத்தால் பிணிக்கப்படுவது கண்டு, முன்பு தடையில்லாமல் பெற்ற வெற்றி கண்டு அச்சங்கொண்ட மாற்றார் நகைத்துப் பேரொளி செய்ய, அதற்கு நாணி முன்பு தனக்குத் தோற்றவனாகிய இயமன் இடத்தில் துணையாகத் தம்பியும் இல்லாமல் செல்லுவது நன்றாக உள்ளதோ?

ஐயனே! கூற்றுவனையும் வெற்றி கொண்டவனாகிய நான், செம்பை உருக்கி வலிமையும் அழகும்படச் செய்த மதிலால் சூழப்பட்ட அழகிய இலங்கை நகரின் அரசுச் செல்வத்தை நிலையானது என்று கருதிய மணம் பொருந்திய மலர் மாலையணிந்த என் அண்ணனுடைய உயிரைக் கொண்ட பகைவனாகிய இராமனை வாழ்த்திக் கொண்டு, அம்புபட்டுத் துளைப்பட்ட புண்பட்ட நெஞ்சத்துடன் கும்பிட்டு வாழ மாட்டேன்.

அனுமனையும் வாலி மகனாகிய அங்கதனையும் சூரியன் மகனாகிய சுக்ரீவனையும் அழகிய பொன்போன்ற வில்லையுடைய இராம இலக்குவர்களையும் வேறுபட்ட தன்மையையுடைய நீலனையும் சாம்பவான் தன்னையும் கனியைக் கைப்பற்றத் தொடர்ந்து செல்லும் குரங்குகளின் சேனையாகிய கடலையும் வஞ்சியாது எதிர்நின்று வென்று, உலகத்தை மூடுகின்ற பனியைப் போக்கி, வலமாகச் சுற்றுகின்ற கதிரவன் போல் திரிவேன் காண்பாய்.

ஆலகால நஞ்சைக் கண்டு அஞ்சி ஓடிய தேவர்களைப் போல் வானரப்படைகள் ஓட, ஒரு கடலானது சூலத்தைக் கையில் கொண்டு ஓடி மற்றொரு கடலைத் தொடர்ந்து செல்வது போல் ஒரு தோற்றத்தை உண்டாக்கி, நீலநிறங் கொண்ட கடல் தன் இடம் விட்டுப் புடை பெயர்ந்துச் செல்லவும், நெருப்பும் காற்றும் நிலை கெட்டு ஓடவும் அழிவுக் காலத்தை நோக்கி உலகம் ஓடவும் போர்க்களத்தில் நான் காற்றாடி போலத்திரிவேன் அதனைக் காண்பாய்.

போர்க்களத்தில் அஞ்சாதவர்களாய் வந்து என் கண்ணுக்கு எதிரில் சேர்வார்கள். ஆனால், கரிய பொன்குன்றமோ என்று கூறுமாறு தோற்றம் பொருந்திய இராம இலக்குவர் நிற்க வேறு அங்கு உள்ளவர் எவரோ? அவர்களை எல்லாம் உலகத்தில் உயிர் சுமந்து கொண்டு ஒருவரையும் நடமாட ஒருப்படேன் என்றான்,

பிறர் தொழத்தக்க மேன்மை பெற்றவனே! என் சொல்லானது தலையில் ஏற்கத்தக்கது என்று கருதிக் கேட்பாய். ஆனால், காலந்தாழ்த்தாமல் திரும்பிப்போய் அந்த இராம இலக்குவரோடு

பொருந்திய நட்பை மேலும் விரும்புவாய். இனிமேலும் ஒரு பேச்சுப் பேசினால் அதனால் நன்மை உண்டு என்று எண்ணி ஆலோசிப்பதற்கு உரியவனில்லை என்று கூறினான்.

ஐயனே! நீ இராமனிடம் திரும்பிச்செல், பிறகு எல்லாமுமாய் நின்ற வேதியர் தலைவனான இராமன் தன் அனுமதியை வேண்டிப்பெற்று மெய்மையாகப் பழ நூலில் கூறிய முறைப்படி இறந்துபட்டவர்களுக்கெல்லாம் அந்திமச் சடங்குகளைச் செய்து உடம்புடன் கிடந்து அல்லல்படும் நிலையில் இருந்து ஏற்றி மிக்க துயரத்தைத் தரும் நாகத்தையடையாதவாறும் காப்பாய்.

எக்காலத்தும் அழியாது வாழ்பவனே! உரிய காலத்தில் ஆக வேண்டியது ஆகியே தீரும். அழிய வேண்டியது அழிந்து சிதறிப்போகும். அவ்வாறு அழிந்து போவதைப் பக்கத்தில் நின்று பாதுகாத்தாலும் அது அழிந்துபோயே தீரும். குற்றமற அதை உணர்ந்து தெளிந்தவர்கள் உன்னைக் காட்டிலும் யாவர் உலகில் உளர். துன்பப்படாமல் எம்மைக்குறித்து இரங்கலையாய் செல்வாய்.

என்றுகூறி அந்த வீடணன் தன்னை மறுமுறை மீண்டும் எடுத்து மார்பில் அழுத்தமாகத் தழுவி மிக நீண்ட நேரம் அழுது ஏக்கம் கொண்டு நீர்நிலை கண்ணால் நீண்ட நேரம் பார்த்து உனக்கும் எனக்கும் உள்ள உடன்பிறப்பு என்னும் தொடர்பு இன்றோடு போய் விட்டதல்லவா? என்று கூறித் தழுவியதை விட்டான். வெற்றியும் வலிய வலியையும் உள்ள வீடணனும் அந்தக் கும்பகருணனது அடித்தலத்து வீழ்ந்து வணங்கினான்.

வணங்கினனாகிய வீடணன் வணங்கிக் கண்ணும் முகமும் மனமும் வாயும் உலர்ந்தான். உயிரும் உடம்பும் ஒடுங்கிச் சோர்ந்தான். இக்கும்பகருணனுடன் இன்னும் பேசி, மனமாறுபாடு கொள்வதால் ஆகக் கூடிய பயன் எதுவும் இல்லை. திரும்பிச் செல்வதே தக்கது என்று பண்புகளால் இமயம் என உயர்ந்து நிற்கும் கும்பகருணனது அரக்கர் சேனையாகிய கடல் எல்லாம் கைகூப்பித் தொழ திரும்பினான்.

## பார்வை நூல்கள்


1. கம்பன் காட்டும் கும்பகர்ணன், புலவர் அ. அருணகிரி, வானதி பதிப்பகம், சென்னை.
2. கம்பராமாயணம்-யுத்தகாண்டம், உரையுடன், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

## 1. (உ) மாணிக்கவாசகர் தம் சிறுமையையும் இறைவன் பெருமையையும் எங்ஙனம் உணர்த்துகின்றார்?

முனைவர் வி.இரா. பவித்ரா

### முன்னுரை

சைவ சமயத்தின் உயிர்நாடியாகவுள்ள பன்னிரு திருமுறைகளுள் மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசகமும் திருச்சிற்றம்பலக் கோவையும் எட்டாந்திருமுறையாக உள்ளன. அவற்றுள் சிறப்பாகத் திருவாசகம் அறுநூற்றைம்பத்தாறு தித்திக்குந் தேமதுரத் தீந்தமிழ்ப் பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. திருவாசகம் யாவராலும் விரும்பிக் கற்கப்படும் ஓர் அருள்நூல். இந்நூல், ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

திருவாசகம் என்னும் தெய்வத் தமிழ்மறை, தமிழ் மொழியில் சிறந்த இலக்கியச் சுடர் மணியாகவும், ஞானக் கருவூலமாகவும் திகழ்கின்றது. இவ் அருள் நூல் திருக்கோவையாருடன் சேர்ந்து சைவத் திருமுறை பன்னிரெண்டில், எட்டாவது திருமுறையாக அமைந்துள்ளது. இது தோன்றி நிலவியுள்ள இந்த ஆயிரம் ஆண்டுகளில், கோடிக் கணக்கான மக்களின் மனத்தைக் கரைத்து, மாசைநீக்கி மாண்புறச் செய்திருக்கிறது. உள்ளத்தை உருக்கி உயர்வடையச் செய்வதில், உலக இலக்கியத்திலேயே ஒப்பற்றது எனக் கூறினும் மிகையாகாது. உள்ளம் கலந்து இத்தெய்வப் பாடல்களைப் படிக்கும்போது, மெய்மறந்து ஆனந்தக் கண்ணீர் சொரிய, உள் ஒளி பெருகி உவப்பிலாத தேனமுதம் உண்டு திளைத்தவர் எண்ணிறந்தவராவர். சமயத்தொடர்பு ஒன்றும் இல்லாமல், இலக்கியம் என்ற அளவில் படித்து இன்புற்றவர்களும் இன்புறுபவர்களும் பலராவார். பண்படைந்த உள்ளமுடையவர்கள் எந்நாட்டாராயினும், எச்சமயத்தாராயினும், எந்த வழியிலேனும் இத்தெய்வப் பாடல்களையோ, பாடல்களைப் பற்றியோ தெரிந்துகொள்வாராயின், இந்நூலைத் தங்கள் உயிர்க்கு உறுதியாகப் பற்றிக்கொள்வார்கள் என்பது திண்ணம்.

### திருவாதவூரடிகள் வரலாறு

*ஆர் அருள் வடிவம்-ஆய அன்னையார் திருக்கண் சாத்த*
*சீர் அருள் அம்பலத்தில் திருநடம் நவிலுவாரே*
*பேர் அருளொடு கை-ஏடு பிடித்து எழுதிடப் பணிந்தார்*
*நார் அருள் அடியாரோ நமை எழுதவும் பணிப்பார்*

-திருப்பெருந்துறைப் புராணம்

தமிழகத்தில் சைவ நன்மக்களால், தெய்வநிலையில் வைத்துப் போற்றப்பெறும் சமயக்குரவர் நால்வருள் திருவாதவூரடிகள் ஒருவர். இவருக்கு, மாணிக்கவாசகர், அருள் வாசகர், பெருந்துறைப்பிள்ளை, ஆளுடைய அடிகள் என்ற பெயர்களும் வழங்குகின்றன. இப்பெயர்களுள் பெரும்பான்மையாக வழங்கப்பெறுவது மாணிக்கவாசகர் என்னும் பெயர். சிவபெருமான், ஞானதேசிகனாக இவரை ஆட்கொண்டபோது இப்பெயரைச் சூட்டினார் என்பது பலரும் கூறும் வரலாறு. இதனைப் பரஞ்சோதி முனிவர்,

*பழுது இலாத சொல்மணியினை, பக்திசெய்து, அன்பு*
*முழுதும் ஆகிய வடத்தினால் முறைதொடுத்து, அலங்கல்*
*அழுது சாத்தும் மெய் அன்பருக்கு, அகம் மகிழ்ந்து ஐயர்*
*வழுவு இலாத பேர் மாணிக்கவாசகர்*

என்றார். திருவாதவூரில் பிறந்தமையால், திருவாதவூரடிகள், திருவாதவூராக்கம் என்றும் சிவபெருமானால் திருப்பெருந்துரையில் ஆட்கொள்ளப் பெற்றமையால், பெருந்துறைப்பிள்ளை என்றும்; சிவபெருமான் ஆட்கொண்ட நால்வருள் இவர் ஆண்டான் அடிமை முறையில் நின்றமையாலும், துறவு பூண்டமையாலும் ஆளுடைய அடிகள் என்றும் பெயர் பெற்றார்.

இவருடைய வாழ்க்கை வரலாறு. இரண்டு பெரும் பிரிவுகளில் கருதப்பெற வேண்டும்; ஒன்று ஞானநெறி; மற்றொன்று உலக நெறி வாழ்க்கை.

## திருவாசக அமைப்பும் அழகும்

உலக இலக்கியங்களில் உள்ள தெய்வக் கவிதைகளுள், திருவாசகம் ஒரு தனி இடம் பெறத்தக்கது. எந்த கவிதைகள் கற்போர் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி உயர்ந்த நெறிகண் செலுத்துகின்றனவோ அவை எல்லாம் தெய்வக் கவிதைகள் என்னும் சிறப்புக்கு உரியனவாகும். இக்கவிதைகள், எளிய இனிய சொற்களால் உள்ளத்தை மெல்ல மெல்ல கரைத்து உணர்வை ஊக்கிச் செம்மையாக்கி உண்மையைக் காணும் வழியில் செலுத்தி, சித்தம் செல்ல இயலாத செய்மையிலுள்ள, சொல்லும், மணமும், உணர்வும் கடந்த தொன்மை பேரின்பத்தைப் பெறச் செய்கின்றன. அறிவு நிலையில் அகப்பட்ட வரைவில் இக்கவிதைகள் பொருள் உரைப்பதற்கும், ஆராய்வதற்கும் நலம் கண்டு இன்புறுவதற்கும் அவர்கள் கண்ட இன்பத்தை மற்றவர்களும் காணும் வண்ணம் வெளியிடுவதற்கும் இடந்தருகின்றன.

படைப்புக் கடவுளாகிய பிரம்மனுடைய நாட்கள் ஒவ்வொன்றும், தேவர்கள் ஆண்டில் 12 ஆயிரம் ஆண்டுகள் கொண்ட

பகற் பொழுதும் அதே அளவுள்ள இராப் பொழுதும் கொண்டதாகும். தேவர்கள் ஆண்ட 12 ஆயிரம் என்பது மண்ணுலக ஆண்டு 4,320,000,000இக்குச் சமமாகும். பிரம்மனுடைய இராப்பொழுதில், எவ்வகைச் செயலும் எள்வகைத் தோற்றமும் அற்று எல்லா உலகமும் உயிரும் ஒருங்கி ஏற்றத்தாழ்வு இல்லாத ஒரே அமைதியே நிலவும். இவையாவும் அழிந்த ஊழி எனக் கூறுவர். இத்தகைய இரவு ஒன்றில், பிரம்மன் அண்டங்களுக்கு எல்லாம் முதல்வனும் உயிரும் ஆகிய ஆயிரம் கண்களுடன் நீர் உருகும் பெறாத நீர்மேல் ஆயிரம் படங்களையுடைய அனந்தன் என்னும் உயர் வெள்ளையனையில் நாராயணன் கண் வளர்வதைக் கண்டு, பெரும் வியப்பும் மகிழ்வும் உடையவனாய் என்றும் உள்ள அப்பொருளைக் கையினால் தொட்டு 'நீ யார்? சொல்' என்றான். 'செந்தாமரைக் கண்ணன்' அனந்தனொடு கடைக்கண் சாந்தி புன்னகைப் பூத்து 'மகனே வருக' என்னும், பிரம்மன் வெகுண்டு ''எண்ணிருந்த உலகங்களைத் தோற்றியழித்து யாவைக்கு மூலமும் உயிருமாய் மகன் என அழைக்கும் மடமை ஏன் கொண்டாய்'' எனக் கூறினான் திருமால். உலகங்களை எல்லாம் படைத்துக் காத்து அழிக்கும் நாராயணன் நான் என்பது அறிந்திலையா? நான் அன்றோ 'பரம்பொருள்' நீ என் அழியாத திருமேனியிலிருந்து தோன்றினவன் அன்றோ'' எனக் கூற, இருவருக்கும் யார் பரம்பொருள் என்பதில் பூசல் தோன்றிப் போராக பெருகியது. அப்பொழுது, அண்டங்களை எல்லாம் அழிக்க எழுந்ததுப் போல் முதல், நடு, ஈறு இல்லாத ஒரு பாழற் பிழம்பு தோன்றவே இருவரும் திகைத்து நின்றனர். அண்டம் அனைத்தும் கடந்து நின்ற பேரொளி தூணமாகிய அனற்பிரம்பின் அடியையும் முடியையும் காணும் முயற்சியில் இருவர் ஈடுபட்டு, காவதக் கணக்கான நீளமும் அதற்கேற்ற பருமனும் கொண்ட நீலமணிக் குன்று ஒன்று பன்றி உருவில், நிலத்தை அகழ்ந்து அடியைக் காண திருமாலும், திசையனைத்தும் விரிந்த சிறகுகளுடன் தூய வெண்மையான அன்னத்தின் உருவில், விரைந்து பரந்து முடியைக் காண பிரம்மனும் சென்றனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உழன்றும் காணவியலாது களைத்துக் கையற்றுத் தங்கள் ஆனவம் ஒடுங்கப்பெற்றனர். இந்த நிலையில் முன்தோன்றிய பிழம்பு சிவலிங்க உருவில காட்சி அளித்து இருவருக்கும் அருள் செய்தது. தம் பேதமையினால் 'பரமும், யாம் பரமும் என்ற பிரம்மன் அடி இருவரும், தம் பதைப்பு ஒடுங்கி பரம்பொருள் சிவபெருமானே என உணர்ந்து வழிபட்டார்கள். பிரம்மன் முடியைக் கண்டதாகப் பொய் கூறியபடியால், சிவபெருமான் அவனுடைய ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளி எறிந்து அவனை நான்முகனாக நினைக்க அருளினான்.

'திருவாசகம்' என்னும் பெயரிலுள்ள 'திரு' என்னும் அடைமொழியும், 'வாசகம்' என்னும் சொல்லும் பல கருத்துகளைத்

தம்முள் அடக்கியுள்ளனவாகும். 'திரு' என்னும் சொல்லுக்குக் கண்டாரால் விரும்பப்படும் தன்மை. 'வாசகம்' என்ற சொல் தோத்திரம் என்ற பொருளில் திருவாதவூரடிகள் காலத்திலேயே வழங்கியிருந்திருக்கின்றது. கம்பர் இச்சொல்லால் பன் இனிமைமிக்க செஞ்சொற்கள் என்னும் கருத்தைப் பெறவைப்பதோடு 'வாசகம் வல்லார் முன் நின்று யாவர் வாய் திறக்க வல்லார்' என்ற கேள்விக்கு

*இன்பம் பெருக்கி, இருள் அகற்றி எஞ்ஞான்றும்*
*துன்பம் தொடர்வு அறுத்து சோதிஆய், அன்பு அமைத்து*
*சீர் ஆர் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே*
*ஊர் ஆகக் கொண்டான் உவந்து*

என எளிமையாகவும் செய்யுள் நலம் மலியக் கூறுகின்றார். திருவருளின் பேரொளியால் பார்க்கும் இவருக்கு, வாழ்க்கையில் அகத்தும் புறத்தும் தோன்றுவனவும் ஒன்றுக்கொன்று தொடர்ச்சி இல்லாமல் பலவகையாகச் சிதறுண்டு கிடப்பனபோல் காணப்பெறுவனவுமான பல்வேறு நிகழ்ச்சிகளின் உண்மைகள் புலனாகின்றன. அவற்றையெல்லாம் ஒருமுறையாக கோத்து இறைவன் திருவடிப் புகழ்ச்சியில் கலந்து பாடுகின்றனர். எனவே இவர் பாடல்கள் மக்கள் முன்னேறுவதற்கான உண்மைகளுள் இன்றியமையாதன வற்றைக் கற்போர் உள்ளத்தில் பதியவைக்கின்றன. வாழ்க்கையைச் செம்மைப் படுத்துகின்றன. தெய்வநெறியைத் தெளிவாகக் காட்டி அந்நெறியிலேயேச் செல்கின்றன. திருவருளின் அளப்பெரும் ஆற்றலையும் அவ்வாற்றலால் அன்றி ஆன்மான ஈடேறுதல் இயலாதென்னும் உண்மையையும் உலகறிய செய்கின்றன.

சிவபெருமான் தன்னை ஆட்கொண்டருளியதின் விளைவாகிய பேரானந்தத்தையும் அப்பேரருளுக்கு எவ்வாறு கைம்மாறு செய்யப் போகின்றோம் என்ற ஏக்கத்தையும் இஞ்ஞான நூலின் பலபகுதிகளிலும் காணலாம். ஞானப்பேரொளியிற் கலந்து நிற்கும்போதுள்ள எல்லாவற்றையும் மறந்த பேரானந்தம் அந்நிலையில் இருந்து ஒரு சிறிது விலகினும் ஏற்படும் பொறுக்க ஒண்ணாத் துன்பமும், மீண்டும் அந்த ஞானப்பேரொளியின் வழியிற் கலக்க வேண்டும் என்ற பதைபதைப்பும் நெறியில் நின்று அருள் நிழல் அடைந்து இன்புற்று ஏமாந்திருக்கும் பல அடியார்களின் நினைவும், அத்தகைய அடியார்களுடன் மீண்டும் கலந்து வாழவேண்டும் என்ற வேட்கையும், தொட்ட இடங்களில் எல்லாம் தோன்றுகின்றன. இவ்வாறு உள்ள பலதிரப்பட்ட நிலையை மிகவும் சுருக்கமாகக் கற்போர் உள்ளம் கனியும்படி,

சூடுவேன் பூங்கொன்றை; சூடிச் சிவன் திரள் தோள்
கூடுவேன்; கூடி மயங்கி, மயங்கி நின்று
ஊடுவேன்; செவ்வாய்க்கு உருகுவேன், உள் உருகித்
தேடுவேன்; தேடி, சிவன் கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன்; அனல் ஏந்தி
ஆடுவான் சேவடியே பாடுதும்காண்; அம்மானாய்

என்று மாணிக்கவாசகர் சிவனையும் அவன் பெருமையையும் பற்றிக் கூறுகின்றார்.

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக:-**

**2 (அ) குறுந்தொகைப் பாடல்களில் காணப்பெறும் உவமைச் சிறப்பை எடுத்துக்காட்டுகளால் விளக்குக.**

முனைவர் கா. காமராஜ்

**உவமை விளக்கம்**

உவமை என்பது பொருளைத் தக்க ஒப்புமை கொண்டு உணர்த்துவதாகும். தொல்காப்பியர் தம் பொருளதிகாரத்தில் உவமை இயல் என்னும் பகுதியில் உவமையின் இலக்கணத்தைத் தெளிவுபடுத்துகின்றார். இவருடைய கருத்தின்படி உவமை என்பது பொருளின் தன்மையைப் புலப்படுத்துவது ஆகும். வினை, பயன், மெய், உரு ஆகிய பொருளின் தன்மைகளை உவமைகள் சிறப்பிக்கின்றன என்பது அவர் தரும் விளக்கமாகும்.

*வினைபயன் மெய்உரு என்ற நான்கே*
*வகைபெற வந்த உவமைத் தோற்றம்* *(தொல்.சூ.272)*

எனத் தொல்காப்பியர் உவமையை வகைப்படுத்திக் காட்டுகிறார்.

வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கினைப் பண்பு, தொழில், பயன் என மூன்றாக அடக்கிக்காட்டுகின்றார் தண்டியலங்கார நூலாசிரியர்.

உவமை என்பது கவிஞனின் அனுபவப் பொருளாகும். பொருள் என்பது அவன் காணும் புதிய பொருளாகும். அவன் ஏற்கனவே கண்டு வைத்து அப்பொருளின் உயர்வு தாழ்வுகளை அளந்து அறிவிக்கிறான் எனக் கூறலாம். பொதுவாகப் பொருளின் சிறப்பை வற்புறுத்தவே உவமை அமைக்கப்படுகிறது. அதன் உயர்வைக் காட்ட அதனினும் உயர்ந்த பொருளையே வரையறையாக அமைக்க வேண்டியுள்ளது. எனவே உவமை பொருளைவிட உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. இக் கருத்தை ஆசிரியர் தொல்காப்பியனார் வற்புறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

குறுந்தொகை பாடல்களில் காணப்பெறும் உவமைச் சிறப்புக்கள் என்பன பின்வரும் பாடல் வரிகளின் மூலம் விரிவாக எடுத்துரைக்கப்படுகின்றன.

**சிறுகோட்டுப் பெரும்பழம்**

*வேரல் வேலி வேர்கோட் பலவின்*
*சாரல்நாட செவ்வியை யாகுமதி*

*யாரஃ தறிந்திசி னோரே சாரற்*
*சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங் கிவள்*
*உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே*

பாடல் உவமை விளக்கம்

சிறு மூங்கிலாகிய வேரல்வேலியை உடைய, வேர் கோள் பலவின் சாரல் நாடா. வேரிலே பழக்குலைகளை உடைய பலா மரங்கள் செரிந்த பக்கத்தை உடைய மலை நாடனே, சாரல் பக்க மலையில் பலாமரத்தின் சிறிய கொம்பில் பெரும்பழம் தொங்கியது போல, இத்தலைவியினது உயிரானது மிகச் சிறுமையை உடையது. காமநோய் மிகப் பெரியது. அஃது அந்நிலையை அறிந்தவர் யார்? ஒருவரும் இல்லை செவ்வியை ஆகுமதி அவளை வரைந்து கொள்ளும் பருவத்தை உடையை ஆகுக.

செம்புலப் பெயல்நீர்

*யாயும் ஞாயும் யாராகியரோ?*
*எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்?*
*யானும் நீயும் எவ்வழி அறிதும்?*
*செம்புலப் பெயல்நீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே*

பாடல் உவமை விளக்கம்

வானத்துப் பெயல் செந்நிலத்தோடு தானே வீழ்ந்து அதன் நிறத்தைப் பெற்றுக் கலந்தது போல, யானும் நின்னொடு கலந்து நின்வயம் ஆயினேன். இனியான் நின்னைக் கலந்துபெற்ற இந்த உறவுப் பிணைப்பைக் கைவிட்டு நின்னைப் பிரிதல் அரிது என்பதாம். தாய்வழியாக வந்த உறவாலும், தந்தை வழி வந்த உறவாலும் அல்லது பழகிய பழக்கத்தாலும் தலைவன் தலைவியர்க்கிடையே காதலுணர்வு முகிழ்ப்பது இயல்பு. இவை ஏதுமில்லாத போதும் அன்புடைய நெஞ்சங்கள் தாம் கலந்தனவாதலால் அந்தக் கலப்புத் தெய்வத்தின் அருளால் வந்தது என்கின்றனன் போலும். அந்தத் தெய்வ அருள் பிரியாதிருக்கவும் செய்யும் என்றும் கூறுகின்றனன்.

பூவில் வறுந்தலை போலப் புல்லென்று

*எங்கி இழந்த வறுமையர் பாணர்*
*பூவில் வறுத்தலை போலப் புல்லென்று*
*இளைமதி வாழய நெஞ்சே மனைமரத்து*
*எல்லுறு மௌவல் நாறும்*
*பல்பிருங்கூந்தல் யாருளர் நமக்கே*

**உவமை விளக்கம்**

எங்கு என்றும் வேளை இழந்ததனால் வறுமையை யுடையவரான பாணரது பூவில்லாத வாரிய தலையே போன்று விளக்க மற்று வருந்தினை; நெஞ்சே! வாழ்வாயாக மனையையடுத்துள்ள மரத்திற் (படர்ந்த) விளக்கமுறும் முல்லைப்போன்று தோன்றும் பல்லினையும் கரிய கூந்தலுமுடையார் எவர் உளர்.

**எழுகளிறு மிதித்த ஒரு பழம் போல**

*கருங்கடில் வேம்பின் ஒன்பூ யாணர்*
*என்னை இன்றியுங் கழிவது சொல்போ*
*ஆற்றய லெழுந்த வெள்கோடு அதவந்து*
*எழுகளிறு மிதித்த ஒருபழம் போலக்*
*குழையக் கொடியோர் நடவே*
*காதலர் அகலக் கல்லென், ஒவ்வே*

**பாடல் உவமை விளக்கம்**

பெரிய தாளையுடைய வேம்பினது விளக்கும் மலரின் புது வருவாயையுடைய (இப்பின் பனிக்காலந்தான்) எனது தலைவன் இல்லாமலும் கழிந்திடுமோடி. ஆற்றின் அயலிடத்து எழுந்த வெள்ளிய கோட்டினையுடைய ஆதவத்தினது, ஆற்றில் மூழ்கி எழுந்த களிறு மிதித்திட்ட ஒரு பழத்தைப்போல நான் வருந்தும்படி அயலவாராகிய கொடிய மகளிர் நா அலர்கூறிக் கல்லென முழங்கின என்னும் பாடலின் உவமை விளக்கப்படுகிறது.

**தினைந்தா என்ன சிறுபசுங்கால**

*யாரு மில்லைத் தானே கள்வன்*
*தானவன் பொய்ப்பின் யானெவன் செய்கோ*
*தினைந்தா என்ன சிறுபசுங் கால*
*ஒழுகுநீ ராரல் பார்க்கும்*
*குருகு முண்டு யாண் மணந்தி ஞான்றே*

**பாடல் உவமை விளக்கம்**

எவருமிலர் (அவன் கூறிய சூளுரையை உணருபவர்) அவன் தான் கள்வனாயினான். அவன் (விரைவில் வரைவேன் என்ற அச்சூளுரையைப்) பொய்த்தானாயின், படின் என் செய்வேன், தினையினது நாளை அயர்ந்த் சீறிய பரிய கால்களையுடைய (இடையராத) ஒழுகும் நீரின் கண் ஆரல்மீனை (உணவிற்காகப்) பார்க்கும் குருகும் உண்டு. அவன் மணந்த அன்று என்று இப்பாடலின் உவமை விளக்கப்படுகிறது.

இது போன்ற பல்வேறுபாடல்கள் குறுந்தொகையில் உவமைச் சிறப்புக்களுடன் தெளிவாக விளக்கப்படுகின்றன.

## 2 (ஆ) சிலப்பதிகார 'வேட்டுவ வரி' நிகழ்ச்சிகள் வழி வெளிப்படும் பண்பாட்டுக் கூறுகளை எடுத்துரைக்க?

முனைவர் கா. காமராஜ்

### வேட்டுவ வரி

பாலை நிலத்து மக்களாகிய வேட்டுவர் ஆடிய கூத்தைப் பற்றிக் கூறும் காதை சிலம்பில் மூன்று காதைகள் 'வரி' என்ற தலைப்பில் அமைந்துள்ளன. அவை 1. கானல்வரி 2. வேட்டுவ வரி 3. ஊழ்சூழ் வரி. வரி என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. அவற்றுள் இசை, கூத்து என்ற இரு பொருள்கள் இங்கு உணர்த்தப் பெறுகின்றன. கானல்வரி இசையால் பெற்ற பெயர் வேட்டுவ வரியும், ஊழ்சூழ் வரியும் கூத்தால் பெற்றபெயர்கள். பாலை நில மக்களாகிய வேட்டுவரின் வாழ்க்கையைப் பற்றி இக்காதையுள் கூறுகிறார். கொற்றவையை வழிபடுகின்ற வேட்டுவர், கொற்றவைக் கோலத்தை அம்மறக்குலத்தில் தோன்றிய குமரிக்கு அணிவித்து அவளை ஆட்டுவித்துத் தாங்களும் ஆடுகின்றனர். கொற்றவையை வழிபடுகின்ற சாலினி என்பாள், தெய்வமேறி கண்ணகியின் பெருமைகளைப் பேசுகின்றாள். அவற்றைக் கண்ணகியும், கோவலனும், கவுந்தியடிகளும் காண்கின்றனர். கண்ணகி நாணமடைகின்றனள். கண்ணகி இரண்டு கூத்துக்களைக் காண்கின்றாள். ஒன்று வேட்டுவர் ஆடிய வேட்டுவவரி ஆய்ச்சியர் ஆடிய குரவைக்கூத்து.

பாடல்

*கடுங்கதிர் திருகளின் நடுங்கி அஞர் எய்தி*
*ஆறுசெல் வருகத்துச் சீரடி சிவப்ப*
*நறும்பல் கூந்தல் குறும்பல உயிர்த்தாங்கு*
*ஐயை கோட்டத்து எய்யா ஒருசிலை*
*வருந்து நோய்தனிய இருந்தனர் உப்பால்*

விளக்கம்

கதிரவன் கடுமையாக எரிக்கத் தொடங்கியதால் மிகுந்த துன்பம் அடைந்து, வழிச் சென்ற வருத்தத்தால் சிறிய அடிகள் சிவக்க, நறிய மணம் பொருந்திய கூந்தலை உடைய கண்ணகி, பலமுறை குறுமூச்சுவிட்டு, கொற்றவை கோயிலில் பிறர் அறியாதவாறு ஒரு பக்கத்தே கோவலன் கவுந்தியுடன் இருந்தனள்.

பாடல்

*குமரிக் கொற்றவை கோலம் புலனதல்*
*. . . . . . . . . . . . . . . . . . . . . . . .*

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

*கலைப்பரி ஊர்தியைக் கைதொழுது ஏத்தி*

**விளக்கம்**

மறவர்கள் தம் தலையைக் கொற்றவைக்கும் கடனாகப் பழியாகத் தாமே அறுத்து இட்டு, பிறர் எண்ணுவார்களே அல்லது தாம் இறந்து சுடுகாட்டில் சுட்டு தலைப்போகாது பழங்குடி மறபினைச் சார்ந்த குமரிப்பெண் ஒருத்தியைத் தேர்ந்தெடுத்து இங்குப் பகைவர் தலையை எண்ணும் மறவர் என்றும் பொருள் கொள்ளலாம். அவள் வளைந்த நீண்ட கூந்தலைச் சிறு வெள்ளைப் பாம்புக்குட்டி போன்ற பெண் கயிற்றால் கட்டி காவல் காடு சூழ்ந்த தோட்டப்பயிரை அழித்த காட்டுப் பன்றியின் வளைந்த வெண்மையான பல்லைப்பிடுங்கி, அதை வெண் பிரைத்திங்களாக அவள் தலையில் சாத்தி, வலிமை வாய்ந்த புலியின் வாயைப் பிளந்து பெற்றபற்களைக் கொண்டு சுட்டிய புலிப்பல் தாலியை அவள் கழுத்தில் அணிந்து, வரியும், புள்ளியும் உடைய புலித் தோலை அரையில் மேகலையாக உடுத்தி, அன்புடன் வயிரவில்லை வளைத்து அவள் கையில் கொடுத்து முறுக்குண்ட கொம்பினையுடைய கலைமானின் மீது அவளை ஏற்றி, பாவை, கிளி அழகிய சிறகுகளையுடைய காட்டுக் கோழி, நீலநிற மயில் பந்து, கழற்சிக் காய் கொடுத்துத் தொழுதனர். வண்ணக் குழம்பும், சுண்ணப் பொடியும், குளிர்ந்த நறும் சந்தனமும் அவரை, துவரை போன்ற நவதானியங்களை அளித்த புழுக்களையும், எள்ளுருண்டையும், நிணச் சோறும், பூக்களும், நறுமணப் புகைகளும், விருப்பமான மணப் பொருள்களையும், ஏவல் செய்யும் ஏற்றியவர் ஏந்தியவர்களாய் அவள் பின்னே வர வழிப்பறிக் கொள்ளை அடிக்கும் போது, முழங்கும் பறையும், சூறை கொள்ளும் போது ஊதும் சின்னமும் துத்துரிக் கொம்பும், குழலும் சிறப்புப் பொருந்திய வெண்கல மணியும் இணைந்து முழங்க, கொற்றவை முன் நின்று, விலைப்பலி கொடுக்கும், மலர்ப்பலி பீடிகையில் மான் ஊர்தியையுடைய கொற்றவையைக் கையால் தொழுது, நாவால் புகழ்ந்து ஏத்தினர்.

**பாடல்**

*பேதுறவு மொழிந்தனள் மூதறிவு ஆட்டி என்று*

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

*வரியுறு செய்கை வாய்ந்ததால் எனவே*

**விளக்கம்**

சந்திரனின் வெள்ளிய பிறையைச் சூட்டிய தலையை உடையவள், நெற்றியில் திறந்து விழித்த இமைக்காத

விழியையுடையவள், பவளம் போன்ற வாயுடையவள், குளிர்ச்சியான ஒளியுடைய பற்களையுடையவள், நஞ்சை உண்டதால் கறுத்த கழுத்தையுடையவள், கொடிய சினைத்தையுடைய வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகப் பூட்டி மேருமலையை வில்லாக வளைத்தவள். பல்லில் துளையுடைய பாம்பை மார்புக்கச்சாக அணிந்துள்ள மார்பினள். வலையணிந்துள்ள கையில் சூலத்தை ஏந்திய யானைத்தோலைப் போர்வையாகப் போர்த்திக் கொண்டு சிங்கத்தின் தோலை மேகலையாக அணிந்திருப்பவள். ஒரு காலில் சிலம்பு, மற்றொரு காலில் வீரக்கழலும் அணிந்து அவை ஒலிக்கும் சிறிய அடியுடையவள். மேலான வெற்றியையுடையவள். தொழிலில் வல்ல கொற்றவை, உடல் வேறு, தலை வேறு என்ற இரண்டு வேறுபட்ட உருவினை உடைய திரண்ட தோலினையுடைய அவுணன் விக்கிற மாசுரன் தலையைத் துணித்து அதன் மீது நின்ற பெண் தேவரும் முனிவரும் மக்களும் தொழும் அவள் அமரில் வள்ளவள். சூலாயுதத்தைத் தாங்கியவள். நீல நிலத்தினள். மாலானவனுக்குத் தங்கை, தலைவி, திருமகள், சமயமகள், பெரிய கையில் கொடிய வாளினைக் கொண்டவள். பாயும் மானையுடையவள், பசுமையான தொடி அணிந்திருப்போள். ஆயும் கலைகளையுடைய சரசுவத அருங்கலங்கள் அனைத்தையும் உடையவள், சுற்றத்தினர் தொழ வந்த குமரிக் கோலத்தையுடையவள், போரில் வல்ல இளங்குமரியும் அருள் புரிந்தாள் கூத்துக் கோலம் கொள்ள வாய்த்தது என மறக்குடி மக்கள் போற்றிப்பரவினர்.

### வேட்டுவர் பண்பாடு

வேட்டுவர்கள் கொற்றவைக்குத் தங்களையே பலியாகத் தருகின்றனர்.

*துடியொட சிறுபறை வயிரொடு துவைசெய*
*வெடிபடி வருபவர் எயினர்கள் அரைஇருள்*
*அடுபுலி அனையவர், குமரி நின் அடிதொடு*
*படுகடன்இது, உருபலிமுக மடையே* **(சிலம்பு.12:20)**

வேட்டுவர்கள் அயல்நாட்டுப் பசுக்களைக் கவர்ந்து கொண்டு வந்த பின்பு அப்பசுக்களை வேல், வில் செய்து கொடுத்து கொல்பவனுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கின்றனர். பசுக்களைக் கவரச் செல்லும்போது நற்சொற்கள் சொன்ன கணியனுக்குப் பசுக்களைக் கொடுத்தனர். அவர்களைச் சார்ந்த எயினர், எயிற்றினர் இவர்களுக்கும் பசுக்களைக் கொடுத்தனர். தமக்கு உதவியவர்களுக்குத் தாம் கவர்ந்த பசுக்களைப் பகுத்துக் கொடுப்பதை ஒரு பண்பாகக் கொண்டிருந்தனர். இவ்வேட்டுவ மக்கள் இது இப்பண்பு அல்லது குழுப்பண்பு என்று கூறலாம்.

*தலைநாளை வேட்டத்துத் தந்தநல் ஆநிரைகள்*
*கொல்லன் துடியன் கொளைபுணர் சீர்வல்ல*
*நல்லியாழ்ப் பாணர் தம் முன்றில் நிறைந்தன*
*. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .*
*கள் விளையாட்டி நல் வேய் தெரி கானவன்*
*புள் வாய்புச் சொன்ன கணி, முன்றில் நிறைதன*

*(சிலம்பு.12:15-16)*

அதே போன்று முதியவர்ளுக்கும் தாம் கவர்ந்து வந்த பசுக்களைக் கொடுக்கின்றனர்.

**2 (இ) 'செங்கோன்மை' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் அரசனின் ஆட்சி பற்றிக் கூறுவன யாவை?**

**முனைவர் சு. தாமரைப்பாண்டியன்**

முன்னுரை

தமிழில் உள்ள பழைய நூல்களை மூன்று வரிசையாகப் பகுத்துச் சொல்வது ஒரு வழக்கு. 'பாட்டினும் தொகையினும் கீழ்க்கணக்கினும்' என்று அம்மூன்றையும் குறிப்பிடுவார்கள். அவை முறையே பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பவை. இந்த மூன்றில் பதினெண் கீழ்க்கணக்கு என்னும் வரிசையில் பதினெட்டுச் சிறுநூல்கள் அடங்கியுள்ளன. கணக்கு என்பது நூலுக்கு ஒரு பெயர். சிறுநூல்களைக் கீழ்க்கணக்கு என்று கூறினர். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று திருக்குறள். நீதி நூல்களுக்குள் சிறந்தவை நாலடியாரும், திருக்குறளும், "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்ற பழமொழியால் இதை உணரலாம். அந்த இரண்டிலும் திருக்குறள் மிகச் சிறந்தது என்பது புலவர் பலரும் ஒப்புக் கொண்ட உண்மையாகும். அத்தகையச் சிறப்புடைய நூலான திருக்குறளில் குறிப்பிடப்பட்டுள்ள செங்கோன்மை குறித்துக் காண்போம்.

திருக்குறள் அறிமுகம்

திருக்குறள் ஏழு சீர்களே கொண்ட இரண்டடிக் குறள் வெண்பாவால் 133 அதிகாரங்களும், அதிகாரத்திற்குப் பத்தாக 1330 பாக்களும் கொண்டு உறுதிப் பொருள்கள் மேல் இயன்ற ஒரு தனித்தமிழ் முதல்நூல். பல பெயர்களால் போற்றியுரைக்கப்படுவது இந்நூல். எனினும் திருவள்ளுவமாலை முதலான பண்டையப் பாக்கள் முப்பாலையே பெயராகக் குறித்தலால் ஆசிரியரே இந்நூலுக்கு இட்ட பெயர் முப்பால் என்பதாகும். அறம், பொருள், இன்பம் என முப்பால்களாக ஆசிரியர் வள்ளுவர் இதனை இயற்றினார். அறம் 38, பொருள் 70, இன்பம் 25, வள்ளுவர் சொன்ன பால்வகையாகும். அதிகாரப் பகுப்பும் வைப்பும் அவரே செய்திருக்க வேண்டும்.

திருக்குறளுக்கு உரை வகுத்தவர் பதின்மர் என்பதை,

> **தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்**
> **பரிதி பரிமேலழகர் - திருமலையர்**
> **மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர் நூற்கு**
> **எல்லையுரை செய்தார் இவர்**

என்ற வெண்பாவால் அறியலாம்.

திருக்குறளின் பெருமையினை "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதியாரும்; "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்தக் குறள் என்று ஒளவையாரும்;

**எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால்**
**இல்லாத எப்பொருளும் இல்லையால் - சொல்லாற்**
**பரந்தபாவால் என்பயன் வள்ளுவனார்**
**சுரந்தபா வையத் துணை**

என்றும், மதுரைத் தமிழ் நாகனாரும் கூறுவதன் அடிப்படையில் உணரலாம்.

**செங்கோன்மை - விளக்கம்**

தன் ஆட்சியின் கீழ் வாழும் மக்கள் செய்தக் குற்றங்களை ஆராய்ந்து, எவர் இடத்தும் அன்பு காட்டாது. நடுவுநிலைமை தவறாமல் அக்குற்றங்களுக்கு ஏற்ற தண்டனைகளைப் பொருத்தமாகத் தீர்மானித்துத் தீர்ப்பு வழங்குவது செங்கோல் முறை ஆகும். உயிரினும் சிறந்தார் இடத்தும் கண்ஓட்டம் தகாது என்பதால் 'யார் மாட்டும்' என்று வள்ளுவர் கூறுகிறார். குற்றம் செய்தவனைப் பாராது, செய்யப்பட்டுள்ள குற்றத்தை மட்டும் சிந்தித்து அதற்குத் தகுந்தவாறு தீர்ப்பினை வழங்குவது செங்கோன்மை என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**குடிமக்களை மேன்மைபடுத்துதல்**

உலகத்தில் உள்ள எல்லா உயிர்களின் வாழ்க்கையையும் வளம் ஆக்குவது மழை ஆகும். அதுபோல் நாட்டில் உள்ள அனைத்து மக்களின் நல்வாழ்வும் அந்நாட்டை ஆளுகின்ற அரசனின் செங்கோன்மையைப் பொருத்தது ஆகும். வான்போன்றே செங்கோலும் மக்களின் வாழ்விற்கு இன்றியமையாதது என்பதை செங்கோல் இல்லாமல் வான் இருந்தும் எவ்விதப் பயனுமில்லை என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார்.

**அறநெறிக்கு வித்திடுதல்**

எவ்வுயிர்க்கும் பரிவுகாட்டும் அறவோர் ஓதும் மறைநூலிற்கும் அம்மறைநூல் உணர்த்தும் அறநெறிக்கும் அடிப்படையாக அமைந்து இருப்பது அரசனின் செங்கோல் ஆகும். நூல் ஆசிரியரைப் போற்றுவதும் அவர்தம் நூல்களை அரங்கேறச் செய்வதும் அரசனின் தொழில் ஆகும் என உணர்கிறோம். செங்கோல் ஆட்சி இல்லை ஆயின் நாடு அறிவு எனும் ஒளி இழந்து, அறியாமை எனும் இருளில் சிக்கிச் சீரழியும் என்றும் வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

**குடிமக்களை அரவணைத்தல்**

குடிமக்களை தன் அன்பால் அரவணைத்துச் செங்கோல் நிகழ்த்துகின்ற பெரிய நிலத்திற்கு உரிய அரசனின் அடிகளை மக்கள் விடாது பற்றி நிற்பர். வருவார்க்கு இன்சொல் கூறுதலும் அவர்கள் தளர்ந்து இருந்தால் வேண்டுவன கொடுத்து அவர்களைத் தாங்குதல் அணைத்தல் ஆகும். அங்ஙனம் அணைத்துக் காக்கும் அரசன் குடிகளின் அன்பையும், ஒத்துழைப்பையும் பெறுவான் என்பது உறுதி என்று வள்ளுவர் தெரிவிக்கிறார்.

**பருவமழை பொய்யாமை**

முறைப்படி செங்கோல் நிகழ்த்தும் அரசனின் நாட்டில் பருவம் பொய்யாமல் மழை பெய்யும். அவ்வப்பொழுது பருவழை தவறாமல் பெய்வதால் காலங்களுக்கு உரிய விளைபொருளும் தவறாமல் விளைந்து நாட்டின் வளத்தைப் பெருக்கும். செங்கோல் ஆட்சி நிகழ்த்தும் அரசன் இறைவனுக்கு ஒப்பான ஆற்றலைப் பெற்று இருப்பதால் இயற்கையும் அவன் சொல்கேட்டு இயங்கும் என்கிறார் வள்ளுவர்.

**உண்மையான வெற்றியை நல்குதல்**

அரசன் ஒருவனுக்கு வேல் போன்ற படைக்கருவிகள் போர்க்களத்தே வெற்றி தருவன ஆகா. அவன் நிகழ்த்துகின்ற அறநெறி தவறாத செங்கோல் வளையாத 'அரசு ஆட்சியே' அவனுக்கு உண்மையான வெற்றியினைத் தருவது ஆகும். அறவழிப்பட்ட ஆக்கமும் அவனுக்கு வெற்றியைத் தரவல்லது என்று நவில்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

**உயிர்காக்கும் கருவியாதல்**

உலக உயிர்களைக் காக்கின்ற பொறுப்பினை அரசன் ஏற்று உள்ளான். அவ்வுயிர்களை வாட்டாமலும் வருத்தாமலும் நெருக்கடி நேர்ந்த இடத்திலும் முறை தவறாமலும் அவன் ஆட்சி நடத்துவான். ஆயின் அவனது செங்கோல் அவனது உயிரைப் பாதுகாக்கும் பொறுப்பை விருப்பமாய் ஏற்றுக்கொள்ளும். அரசனைக் காப்பது சுற்றம் அல்லாது சூரத்தன்மை வாய்ந்த படை அல்ல; அவனுக்கு அவனே காப்பு என்பது போல் அவனது செங்கோலே அவனைக் காத்து நிற்கும் என்று செங்கோன்மை சிறப்பு குறித்து வள்ளுவர்; குறிப்பிடுகிறார்.

**காட்சிக்கு எளியவனாதல்**

முறைநாடி வருவார்க்கு அரசன் காட்சிக்கு எளிமை உடையவனாய் இருத்தல் வேண்டும். முறை நாடியவர் கூறியவற்றை ஆராய்ந்து முறையான தீர்ப்பினைச் சொல்ல வேண்டும். அத்தகைய

அரசனையே மக்கள் போற்றுவர். அங்ஙனம் காட்சிக்கு எளிமையாக இல்லாமலும் வழக்கினை ஆராய்ந்து முடிவு கூறாமலும் இருக்கின்ற அரசன் பகைவர் இல்லாமலேயே தாழ்ந்த நிலையினை அடைந்து தானே கெட்டொழிவான் என்றும் கூறுகிறார் வள்ளுவர்.

### குடியைக் காத்தல்

தன் குடிமக்களைப் புறத்தே பிறர் வருத்தாதவாறு காத்தல் வேண்டும். அத்துடன் அமையாமல் தன்னாலும் அம்மக்களுக்குத் துன்பம் வராதவாறு நல்ல ஆட்சி நடத்த வேண்டும். குடிமக்கள் தவறு செய்பவர் ஆயின் தக்க தண்டனையால் அத்தவற்றைப் போக்குதல் அரசனின் கடமையே தவிரப் பழிதரும் செயல் ஆகாது என்கிறார் வள்ளுவர்.

### தீயவரைத் தண்டித்தல்

களைகளை வருத்துவது என்பது உழவனின் செயல் ஆகாது. நல்ல பயிர் களையால் கெட்டுவிடக் கூடாதே என்று எண்ணித்தான் நல்ல பயிர்களைத் தீமை செய்யக்கூடிய களையை வேருடன் பிடுங்கி உழவன் எறிகின்றான். அதுபோல கெட்டவர்களைத் தண்டித்தல் என்பது அரசனது தலையாயக் கடமை ஆகும். எனவே நல்லவர்களைக் காப்பதற்காக அல்லவர்களைக் கொலையால் தண்டிக்கும் அரசனின் செயல், பயிரைக் காக்க களையைப் பிடுங்கி எறியும் உழவனின் செயலுக்கு ஒப்பாகும் என்றும் வள்ளுவர் அறிவுறுத்துகிறார்.

### முடிவுரை

வள்ளுவர் செங்கோன்மை எனும் அதிகாரத்தை அமைத்து மன்னர்களின் ஆட்சி எவ்வாறு அமையவேண்டும் என்று கூறுகிறார். மன்னன் என்பவன் சுற்றம் பார்க்காது குற்றத்தை மட்டும் பார்த்து தீர்ப்பினை வழங்க வேண்டும். மேலும், காட்சிக்கு எளியனவாக இருந்து மக்களை அன்பால் அரவணைக்கும் தன்மை யுடையவனாகவும் விளங்க வேண்டும். அவ்வாறு விளங்கும் தன்மையே மன்னர்களைக் காக்கும் கருவியாகவும், வெற்றியை நல்கும் நல்வழியாகவும் அறநெறி காக்கும் செங்கோன்மையாகவும் அமையும் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

## பார்வை நூல்கள்

1. மு.பொ.மு. இராமசாமி, திருக்குறள் மிக மிக எளிய உரை, ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், 2008.

2. முனைவர் அ. சங்கரவள்ளிநாயகம், திருக்குறள் விரிவுரை, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, ஜனவரி, 1997.

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக:-**

**3 (அ) மாங்காட்டு அந்தணன் கோவலனிடம் உரைத்த செய்திகளைக் 'காடுகாண் காதை' வழிநின்று கூறுக.**

**முனைவர் சு. தாமரைப்பாண்டியன்**

முன்னுரை

சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய முதல் காப்பியம். இக்காப்பியம் குடிமக்கள் காப்பியம் என்றும் பொதுமைக் காப்பியம் என்றும் அழைக்கப்படுகிறது. இக்காப்பியத்தை இயற்றிய புலவர் இளங்கோவடிகள். இதன் தோற்றம் கி.பி. 2-ஆம் நூற்றாண்டு என்பர். சிலப்பதிகாரம் புகார்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் கொண்டுள்ளது.

சிலப்பதிகாரத்தில்,

*.அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்ற மாவதும்*
*உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்*
*ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பதும்*

எனும் மூன்று அறநெறிச் சிந்தனைகள் முன்மொழியப் படுகின்றன. இத்தகைய சிறப்புடைய சிலப்பதிகாரத்தில் மாங்காட்டு அந்தணன் கோவலனிடம் உரைத்த செய்திகளைக் காண்போம்.

கவுந்தியடிகளின் அறவுரை

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் தென்திசை நோக்கி பயணம் செய்தனர். அவ்வாறு பயணித்து வரும் வழியில் அசோக மரத்தின் நிழலில் எழுந்தருளிய ஆதியற்ற தோற்றத்தினை உடையவனான அறிவனைக் கண்டு மூவரும் தொழுகின்றனர். பின்பு கவுந்தியடிகள் சாரணர் தமக்கு உரைத்த தகைமை சிறந்த அருள்மொழிகளைக் கோவலன், கண்ணகிக்கு உரைக்கிறார். அதன்பின் அன்று இரவு மூவரும் அங்கு தங்குகின்றனர். மறுநாள் தென்திசை நோக்கி வழிநடந்து உறையூரைக் கடக்கின்றனர். வரும்வழியில் இளமரக்காவின்கண் இருந்தவோர் இருக்கையில் சென்று மூவரும் அமர்கின்றனர்.

மாங்காட்டு மறையோன் வருதலும் தென்னவனைப் புகழ்தலும்

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் அமர்ந்திருக்கின்ற வேளையில் மாங்காட்டு மறையோன் அங்கு வந்து

சேர்ந்தான். அவன் அங்கு வந்து சேர்ந்ததும், "தன் திருவடியிலே விளங்கும் வீரக்கழலின் ஒலியினாலேயே, தன் வலிமையின் அளவினை வேற்றரசர்கள் பலருக்கும் புரியுமாறு உணர்த்திய பெருமையுடையவன் பாண்டியன். அவன் தன்மீது வடிவேல் எறிந்த பெரும்பகையினைப் பொறுக்காது, கடலும் ஒரு சமயம் பொங்கி எழுந்தது. பஃறுளியாற்றுடனே பல மலையடுக்குகளையும் உடையதான குமரிமலைத் தொடரினையும், அக்கொடிய கடலானது தன்னகத்தே இழுத்து விழுங்கிக் கொண்டது. கடல்கோளால் அவ்வாறு இழந்த இடத்திற்கு ஈடாகப் புதிதாக எழுந்த வடதிசை கங்கையையும் இமயத்தையும் சென்று கைக்கொண்டு, தென்திசை முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆண்டவன் அத்தென்னவன் அவன் புகழ் வாழ்க.

திங்கட் செல்வனின் திருக்குலமாகிய பாண்டியன் குடியானது விளக்கம் அடையுமாறு, ஆயிரம் செங்கண்களை உடைய தேவன்கோமான் பூட்டிய திறன் விளங்கும் ஆரத்தைத் தன் ஒளிபொங்கும் மார்பிலே பூண்டவன் அப்பாண்டியன்; அவன் புகழ்வாழ்க!

எம்முதல்வனின் சென்னி முடியிலுள்ள வளையை உடைத்தோன் இவன் என்று இடியுடைப் பெருமழையானது பாண்டிய நாட்டிலே சிலகாலம் பெய்யாது ஒதுங்கிப்போயிற்று. எனவே கோபம் கொண்டு மேகங்களைச் சிறையிட்டு மழை பெய்விக்கச் செய்தவன் என்று பாண்டிய மன்னனை மாங்காட்டு மறையோன் பலவாறு போற்றுகிறான்.

**கோவலன் கேள்வியும் மாங்காட்டு மறையோனின் பதிலும்**

புகழ்ந்துரைத்த மாங்காட்டு மறையோனிடம் சென்று "யாது நுமது ஊர்? எதன் பொருட்டு ஈங்கு வந்தீர்" என்று கோவலன் வினவினான். அதற்கு மாங்காட்டு மறையோன் பதிலுரைத்தான். உயர்ந்த பொன்மலையின் மீது, நீலமேகமானது பக்கமெல்லாம் கவிழ்ந்து அகலாது படிந்து இருப்பதுபோல, ஆயிரம் தலைகளை விரித்து எழுகின்ற இயல்பினையும், அருந்திறலினையும் உடைய ஆதிசேடனாகிய பாயிலே பள்ளிக்கொண்டு, பலரும் தொழுது போற்ற, அலை எழுகின்ற காவிரியின் அகன்ற ஆற்றிடைக் குறையிலே, திருமகள் அமர்ந்த மார்பனான திருமால் பள்ளிக் கொண்டிருக்கின்ற கோலத்தைக் காண விரும்பினோம்.

அருவிகள் மிகுந்த திருவேங்கட மலையின் உச்சிமீதிலே, இருபாலும் ஞாயிறும் திங்களும் விளங்கும் உயர்ந்த இடைநிலைத்

தானத்திலே, மின்னாகிய புதிய ஆடையை உடுத்திக் கொண்டு, வானவில்லாகிய பணிகள் பூண்டு, சக்கரப்படையும், பால்நிற வெண்சங்கமும் தாமரைக் கையிலே ஏந்தியவனாக, நலம் கிளர்விக்கும் ஆரத்தினை மார்பிலே பூண்டு, பொன்னிற பூக்களாகிய ஆடையோடு பொலிவாகத் தோன்றும் செங்கண் நெடுமாலின் நின்ற திருக்கோலத்தையும் காண விரும்பினேன். அதன் பொருட்டு இவ்வழியாக வந்தேன். எனது ஊர் மேற்கு மலைப் பக்கத்தே உள்ளதான 'மாங்காடு' என்று மாங்காட்டு மறையோன் தெரிவித்தான்.

### கோவலன் மதுரைக்கு வழிகேட்டலும் மறையோனின் பதிலுரையும்

"மாமறை முதல்வனே! மதுரைக்குப் போகும் வழியைப் பற்றி எனக்குக் கூறுக" என்றான் கோவலன். அதற்கு மாங்காட்டு மறையோன், வேனிலாகிய அமைச்சனோடு வெம்மையான கிரணங்களைச் சொரிகின்ற வேந்தனான கதிரவன் மாறுபட்டு, நிலத்தையெல்லாம் வேறுபடுத்த, தம் தம் தன்மையிலே அவை குறைபாடுற்று, முல்லை, குறிஞ்சி என்னும் பழைய முறைமைகளிலேயிருந்தும் திரிந்து, நல்லியல்புகள் முழுதும் அறவே இழந்து, வழிச்செல்வாரை நடுங்கு துயரம் உறுமாறு செய்து, 'பாலை' எனப்படுவதொரு கொடிதான வடிவினையும் கொள்ளுகின்ற இக்காலத்திலே, இக்காரிகையாளுடன் மதுரைப் பயணத்தினை மேற்கொண்டு இங்கு வந்திருக்கின்றீரே? இதுதான் நுமக்குத் தகுமோ? என்கிறான் மாங்காட்டு மறையோன். மேலும், மதுரைக்குச் செல்ல மூன்று வழிப்பாதையுள்ளன என்றும் கூறுகிறான்.

### வலப்பக்க வழிப்பாதை

வலப்பக்க வழிப்பாதை வழியாக நீர் சென்றால், தலைவிரிந்த வெண்கடம்பும், பட்டுப்போன ஓமையும், பொரிந்த அடியினையுடைய வாகையும், புல்காய்ந்த மூங்கிலும், புரியுடைய 'மரல்' என்னும் கள்ளியும் கரிந்து கிடக்கும் இடங்களையும் காண்பீர். பின்பு, நீரினை விரும்பித் தாகம் தாங்காது மான்கள் நின்று கதறுகின்ற கானமும், எயினர் குடியிருப்பும் கடந்து செல்ல நேரிடும். அதன்பின், ஐவனமென்னும் வெண்ணெல்லும், கணுக்கள் அற்றுப்போன கரும்பும், கொய்யும் பருவத்தினையுடைய பூந்தினையும். கொழுமையான புனத்தில் விளையும் வரகும், வெள்ளுள்ளியும், மஞ்சளும், அழகிய கொடியினையுடைய கவலையும், வாழையும், கமுகும், குலை தாழ்ந்து தொங்கும் தெங்கும், பலாவும் ஆகிய இவைகள் அடுத்தடுத்து நிறைந்த, தென்னவனின் சிறுமலையானது

விளங்கித் தோன்றும். அம்மலைக்கு வலப்புறமாக நடந்து போவீரானால், பேரூரான மதுரையை அடையலாம்.

**இடப்பக்க வழிப்பாதை**

வலப்பக்க வழியே செல்லவில்லை எனில் இடப்பக்க வழியாக செல்லலாம். சிறகினையுடைய வண்டினம் செவ்வழிப் பண் முரல்கின்ற ஆழமான குளங்களும், வயல்களும், குளிர்ந்த சோலைகளும் விளங்கும் மருதநிலத்தையும், அதன்பின் அருஞ்சுரங்கள் பலவும் கடந்து சென்றால் திருமாலிருங் குன்றத்தினைச் சென்று சேர்வீர். அங்கே பெருமயக்கத்தைப் போக்குகின்ற பிலந்து வழி ஒன்று உள்ளது. அப்பிலத்தினுள் (பிலம்-பூமியுள் தோன்றும் பொந்து அல்லது குடையப்பெற்ற நிலவறை) வானோடும் போற்றும் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி என்னும் மூன்று பொய்கைகளை நீவீர் காணலாம்.

புண்ணிய சரவணத்தில் நீராடினால், விண்ணவர் கோமான் செய்த விழுநூலாக ஐந்திரத்தின் செறிவெல்லாம் அடைந்து பெருந்தமிழ் வல்லுநராக ஆவீர்கள். பவகாரணியில் நீராடினால், இப்பிறப்புக்குக் காரணமான முற்பிறவி நிலையெல்லாம் நன்கு அறிவீர்கள். இட்ட சித்தியிலே மூழ்கினால் நீர் எண்ணியது நும்மை வந்து அடையும். அங்கே பிலத்துள் செல்ல விரும்பினால் ஓங்கி உயர்ந்த மலை மேலிருக்கும் உயர்ந்தோனைத் தொழுது வலம் வந்தால், கார்மேகம் போன்ற கூந்தலையுடைய பொற்கொடியாள் ஒருத்தி வந்து தோன்றுவாள். அவள் பெயர் வரோத்தமை. அவள் இம்மைக்கு இன்பமும் மறுமைக்கு இன்பமும், இம்மையும், மறுமையும் என இரண்டும் இல்லாமல் ஒரு செம்மையில் நிற்பதும் ஆகிய நெறிகளுக்கு விடை கேட்பாள். அவற்றிற்கு நீங்கள் நேரிய பதிலுரைத்தால் பிலவாயிற் கதவினைத் திறந்து விடுவாள். பின்பு அவள் காட்டிய வழியில் சென்றால் பல கதவுகள் தோன்றும். ஒட்டுக் கதவு ஒன்றும் இடையே தோன்றும்.

அதற்குமேல், சித்திரமாகத் தீட்டப்பெற்றிருக்கும் பூங்கொடிபோல ஒருத்தி எதிர்பட்டு. 'இறுதியற்ற இன்பம் எதுவென' கேட்பாள். அதற்கு நீவீர் பதிலுரைத்தால் மேலே சுட்டிய மூன்று பொய்கைகளின் கரையையும் காட்டி மீள்வாள்.

அறுமறைகளின் பாங்கிலே ஐந்தாகவும், எட்டாகவும் வரும் எழுத்து முறையோடு கூடிய இரண்டு மந்திரங்களையும், ஒரு வழிப்பட்ட மனத்துடன் ஓதி வழிபட்டால் இட்டசித்தி பொய்கை

தோன்றும். அதிலே நீர் நீராடினால் மற்ற இரண்டு பொய்கைகளும் உமக்குத் தோன்றாது. எனினும் நீவீர் அதனைப் பற்றி நினைப்பாது திருமாலின் பொற்றாமரைத் தாள்களை உள்ளத்தில் எண்ணி அந்த இட்ட சித்தியிலே மூழ்குங்கள்; அப்போது கருடக்கொடி பறக்கும் அழகிய நீண்ட கொடிமரத்தின் உச்சி நுமக்குத் தோன்றும். அங்கு அவன் துணை மலர்த்தாள்கள் நும்மைத் தம்பால் ஏற்றுக்கொண்டு, நும்பலத் தொடர்பான பழவினைத் துயரையெல்லாம் போக்கும். அந்தப் பேரின்பத்தைப் பெற்றுப் பின் நீவிர் பாண்டிய மரபினரின் மதுரைக்குச் செல்வீர்களாக! காணத் தகுந்த பிலத்தின் தன்மைகள் இவைதாம்.

நடுவழிப்பாதை

மேற்கண்ட இரண்டு வழிகளிலும் நீவீர் செல்ல விரும்பவில்லையானால், நடுவாகச் செல்லும் வழியானது செம்மையான வழியாகும். தேனொழுகும் மலர்ச்சோலைகள் சூழ்ந்த ஊர்கள் இடையிடையே உள்ளதான காட்டினைப் பலநாட்கள் நடந்து கடந்தால். அவ்வழியிலே, பெருந்துயர் தரும் கானுறை தெய்வம் ஒன்று எதிர்ப்படும். காண்பவர் நடுக்கமுறாத படியாக, அவர் விருப்பம் கொள்ளும் உருவத்துடனேயே, அது வந்து தோன்றும். துன்பம் எதுவும் செய்யாமலே அவ்வழியே போவாரை மேலும் போகாது தடுக்கவும் அது முயலும். அதனையும் கடந்து மேற்சென்றால் மதுரைப் பெருவழியெல்லாம் ஒன்றாக விளங்கும். நீங்கள் சென்று வருக. யானும் என்வழியே போய்வருகிறேன் என்று மாங்காட்டு மறையோன் விடைபெற்றுச் செல்கிறான்.

முடிவுரை

கவுந்தியடிகள் மாங்காட்டு மறையோனின் கருத்தாடலை மறுத்துரைத்தார். மேலும் மறையோன் கூறிய மூன்று வழியினையும் ஏற்றுக்கொள்ளாமல் மாற்று வழியில் கோவலன், கண்ணகியை கவுந்தியடிகள் அழைத்துச் சென்றார். க்வுந்தியடிகள் முதல்வழியில் அழைத்துச் சென்றிருந்தால் வணிகக் குடியிருப்பை அடைந்திருப்பார்களோ என்னவோ! பொற்கொல்லனைச் சந்தித்திருக்கமாட்டார்கள். இரண்டாவது வழியே சென்றிருந்தால் முற்பிறவியின் தன்மை உணர்ந்து இட்டசித்தி பெற்றிருப்பர். மூன்றாம் வழியைத் தேர்ந்தெடுத்ததினால் தீவினை மூண்டது. கோவலன் மரணத்திற்கு வித்திட்டது என்பதனை இதன்மூலம் அறிந்துக்கொள்ள முடிகிறது. மேலும் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும் இதன்வழி புலனாகிறது.

## 3 (ஆ) கும்பகருணன் அறவோன் என்பதை அவன் உரைவழி உணர்த்துக.

முனைவர் சு. தாமரைப்பாண்டியன்

### முன்னுரை

கம்பன் தன்னுடைய புகழ் காப்பியமான இராமாயணத்தின் பாத்திரங்களை அமைக்குந்திறன் உள்ளத்திற்கு நிறைவு தருவதாக உள்ளது. 'அறம் வாழ மறம் தேயும்' என்ற கொள்கையை நிலைநாட்ட வந்தவன் கவிச்சக்கரவர்த்தி கம்பன். அறத்தின் நாயகனான ஒருவனைப் படைத்து அவனைச் சுற்றிலும் அன்பு-ஆண்மை-ஆசை-வீரம்-மானம் ஆகிய அருங் குணங்களைக் கொண்ட ஆனால், அறச்சார்பு அற்றுவிட்ட பலதிறப்பட்ட பாத்திரங்களை அமைத்துக் கொள்கிறான். அன்பு மறந்த அறத்தினையும் அறம் திறம்பிய மறத்தினையும் மோதவிடுகிறான். மோதலின் பலனாய்ப் பிறந்ததே கற்பாருக்குக் களிப்பேருவகை தரும் கம்பராமாயணமாகும். கம்பராமாயணத்தில் காப்பியத்தின் தொடக்கத்திலிருந்து முடிவுவரை வருகின்ற பாத்திரங்கள் சில. இடையில் வந்து இறுதிவரை நிற்கின்ற பாத்திரங்கள் சில. ஆனால் இடையில் வந்து இடையில் மறைந்தாலும் என்றும் நின்று வாழ்கின்ற பாத்திரங்கள் மிகச் சில. இதில் மூன்றாவது பிரிவைச் சார்ந்தவனே கும்பகருணன். அத்தகைய கும்பகருணன் அறவோன் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

### நன்றி மறவாமை

இராவணன் இராமனுடன் போர் செய்து தோல்வியுற்றுத் திரும்புகிறான். தோல்வியை எண்ணி எண்ணி மனம் வருந்துகிறான். அப்போது மலியவான் இராவணனுக்கு உற்சாகம் தரும் விதமாக "கும்பகருணனைப் போருக்கு அனுப்பினால் வெற்றிபெறலாம்" என்று ஆலோசனைக் கூறுகிறான். இராவணனும் அப்போதுதான் எண்ணுகிறான். கும்பகருணனை அன்று போருக்கு அனுப்பியிருந்தாலோ அல்லது தன்னுடன் அழைத்துச் சென்றிருந்தாலே, இன்று தனக்கு ஏற்பட்ட இந்த அவமானம் நேர்ந்திருக்காது என்று எண்ணுகிறான். எனவே கும்பகருணனைத் துயிலெழுப்ப கட்டளையிடுகிறான். அவ்வாறு, கும்பகருணனை எழுப்புமாறு கூறியபொழுது "இடைபேரா இளையோன்" என்று கும்பகருணனை இராவணன் சிறப்பித்து பேசுகிறான். இவ்வாறு

இராவணன் பேசுகின்ற பொழுது பகைவருடன் சேர்ந்துவிட்ட வீடணையும் குறிப்பால் எள்ளி நகையாடுகிறான்.

இராவணனின் ஏவல்படி பகீரத முயற்சி செய்து கும்பகருணன் எழுப்பப்படுகிறான். கும்பகருணன் துயிலெழும்பும் போதெல்லாம் கும்பகருணனுக்கு அறுநூறுவண்டி மாமிசமும் ஆயிரங்குடம் கள்ளும் கொடுக்க இராவணன் ஏற்பாடு செய்திருந்தான். இதன் மூலம் தம்பியைப் புரப்பதிலே பெருத்த அன்பு கொண்டிருந்தான் இராவணன் என்பது புலப்படுகிறது. இங்ஙனம் இராவணன் உண்டி கொடுத்து ஆதரித்ததாலேயே, அவனுக்காக உயிர் கொடுக்க வேண்டும் என்ற செஞ்சோற்று அறமாகிய நன்றியுணர்வு கும்பகருணன் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. எனவேதான் இராவணன் சீதையைச் சிறைபிடித்து அடைய நினைப்பது அறமற்ற செயல் என்று அறிந்தும் அண்ணனுக்காக போரிட்டு வீர மரணமடைகிறான். இதன் மூலம் கும்பகருணனின் செஞ்சோற்றுக் கடனும் நன்றி மறவாமையாகிய பண்பும் புலப்படுகிறது.

### அறநெறி புகலுதல்

துயிலெழும்பிய கும்;பகருணன் பசியாறிய பின்னர் தனது அண்ணன் இராவணனைக் கண்டு அடிபணிந்து வணங்குகிறான். இராவணன் தம்பியை அவசரக் கோலத்தில் போர்க்கோலம் செய்கிறான். அப்போது கும்பகருணன், "போர்க்கோலம் செய்தது ஏன்?" என வினவுகிறான். இராவணன், தம்பி வானரப் பெருங்கூட்டமும், மானிடரும் கோநகர் புறத்தைச் சுற்றினர்; கொற்றமும் அழித்தனர். நீ சென்று வென்று வர வேண்டும் என்றான். இராவணன் கூறியதைக் கேட்ட கும்பகருணனுக்கு இராவணன் சீதையைச் சிறையிலிருந்து விடுவிக்கவில்லை என்பதும் அதனால் போர்மூண்டு இராவணன் தோற்றுத் திரும்பி இருக்கிறான் என்பதும் விளங்கியது. மேலும், கற்பின் செல்வியால் இனி அழிவுவரும் தப்பாது என்றும் இது விதியின் செயல் என்றும் எண்ணுகிறான்.

எனினும் அண்ணன் மீது கொண்ட வாஞ்சையால், "ஐயனே! உன் ஒருவனால் இந்த உலகத்தைப் பெயர்த்தெடுக்க முடியாது உலகிற்கு வரம்பு அமைக்கவும் முடியாது. அவ்வாறு செய்து முடிப்பாயாயினும், உன்னால் சீதையென்னும் பெண் பெருந்தகையாளின் கற்பைச் சூறையாடி புல்ல முடியாது. எவ்வாறு சீதையைப் புல்ல முடியாதோ, அவ்வாறே இராமனின் தோளாற்றலை வெல்லவும் முடியாது. நிலத்தின் இயல்பால் நீரின் இயல்பு மாறுபடும். அதுபோல குணத்தின் இயல்பால் புலத்தியர் குலத்தின் இயல்பு

மாறுபடும். தருமநெறி தவறி நடக்கும் உனக்கு எவ்வாறு வெற்றி கிட்டும்? கிட்டாது என்றும் கூறுகிறான்.

மேலும் அவன், "சீதையைச் சிறைவிடுத்து இராமனுடைய திருவடிகளை வணங்கிச் சந்தேகத்திற்கு இடமில்லாத தம்பி வீடணனோடு பழையபடி அளவளாவி, மகிழ்தலே நம் பிழைப்பிற்குரிய வழியாகும். அவ்வாறு செய்யாவிடின், நம்முடைய படைகளைக் கொஞ்சங் கொஞ்சமாகச் சில்லறை சில்லறையாக, பிசுக்குப் பிசுக்கென்று அனுப்பி, அவை சிதறுண்டு அழிவதைக் கண்டு தேம்பியழுதல் கூடாது. நமக்கு எவ்வளவு வலிமையுண்டோ, அவ்வளவு வலிமைகளையும் ஒன்றாகத் திரட்டி போருக்கு எழுதலே சிறந்த காரியம்" என்று இராவணன் மனதில் பதியும்படிக் கூறினான் கும்பகருணன்.

இவ்வாறு பல நிலைகளில் அண்ணன் இராவணனுக்கு அறிவுரை கூறுகிறான். அறத்தின் மேன்மையினையும் அறநெறியின்மையால் வரும் இழிநிலையையும் அழிவையும் எடுத்துரைக்கிறான். இதன் மூலம் கும்பகருணன் அறநெறி உணர்ந்தவன் என்பதும் அறவோன் என்பதும் புலப்படுகிறது.

**வீரப்பண்பு நெறி**

அனுமன் இலங்கையை எரித்ததும் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் "நகர் வானரரையெல்லாம் நூறுவதுவே கருமம்" என்று கூறினான் கும்பகருணன்". "நன்றுரை செய்தாய் குமர! நான் அது நினைத்தேன்" என்று கும்பகர்ணனைப் போற்றினான் இராவணன். இன்று அதே கும்பகருணன் "நம் வலியெலாம் உடன் உந்துதல் கருமம்" என்று கூறியபோது இராவணன் அவனைத் தூற்றத்தொடங்கி விடுகிறான். மேலும் இராவணன் கும்பகருணனை நோக்கி, "என்னுடைய உப்பைத் தின்று உன்னுடைய ஊத்தைச் சடலத்தை வளர்த்துக் கொண்ட நீ, போருக்குப் புறப்படாமல் உபதேசம் பேசி நிற்கிறாய். சரி! சரி! கோழையாகிய உன்னிடம் பேசிப்பயனில்லை. நீ போய் தூங்கு" என்று கூறுகிறான்.

*மானுடர் இருவரை வணங்கி, மற்றும் அக்*
*கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு உய்தொழில்*
*உன்னுடைய உம்பிக்கும் உனக்குமே கடன்*
*யான் அது புரிகிலேன் எழுந்து போதியால்*

கும்பகருணனை இகழ்ந்துவிட்டு இராவணன் போருக்குத் தயார் ஆகிறான். இராவணன் போருக்கு எழுந்து நடப்பதைக் கண்ட

கும்பகருணனுக்குக் கண்கள் இருண்டு உலகமே சுற்றுவது போன்று தோன்றியது. 'தம்பியுடையான் படைக்கு அஞ்சான்' என்ற பெருமிதத்தோடு வாழ்ந்தவன், தன்னந்தனியாய் போருக்குப் புறப்படுவதைக் கண்டதும், கும்பகருணன் மனங்கலங்கி போர் செய்யத் தயாராகி விடுகிறான். அண்ணனுக்குத் தான் கூறிய அறிவுரை பிடிக்கவில்லை என்பதை அறிந்ததும் அவன் தன் வீரப்பண்பைக் காக்கத் துணிந்துவிடுகிறான்.

கும்பகருணனிடத்தில் அன்பு இருந்தது; சகோதர வாஞ்சை இருந்தது ; நேர்மை இருந்தது ; நீதி இருந்தது; இவற்றோடு வீரதத்துவமும் இருந்தது. ஆனால் அவனை ஆட்டிப்படைக்கின்ற அடிப்படைப் பண்பு வீரதத்துவமே. அவனுடைய உள்ளத்தில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பண்புகள் மோதும்போது, அடிப்படைப் பண்பே மேலோங்கி நின்றது. அறத்தின் மேன்மையினைப் பேசியவன் இறுதியில் அரக்கர்குலம் காக்க தயாராகி விடுகிறான். அதோடு போர்க்களம் சென்று இறுதிவரை போரிட்டு வீரமரணமடைகிறான். இதன் மூலம் வீரனுக்கு அழகு களம்புகுதல் என்ற போர் அறநெறிப் பண்பினைக் கும்பகருணன் ஏற்று செயல்பட்டது புலனாகிறது.

### இரத்த பந்த நெறி

கும்பகருணன் போர்க்களத்திற்கு வருகிறான். அவனுடைய வருகையைக் கண்டு வியந்த இராமன் வீடணனை அழைத்து "போர்களத்திற்கு வருபவன் யார்?" என்று வினவுகிறார். வீடணன் அது தனது அண்ணன் கும்பகருணன் என்று கூறுகிறான். மேலும் கும்பகருணனின் நற்பண்பினைக் கூறி அவனையும் நம்முடன் சேர்த்துக்கொண்டால் நல்லது என்று கூறுகிறான். இராமனும் அதற்கு இசைவு தெரிவிக்கிறான். உடனே வீடணன் தானே அண்ணன் கும்பகருணனிடம் தூது செல்கிறான். தூது சென்ற வீடணனைக் கண்டதும் கும்பகருணன் அவனை ஆரத்தழுவி கண்ணீர் வடிக்கிறான். மேலும் அறத்தின் பக்கம் சென்ற தம்பி மனம் மாறி மீண்டும் புலத்தியர் பக்கம் வந்துவிட்டானோ என்று அஞ்சுகிறான்.

எனவே வீடணனை நோக்கி "மகனே! பிறன் மனைவியை விரும்பிச் சிறைவைத்த செயலினால், புலத்தியர் குலத்தின் புகழ் அழிந்துவிட்டாலும் இராமனைச் சார்ந்த உன்னாலாவது பெருமையழிந்த புலத்தியர் குலம் வாழும் என்று கருதி உன்னுடைய வெற்றித் தோள்களை நோக்கி மகிழ்ந்திருந்தேன்! மகிழ்ச்சி மறந்து என் வாய் ஈரமும் புலருமாறு ஏன் மீண்டும் வந்தாய்" என்று கூறுகிறான்.

மேலும், "மன்னவனே! தருமமூர்த்தியாகிய இராமபிரான் உயிர்போனாலும் அடைக்கலம் புகுந்த உன்னைக் கைவிடமாட்டான். நீயோ, முன்பு சிரஞ்சீவியாகி விட்டாய். இன்று இராமபிரான் திருவடிகளைப் பற்றிப் பிறப்பெனும் இழிவு நீங்கினாய். இப்படியிருக்க, நீ அவரைவிட்டு என்ன காரணம் பற்றி இங்கு வந்தாய்" என்றும் வினா எழுப்புகிறான்.

அதோடு, "தகுதியுடையவனே! நீதியும் தருமமும் நிலைநின்ற நல்லறிவைக் கடவுளால் பெற்றாய். அழியாத ஆயுளைப் பிரமாவால் பெற்றாய். எல்லாச் சிறப்புகளையும் பெற்றும் சாதிப்புத்தி இன்னும் உன்னைவிட்டு நீங்கவில்லைபோலும்" என்றும் கண்டிக்கிறான்.

தம்பி வீடணன் பகைவர் பக்கம் சென்று சேர்ந்தான் என்று அறிந்தும் அறவோனாகிய கும்பகருணன் தம்பி வீடணனாவது உயிர்வாழ வேண்டும் என்று எண்ணுகிறான். அதனால் தம்பி வீடணன் அறவோர் பக்கம் சார்ந்தது தவறில்லை என்றும் கும்பகருணன் கூறுகிறான். வீடணன் தன்னையும் அறவோர் பக்கம் சேர்ந்து விடுமாறு அழைத்தபோது கும்பகருணன் கண்கலங்குகிறான். மேலும் தம்பியிடம் வரமறுத்து நான் தோற்பதும் மடிவதும் உறுதி எனினும் நான் அறத்தின் பக்கம் வரவியலாது என்கிறான்.

இராவணனுக்கும், வீடணனுக்கும் இடையில் பிறந்தவன் கும்பகருணன். ஒருவன்தான் இருக்கிறான். ஒருவன் இருவரையும் இந்த நிலையில் எப்படி திருப்தி செய்ய முடியும்? அண்ணன் மறத்தை நம்பியவன். தம்பி அறத்தை நம்பியவன். அண்ணன் சாவைக் காட்டுகிறான். தம்பி வாழ்வைக் காட்டுகிறான். கும்பகருணன் சாவதா? வாழ்வதா? என்று அலைமோதுகிறான். களப்போருக்கு முன்னே உளப்போர் தொடங்கிவிட்டது. புறப்போருக்கு முன்னே அகப்போர் நிகழ்கிறது. சாவதா? வாழ்வதா? நன்றி கொன்றவனாக, நம்பிக்கைத் துரோகியாக வாழ்வதைவிட உப்பிட்டவனுக்கு உயிரை விடுவதே மேல் என்ற முடிவுக்கு வந்து விடுகிறான். கும்பகருணனுடைய உள்மனப் போராட்டத்தில் உடன்பிறப்பு பாசத்தோடு விசுவாசமும் வெற்றிபெறுகிறது.

### பகைவரைப் போற்றும் மாண்பு

கும்பகர்ணன் வீரன் மட்டுமல்ல நீதியை விரும்பும் நீதிமானாகவும் விளங்கினான். தனது அண்ணன் அயலவன்

மனைவியைச் சிறையெடுத்து அடைய நினைப்பது குற்றம் என்று அறிவுறுத்துகிறான். அதோடு சிறையெடுக்கப்பட்ட சீதையின் பெருமையினையும் விதந்து பேசுகிறான்.

*ஆனதோ வெஞ்சமம்? அலகில் கற்புடைச்*
*சானகி துயர்இனம் தவிர்ந்தது இல்லையோ*

*திட்டியின் விடம் அன்ன கற்பின் செல்வியை*
*விட்டிலையோ? இது விதியின் வன்மையே!*

சீதையின் கற்பு நெறியினைக் கும்பகருணன் போற்றிப் பேசுவதன் மூலம் அவனின் மேன்மை புலனாகிறது. மேலும் கும்பகர்ணன் தனது தம்பி வீடணன் போர்களத்தில் தன்னை வந்து சந்தித்த பொழுது நீதியின் பக்கம் நின்று பேசுவதோடு தம்பி வீடணனை ஏன் திரும்பி வந்தாய்? என்று வினவுகிறான். மேலும் அவ்வாறு பேசுகின்ற பொழுது எதிரிப் படையினரின் புகழினையும் வாஞ்சையுடன் எடுத்து இயம்புகிறான்.

*ஏற்றிய வில்லோன் யார்க்கும் இறைவன் இராமன் நின்றான்;*
*மாற்றரும் தம்பி நின்றான்; மற்றையோர் முற்றும் நின்றார்;*
*கூற்றமும் நின்றது; எம்மைக் கொல்லிய விதியும் நின்றது;*
*தோற்றஎம் பக்கம் ஐய! வெல்வலி தொலையை வந்தாய்*

இவ்வாறு பகைவர்களையும் போற்றும் பண்பினை யுடையவனாகவும் கும்பகர்ணன் விளங்குகிறான். இதன் மூலமும் கும்பகருணன் அறவோன் என்பது புலப்படுகிறது.

முடிவுரை

இவ்வாறு 'ஊர்தேடு படலத்தில்' கும்பகருணனின் உருவினைக் கண்டு வியக்கிறோம். மந்திரப்படலத்தில் அவனுடைய சொற்களைக் கேட்டுக் களிக்கிறோம். 'கும்பகருணன் வதைப்படலத்தில்' அவனுடைய செயல்கண்டு வியந்து நம்மையே இழக்கிறோம். கும்பகருணன் விழித்திருக்கும் நேரம் மிகக் குறைவு. ஆனால் இந்தக் குறைந்த நேரத்தில் நம் விழிகளில் நீர் பொங்கி வழியச்செய்ய அவனால் முடிகின்றது. கம்பனால் பிறப்பிக்கப்பட்டு, உயிரும் உணர்வும் பெற்று, நம் உள்ளங்களில் நிலைத்து வாழும் தன்மை பெற்று உயர்ந்துவிட்ட ஒப்பற்ற அரிய சில பாத்திரங்களுள் தலையாயவனாக இத்தகையோனைக் கூறமுடியும். தன் எண்ணத்தால் - சொற்களால் - செயலால் - பழகுமுறையால் வீரத்தால் - மாற்றானையும் மதித்துப் போற்றும் மாண்பால் -

அயலானிடஞ் சென்றுவிட்ட தம்பியிடத்தும், அறம் மறந்து தன்னையே அழித்துக்கொள்ளும் அண்ணனிடமும் அவன் காட்டும் பாசப்பரிவால் - தியாகத்தால் தியாகத்திற்கு நிலைக்களனாக அமைந்து குன்றுபோல் உயர்ந்து நின்ற கொள்கை மேம்பாட்டால் காலம் உள்ளளவும் கற்போர் நெஞ்சங்களில் களிநடனம் புரிகின்றான். மேலும் தான் அறநெறிப்பட்ட அறவோன் என்பதையும் அனைவரது நெஞ்சத்திலும் பதியவைக்கிறான்.

## பார்வை நூல்கள்


1. புலவர் அ. அருணகிரி, கம்பன் காட்டும் கும்பகருணன், வானதி பதிப்பகம், சென்னை, டிசம்பர் - 2005.
2. கம்பராமாயணம் (மூலமும் - உரையும்) யுத்தகாண்டம், திருமகள் நிலையம், சென்னை, ஜூன் - 2001.
3. டாக்டர் துரை. இராசாராம், கம்பரின் கும்பகர்ணன் வதைப்படலம் தெளிவுரையுடன், முல்லை நிலையம், ஆகஸ்ட் - 1999.

## 3 (இ) பாவை நோன்பு நோற்கும் நெறியையும் அதனாற் பெறும் பயன்களையும் திருப்பாவை கொண்டு விளக்குக.

**முனைவர் சு. தாமரைப்பாண்டியன்**

முன்னுரை

பாவை நோன்பை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையே பாவைப்பாடல்கள். உணர்ச்சிகளை வெளிக்காட்ட, தத்தம் துன்பங்களை மறக்க, இசையோடு கூடிய பாடல்களைப் பாடுவது தமிழர் மரபு. தமிழர்கள் இறைவனைப் பூமாலைகளோடு பாமாலைகள் சூட்டியும் வழிபட்டனர். உணர்ச்சிகளை வெளிக்காட்டுவதற்காகப் பாடிய மனிதன், பின் சமய உணர்வோடு கூடிய பாடல்களை இயற்றத் தொடங்கினான். அதன் பயனாக நாம் பெற்ற இனிய கனிகளே பாவைப் பாடல்கள்.

தமிழ்நாட்டில் பாவை நோன்பிற்கு ஆதாரம் ஆன்றோர் பழக்க வழக்கங்களே எனக் கொள்ளலாம்.

*வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே*
*நிகழ்ச்சியவர் கட்டா கலான்*

என்ற தொல்காப்பிய நூற்பா இதனையே வலியுறுத்துகிறது.

சேந்தன் திவாகரத்தில் மகளிர் விளையாட்டுக்களுள் ஒன்றாகப் பாவை கூறப்படுகிறது. பாவை முதலில் விளையாடலாக இருந்து, பின் படிப்படியாக வளர்ச்சிப்பெற்று, நாளடைவில் சமய உணர்வு ஊட்டப்பட்டு பாவை நோன்பாக மாறியது எனலாம். பிங்கல நிகண்டு, பெண்பாற் பாட்டு வகைக்குள்ள இலக்கணத்தை,

*பேணுஞ் சிறப்பிற் பெண்மக வாயின்*
*மூன்றா மாண்டில் குழமண மொழிதலும்*
*ஐந்தின் முதலா ஒன்பதின் காறும்*
*ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு நோற்றலும்*
*பனிநீர் தோய்தலும் பாவையாடலும்*

எனக் குறிப்பிடுகிறது. ஈண்டு ஈற்றடி பாவை நோன்பினையே குறித்தது எனலாம்.

சைவமும் வைணவமும் இந்து மதத்தின் இரு கண்களென்றால் ஆண்டாள் இயற்றிய 'திருப்பாவையும்', மாணிக்கவாசகரின் 'திருவெம்பாவையும்' அக் கண்களின் பாவைகள் எனலாம். இவையிரண்டும் முறையே எட்டு, ஒன்பதாம்

நூற்றாண்டுகளில் தோன்றியவை. இதில் ஆண்டாள் இயற்றியத் திருப்பாவை குறிப்பிடும் பாவை நோன்பு நெறியையும் அதனாற் பெறும் பயன்களையும் காண்போம்.

**ஆண்டாள்**

பெரியாழ்வார் நந்தவனத்தில் பயிரிட்ட துளசிப்பாத்தியில் ஆடித்திங்கள் பூர நட்சத்திரத்தில் பூமகள் அமிசமாய்த் தோன்றியவள் ஆண்டாள். ஆண்டாளை 'பெரியாழ்வார் பெற்றெடுத்த பைங்கொடி' என்றேத்துவர் வைணவர். கோதை என்பது பெயர். மணப்பருவமெய்தி பெருமானையே மணக்கும் மனமுடன் இருந்தவள். நாளும் பெருமாளுக்காகக் கட்டிய மாலையைத் தந்தையர்க்குத் தெரியாது சூடிக் கண்ணாடியில் கண்டு மகிழ்ந்து பின் கழற்றி வைத்துவிடுவாள். ஒருநாள் இதனையறிந்த பெரியாழ்வார் வேறுமாலை தொடுத்துச் சாத்தமுனைந்த வேளை, பெருமாள் மறுத்து, சூடிக்கொடுத்த மாலையே வேண்டுமெனக் கனவில் கூற, அங்ஙனமே செய்து கோதையையும் பெருமாளுக்கே திருமணம் செய்து கொடுத்தார். ஆண்டவனையே ஆண்டவள் என்பதால் 'ஆண்டாள்' என்றும் 'சூடிக்கொடுத்த நாச்சியார்' என்றும் கோதையை அழைக்கலாயினர். ஆண்டாள் பாடியன திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்பன.

**திருப்பாவை**

ஆழ்வார்கள் அருளிச் செய்த திவ்யப் பிரபந்தங்கள் அனைத்திலும் ஆண்டாள் அருளிச்செய்த 'திருப்பாவை' பல வகைகளில் சிறந்து விளங்குகிறது. திருப்பாவையை 'வேதம் அனைத்துக்கும் வித்து' என்பார் வேதபிரான் பட்டர். திருப்பாவை முப்பது பாடல்களைக் கொண்டது. பாவை நோன்பு பற்றியது. மார்கழித் திங்களில் வைகறையில் வைணவர்களால் பாடப்படுவது. திருப்பாவையில் ஆன்மீக உணர்வு ஒருபுறமிருக்க மக்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நன்னெறிகள் சிலவற்றையும் திருப்பாவைப் பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன. 'அன்பே கடவுள்' என்பது எல்லா மதத்தினரும் ஏற்றுக் கொண்டுள்ள ஓர் உயர்ந்த தத்துவமாகும். ஆண்டாளின் வாக்கிலிருந்து இந்த அமுதமொழி வருவது நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

கண்ணனை அடைய ஆயர்பாடி பெண்கள் அனுசரித்த முறைகளைக் கொண்டு தான் கண்ணனை அடைய விரும்பினாள். அதற்காகப் பாவை நோன்பை அனுசரிக்கத் தான் பிறந்த

ஸ்ரீவில்லிபுத்தூரைக் கோகுலமாகவும், தானும் தன் தோழிகளும், கோபிகைகளாகவும். ஸ்ரீவடபத்ரிசாயி கோயிலை நந்த கோபாலனுடைய திருமாளிகையாகவும், அங்கு எழுந்தருளிய பெருமாளைக் கண்ணனாகவும் கற்பனை செய்கிறாள். கற்பனையோடு கவிதா சக்தியும் சேர்ந்து 'திருப்பாவை' என்னும் முப்பது அருள்சுரக்கும் பாசுரங்கள் தோன்றின.

## பாவை நோன்பு

மாதங்களில் சிறந்தது மார்கழி; ஏனெனில் மாதங்களில் நான் மார்கழி மாதம் ஆகிறேன் எனக் கண்ணன் கீதையில் கூறுகிறான். இத்தகு பெருமைக்குரிய மார்கழி மாத முழுமதி நாளன்று இப்பாவை நோன்பு நிகழும். இதனை,

*மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்*
*நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்*

என்ற திருப்பாவை அடியால் உணரலாம். பாவை நோன்பு என்பது மிகப் பழைய காலந்தொட்டே அனுசரிக்கப்பட்டு வரும் ஒருவித நோன்பாகும். ஆண்டாள் காலத்திற்கு வெகுகாலத்திற்கு முன்பே இந்நோன்பு வழக்கில் இருந்து வந்துள்ளது. அது கருதியே உய்யங்கொண்டார் எனும் ஆசாரியர் திருப்பாவையைத் 'தொல்பாவை' என்று பாடியுள்ளதால் ஏற்கனவே இதை மூதாதையர்கள் அனுசரித்து வந்துள்ளனர் என்பது விளங்கும். பாவை நோன்பை நோற்கும் இடத்திற்குப் பாவைக்களம் என்று பெயர்.

நாட்டில் மழை பொய்க்கும் போதும், பஞ்சம் ஏற்படும்போதும் மற்றும் சில சமயங்களிலும் ஆற்றங்கரைகளிலும், குளக்கரைகளிலும் மணலால் உருவமைத்து கன்னிப்பெண்கள் ஒருங்கே கூடிப்பாவை நோன்பு என்னும் பெயரில் நோற்றுக் கொண்டாடுவர். அதிகாலையில் நீராடி உபவாசமிருந்து நோன்பு நோற்பது வழக்கம். இவர்களுடைய கோரிக்கை, நல்ல மழை பெய்து நாடு பஞ்சம் நீங்கி வளமடைய வேண்டும் மற்றும் தங்களுக்கு அழகு குணமும் புகழும் வாய்ந்த நல்ல மணவாளர்கள் அமையவேண்டும் என்பதேயாகும்.

## பாவை நோன்பிற்கான நியதிகள்

பாவை நோன்பினை நோற்போர் பாற்கடலில் அழகாகக் கண் உறங்குகின்ற திருமாலின் திருவடிகளைப் பாட வேண்டும். நெய், பால் அருந்தக் கூடாது. விடியற்காலையில் எழுந்து நீராட வேண்டும். கண்களுக்கு மை தீட்டக்கூடாது. கூந்தலில் மலர்களைச் சூடிக் கொள்ளக்கூடாது. செய்யத்தகாத தீச்செயல்களைச் செய்யக் கூடாது.

எவரிடமும் சென்று கோள் சொல்லக்கூடாது. யோகிகளுக்கும் தவசிகளுக்கும் நாமாகச் சென்று தர்மம் செய்ய வேண்டும். வீடு தேடி வரும் சந்நியாசிகளுக்கும், பிரம்மச்சாரிகளுக்கும் தானமும், இயன்ற அளவு வழங்க வேண்டும். நோன்பின்போது மனத்தை ஒருநிலைப்படுத்தி இறைநாமம் கூறவேண்டும் என்பன போன்ற நியதிகள் திருப்பாவையில் கூறப்பட்டுள்ளன.

### நோன்பிற்குரிய உபகரணங்கள்

பாவை நோன்பு நோற்கும்போது பஞ்ச சன்னியம் போன்ற வெண்மையான சங்குகள், பெரியபறை வாத்தியம், திருப்பல்லாண்டு இசைக்கும் அத்யாபகர்கள், கோலவிளக்கு (மங்கள தீபம்), கொடி, விதானம் போன்ற உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

### பாவை நோன்பால் விளையும் நன்மைகள்

பாவை நோன்பு நோற்பதால் நாட்டின் சகல பகுதிகளிலும் கேடு விளையாத படி மாதம் மூன்று மழை பொழியும். மீன்கள் பருத்து வளர்வதால் நெருக்கமான செந்நெல் பயிர்களுக்கு இடையே நீந்திச் செல்ல இயலாமையால் தாவிக் குதித்துச் செல்லும். இவ்வாறாக செந்நெல் விளைச்சல் பெருகும். ஏரி, குளங்கள் எல்லாம் நிறைந்து குவளை மலர்களில் பொறிவண்டுகள் தேன்குடித்து மலரிலேயே உறங்கிக் கிடக்கும். மாறி மாறி இடும் குடங்களைப் பாலால் நிரப்பித் தரும்படியான வள்ளல்களைப் போன்று பெரும் பசுக்கள் வளம்பெற்று இருக்கும். குறைவற்ற செல்வத்தை நிறைய அளித்திடும் என்று திருப்பாவை குறிப்பிடுகிறது.

*தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து*
*ஒங்கு பெருஞ் செந்நெல்லூரு கயல்கள்*
*பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்*
*தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி*
*வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்*
*நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்*

***(பா.3)***

### முடிவுரை

"மாதத்தில் மார்கழி நான்" என்று அருளிச் செய்த கீதை நாயகனைக் கோதை நாயகனாக அடைய மார்கழி நீராட்ட நோன்பைத் திருப்பாவையில் ஆண்டாள் சுட்டுகிறாள். திருப்பாவையில் கோதை காட்டும் பெண்கள் வலக்கை, இடக்கை அறியாத ஆயர் சிறுமியராக இருப்பதனாலோ என்னவோ, நோன்புமுறை விதிகள் விரிவாகவே

கூறப்பட்டுள்ளன. திருப்பாவையில் துயிலெழுப்புதல், நோன்பு நோற்றல், நோன்பின் பயனை அடைதல் என்ற முக்கூறுகளும் முதன்மை இடத்தைப் பெறுகின்றன எனலாம். மேலும் பாவை நோன்பு மூலம் நற்கணவனை அடைதல், மழைவளம் பெறுதல் என்னும் காரணங்களும் முக்கிய இடம் பெறுகின்றன.

## பார்வை நூல்கள்


1. பா. அன்பரசு, திருவெம்பாவை மூலமும் எளிய தமிழ் உரையும், நர்மதா பதிப்பகம், சென்னை, ஜூன் - 2014.
2. எஸ். சௌம்யாநாராயணன், ஸ்ரீ ஆண்டாள் அவதாரமும் - அருளிச் செயலும், சென்னை, ஏப்பிரல் - 1981.
3. டாக்டர் ச. அனந்தபத்மநாபன், ஸ்ரீ ஆண்டாள் இயற்றிய திருப்பாவை (வினா விடை வடிவில்), சேலம், 1983.
4. பேரா. மு. சாயபு மரைக்காயர், ஆண்டாள் இலக்கியத்திறன், கங்கை புத்தக நிலையம், சென்னை, செப்டம்பர் - 2005.

**பின்வரும் பாடற் பகுதிகள் வரும் இடத்தையும், அவற்றின் பொருட் சிறப்பையும் புலப்படுத்துக:-**

**4 (அ) 'மேற்பால் ஒருவனும் அவன்கட்படுமே' - இடஞ்சுட்டி பொருட்சிறப்பைப் புலப்படுத்துக.**

**முனைவர் கோ. பன்னீர்செல்வம்**

இடம்:

'மேற்பால் ஒருவனும் அவன்கட்படுமே' - எனும் இப்பாடலடி எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான சங்கத்தமிழரின் புற ஒழுக்கத்தைச் சிறப்பாக எடுத்துரைக்கும் புறநானூறு எனும் நூலில் 183 ஆவது பாடலின் இறுதியடியாக அமைந்துள்ளது. இப்பாடல் பொதுவியல் திணையைச் சார்ந்தது. துறை பொருண்மொழிக்காஞ்சி ஆகும். இப்பாடலைப் பாடிய மன்னன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆவான்.

பொருட்சிறப்பு

'மேற்பால் ஒருவனும் அவன்கட்படும்' எனும் புறநானூற்றுப் பாடலடி கல்வியினால் வரும் உறுதிப்பொருளை எடுத்துரைக்கிறது. இப்பாடலில் ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் 'மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையோன்' என்ற ஔவையின் பொன்மொழியை முன் வைக்கிறான். அதாவது, ஒருதாய் ஒரு வயிற்றுப் பிறந்தவருள்ளும், அவரவர் சிறப்பின் காரணமாகத் தாயும் தன் பாசத்திலே ஓரளவிற்கு வேறுபடுபவளாவள். ஒருகுடி வந்த பலருள்ளும் 'மூத்தோனை வருக' என்று அழையாது, அறிவுடையோனையே "வருக" என்று அரசனும் சென்று அழைப்பான். வேற்றுமைப்பட்ட நால்வேறு வகையான மக்களுள்ளும், கீழ்நிலையிலுள்ளான் ஒருவன் கல்வி கேள்விகளிலே வல்லான் ஆயின், மேல்நிலையிலுள்ளவனும் அவனுக்கு ஆட்படுவான்.

இதனால் ஊறுபாடு நேர்ந்தவிடத்து உதவியும், மிக்க பொருளைக் கொடுத்தும், அதனால் நேரும் இழப்பு வருத்தம் முதலிய நிலைகளைக் கண்டு வேறுபடாதும் முயற்சியுடன் அனைவரும் கற்ற அறிவுடையவராகி மேம்படுதலே நன்றாகும். அதனால் சிறப்பும் அறிவும் நூற்பயிற்சியும் பெற்று இவ்வுலகத்து வாழ்விலும் உயரலாம் என்ற பொருட்சிறப்பு மேற்கண்ட பாடலடியின் வழி உணரமுடிகிறது.

## பார்வை நூல்கள்

1. புலியூர் கேசிகன், புறநானூறு - தெளிவுரை, பாரிநிலையம், சென்னை, 2009.

2. முனைவர் கா.கோ. வெங்கடராமன், தமிழ் இலக்கிய வரலாறு, கலையக வெளியீடு, சூலை - 2002.

## 4 (ஆ) 'பகல்வெல்லும் கூகையைக் காக்கை' - இடஞ்சுட்டி பொருட்சிறப்பை விளக்குக.

முனைவர் கோ. பன்னீர்செல்வம்

### இடம்

திருக்குறள் நீதியிலக்கியங்களுள் ஒன்று. இவ்விலக்கியம் அறம், பொருள், இன்பம் எனும் முப்பொருளையும் முப்பாலாக மொழிகிறது. இந்நூல் அதிகாரத்திற்குப் பத்துக்குறள் வீதம் 133 அதிகாரங்களையும் 1330 குறள்களையும் கொண்டது. இந்நூல் கி.பி. முதல் நூற்றாண்டு அல்லது இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியது என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இதனை இயற்றியவர் திருவள்ளுவர். திருக்குறளில் பொருட்பாலில் முதல் அதிகாரமான அரசியல் பகுதியில் (அதிகாரம்: 49) 'காலம் அறிதல்' எனும் தலைப்பின் கீழ் அமைந்த பகுதியில் பத்துக்குறள்களில் முதல் குறளில் "பகல் வெல்லும் கூகையைக் காக்கை" எனும் அடி அமைந்துள்ளது.

### பொருட்சிறப்பு

'பகல்வெல்லும் கூகையைக் காக்கை' எனும் குறளடியில் காலம் அறிந்து செயல்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப் படுகிறது. காகத்தைவிட ஆந்தை வன்மை உடையது ஆகும். ஆந்தையைக் கண்டு காகம் அஞ்சும் தன்மையுடையது ஆகும். இருப்பினும் ஆந்தையைக் கண்தெரியாத பகற்பொழுதில் காக்கை எளிதில் வென்றுவிடும்.

அதுபோல் பகைவரைப் போரில் வெல்லக் கருதும் அரசரும் ஏற்ற காலம் அறிந்து செயல்பட வேண்டும். காலம் பொருந்தாவிடின் அவர் வலிமை பயன்தராது என்று குறள் வலியுறுத்துகிறது. இதன்மூலம் ஒரு செயலைச் செய்கின்றபொழுதும் காலம் அறிந்து செய்ய வேண்டும் என்பது புலனாகிறது.

### பார்வை நூல்கள்


1. முனைவர் அ.சங்கரவள்ளி நாயகம், திருக்குறள் விரிவுரை, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, 1997.
2. முனைவர் கா.கோ. வேங்கடராமன், தமிழ் இலக்கிய வரலாறு, கலையக வெளியீடு, நாமக்கல், சூன் - 2002.

## 4 (இ) அன்னை ஒப்பாய் எனக்கு அத்தன் ஒப்பாய் என் அரும்பொருளே!

முனைவர் கோ. பன்னீர்செல்வம்

இவ்வடிகள் மாணிக்கவாசகப்பெருமான் அருளிய திருவாசகத்தில் நீத்தார் விண்ணப்பம் பகுதியில் பதினாறாவது பாடலாக இடம்பெற்றுள்ளன.

**திருவாசகம்**

மணிவாசகர் அருளிய திருவாசகம் ஐம்பத்தொரு திருப்பதிகமும், அறுநூற்று ஐம்பத்தாறு திருப்பாடல்களையும் கொண்டது. இதில் ஒரு பகுதி நீத்தார் விண்ணப்பமாகும்.

**நீத்தார் விண்ணப்பம்**

நீத்தார் விண்ணப்பம் என்பது, அருளாரமுதப் பெருங்கடல்வாய் அடியாரெல்லாம் புக்கழுந்த அடிமோனை மாத்திரம் இங்ஙனம் நீத்தல் தகுமாவென்று இறையின்பால் முறையிட்டு கொள்ளல் என்னும் பொருளுடையது. தம்மை நீத்தலைக் குறித்துக் கைவிடலாகாதென்று அடிகள் செய்து கொண்ட விண்ணப்பம் என்பதாம். இக்குறிப்பு ஒவ்வொரு திருப்பாட்டிலும் "விடுதிகண்டாய்" என்று கூறியிருத்தல் கொண்டு அறியத்தக்கது. திருவாசக உண்மையில் "மித்தை யுலகினை யகற்றி விடாமலெனை யாண்டருனெ நத்தறிந்திட நீதுதல் விண்ணப்ப மறைந்ததுவாம்" என்று கூறியிருத்தலும் இவ்வுண்மையை வலியுறுத்துவதாகும்.

இஃது இறைவன் திரும்பெருந்துறையில் ஞானாசிரியனாக எழுந்தருளி உபதேசித்து அடிகளை இன்னுஞ் சின்னாள் இந்நிலவுலகத்து இருக்கவெனக் கட்டளையிட்டுத் திருஅருட் கரந்தனனாக, அப்பெருமான் திருவுள்ளம் குறிப்பின் படி திருவாதவூரடிகள் திருப்பெருந்துறையினின்றும் திருவுத்தரகோச மங்கைக்கு வந்து அவ்விறைவனது திருவுருவக் காட்சியை மீண்டும் பெறாமல் வருந்தி உள்ளமுருகிப் பாடியருளியதாகும்.

இறைவா, நின்னை நோக்க நினக்கு ஒப்பு நீயே யாவாய் அன்றிப் பிரிதொரு பொருள் இன்னுஞ் சிறியேனாகிய என்னை நோக்கி நினக்கு உவமம் கூறப்புகின் எனக்குத் தாயும் தந்தையும் போல்வாய் என்பார். "அன்னை யொப்பாய் எனக்கு அத்தன் ஒப்பாய் என்றார்.

ஈண்டு எனக்கு என்றது எடுத்த உடலோடு கூடிய நிலை பற்றியாம். ஈன்று வளர்த்தலில் தாயும், சான்றோன் ஆக்குதலில்

தந்தையும் ஒருவற்கு உலகியலில் இன்றியமையாத உதவியாளர் ஆவர். ஆதலின், அவ்வியல்பு குறித்துக் கன்மத்துக்கு ஈடாக மாயையினின்றும் உடலுதவியமையால் அன்னை யொப்பாய்" எனவும், அறிவு உபதேசம் செய்து நன்னிலை நிறுத்தலின், "அத்தன் ஒப்பாய்" எனவும் கூறினார் மாணிக்கவாசகர்.

இம்மை மறுமை இரண்டிலும் பெறுதற்கு உரிய பொருள்களிலும் அரிய பொருள் என்பது கருதி ''புகழும் பொருளே" என்றார். இம்மைக்கு உரியது புகழும் மறுமைக்கு உரியது அறமும் ஆகும். இவ்விரண்டனையும் கடந்து வீட்டிற்குரிய மெய்ஞ்ஞானத்தால் அரிதிற் பெறத்தக்க பொருளே இறைவனாதலின் இவ்வாறு கூறப்பட்டது என்பர்.

## பார்வை நூல்கள்

1. திருவாசகம், நீத்தல் விண்ணப்பம், கதிர்மணி விளக்கம், அன்னை நிலையம், சென்னை - 17, இரண்டாம் பதிப்பு - 1965.

2. திருவாசகம் தெளிவுரை, கழக வெளியீடு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட் சென்னை-1. 1969.

## பகுதி-ஆ

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக:-**

**10x5=50**

**5 (அ) கண்ணம்மாவைக் குழந்தையாகக் காணும் பாரதியின் தாய்மை உள்ளத்தைப் புலப்படுத்துக.**

**முனைவர் து. ஜானகி**

கண்ணன்-என் குழந்தை

*குறுகுறு நடந்து சிறுகை நீட்டி*
*இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்*
*நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்*

என்று சங்கப் புலவனாகிய பாண்டியன் அறிவுடை நம்பியும்,

*குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள்*
*மழலைச்சொற் கேளா தவர்*

என்று திருவள்ளுவரும் குழந்தையின்பத்தைப் பாடியுள்ளனர். அவர்களை அடியொற்றிப் பாரதியும் குழந்தையின்பத்தைப் பல்வேறு நிலைகளில் பாடியுள்ளமையை அறிய முடிகின்றது. குழந்தையைப் பற்றிய ஒவ்வொரு வருணிப்பும் நம் உள்ளத்தில் உணர்ச்சியைத் தூண்டுவதாக அமைந்துள்ளது.

சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா செல்வக் களஞ்சியமே என்று தொடங்கி, கண்ணம்மா ஆடிவரும் போது உள்ளங் குளிருவதாகவும், ஆடித் திரிதல் கண்டால் அவளிடம் ஆவி தழுவியதாகவும், அவள் உச்சியை முகந்தால் கருவம் ஓங்கி வளருவதாகவும், மெச்சி அவளை ஊரார் புகழ்ந்தால் மேனி சிலிர்ப்பதாகவும் கூறியுள்ளார்.

மேலும், அவள் கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளம் கள்வெறி கொள்ளுவதாகவும், அவள் முகம் சற்று சிவந்தாலே மனது சஞ்சலமாகுவதாகவும்,

***உன் கண்ணில் நீர்வழிந்தால் -என் நெஞ்சில்***
**. . . . . . . .**
***ஆகுமோர் தெய்வமுண்டோ***

என்றெல்லாம் பாடியிருப்பதன் மூலம், குழந்தைச் செல்வம் ஏனைய உலகச் செல்வங்களைக் காட்டிலும் மிஞ்சியது என்று பாரதியார் அறிவுறுத்துகின்றார்.

## 5 (ஆ) குடும்ப விளக்கில் பாவேந்தர் பாரதிதாசனின் முதியோர் காதலை உரைக்குமாறு வரைக

**முனைவர் து.ஜானகி**

மக்களின் இறுதி வாழ்க்கையின் இயல்பை முதியோர் காதல் என்ற பெயரில் அழைக்கிறார். முதுமை, வறுமை, நோய், பகை இவற்றைக் கண்டு உலகம் கவல்கிறது. வறுமையை உழைப்பால் வெல்கிறது. பகையை அன்பால் வெல்கிறது. நோயை முறையான நல்லுணர்வால், ஒய்வால், மருந்தால் வெல்லுகிறது. ஆனால், முதுமையை வெல்ல இயலுமா? முதுமை உறுதி என்றால் மரணம் அடைவதும் உறுதி. மரண பயம் யாருக்கும் உண்டு.

மரண அச்சத்தால்தான் சமயங்கள் தோன்றின. மேலுலகக் கொள்கை அச்சத்தால் வந்தததுதான்! மக்கள் நல்லறம் செய்தால் மேலுலகம் அடைவர் என்றும், மக்கள் தீயன செய்தால் நரகு அடைவர் என்றும் சமயங்கள் கற்பிக்கின்றன.

தொல்காப்பியர் போன்ற சான்றோர்கள் இல்லறம் இனிது நிறைவேறிய பிறகு மக்களொடு மகிழ்ந்து மனையறம் காத்து மிக்கக் காமவேட்கை தீருமானால் அறம் புரி சுற்றத்தோடு வாழவேண்டும். பற்றற வேண்டும். அன்பு அருளாக வளர வேண்டும். மக்களிடமும் உயிரினத்திடமும் இதனை கருணை கொள்ள வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். இதனை,

*பற்றுக பற்றற்றான் பற்றினைப் அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு (குறள். 350)*

என்றும்,

***யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்***
***அதனின் அதனின் இலன் (குறள். 341)***

என்றும் தெளிவு செய்கின்றார்.

ஆனால், பாவேந்தர் முதியோர் மகிழ்வுடன் நிறைவுடன் வாழ்வதைப் படம் பிடிக்கின்றார். மக்கள் திருமணம் ஆனவுடன் தனி வீட்டில் குடும்பம் நடத்துகின்றனர், ஆனாலும் முதிய பெற்றோரை அடிக்கடி வந்து கண்காணிக்கின்றனர்; தொண்டு செய்கின்றனர்.

முதியவர் இருவரும் கடமைகள் செய்த களிப்பில் வாழுகின்றனர். மக்களைப் பெற்றோம், தொழில் செய்து பொருள் திரட்டினோம். அறம் செய்து மகிழ்ந்தோம். நாட்டுக்கும் மொழிக்கும் நலம் செய்தோம் என்றெல்லாம் எண்ணி மகிழுகின்றனர், புலன்கள்

ஓய்ந்து விட்டன. படிக்க இயலவில்லை; கேட்க முடியவில்லை என்றாலும் உள்ளம் இருக்கின்றது. அது ஓயாமல் எண்ணுகின்றது. நடந்தவற்றையும் எண்ணி மகிழ்கின்றது. நடக்கப் போவதையும் கற்பனையால் கண்டு மகிழ்கின்றது. நல்லன கண்டார்; நல்லன எண்ணினார்; நல்லனவே சொல்வார்; நல்லன எண்ணியவர் நல்லனவே செய்வர். நல்லவரே நினைவில் நிற்பர். அவர் செய்த நல்லனவே நினைவில் நிற்கும்.

பெற்றோர் வீட்டில் மணமான மக்கள் வாழுகின்றனர். பெற்றவர் முதுமை பெற்றார். மூத்தோர்கள், ஆடிய பம்பரங்கள் ஆட்டம் ஓய்ந்தன. மகனும், மருமகளும் முதியவர்களுக்கு உதவுகின்றனர்.

முதுமையைப் பாருங்கள்!

தலைக்கடை அறையில் இருக்கின்றனர். மனைவியொடு மகன் பெற்றோரிடம் வந்து அறங்கேட்பார்கள். பேர்த்தி பேரன் பள்ளி செல்லும்போது வணங்கிச் செல்வர்.

*மணவழ கர்க்கு முன்போல்*
. . . . . . . . . .
*உணவெல்லாம் பாலில் கஞ்சி !*

பாட்டி கூந்தலும் வெண்பட்டே!

*ஆயிரம் பிறை மூதாட்டி*
*மன்னுசீர் அன்னாள் மெய்யோ*
*வானவில் போற் கூனிற்றே*

கிழவி கூனிவிட்டாள். வயது எண்பது, கிழவர் இதற்கு மேலே முதுமை, இருவரும் மகிழ்கின்றனர்.

*மைந்தர்க்குக் கல்வி சேர்த்தோம்*
. . . . . . .
*இந்தநாள் வரைக்கும் வாய்மை*

இம்மியும் மறத்தலில்லை. இப்படி உள்ளம் நிறைவடைகிறார்கள்.

உள்ள வாழ்வே வாழ்வாக இருக்கின்றது. முதியோன் நெஞ்சில் முதியோள் இளமை முதற் கொண்டே வாழுகின்றாள்.

*புதுமலர் அல்ல கிழவி*
. . . . . . .
*கண்கள் குழிந்தன;*

உயிர் மட்டும் இருக்கின்றது. இசைத்தமிழை இசைக்க இயலவில்லை. இனிக்கின்ற தமிழைச் சொல்ல இயலவில்லை. இருவரும் தனித்தனியே இருக்கின்றனர். ஆனால், 'என்னை நினைக்கின்றாள்; நான் அவளை நினைக்கின்றேன்.' என்று முதியோர் கூறுகின்றனர். காணலும் தொடுதலும் இல்லாத போதும் நினைவு போகவில்லை.

**கிழக்கோலம்**

***என்பும் நற்றோலும் வற்ற***

***. . . . . . . .***

***அகத்தின்பம் காணுகின்றேன்***

என்று கிழவன் இன்பம் காணுகின்றான்.

பேரக் குழந்தைகள் 'அம்மாயி' என்று அழைக்கிறது. அச்சொல் இருவருக்கும் நெஞ்சை அமிழ்தில் விழும். இன்பம் மிதக்கும்.

சென்ற காலத்தில் 'அகத்தான் அத்தான்' என்று அழைத்தது இன்பமாக இருந்தது.

இன்று மக்கள் 'அன்னாய்' என்று அழைப்பர். அதைக் கேட்ட நான் இன்பம் கொள்வேன் என்கிறார் கிழவர்.

மன்னர்கள் வையத்தை ஆளுவார்கள். காப்பார்கள். உலகம் அவர்களுக்கு உவப்பூட்டும். ஆனால் எனக்கு என் மனைவியின் எண்ணமே உலகமாகும்.

மணவழகன் நீண்ட காலம் காதலித்து வாழ்ந்தார். இன்றும் அந்தக் காதல் வாழ்வு இறுகியே இருக்கிறது. அன்று இளமைப் பருவத்திலே,

***காம்பரிந்திட்ட பூவைக் கட்டிலில்***

***. . . . . . .***

***கணவன் உறங்குவான்***

இன்று 'நெஞ்ச மெத்தையில்' துயிலுகின்றான்.

'பூ விரிப்பும், பட்டு விரிப்பும் இல்லை. அதனால் தானோ என்னவோ சங்க காலச் சான்றோர், 'துயிலின் பாயல்' என்று கணவனின் மார்பைக் கூறினர் அன்று, 'மெய்யுற வாய் சுவைக்க.

***விழி, அழகுண்ண, மூக்கு***

***. . . . . . .***

***தேன்மழை, பிரிதலின்றி***

என நினைவு அலைகள் மோதுகின்றன.

அன்று ஐம்புலன்களும் இன்பம் துய்த்தன. கண்டும் கேட்டும், உண்டும், உயிர்த்தும் உற்றறிந்தும் இன்புற்றன. இன்று நினைக்கும் இன்பமே அக இன்பமாக நிறைந்திருக்கிறது.

'என் கணவர் குறுகிய உணர்ச்சி உடையவர். வயப்பட்டவர். ஒரு சிறு செய்தி தவறினாலும் துணுக்குறுவார் பெரிய ஓசை கேட்டால் போதும் திரு திரு வென்று பார்ப்பார். உப்புச் சற்றுக் குறையினும் மிகினும் இமை மேலேறும். கருத்து வேற்றுமை ஏற்பட்டால் மனம் உடையும், என்றெல்லாம் எண்ணி என் கணவனை, தமிழினை அன்பினாலே காத்து வந்தேன் என்கிறாள். இது முதியோர் காதலைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

பாவேந்தர் பெண்ணின் பெருமை பேசுகின்றார். 'பெண்ணே குடும்ப விளக்கு' என்கின்றார். கணவனுக்கு எல்லா விதத்திலும் துணை நின்கின்றாள், கணவனின் கோபம் தனிக்கின்றாள். மகன் தந்தை மாறுபாட்டைப் போக்குகின்றாள். குழந்தைகளை நன்கு வளர்க்கின்றாள். இசையும் கல்வியும் ஒழுக்கமும் கற்பிக்கின்றாள். வீட்டைத் தூய்மை செய்கின்றாள். பாத்திரத்தை பொன்னாக்குகின்றாள். ஒட்டடை அடிக்கின்றாள். தச்ச வேலை, கொத்து வேலை செய்கின்றாள், உணவு சமைக்கின்றாள்.

இவ்வாறு பாரதிதாசன் முதியோர் காதலையும் பெண்ணின் பெருமையையும், கடமையையும் தன் காவியத்தில் ஒருங்கே படைத்துச் சுட்டியுள்ளார்.

## பார்வை நூல்

பாவேந்தரின் குடும்ப விளக்கு; திறனாய்வு, நாவலர் சி. அரசப்பனார், மீரா நிலையம், ஈரோடு.

5 (இ) நீதிமன்றத்தையே விசாரணைக்கு உட்படுத்தும் எளிய மனிதர்களின் உள்ளக் குமுறலைக் கவிஞர் நா. காமராசன் எங்ஙனம் வெளிப்படுத்துகின்றார்?

முனைவர் து. ஜானகி

நா. காமராசன் அவர்களின் 'கருப்பு மலர்கள்' கவிதைத் தொகுப்பில் இது இடம்பெற்றுள்ளது.

அவர்கள் நீதிமன்றத்தை விசாரணை செய்கிறார்கள்

எனது சாட்சியம்;

தமிழ்க் காதலனாக அரும்பி ஒரு சோசலிஸ்டாக மலர்ந்தவன் நான். உழைக்கும் மக்களின் வசந்தருதுவை அவர்களுக்கு அறிமுகப்படுத்தும் ஒரு சின்னக்குயில், எனது பேணாவை அசைக்கின்ற போதே அதனுடைய ஆளுகைக்கு உட்பட்ட ஒரு பிரதேசம் இருக்கிறது என்கிற போதையோடு தான் நான் அசைக்கிறேன். என்றாலுங்கூட கர்வக் கனவுகளையெல்லாம் ஜீரணித்துக் கொண்டு, ஒரு வெறி மிகுந்த சிருஷ்டி தாகத்தோடு எனது மரணவேளையின் முன் நிமிஷம் வரையிலும்கூட எழுதிக் கொண்டிருக்கவே நான் விரும்புகிறேன்.

நீதி மன்றங்கள் போகிற போக்கைப் பார்த்து வெடித்துச் சிதறிய எனது மனக் குமுறல்கள் இங்கே வரி வடிவம் பெற்றுள்ளன. பேசப்பட்ட வார்த்தைகள் உரை நடையாகின்றன. மௌனம் தன் நிலையிலேயே அது ஒரு ஊமைக் கவிதை. அந்த மௌனம் தனிமையின் துணையில் ஒலிப்பதற்குரிய துடிப்புக்களைச் சுமந்து கொண்டு வரி வடிவம் பெற்றுவிட்டால் அது ஒரு ஜீவனுள்ள கவிதை. இந்த வசன கவிதைகூட நெடுநாட்கள் எனது மனம் மௌனமாக இருந்து கற்பனையில் ஊறிய பிறகு வரிவடிவம் பெற்றதுதான்.

நீதி மன்றங்களின் உயர்ந்த கட்டடங்களைப் பார்த்துவிட்டுத் தெருவோரத்துப் பிச்சைக்காரிகளையும் அனாதைகளையும், வாழத் துடித்த சில மாஜிக் கைதிகளையும் சந்தித்தபோது எனது கண்ணீரின் வெப்பநிலை அதிகரித்திருக்கிறது.

அதைப் போலவே ஒரு மகத்தான தேசத்தின் சமூக ரீதியான மேடு பள்ளங்கள் தகர்க்கப்பட்டு, சோசலிசப் பூக்கள் மலர வேண்டுமென்பதற்காக எடுக்கப்பட்ட சட்ட ரீதியான அரசியல் முடிவுகளை, இந்த நீதி மன்றங்கள் நிகராகரித்த போது எனது இரத்த ஓட்டத்தின் வெப்ப நிலை அதிகரிக்கிறது. என் கவிக்கோபம் நீதி மன்றத்தையே கூண்டிலேற்றியிருக்கிறது என்று கூறுகிறார்.

இங்கே....
இன்னும் சில 'தாஜ் மஹால்கள்' உருவாகா விட்டாலும்
இன்னும் சில 'ரவிவர்மா'க்கள் பிறக்காவிட்டாலும்
இன்னும் சில மதுக்கோப்பைகளாவது காலியாகட்டும்!
நீதிமன்றமே! நீ ....

குற்றங்களை மட்டும் தண்டித்துவிட்டுக்
குற்றவாளிகளைக் காப்பாறுவாயா?
சிறைக்கதவு திறக்கும் போது
ஆத்மாவின் ஜன்னல் மூடிக்கொள்கிறது

பாவம் சிருஷ்டியின் வித்தல்ல.
கைவிலங்குகள் இல்லாத நீதி சபைகளுக்கு முன்பு
அது கைகட்டி நிற்கிறது.
ஓ நீதி மன்றமே!
பாவத்தின் கைகளில் விலங்கு பூட்டிவிட்டு
நீ ஏன் பாவமூட்டைகளைச் சுமந்து கொண்டிருக்கிறாய்?
காலதேவன் குயில்களுக்கு
வசந்தத்தைப் பரிசளித்துவிட்டு
பாலைவனத்தில் ஒட்டகம் மேய்க்கின்றான்.

ஏ.... நீதி தேவனே
நீயாவது
பாலைவனத்து ஒட்டகப் பாதையிலும்
வசந்த மலர்களைத் தூவுவாயா?
புறவெளியில்....உனது சட்டநீதி
தற்கொலை முயற்சியைத் தடுக்கிறது.
ஆனால் அந்தப்புரத்தில்....
அது ஆயுள் தண்டனையை நேசிக்கிறது.

நீ ஏன் இந்தப் புட்டிகளை வீசியெறிகிறாய்?
இந்தச் சாராய சீசாக்களில்
கிராமங்களின்
சொப்பன கங்கையல்லவா
அடைப்பட்டிருக்கிறது?

இது கிளியோபாத்ராவின் கண்ணீர்
என்பதை நீ அறியாயோ?
.....இந்தக் கிளியோபாத்ரா
சீசருக்கும்
ஆண்டனிக்கும் மட்டுமல்ல
ரோமானியப் படைகளுக்கெல்லாம்
முத்தம் தருபவள்!

நாம்
பாண்சேரியைத் தலை நகராக்குவோம்!
பாலைவனத்திற்கு மட்டும்
மதுவிலக்குச் சட்டம் போடுவோம்,
வேண்டுமென்றால் . . . . அங்கே
காந்திசிலை வைப்போம்,
ஒட்டகங்களோடு ஆடு வளர்ப்போம்
பேரிச்ச மர நிழல்களில்
மணிலாக் கொட்டை விதைப்போம்!

மது . . . .அமுதமல்ல. . . .
அது. . . .விஷமுமல்ல. . .
அமுதத்தில் விஷமிறக்கியபின்
அது என்னவாம்?

அமுதாகிய விஷ வேகமா?
செத்தபின்பு வரும் விழிப்பா?
நித்திரையின் விழிக்கூடா?
சுடுகாட்டுக் குழி மேல்
திண்ணை கட்டும் சித்தனா?

சுறுசுறுப்பா? இல்லை. . . . .
சோம்பலைத் தேரோட்டும் வான்சிறகா?
கொக்கோகத் தேனான
குற்றத்தின் உமிழ்நீரா?

மயிர்காலில் அணிவகுக்கும் சிப்பாயா?
இல்லை....மன்மதனின் வெறிநாயா?
மௌனமா? புலம்பலா?
மனக்குரலின் ஏகாந்த லாவணியா?
துயிலா? விழிப்பு நீச்சலா?
எச்சில் விழுங்கலா? இல்லை ரத்த ஜாலமா?
குடல் சட்டிக்குள்ளே
குதிரை ஓட்டமா?
காமக் குடைப்பிடித்துத் தள்ளாடும்
குற்ற உணர்வுகளின் தேவதையா?

அக்கினிப் பூக்களின்
வசந்தருதுத் தேன்குடமா?
பசியின் பசியா?
ஒன்றை இரண்டாக்கும்
மனக்கணக்கின்
ஒற்றைக் கனவா?

*மனமுதுகில் கற்பனை விரல்களின்*
*கையெழுத்து ஸ்பரிசமா?*
*எதுவென்றால் என்ன?*
*மாளிகைக்குப் 'பெர்மிட்டு'*
*சேரிக்கு மட்டும் கைவிலக்கு!*
*காந்தி வழி நீதியிலே*
*இன்னும்*
*பிரார்த்தனை மட்டும்தான் சேரியிலா?*
*தூக்கம் 'பிர்லா மாளிகை'யில் தானா?*
*வேண்டுமென்றால் இன்னுமொரு*
*காந்திசிலை வைப்போம்.*
*ஆட்டுப்பால் குடம் உடைப்போம்.*
*அந்தச் சிலைமேலே*
*வேர்க்கடலைத் தோலுரிப்போம்.*
*வேண்டுமென்றால் இன்னுமொரு*
*காந்திசிலை வைப்போம்.*
*எது செய்தால் என்ன?*
*மாளிகைக்குப் 'பெர்மிட்டு'*
*சேரிக்குமட்டும் கைவிலக்கு.*
*ஏ! நீதி மன்றமே*
*நீயொரு உதயரேகை என்றால்*
*இந்த அஸ்தமனங்கள் யாருடையவை?*
*நீயொரு தர்மராகம் என்றால்*
*இந்த அழுகுரல்கள் யாருடையவை?*
*ஏ நீதி மன்றமே!*
*நீ நீதிதேவனின் பொன்சிறகென்றால்*
*இந்தக் கைவிலங்கு யாருடையது?*

என நீதி மன்றத்தைச் சாடுகிறார் கவிஞர். .

### பார்வை நூல்

1. கருப்பு மலர்கள் (கவிதைகளும் சில வசன கவிதைகளும்) கவியரசு நா. காமராசன், திருமகள் நிலையம், சென்னை, 1997.

## 5 (ஈ) அறம் வாழுமா? என்ற வினாவுக்குப் பேராசிரியர் மு.வ. விடையாகக் கூறும் கருத்துகளை வரைக.

**முனைவர் து. ஜானகி**

மிகப் பழங்காலத்தில் பொருள் சேர்த்து வைக்கும் வழக்கம் ஒரு சிலரிடத்தில் மட்டும் ஒரு சில காலங்களில் மட்டுமே இருந்தது. அப்போது பெரும்பாலோர் வாழ்க்கை பறவைகளின் வாழ்க்கை போல் இருந்தது. களஞ்சியங்களில் சேர்த்துவைக்காமல், அந்தந்த வேளை உணவுக்கு அவ்வப்போது தேடி உண்ணும் பழக்கம் இருந்தது. அன்றாட உணவைப் பற்றிய கவலை அன்றன்றைக்கே தீர்ந்தது. அந்த நிலையில் பொருள் ஆசை ஏது? அறத்தை அறிவுறுத்தும் காரணமும் ஏது?

அதற்கு அடுத்தபடி, பயிரிட்டு அறுவடை செய்து களஞ்சியங்களில் சேர்த்து வைத்த நிலை. அப்போது அந்தந்த ஆண்டுக்கு உரிய உணவைப் பற்றி உழவர்கள் கவலைப்பட்டார்கள். உழவர்கள் தவிர மற்ற மக்கள் உழவர்களின் உதவியை எதிர்பார்த்துக் கவலை இல்லாமல் காலங் கழித்தார்கள். 'பழுமரம் தேரும் பறவை போல்' கலைஞர்கள் வள்ளல்களை நாடி அவர்களின் உதவியைப் பெற்று மகிழ்ந்த காலம் அது. வெவ்வேறு தொழிலாளிகளும் உழவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்துவிட்டு உழவர்களின் களஞ்சியங்களை நம்பிக் கவலை இல்லாமல் காலம் கழித்த நிலை அது. அந்த நிலையிலும் பணவேட்டை இல்லை; ஆனால் ஒருசாராரிடம் உணவுப்பொருள் சேர்ந்து நின்றபடியால், மற்றவர்கள் அதை நம்பி வாழ்ந்தபடியால், அறத்தைப் பற்றிய உணர்வு வேண்டியிருந்தது. விருந்தோம்பல், அன்புடைமை, ஈகை முதலியவை அறப்பகுதிகளாக வற்புறுத்தப்பட்டன; 'இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு' என்று அறவுரை கூறப்பட்டது.

அதற்கு அடுத்தபடி ஓர் ஊர்க்கும் மற்றோர் ஊர்க்கும் உதவும் தொடர்பும் மிகுந்த காலத்தில் வாணிகம் மெல்ல மெல்லத் தலையெடுத்தது. ஒரு பொருள் கொடுத்து மற்றொரு பொருள் வாங்கும் பண்டமாற்று வளர்ந்தது. பண்டம் இல்லாதபோது விலை மதிப்புள்ள பொன், வெள்ளி முதலியவற்றைக் கொடுத்து உணவுப் பொருளைப் பெறும் வழக்கமும் தோன்றியது. அவ்வாறு பண்டமாற்றும் காசு வாணிகமும் வேரூன்றிய பிறகு, பொய்யும் ஏமாற்றமும் புகுந்தன. காசு சேர்த்து வைத்தால் கவலையின்றி வாழலாம் என்னும் நம்பிக்கை வளர்ந்தபின் சேர்த்து வைக்கும் பணவேட்கை மெல்லத் தலையெடுத்தது. சேர்த்துவைத்த பொன்னுக்கும் வெள்ளிக்கும் காவல் வேண்டுமாகையால், படையும் போர்முறையும் அமைந்தன. வலியார்

நன்றாக வாழ வகையும் மெலியார் அடங்கி நிற்க வழியும் தோன்றின. இவையெல்லாம் ஒன்றிலிருந்து மற்றொன்று வளர்ந்தமைந்த பிறகு, அறம் படிப்படியாக மறையும்போல் தோன்றியது. பண்டமாற்றில் தொடங்கிக் காசு வாணிகத்தில் அரும்பிய பணவேட்டை வலியார் மெலியாரை அடக்கும் அடக்குமுறையில் முடியவே, பொய், ஏமாற்று முதலியன வாழ்வு பெற்றன. அருள் நெஞ்சம் பெற்ற சான்றோர்கள் இவற்றை எல்லாம் கடிந்து கூறி அறநெறியில் வந்த பொருளே வாழ்க்கைக்கு உதவும், மற்றவை உதவாமல் அழியும் என்று எடுத்துக் கூறி அறத்தை வற்புறுத்தினார்கள். திருவள்ளுவரின் அறத்துப்பால் முழுவதும் இத்தகைய சமுதாயத்தை நோக்கி எழுதப்பட்ட அறவுரைகளே ஆகும்.

இன்று உள்ள அமைப்பில், பண்டமாற்று ஒரு மூலையில் ஒடுங்கியது. காசு வாணிகம் அளவில்லாமல் பெருகியது. யந்திர நாகரிகம் பெருந்துணை செய்து, பெரிய பெரிய கைத்தொழிற் சாலைகளையும் பெரிய வாணிக நிலையங்களையும், அவற்றிற்குக் காவலாக அழியாத நீதி நிலையங்களையும், அவை அழியாதபடி காக்க அவற்றைத் தாங்கி நிற்கும் அரசியல் கட்சிகளையும், பொருளாதாரத் திட்டங்களையும் அனைத்தையும் காக்கப் பெரிய பெரிய தரைப்படை, விமானப்படை, கடற்படை முதலிய படைகளையும், இந்தப் படைகளைக் கொண்டு அழிவுகளே ஆற்றலுடன் நடைபெறுமாறு வெடிகுண்டு, நச்சுப்புகை, அணுகுண்டு முதலிய போர்க் கருவிகளையும் கண்டு அமைந்துள்ளது. பணவேட்டைக்குச் செல்வாக்கும் அரசியல் தலைமையும் தற்காப்பு வன்மையும் வாய்த்துள்ளன. இவற்றிற்கு இடையில் அறநாட்டம் எங்கோ ஒரு மூலையில் பழங் காலத்துப் பண்டமாற்றுப்போல் ஒடுங்கி நிற்கின்றது.

### அறம் அழியாது

ஆயினும், இவ்வளவு முயற்சிகளும் விழலுக்கு இறைத்த நீராய் வீணாகின்றன. மக்கள் பலரும் பண வேட்டைக்கு அடிமையாகி அலைகின்றார்களே அல்லாமல் பணத்தைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெற்று அமைதியாக வாழ முடியவில்லை. பணம், கருவி; வாழ்வே குறிக்கோள். ஆனால் இன்று என்ன ஆயிற்று? வாழ்வுக்கு வழி இல்லை; பணத்திற்கே அலைந்து அலைந்து அழிவதாக இருக்கின்றது. வாழ்வு ஒரு வீடு; பணம் சமையலுக்கு உதவும் என்று சேர்த்த நெருப்பு. வீட்டில் வாழக் கொண்டுவந்த நெருப்புப் பற்றி எரியத் தொடங்கி வீட்டையே அழிக்கின்றது. வீடும் போகின்றது; சமையலுக்கும் இடமில்லை; நெருப்பு மட்டும் கொழுந்துவிட்டு ஓங்கி எரிகின்றது. எரியட்டும்; எல்லாம் போகட்டும்; மனிதன் இருக்கின்றான்; பல்லாயிர ஆண்டுகளாக வாழ்ந்துபெற்ற மக்கட் பண்பையும் உயிராற்றலையும் எந்தத் தீயும்

அழிக்க முடியாது; இவற்றைக் கொண்டு வேறு வீடு கட்ட முடியும்; இந்த வீடு பற்றி எரிந்த பிறகு, இதனால் கற்ற உண்மையை மறக்காமல், அந்தப் புதிய வீட்டில் நெருப்புக்குத் தனி இடமும் தனி அடுப்பும் வைத்துப் பற்றி எரியாதபடி காத்துக்கொள்வாள்; எதற்குக் கொண்டு வந்த நெருப்பு என்பதை மறக்காமல் அதற்குப் பயன்படுத்துவான். வயிற்றில் பசி கிள்ளும்போது சமையலை மறக்க முடியுமா? புதிய வீட்டில் புதிய முறையில் நெருப்பை வேலியிட்டுக் காத்துச் சமையல் செய்து பசியைத் தணிக்கக் கற்றுக்கொள்வான்.

மனிதன் மனத்தில் உணர்வு உள்ள வரையில் அறத்தை அழிக்க முடியாது. இன்னொருவன் படும் துன்பத்தைக் கண்டால் நெகிழும் மனப்பண்பு உள்ள வரையில் அறம் இருந்தே தீரும். பசி உள்ளவரையில் சமையலை மறக்க முடியாததுபோல், மனப்பண்பு உள்ள வரையில் அறத்தை மறக்க முடியாது. அறத்தைக் காக்கத் துணை செய்யும் என்று போற்றிய அந்த நெருப்பு-பணம்-இன்று வாழ்வையே பற்றி எரித்துக் கொழுந்துவிட்டு ஓங்குகின்றது; அறநாட்டத்திற்கே இடமில்லாமல் செய்துவிடுகின்றது. போகட்டும்; பழைய சமுதாய அமைப்பு மறைந்து சாம்பலானால், புதிய சமுதாய அமைப்பு ஒன்றைக் காண மக்களால் முடியும். அந்த அமைப்பில் பணம் இருக்கும்; பணவேட்டைக்கு இடம் இருக்காது. அறம் வாழும்; அறநாட்டம் அடிப்படையாக அமையும். பணம் அறத்தின் அடிப்படையில் சமுதாயத்திற்குப் பயன்பட்டு வாழ்க்கை திருந்தும். அன்றுதான் விமானங்களில் வானில் பறக்கக் கற்ற மக்கள், கப்பல்களாலும் நீர்மூழ்கிகளாலும் கடலில் நீந்தவும் மூழ்கவும் கற்ற மக்கள், நிலத்திலும் அமைதியாகவும் இன்பமாகவும் வாழ முடியும் என்பதை மெய்ப்படுத்துவார்கள்; பணம் ஒரு கருவி, அறம்நெறி, வாழ்வே குறிக்கோள் என்பதை மெய்ப்படுத்துவார்கள்.

## பார்வை நூல்

1. அறமும் அரசியலும், டாக்டர் மு. வரதராசன், பாரிநிலையம், சென்னை, 1957.

**5 (உ) கடந்த காலத்தில் கவிதையின் பாடுபொருள் எப்படி அமைந்தது என அறிஞர் அண்ணா எடுத்துரைக்கின்றார்?**

**முனைவர் து. ஜானகி**

சங்க இலக்கிய நயத்தைப் பாடுபொருளைப் பின்வருமாறு சுவைபட கூறுகிறார் அண்ணா.

சங்க இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகையில், ஓர் உண்மையைப் படித்தேன், இந்தக் காலத்தில் கற்பனைநிலை எவ்வளவு தூரம் கயமைத் தனத்திற்குப் போயிருக்கிறது என்பதை ஊகித்தேன். வித்தியாசத்தைப் பாருங்கள்! இந்தக் காலத்துப் புலவர்கள் எந்தக் கருத்தை ஓர் அந்தாதி மூலமாகவோ, வெண்பா மூலமாகவோ விளக்குவார்களோ, அதைக் குறுந்தொகை ஆசிரியர் ஒரே அடியில் கூறி விட்டார். அந்த அடிதான் 'கையில் ஊமையன்' என்பதாகும்.

ஒரு தோழன் காதலிலே ஈடுபடுகிறான். உவமையின் நேர்த்தியைப் பாருங்கள்! கட்டுக்கடங்காத காளை; இருந்தாலும் கட்டுப்படுகிறான் இரு கண்களுக்கு. மனத்தில் ஏதோ நினைக்கிறான், அதை எதிரேயுள்ள கட்டழகியிடம் சொல்ல முடியவில்லை; எதைப்போல் என்றால்? காலை நேரம். காட்டிலே ஓர் பாறையிலே வெண்ணெய் இருக்கிறது; கையில் ஊமையன் இதற்குக் காவல், காலைக் கதிரவன் காலையில் எழுந்து தனது இளங்கதிர்களைப் பாய்ச்சுகிறான்.

வெண்ணெய் உருகுகிறது. வெண்ணெய் உருகுவதைப் பார்க்கிறான். பார்த்ததும் 'ஐயோ! வெண்ணெய் உருகுகிறதே' என்று கூறலாம். ஆனால் வாயில்லை, நேரே ஓடிப்போய் எல்லாம் உருகுவதற்குள் எடுக்கலாம்; ஆனால் கையில்லை. கதிரவன் இந்தக் கையில் ஊமையனின் கதியற்ற நிலையை அறிவான். அவன் அவனது வேலையைச் செய்கிறான் அவன் பிரபஞ்சத்திற்கும் சொந்தம், காவலாளிக்குக் கையில்லை வாய் ஊமையே தவிரக் கண்மாத்திரமிருக்கிறது இந்தக் கோரக் காட்சியைக் காண. அதைப்போலவே கண்மாத்திரம் இருக்கிறது கட்டழகியைக்காண, ஆனால் சுயமரியதை இல்லாததாலோ, சுதந்திர உணர்ச்சி இல்லாததாலோ கையில்லை. (கையில் துணிவில்லை) அவளது கரத்தைப் பிடிக்க, அந்த வடிவழகியைக் கண்டு ஏதோ பேச வேண்டுமென்று நினைக்கிறான். ஆனால் சமுதாயக் கட்டுப்பாடுகள் அவனது வாயை மூடிவிட்டன; எவ்வளவு அருமையாக ஒருவன் ஒருத்தியைச் சமுதாயக் கட்டுப்பாடுகளால் தொட முடியாமல் கஷ்டப்படுகிறான் என்பதை ஒரு சிறு அடியில் விளக்குகிறார். ''கையிலூமன் வெண்ணெய் உருகாது பாதுகாத்தாற் போன்று'' என்று.

சங்க இலக்கியங்களின் இன்பங்களைச் சொல்லிக் கொண்டிருந்தால், இன்று முழுவதுஞ் சொல்லிக் கொண்டிருக்கலாம். சங்க இலக்கிய நுட்பத்தை அனுபவிக்க வேண்டிய இடங்களை, நமக்கு ஏற்ற எளிய முறையில் அளிப்பது என்றால் அந்தத் துறையில் பாரதிதாசன் நாட்டுக்கும் நமக்கும் செய்துள்ள தொண்டினை மறந்தாலும் மறக்கலாம்; ஆனால் மறுக்க முடியாது. பாரதிதாசன் தரும் இலக்கியச் சுவையை அனுபவிக்க இலக்கணம் கற்றிருக்க வேண்டியதில்லை. பாரதிதாசன் பாக்களைப் படித்தவுடன் அவை நமது இரத்தத்தோடு இரத்தமாகக் கலக்கின்றன; உணர்ச்சி, நரம்புகளிலே ஊறுகிறது; சுவைத்தால் ருசிக்கிறது, படிக்கிறோம்; பாரதிதாசன் ஆகிறோம். படிக்கிறோம்; நாமும் பாடலாமா என்று நினைக்கிறோம். படிக்கிறோம்; 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்கிறோம். ஆனால், சில புலவர்கள் அதிலே இலக்கண அமைப்பு இல்லை எனலாம். அஃது அவர்களது ஓய்வுநேர வேலையாக இருக்கட்டும்.

காரியத்திலே ஈடுபடுகிற நாம், ஓட்டைச் சட்டியாயிருந்தாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி என்று கருதுகிறோம். சுவைக்குதவுமா, கற்க நிகண்டு தேவையில்லையே. பாட்டிலே ஏதாவது எளிமையுடன் இனிமை மாத்திரம் கலந்து விடாமல் எழுச்சியும் கலந்திருக்கிறதா, புரிகிறதா, புரிந்து பயனடையலாமா என்று பார்க்கிறோம். நாம்தான் பெரும்பான்மை. அவர்கள் குறைந்த எண்ணிக்கை என்று சொல்லி ஓரிடத்தில் கூறுவது போலப் பாட்டைப் படித்தவுடன் புரிந்து கொள்ளும் படியாக இருக்க வேண்டும் என்பவர்களின் எண்ணிக்கைதான் அதிகம். கடின நடையிலே கவிதைகளை விரும்புபவர்கள் எண் கொஞ்சந்தான், அவர்கள் பாரதிதாசனின் பாக்கள் எந்தச் சின்னங்கள் மட்டமானவை என்று தேடித் திரிபவர்கள். நாம்தான் கலையை அப்படியே அனுபவிப்பவர்கள். பயனடைகிறோம்; காரணம் எளிய இனிய நடை. இதுவரை அவரது நடையைப் பற்றிச் சொன்னேன். அவர் எடுத்துக் கொள்ளும் பொருள் என்றால், அவர் கொடுக்கும் தலையங்கமென்றால், அவை புரட்சிகரமாயிருக்கும்; புதுமையா யிருக்கும்.

ஒரு காலத்திலே, தமிழகத்திலே சாலைகளையும், சோலைகளையும் கண்டு களித்துச் சந்தனக் காடுகளிலே, சத்தம் அமைத்துப் பண் பாடினார்கள். பிற்காலத்திலே, அதாவது இடைக்காலத்திலே, வாழ்வு இந்த லோகம் அந்த லோகமாக பிரிந்தது. பேரம்பலம் சிற்றம்பலம் என்பது போல. மாய வாழ்வு மனித வாழ்வு என்று ஏற்பட்டது. இடைக்காலப் புலவர்களின் உள்ளங்களிலே ஒரே நேரத்தில் இரண்டு மாறுபட்ட காட்சிகள் தோன்றி மறைந்தன. ஒரே உதட்டில் இரண்டு நாக்குகள் புரண்டன. குன்றைப் பற்றி பாடுகின்ற

நேரத்திலே அந்த லோகம். அந்த வாழ்வு என்ற எண்ணங்கள் தோன்ற, அந்தக் குன்று முருகனுடைய தோளாகவும், அதுவும் வள்ளியிடம் கொஞ்சிய தோளாகவும் காட்சியளித்ததே தவிர, மலைச்சாரலிலே வளைந்து ஓடும் ஆறு; கரடு முரடான பாதை; அவைகளைத் தாண்டி மலைமீதிருந்து கீழே பார்த்தால் காடு தெரியும் காட்சி; காடுகளில் சிறுத்தையும், புலியும் உலவும் காட்சி அங்கு வேடுவரும் வில்லியரும் ஆடுகிற வேட்டை; ஆகிய இயற்கை எழில், அந்த விநாடி தோன்றவில்லை.

இன்று நாடக மேடைகளில் நடக்கிற வள்ளித் திருமணத்திற்கும், அதிலிருந்து தான் இது கற்பனையானதோ என்று எண்ணும்படியான ஓர் இயற்கை நிகழ்ச்சி சங்க இலக்கியத்தில் வர்ணிக்கப்படுவதற்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள். பண்டைக் காலப் புலவர்களின் கள்ளங் கபடமற்ற உள்ளத்தையும், இந்தச் சிறு படப்பிடிப்புத் தெளிவாக்கும் என நம்புகிறேன். ஓர் தலைமகன் காட்டுக்கு வேட்டையாடச் செல்கிறான். தன் வேல்தைத்த யானை எப்பக்கம் ஓடிவிட்டது என்று தேடிக் கொண்டு வந்தவன் முன் ஓர் ஆரணங்கு எதிர்ப்படுகிறாள். நல்ல அழகி; பக்கத்திலே பளிங்கு நீரோடை கட்டழகன் அந்த மங்கையை மணந்து கொள்ள இச்சைப்படுகிறான். மணந்து கொள்வதென்றால் இந்தக் காலத்தைப் போலப் பொருத்தம் பார்க்க ஐயரைத் தேடுவது தேவையில்லாதிருந்த காலம் அது. காதலர் இருவரும் கண்களாற் பேசினார்கள். வாய் அச்சுப் பதுமை போலிருந்த போதிலும் அருகே சென்றான். வஞ்சி அஞ்சினாள். அஞ்சாதே அஞ்சுகமே என்றான். ஆனால், சற்று நேரத்தில் ஓர் அலறல் கேட்கிறது. அது என்னவென்று கேட்கிறாள், அந்த ஏந்த஌ழயாள், அது என் வேல் வலிக்கு தாங்க முடியாமல் பிளிறும் யானையின் குரல் என்றான். பாவைக்கு யானை என்றால் பயம் போலிருக்கிறது; 'ஐயோ யானையா! அச்சமாயிருக்கிற தென்றாள். 'அச்சமானா' அருகே வா', என்றான். வந்தாள். அணைத்துக்கொண்டான்! திருமணம் முற்றிற்று!!!

இந்த ஒரு சம்பவத்தைப் பிற்காலத்தில் வள்ளி கதையாக்கி, அந்த வீரனை வேலனாக்கி, கிழவனாக்கி, தேனும் தினைமாவும் கேட்டான் என்று சொல்லி, வளையற்காரனாக்கி விட்டார்கள். வைதீகத்தைப் புகுத்தி, மூட நம்பிக்கையை வளர்க்கும் பகுத்தறிவிற் கொவ்வாத ஏடுகள் இருக்குமானால் அவை குற்றம் என்று கருதப்பட்ட காலம். இதனால் அந்தக் காலத்திற்குத் தகுந்தாற்போல் அப்போது கவிதைகள் எழுந்தன. இடைக்காலத்திற்குத் தகுந்தாற்போல், இன்றைய வள்ளிகதை போன்றவைகள் இயற்றப்பட்டன. காலத்திற் கேற்றவாறுதான் கவிதைகள் இயற்றியிருக்கிறார்கள் என்றால் காலம் என்னும் சிறையிலிருந்து தன்னை விடுதலை செய்து கொள்ளாதவன்

சிறந்த கவியாக மாட்டான். அவன் கோர்ட்டுகளில் உள்ளவர்களைப்போல், ஒரு காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்து வைக்கும் ரிகார்டு பேர்வழி. அவன் அழகாக நெல்மணிகளைச் சேகரித்து மிராசுதாருக்குக் கொடுக்கும் பண்ணையாள். அவன் சிறந்த கவியாக மாட்டான். சிருஷ்டி கர்த்தாவாக மாட்டான். எக்காலத்திலும் ஜீவித்திருக்கும் உயிர்க்கவியாக மாட்டான் என்கிறார் அண்ணா.

## பார்வை நூல்

1. ஏ தாழ்ந்த தமிழகமே! சி.என். அண்ணாதுரை, பாரதிபதிப்பகம், சென்னை, 1957.

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் வடை தருக-**

**6 (அ) கண்ணனை மானுடத்தின் பல வடிவங்களாகப் புனையும் பாரதியாரின் புதிய நோக்கை எடுத்துரைக்க.**

**முனைவர் து. ஜானகி**

வாழ்வியல் முழுவதிலும் கண்ணனைப் பல்வேறு உறவு முறைகளில் கண்டு உணர்ந்த அனுபவங்களின் வெளிப்பாடாகவே பாரதியின் கண்ணன் பாட்டு மலர்ந்துள்ளது.

தனக்குச் சரியான உறவாகக் கண்ணனையே பாரதி கொண்டிருந்தமையை அறியலாம்.

கண்ணன் பாட்டில் அமைந்துள்ள 14 தலைப்புகளையும் பின்வரும் நிலைகளில் அடக்கிக் காண இயலும். அவை-

1. கண்ணன் பாட்டில் உறவு நிலை
2. கண்ணன் பாட்டில் அன்பு நிலை
3. கண்ணன் பாட்டில் காதல் நிலை
4. கண்ணன் பாட்டில் சமய உணர்வுகள்
5. கண்ணன் பாட்டில் சமுதாய உணர்வுகள்

என்பனவாகும்.

கண்ணன் என் தாய், தந்தை, குழந்தை, விளையாட்டுப் பிள்ளை என்னும் தலைப்புகள் உறவு நிலையிலும்,

கண்ணன் என் தோழன், சீடன், குரு, அரசன், ஆண்டவன், சேவகன் என்னும் தலைப்புகள் அன்பு நிலையிலும்,

கண்ணன் என் காதலன், காதலி, கந்தன் என்னும் தலைப்புகள் காதல் நிலையிலும், சமய உணர்விலும் அடங்கக் கூடியனவாகும்.

மற்றும் கண்ணன் தன் குல தெய்வம் என்பதும் மாய உணர்வில் கொள்ளத்தக்கது.

சமுதாய உணர்வுகள் கண்ணன் பாட்டில் முழுமையாக வெளிப்பட்டுள்ளன. சமுதாய உணர்வுகளாக, இன ஒற்றுமை, சாதி ஒற்றுமை, ஏற்றத் தாழ்வு, வேலையில்லா நிலை, வறுமை, அச்சம் என்பன கண்ணன் பாட்டில் எடுத்தியம்பப்பட்டுள்ளன

இனி பாரதியின் குறியீடுகள் கண்ணன் பாட்டில் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைக் காணலாம்.

**கண்ணன் -பாரதி உறவு நிலைகள்**

உறவு என்பது உயிரை மலர்ச்சியடையச் செய்யும். இரத்த உறவுகள், பிறவுறவுகள் என்று உறவுகளை வகைப்படுத்தலாம். கண்ணன் தன் உறவுக்காரனாகப் பாவித்துப் பாடும் பாடல்கள் பாசமிக்கவை. பக்திமிக்கவை.

**கண்ணன்-என் தாய்**

இத்தலைப்பில் பாரதியார் இயற்கையின் பற்பல கோணங்களைப் புலப்படுத்துகின்றார். ஒரு தாய் எவ்வாறெல்லாம் இருக்க வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்துகின்றார். பால் ஊட்டுதல் முதலாக, நீண்டதோர் புகழ் வாழ்வும்-பிற நிகரற்ற பெருமையும் கொடுத்தலை இறுதியாகத் தாயின் செயல்களாகக் கூறியுள்ளார்.

*உயிரெனும் முலையினில் உணர்வெனும்பால்*
........
*மாயமுறும் கதை சொல்லி மனங்களிப்பாள்*

என்னை மடியில் வைத்துக் கொண்டு இன்பதுன்பக் கதைகளைக் கூறுவாள். விந்தை, விந்தையாகப் பலவிதத் தோற்றங்கள் காட்டுவிப்பாள். நான் வேடிக்கையுறக் கண்டு நகைப்பதற்கே.

*கோத்த பொய் வேதங்களும்-மதக்*
........
*நிகரறு பெருமையும் அவள் கொடுப்பாள்*

என்று கூறும்போது, தாயூட்டும் அருட்கல்வியைப் புலப்படுத்துகின்றார். மேலும் வேண்டியன கொடுத்திடுவாள், அவை விரும்பு முன் கொடுத்திட விரைந்திடுவாள், ஆண்டருள் புரிந்திடுவாள், அண்ணன் அருச்சுனன் போலெனை ஆக்கிடுவாள். நீண்ட வாழ்வையும், நிகரற்ற பெருமையையும் கொடுப்பாள் என்று பல்வேறு நிலைகளில் தாய்மையின் தனிச்சிறப்புகளைக் காட்டியுள்ளார்.

**கண்ணன்-என் தந்தை**

இத்தலைப்பின் கீழ் பாரதி பாடியுள்ள பாடல்கள் மூலம் ஒரு தந்தை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும், அவன் சமுதாயத்தின் புதுமை நோக்கம் கொண்ட தந்தையாகப் போற்றப்படல் வேண்டும் என்பதையும் அறிய முடிகின்றது.

*பிறந்தது மறக்குலத்தில்-அவன்*

*. . . . . . . . .*

*சூனியப் பொய்ச்சாத்திரங்கள் கண்டு நகைப்பான்*

என்று கண்ணனாகிய தந்தையின் பிறப்பினையும், சிறப்பினையும், வழக்கத்தினையும் நிறத்தினையும், குணத்தினையும் கூறியுள்ளார்.

ஏழைகளைத் தோழமை கொள்வான்; செல்வர்களைக் கண்டால் சினந்து விழுவன்; துன்பத்திலே தளர்ச்சி கொள்ளாதவர்க்குச் செல்வமளிப்பான் என்ற நிலையில், புதுமைப் போக்குடைய தந்தையாகக் கண்ணனைப் படைத்துள்ளார். மேலும், இன்பத்தை இன்பம் என்றும் துன்பத்தைத் துன்பம் என்றும் எண்ணுவதில்லை. அன்பு உடையவன் உயிர்க்குலம் ஏற்றமுற வம்புகள் பல செய்யக் கூடியவன், சீலம், அறிவு, கருமம் இவை சிறந்தவன். குலத்தினிற் சிறந்தவர் என்னும், மேலவர், கீழவர் என்று சொல்லக் கூடியதை வெறுக்கக் கூடியவன் என்றெல்லாம் கண்ணனாகிய தந்தையைப் பாரதி நமக்குக் காட்டியுள்ளார்.

*மேலவர் கீழவரென்றே-வெறும்*

*. . . . . . . . .*

*பொகுக்கிவிட்டா லெவர்க்கும் நன்மை யுண்டென்பான்*

என்ற பாடலைக் காணும் போது, கண்ணன் எனும் தந்தை சாதி வேற்றுமைக்கு முதல் எதிரி என்று தெரியும் வகையில் பாரதி பாடியுள்ளதை அறிய முடிகின்றது.

**கண்ணன் - என் குழந்தை**

பாரதி குழந்தையின்பத்தைப் பல்வேறு நிலைகளில் பாடியுள்ளமையை அறிய முடிகின்றது. குழந்தையைப் பற்றிய ஒவ்வொரு வருணிப்பும் நம் உள்ளத்தில் உணர்ச்சியைத் தூண்டுவதாக அமைந்துள்ளது.

சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா செல்வக் களஞ்சியமே என்று தொடங்கி, கண்ணம்மா ஆடிவரும் போது உள்ளங் குளிருவதாகவும், ஆடித் திரிதல் கண்டால் அவளிடம் ஆவி தழுவியதாகவும், அவள் உச்சியை முகந்தால் கருவம் ஓங்கி வளருவதாகவும், மெச்சி அவளை ஊரார் புகழ்ந்தால் மேனி சிலிர்ப்பதாகவும் கூறியுள்ளார்.

மேலும், அவள் கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளம் கள்வெறி கொள்ளுவதாகவும், அவள் முகம் சற்று சிவந்தாலே மனது சஞ்சலமாகுவதாகவும்,

*உன் கண்ணில் நீர்வழிந்தால்-என் நெஞ்சில்*

*. . . . . . .*

*ஆகமோர் தெய்வமுண்டோ*

என்றெல்லாம் பாடியிருப்பதன் மூலம், குழந்தைச் செல்வம் ஏனைய உலகச் செல்வங்களைக் காட்டிலும் மிஞ்சியது என்று பாரதியார் அறிவுறுத்துகின்றார்.

**கண்ணன்-என் விளையாட்டுப் பிள்ளை**

இத்தலைப்பில் பல்வேறுபட்ட நிலைகளில், கண்ணனின் விளையாட்டுக் குறும்புச் செயல்களைச் சொல்லோவியங்களாகப் பாரதி நமக்குத் தீட்டியுள்ளார். தின்பதற்காகப் பழத்தைத் தருவான். அதைத் தின்கின்ற போதில் தட்டிவிடுவான். தேனொத்த பண்டங்களை எட்டாத உயரத்தில் வைப்பான். மானொத்த பொன் என்று சொல்லி மனம் மகிழும் நேரத்தில் கிள்ளிவிடுவான். அழகுள்ள மலர்களைக் கொண்டு வந்து நீ கண்ணை மூடிக்கொள் சூட்டுகிறேன் என்று சொல்லிப் பின்னர் தோழிக்குச் சூட்டிவிடுவான்.

*பின்னலைப் பின்னின்றிழுப்பான்-தலை*

*. . . . . . . .*

*ஆறேழு கட்டெறும்பைப் போட்டு-விடுவான்*

என்று பல்வேறு நிலைகளில் அவனுடைய விளையாட்டுச் செயல்களைக் கூறியுள்ளார்.

**கண்ணன்-பாரதி அன்பு நிலைகள்**

அன்பு என்ற சொல்லில்தான் ஆயிரம் அர்த்தங்கள் புதைந்திருக்கின்றன. அன்பு இல்லாத மனம் கல்மனமே அன்பு மனங்களை இணைக்கச் செய்வது. மனிதனின் மனநிலையில் அன்பு நிலையே கவிஞர்களாலும், நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் போற்றப்படுவது. அந்த அன்பு நிலையில் தோன்றிய நட்புறவைப் பாரதி அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

**கண்ணன்-என் தோழன்**

கண்ணன் பாட்டில் முதல் பாடலாக 'கண்ணன்-என் தோழன்' என்ற பாடல் அமைந்துள்ளது. அதில் பல்வேறு நிலைகளில் தோழமையை வெளிப்படுத்தியுள்ளமையை அறிய முடிகின்றது. சங்க இலக்கியங்களிலே தோழன் அதாவது பாங்கன் அக வாழ்விற்கு மட்டும் வருவான். ஆனால், பாரதி படைத்த தோழன் அக வாழ்வு, புற வாழ்வு என்ற இரண்டிலும் பங்கு பெறுபவனாக உள்ளான்.

*பிழைக்கும் வழிசொல்ல வேண்டுமென் றாலொரு*

*.......*

*வாழ்வினுக் கெங்கள் கண்ணன்*

என்று கூறியுள்ளார். மேலும், அழைக்கும் பொழுதினிற் போக்குச் சொல்லாமல் அரைநொடிக்குள் வருவான். கேட்டபொழுதில் பொருள் கொடுப்பான், ஆட்டம் காட்டியும், பாட்டுப் பாடியும் எனக்கு ஆறுதல் செய்வான். உள்ளத்தில் கருவம் கொண்டால் ஓங்கி இடிப்பான். கள்ள வார்த்தைகளைக் கூறினால் காறியுமிழ்வான், சின்னக் குழந்தைகள் போல் விளையாடிச் சிரித்துக் களித்திடுவான், உண்மை தவறி நடப்பவர் தம்மை உதைத்து நசுக்கிடுவான் என்றும் பாரதி கூறியுள்ளார்.

*நல்லவன்ன மகளிர் வசப்படவே பல*

*........*

*முற்றிய பண்டிதன் காண்*

என்று இறுதியாகக் கண்ணனாகிய தோழன், அனைத்து நிலையிலும் சிறப்பானவன் என்று கூறி முடித்துள்ளார். ஒரு சிறந்த தோழனுக்கு இருக்க வேண்டிய இலக்கணங்கள் யாவற்றையும் தம்முடைய இலக்கியத்தில் பாரதி மொழிந்துள்ளமையைக் காண முடிகின்றது.

**கண்ணன் என் சேவகன்**

இப்பாடலின் கீழ், பல்வேறு நிலைகளில் சேவகனை நகைச்சுவை ததும்பப் பாரதி நமக்குக் காட்டியுள்ளமையை அறியலாம்.

*ஏனடா நீ நேற்றைக்கு வரவில்லை என்றால்*

*..........*

*சேவகராற் பட்ட சிரமமிக வுண்டு, கண்டீர்;*

எனவரும் பாடல் பகுதியில் நகைச்சுவை மிளிர சேவகனின் செயல்களைக் காட்டுகிறார். இவற்றையெல்லாம் மாற்றி அமைக்க, ஓர் இலட்சிய சேவகனை/கண்ணனாகிய சேவகனைப் பாரதி நமக்குப் படைத்துக் காட்டியுள்ளார்.

மாடுகன்று மேய்த்திடுவேன். மக்களை நான் காத்திடுவேன், வீடு பெருக்கி விளக்கேற்றி வைப்பேன், சொன்னபடி கேட்பேன், துணிமணிகள் காத்திடுவேன், சின்னக் குழந்தைகள் அழாதபடி பார்த்துக் கொள்வேன். இரவு பகலாயினும் சிரமத்தைப் பார்க்க மாட்டேன் என்றெல்லாம் இலட்சியக் சேவகன் கூறுவதாகக் காட்டியுள்ளார்.

வாய் முணுத்தல் இல்லை, வீதி பெருக்குகிறான், வீடு சுத்தமாக்குகிறான், மக்களுக்கு வளர்ப்புத் தாய், வைத்தியன் என்ற நிலைகளிலெல்லாம் உதவுகின்றான். பண்டமெல்லாம் சேர்த்து

வைத்துப் பால் வாங்கி, மோர் வாங்கிப் பெண்டுகளைத் தாய்போற் பிரியமுற ஆதரிக்கின்றான். நண்பனாகவும், மந்திரியாகவும், நல்லாசிரியனாகவும், பண்பிலே தெய்வமாகவும் இருக்கின்றான் என்று பல்வேறு நிலைகளில் கண்ணனாகிய இலட்சிய சேவகன் செய்யும் கடமைகளைப் பாரதி பட்டியலிட்டுக் காட்டுகின்றார். இவையாவும் பாரதியின் கற்பனையாக அமைந்துள்ளமையையும் அறியமுடிகின்றது.

**கண்ணன்-என் சற்குரு**

வெளித் தோற்றத்தில் உலகம் மயங்கும் நிலையையும், பின்னர் உண்மை நிலையைக் கண்ணனாகிய சற்குருவின் மூலமும் உணர்த்துகின்றார். சத்திரங்கள் பல தேடினேன். ஆனால், அவற்றில் உண்மை காணவில்லை. நாடு முழுவதும் சுற்றி இறுதியாக யமுனைக் கரையில் ஒரு கிழவனைக் கண்டேன். அக்கிழவர்.

*என்னுளத் தாசை யறிந்தவர்-மிக*
. . . . . . . .
*சத்தியங் கூறுவன்*

என்றனர். என்ற செய்திகளின் மூலம், பாரதியார் வெளித் தோற்றத்தில் உலகம் மயங்கும் நிலையைக் காட்டியுள்ளார். பின்னர், அக்கிழவனின் வார்த்தைக்கேற்பக் கண்ணனிடம் சென்றேன். அவன்,

*காமனைப் போன்ற வடிவமும்-இளங்*
. . . . . . . .
*ஆடலும் பாடலும் கண்டுநான்*

அவன் மீது நம்பிக்கையிழந்து, அக்கிழவனைக் கொன்று விடலாம் என்று நினைத்தேன் என்று கூறும் போது, புறத்தோற்றம் அறிவை மறைக்கும் செய்தியைப் பாரதியார் அழகுபடப் புனைந்துள்ளார்.

*ஆசித் தனிபொரு ளாகுமோர்-கடல்*
. . . . . . . .
*மேனியில் தோன்றிடும் வண்ணங்கள்*

என்று கண்ணனாகிய சற்குருவின் மூலம் உண்மை நெறியை நமக்கு உணர்த்துகின்றார். உலகம் அழகாகத் தோன்றுவது உருவெளித் தோற்றமன்று அல்லது புலன்களின் மாயச் செயலுமன்று ஆனால், அது அழியாத உண்மைப் பொருள் என்ற கருத்தைப் பாரதியார் இத்தலைப்பின் கீழ் நமக்கு அறிவுறுத்துகின்றார்.

**கண்ணன்-என் சீடன்**

கண்ணனைச் சீடனாய்க் காட்டும்போது அவனை ஒரு புரியாத புதிராகவே பாரதியார் படைத்துள்ளார்.

*சீடனா வந்தென்னைச் சேர்ந்தனன் தெய்வமே*

*. . . . . . . . . . .*

*பலவகையால் அகப்பற்றுறச் செய்தான்*

என்று சீடன் வரவையே ஒரு வலைப் பின்னலாகக் காட்டியுள்ளார்.

இவற்றைச் செய்யாதே, இவரோடு பழகாதே. இவற்றைக் கூறாதே. இவற்றை விரும்பாதே, இவற்றைப் படிக்காதே, இவற்றைப்படி, இவரோடு உறவு கொள். இவற்றை விரும்பு எனப் பல தருமங்களை எடுத்துக் கூறிய போதிலும், கதையிலே கணவன் சொல்லினுக்கு எல்லாம் எதிர் செய்யும் மனைவிபோல், இவனும் நான் சொன்னவற்றுக்கெல்லாம் எதிராகவே நடந்தான் என்று கூறியுள்ளதன் மூலம், சீடனைத் திருத்த முயன்ற முயற்சிகள் யாவும் வீணாய் முடிந்தமையை நமக்குப் பாரதி காட்டியுள்ளார்.

உன்னைச் செம்மை செய்யக் கருதி ஏதேதோ செய்தேன். ஆனால், தோற்று விட்டேன் என்று கூறும் போது

*மகனே, ஒன்றையாக்குதல் மாற்றுதல்*

*. . . . . . . . .*

*வாழ்க நீ என்றான் வாழ்க மற்றவனே*

என்ற மெய்மையைக் கண்ணனாகிய சீடன் உணர்த்துவதாகப் பாரதியார் இறுதியாக நமக்குக் காட்டியுள்ளார். இதுவே கண்ணன் சீடனாக வந்ததன் பயன் என்பதையும் உணர்த்துகின்றார். கல்வியின் நோக்கம் கருத்துகளைத் திணிப்பதன்று. ஆனால் மனிதனுக்குள்ளே மறைந்து கிடக்கும் தெய்வீகச் சக்தியை வெளிப்படுத்துவதாகும் என்ற உயர்ந்த கல்விக்கோட்பாட்டைப் பாரதியார் நமக்கு இதன் மூலம் தெளிவுறுத்துகின்றார்.

**கண்ணன்-என் அரசன்**

கண்ணனாகிய அரசனின் ஆட்சி எவ்வாறு உள்ளது என்பதைப் பாரதி நமக்குக் காட்டுகின்றார்.

*பகைமை முற்றி முதிர்ந்திடு மட்டிலும்*

*. . . . . .*

*நாட்கள் மாதங்கள் ஆண்டுகள் போக்குவாள்*

என்றும் கண்ணன் வெல்வதும், பகைமை அழிவதும் காண்பதற்கு அரிது. படைகள் சேர்த்தல், பரிசனம் சேர்த்திடல் பணமுண்டாக்கல் முதலியவற்றைச் செய்யான். பெண்களிடத்து மோகமுற்றுப் பொழுதினைப் போக்குவான். தந்திரங்கள் பயிலுவான், சவுரியங்கள் பழகுவான். மந்திரங்கள் காட்டுவான். வலிமையின்றிச் சிறுமையில்

வாழ்குவான் என்று பல்வேறு நிலைகளில் கண்ணனாகிய அரசனின் ஆட்சியைக் குறை கூறுகின்றார் பாரதி.

மேற்கூறப்பட்ட செய்திகளின் மூலம் ''அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்'' என்ற பழமொழி வெளிப்படுத்துப்படுகிறது என்றும், தீமைக்குப் பெரிதும் இடம் கொடுக்கப்படுகிறது. இறுதியில் நேர்மைக்கும் உண்மைக்கும் வழிவிட்டு அத்தீமை அழிகிறது என்றும் கா.மீனாட்சி சுந்தரம் குறிப்பிடும் செய்தியும் இங்கு நினைவு கூறத்தக்கது.

*காலம் வந்துகை கூடுமப் போதிலோர்*
*. . . . . . . . .*
*தருமம் பாரில் தழைத்தல் மறுகணம்*

என்று கூறும்போது, கண்ணன் அறங்காக்கும் ஆணைச்சக்கரமாய் விரைந்து உருண்டு, உயிர்களைக் காக்கும் இத்தகைய அரசு அறத்தின் அரசாகக் கண்ணன் வடிவில் பாரதி நமக்குக் காட்டுவதை அறியலாம். நன்மை வெல்லும், தீமை தோற்கும் என்ற நம்பிக்கையையும் பாரதி படைத்துள்ளார்.

**கண்ணன்-என் ஆண்டான்**

அடியவர் ஒருவர் தான் வணங்கும் இறைவனிடத்தில் தன் துன்பத்தைப் போக்க வேண்டிப் பல்வேறு நிலைகளில் வேண்டுதல் சுக வாழ்விற்குத் தேவையான அனைத்து வழிகளையும் வேண்டுவதாக அமைத்துப் பாடியுள்ளார்.

***ஒன்பது வாயிற் குடிலினைச் சுற்றி***
***. . . . . . . . .***
***பகையாவுந் தொலைந்திட வேண்டுமையே***

என்றும் பேய் பிசாசுகள் திருடர்கள் போன்றோர் என்னுடைய பெயரைக் கேட்ட அளவில் நடுங்கும்படி செய்தல் வேண்டும் என்றும் கண்ணனாகிய ஆண்டானிடம் வேண்டுகின்றார்.

**கண்ணன் - என் காதலன்**

தலைவனைப் பிரிந்த தலைவியின் மனநிலையைத் தூண்டிற் புழுவினைப் போன்றும், வேண்டும் பொருள்களிடத்தில் மனவெறுப்பும், தாயினைக் காணும்போது சலிப்பும், தோழிகளின் உறவை நோயைப் போன்றும் இருப்பதாக வடித்துள்ளார். மேலும், உணவு உண்ணாமை, உறக்கம் இல்லாமை, எதிலும் குழப்பநிலை, பால் கசப்பாக இருத்தல், கனவு காணல் முதலிய செயல்களை முதல்பாடலின்கண் மொழிந்துள்ளார்.

*நேரம் மிகுந்த தின்னும் நித்திரையின்றி-உங்கள்*

*. . . . . . . .*

*கலிப்புத் தருகுதடி சகிப் பெண்களே*

**கண்ணன் - என் காதலி**

தமிழிலக்கிய மரபுப்படி காதலனின் செயல்களைப் பாரதியார் வடித்துள்ளமையும், அதில் புதுமைச் செய்திகள் சில, அப்பழமையோடு சேர்த்துக் கூறப்பட்டுள்ளமையையும் அறிய முடிகின்றது.

உண்மையான, தூய்மையான அன்போடும் காதலோடும் உறவு கொள்கின்ற உணர்ச்சியெல்லாம், பக்தியோடு ஒப்பிட்டு மதிக்கத்தக்க, புனிதமான உறவுக்கு இணையாகின்றது. அந்தப் புனிதமான நினைவோடுதான் பாரதி கண்ணனைப் பலவித நிலைகளில் உள்ளத்தில் நிறுத்தி வணங்குகிறார்.

ஒரு மனிதனுக்குத் தேவையான, வாழ்க்கையோடு இயைந்த, புனிதமான உறவுகளை மட்டும் கொண்டு பாடியதால், அந்த நிலைகளெல்லாம் கடவுள் நிலைக்கு வைத்து மதிக்க வேண்டும் என்று கருத்தும் ஏற்றுக் கொள்ள வேண்டியதாய் இருக்கிறது.

கண்ணனைப் பாடுகிறேன் என்று கண்ணனுடைய அவதாரங்களை எல்லாம் புகழ்ந்து பாடாமல், காதலியாக, தோழனாக, சேவகனாக, சீடனாகப் பாடியமை அவருக்கே உரிய புரட்சி ஓட்டமாகும்.

## பார்வை நூல்

பாரதியின் பாட்டும் சபதமும், டாக்டர் மு. பொன்னுசாமி, இந்து பதிப்பகம் கோயம்புத்தூர்.

## 6 (ஆ) மு. வரதராசனார் இன்றைய சமூக அவலங்களை எங்ஙனம் எடுத்துரைக்கின்றார்.

**முனைவர் து. ஜானகி**

முன்னே பகையையும் பிரிவையும் வளர்த்த குறுகிய நோக்கம் கொண்டவர்களே தந்திரம் உள்ளவர்களாய் இப்போதும் அரசியலைக் கெடுக்க முன்வருகிறார்கள். பகையும் பிரிவும் வெறுப்பும் மெல்ல மெல்ல மறைந்து போகும் வேளையில் இவர்கள் மக்களின் மனப்பான்மைக்கு ஏற்றபடி பேசி செயலளவில் தந்நலம் வளர்த்துக் கொள்கின்றார்கள். மக்கள் இனம், வகுப்பு, நிறம், மதம், நாடு என்ற காரணங்களை வைத்துப் பிரிவுபட்டு வாழ்கின்றார்கள். அவ்வாறு வாழும் போது பரந்த நோக்கம் உடையவர்களுக்கும் இடம் இருப்பதில்லை. ஆனால், இனம், வகுப்பு, நிறம், மதம், நாடு இவற்றின் பெயரால் விதைத்த பகைவித்துக்கள் வீண்போகவில்லை. அவைகள் கொலையாய், கொள்ளையாய், குழப்பமாய், போராய் மூளுகின்றன. அப்பொழுது கொலை கொள்ளை குழப்பம் போர் முதலியவற்றிற்கு இரையாகி அல்லல்படும் மக்கள், மனம் மாறி ஒற்றுமையையும் அன்பையும் வற்புறுத்தும் அரசியல் தலைவர்கள் சொல்லும் வழிகளைக் கேட்டு நடக்கின்றார்கள்; கேட்டு நடக்க முயல்கின்றார்கள். இந்த நிலையில் பகையைப் பெருக்கிவந்த பழைய தந்திரக்காரர்கள் அரசியலில் புகாமல் இருந்தால், உலகத்தில் அமைதி வாய்ப்புக் கிடைத்தது என்று உணர்ந்து விழிப்போடு எழுகிறார்கள். உண்மையை மறைத்து மக்களின் மனப்பான்மைக்கு ஏற்றபடி பேசி நடிக்கின்றார்கள். ''ஆம் ஆம்; நாம் எல்லோரும் ஒரே கடவுளின் மக்கள். நமக்குள் எந்த வேற்றுமையும் புகக் கூடாது. வேற்றுமைகளை வைத்துக் கொண்டு நாம் பட்டது போதும். இனியாவது எல்லோரும் ஒன்று என்பதை மறக்காமல் வாழ்க்கை நடத்தவேண்டும்; இதுவரையில் நமக்குள் இருந்த பகைமை மறந்துவிட வேண்டும். இது நோன்பாகக் கொள்ளவேண்டும்.'' என்றெல்லாம் பேசுகின்றார்கள். பொதுமக்கள் இந்தப் பேச்சை எல்லாம் கேட்டு வியப்பு அடைகின்றார்கள். ''நேற்று வரையில் நம்மை எல்லாம் பிரிந்திருக்கச் செய்து பகையை வளர்த்த இவர்களே இப்படிப் பேசுகின்றார்களே? எவ்வளவு மனமாற்றம்'' என்று ஏமாந்த மக்களாய் எண்ணி மயங்குகின்றார்கள். பரந்த நோக்கத்தோடு வகுப்பு இனம் நிறம் மதம் நாடு என்னும் பற்றுக்களை எல்லாம் கடந்து வாழவேண்டும் என்று நெடுங்காலமாக உண்மையாகவே வழிகாட்டி வந்தவர்களையும் மக்கள் மறந்துவிடுகின்றார்கள். நேற்றுவரையில் பகையையும் பிரிவையும் வளர்த்துவந்து, இன்று உண்மை உணர்ந்தது போல் நடிக்கும் தந்திரக்காரர்களின் வலையில் மயங்கி விழுந்து மறுபடியும் அவர்களுக்கே செல்வாக்கைக் கொடுத்து அரசியலை

ஒப்படைக்கின்றார்கள். அரசியலில் பொறுப்புக் கிடைத்ததும் தந்திரக்காரர்கள் பழைய அழிவு வேலையையே புதிய போர்வையில் செய்ய முனைகின்றார்கள். முன்னே சொன்னதும் செய்ததும் ஒன்றாக இருந்தன. இப்போது சொல்வதெல்லாம் பெரிய பெரிய உண்மைகள்; செய்வதெல்லாம் சிறு சிறு தன்னலச் செயல்கள்; பேசுவதெல்லாம் உயர்ந்த கொள்கைகள்; அமைப்பதெல்லாம் தாமும் தம் குடும்பங்களும் மட்டும் வாழ்வதற்கு வேண்டிய வழிவகைகள். பரந்த நோக்கம் பேச்சளவில் குறுகிய நோக்கமே செயலளவில். அதனால் பொது மக்கள் மீண்டும் ஏமாற்றம் அடைகின்றார்கள்.

இந்த நிலை வந்த பிறகு மற்றவர்கள் உற்றுப் பார்த்து உணர்கின்றார்கள். பரந்த நோக்கம் என்ற பேச்சையே வெறுக்கின்றார்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தொடரும் கசப்பாகின்றது. வகுப்பு இனம் நிறம் மதம் நாடு என்ற பிரிவினைகளே இயற்கை என்றும், இந்தப் பிரிவுகளையும் பகையுணர்ச்சிகளையும் வளர்ப்பதே கடமை என்றும் மக்களுக்கு எடுத்துரைக்கின்றார்கள். ஒற்றுமை, பரந்த நோக்கம் என்ற பேச்சுக்களை நம்பிக் கெட்டோமே என்ற ஏமாற்ற உணர்ச்சியால், மக்கள் பிரிவினைகளை வளர்ப்பதே அறம் என்று உணர்ந்து எழுச்சி பெறுகின்றார்கள். ஆகவே குறுகிய நோக்கமும் பகை விரிவுகளும் மறுபடியும் வளர்கின்றன; முன்னிலும் பண் மடங்கு உறுதியாகின்றன; மண் சுவர்களால் பிரிவினைகள்; இப்போது இரும்புச் சுவர்களால் பிரிவினைகள், இவ்வளவுக்கும் காரணம் தந்திரக்காரர்களின் தந்நலச் செயலே ஆகும்.

எளிய திருடர், எளிய பொய்யர், எளிய கொலைஞர் ஆகிய இவர்கள் எளிய முறையில் உலகத்தாரின் அறிவுக்கு எட்டுமாறு திருடுகின்றார்கள், பொய்க்கின்றார்கள், கொல்கின்றார்கள். இனம் நாடு என்னும் காரணங்களால் புகழ் பெற்று விளங்கும் பெருந் திருடர், பெரும் பொய்யர், பெருங் கொலைஞர் ஆகிய இவர்களோ உலகத்தாரின் அறிவுக்கு எட்டாத முறையில் திருடும் பொய்யும் கொலையும் மேற்கொள்கின்றார்கள். அந்தச் செயல்களுக்கும், வேறு வேறு பெயர்களை வைத்து வழங்கி வேறுபடுத்துகின்றார்கள்; திருடு என்று சொல்லாமல் பொருளாதார ஆட்சி என்கின்றார்கள்; பொய் என்று சொல்லாமல் அரசியல் தந்திரம் என்கின்றார்கள்; கொலை என்று சொல்லாமல் அரசாங்கப் போர் என்கின்றார்கள். வெறும் பெயர்கள் உண்மையை மறைத்து வருகின்றன.

### அற நாட்டம்

அறத்தை நம்பி அமைதியாகக் குடும்பத்தின் அளவில் நின்று வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்கள்,

''நல்லவர்களுக்குக் காலம் இல்லை; நமக்கெல்லாம் இடம் இல்லை'' என்று சொல்லி மூலையில் வாடுகின்றார்கள். குடும்பத்தைவிட்டுச் சிறிது விரிந்த எல்லையில் நின்று ஊர்த் தொண்டோ வேறு உதவியோ செய்து வாழ முயல்கின்றவர்களும், ''நாமெல்லாம் என்ன செய்தாலும் பயன்படாது; பேசாமல் மூலையில் அடங்கிக் காலம் கழிப்பதே நல்லது'' என்று மெல்ல மெல்ல ஒதுங்குகின்றார்கள். சமயம் மொழி முதலான துறைகளில் இருந்து தொண்டு செய்ய முன்வருகின்றவர்களும் நாளடைவில் சோர்வு அடைந்து ''உலகம் பொல்லாதது'' என்று சொல்லிப் பின்வாங்குகின்றார்கள். அறத்தைப் போற்றும் மனத்தோடு அரசியலில் ஈடுபட்டவர்களோ, ஏமாற்றமும் வெறுப்பும் அடைந்தவர்களாய், ''நம்மைப் போல் உண்மையானவர்களுக்கு அரசியலில் இடம் இல்லை; உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசிப் பொதுமக்களை ஏய்த்து வஞ்சித்துப் பதவி வேட்டை ஆடுகின்றவர்களையே பொது மக்களும் நம்புகின்றார்கள்; ஆடு, ஊன் கடைக்கரனைத் தான் நம்புகின்றது. அறம் வேறு, அரசியல் வேறு'' என்று விட்டுத் துறந்து ஒதுங்குகின்றார்கள்.

இவர்கள் ஒருபக்கம் இருக்க, அறத்தை நம்பாமல், மதிக்காமல், பொருளே சிறந்தது. பணந்தான் உலகம் என்று உணர்ந்து வாழ்க்கையை மாற்றிக் கொள்கின்றவர்களுக்குக் குடும்பம் துணை செய்கின்றது; ஊர் உதவுகின்றது; அரசியலும் போற்றுதல் செய்கின்றது. இவர்களும் வீழ்ச்சி அடையலாம்; அது வேறு. வீழ்ச்சி எல்லோருக்கும் பொது; புதுமை அல்ல, ஆனால் ஓரளவு செல்வாக்கும் புகழும் பெற இவர்களால்தான் முடிகின்றது. அவ்வளவு உயர்வும் நலமும் அறநாட்டம் உடையவர்களுக்கு இல்லை. இந்த உண்மையை மறைத்துப் பயன் இல்லை; வெவ்வேறு காரணம் சொல்லி மறுத்தும் பயன் இல்லை. உள்ளவாறே கண்டு உண்மை என்று உணர்ந்தால், நம் கடமை இன்னது என்பது தெளிவாகும். உலக வாழ்க்கைத் துறைகள் எல்லாம் பணவேட்டையை வளர்ப்பதால், அறநாட்டத்தை மறக்கச் செய்வதால், அவற்றைத் துறப்பதே நல்லது என்று எடுத்துக் கூறிவந்தார்கள். இதனால் பயன் என்ன? நாட்டின் மூலை முடுக்குகளில் ஒரு சிலர் அவ்வப்போது அறவோராக, உண்மையாளராக, பண்பட்டவர்களாக வாழ்ந்து உயர முடிந்தது. பொது வாழ்க்கையில் அறத்திற்கும் உண்மைக்கும் பண்பாட்டுக்கும் இடமில்லை. ஆத்திகப் போர்வை-ஒழுக்கக்கேடு, அரிச்சந்திர வழிபாடு-கள்ள வாணிகம், திருக்குறள் பெருமை-விலங்குணர்ச்சி இப்படிப் போலிவாழ்க்கை பெருகிவிட்டது. சுற்றிலும் பாலைவனக் காட்சி, இடையிடையே சிற்சில நீரூற்று-இதுதான் இன்றைய உலகம்.

நாடு, மொழி, சமயம், இனம் முதலான காரணங்களால் மக்கள் பிரிந்து நிற்க வேண்டும் என்று அந்தந்தத் தலைவர்கள் முயல்கின்றார்கள்; அவர்களின் முயற்சிகளுக்கெல்லாம் உண்மைக் காரணங்களும் உண்டு; போலிக் காரணங்களும் உண்டு. இருந்தாலும், இந்த முயற்சிகளை எல்லாம் கடந்து, உலகம் ஊராக அமைந்து விட்டது; குடும்பமாக நெருங்கி வருகின்றது. எந்த மூலையில் என்ன மாறுதல் நேர்ந்தாலும் அது எல்லாப் பகுதிகளையும் தாக்குகின்றது.

ஆகவே, இன்று அறிஞர்கள் மேற்கொள்ளவேண்டிய கடமை தனிமனிதரைத் திருத்துவது அல்ல. சமுதாயத்தைத் திருத்துவதே ஆகும்; ஆசையோடு போராடுவது அல்ல. அமைப்போடு போராடுவதே ஆகும்; பொருட்பற்றைப் போக்குவது அல்ல பண வேட்டையைப் போக்குவதே ஆகும். அப்போதுதான் ஒருவர் இருவர் அறத்தை நாடி உலகம் பொல்லாததென அல்லல்படும் நிலைமைபோய், உலகமெல்லாம் அறத்தை வாழ்க்கைக்கு அடிப்படையாகக் கொள்ளும் நிலைமை வரும். மற்றவர்கள் எப்படியாவது போகட்டும், நான்மட்டும் முத்தி பெற வேண்டும் என்ற தன்னலம் அகன்று எல்லாவுயிரும் இன்புற்றிருக்க நினைக்கும் அருள் நெஞ்சம் வாழும். கலையும் கோயிலும் ஒருவர் இருவர் உண்மை நெறிக்கோ, சிற்சிலர் போலி வாழ்வுக்கோ பயன்படாமல், மக்கள் எல்லோருடைய மன வளர்ச்சிக்கும் ஒழுக்க வளர்ச்சிக்கும் உறுதுணையாகப் பயன்படும் திருக்குறள் அறத்துப்பால் படித்துப் பாராட்ட வேண்டிய பகுதியாக நில்லாமல், ஒழுகி உயர வேண்டிய வழிகாட்டும் வாய்மொழியாக விளங்கும்.

## 6 (இ) தமிழகம் தாழ்ந்து போனதற்குக் காரணங்களாக அறிஞர் அண்ணா காட்டுவன யாவை?

முனைவர் ஆ. மணவழகன்

### முன்னுரை

உலகில் இன்று வழங்கும் மொழிகள் தோன்றுவதற்கு முன்பாகவே எண்ணற்ற இலக்கண இலக்கிய வளங்களைக் கொண்டிருந்த மொழி தமிழ். 'திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய மொழி தமிழ்ச் செம்மொழியாம்' என்று பரிதிமாற் கலைஞர் செம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார். இப்படிப்பட்ட தமிழ் மொழியைத் தாய்மொழியாக கொண்ட மக்களுக்கும், ஆசிரியர்களுக்கும், புலவர்களுக்கும் தகுந்த அங்கீகாரம் கிடைப்பதில்லை என்பதனையும், சமூக ஏற்றத்தாழ்வுக்கான பிறகாரணங்களையும், அறிஞர் அண்ணாவின் எழுச்சிமிக்க பேச்சாற்றலைக் கொண்டு விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### பிறப்பால் ஏற்றத்தாழ்வு

இந்தியா முழுவதிலும் பல்வேறு சாதிகள் உள்ளன. சாதிவெறி சமூக நெருக்கடிக்கு முக்கியமான காரணமாகும். மக்கள் சாதி அடிப்படையில் தங்களுக்குள் பிரிந்து நிற்கிறார்கள். அவ்வகையில் நோக்கும்போது புரட்சிக்கவியும் நானும் ஒரே இனம்; ஒரே இனக் கொள்கை உடையவர்கள் என்கிறார் அண்ணா.

### தமிழ்மொழியின் நிலைப்பாடு

கடந்த 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்மொழி போற்றப்படாமல் தூற்றுதலுக்கே காரணமாக இருந்தது. தமிழ் ஆசிரியர்களுக்குத் தகுந்த மதிப்பும் போதுமான ஊதியமும் அளிக்கப்படாததால் அவர்களது குடும்பம் பரிதாப நிலைக்கே தள்ளப்பட்டது. அதிக ஆற்றலிருந்தும் ஆங்கிலம் கற்காத காரணத்தால் நிலை தாழ்ந்தது. தமிழனுக்குத் தாய்மொழியைக் கற்றுக் கொடுத்த காரணத்திற்காக சம்பளம் குறைந்தது. தாய்மொழியைக் கற்பதே இழிவாகக் கருதினார்கள். சமூகத் தாழ்வுக்கு இதுவும் காரணமாகும்.

### சங்க இலக்கியத்தை அணுகும்முறை

நாவலர்களும், பாவலர்களும் சங்க இலக்கியங்களை வீட்டைவிட்டு வெளியேற்றி, நாட்டிலே நடமாடவிடவேண்டும், நடன

சுந்தரிகளாகச் சிறுசிறு பிரதிகள் மூலம், தொல்காப்பியக் கருத்துக்களைத் தொகுத்து வெளியிட்டால்தான் தொல்காப்பியம் சிறுசிறு குழந்தைகளாக ஒவ்வொருவருடைய மடியிலேயும், மனத்திலேயும் தவழும். ஒவ்வோர் இல்லமும் இலக்கியப் பூங்காவாகக் காட்சியளிக்கும். ஆனால், அப்படியில்லை என்பதை நினைக்கு பொழுதுதான் அவர்கள் இவ்வளவு நாட்களாக நாட்டுக்குச் செய்தது தொண்டு அல்ல துரோகம் என்று எண்ணவேண்டியிருக்கிறது.

**கம்பனா? இளங்கோவா?**

புலவர்கள் தாங்கள் நன்மை செய்வதாய்க் கருதிக்கொண்டு, ஒருசில புலவர்களையும், கவிகளையுமே பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தியும், பொதுமக்களின் பாராட்டுதலுக்கு, அந்த ஒரு சிலரே அருகதையானவர்கள் என்று சொல்லியும் வருகிறார்கள். அதன் மூலம் உண்மைக் கவிகள், உயிர்க்கவிகளான சங்ககாலப் புலவர்கள் மறைக்கப்படுகிறார்கள். சான்றாக,

கம்பனை எந்த அளவுக்குப் பொது மக்களுக்கு அறிமுகப்படுத்துகிறார்களோ, அந்த அளவுக்குச் சங்ககாலப் புலவர்களை அறிமுகப்படுத்தவில்லை. கம்பனைத் தெரிந்த பொதுமக்கள் தாம் அதிகம் இருப்பார்களே தவிர, இளங்கோவைப்பற்றித் தெரிந்தவர்கள் கொஞ்சம்தான் இருப்பார்கள். இந்த நிலை மாறவேண்டும்.

**திரைபோட்டு மறைத்தல்**

அகத்தையும், புறத்தையும் அதிலே காட்டப்பட்ட கருத்துக்களையும், அணிகளையும், உவமைகளையும் நாம் அறியாமற் போனதற்குக் காரணம், பத்திரிக்கைகள் ஒரு கவியைப் பற்றியே புகழ்வதும் விளம்பரப்படுத்துவதுமேயாகும்.

அகநானூற்றையும், புறநானூற்றையும் மக்கள் மறக்க நேர்ந்தது. 'கற்றறிந்தோர் ஏத்தும் கலித்தொகையைக் கற்றவரிடம் காண்பதே அரிதாகிவிட்டது. பரிபாடலைப் பார்க்கவே முடியவில்லை. ஆகவே, சங்க இலக்கியங்கள் மக்களுடைய மனத்தைப் பெறாமல் போனதற்குக் காரணம் ஒரு சிலரையே மீண்டும் மீண்டும் அறிமுகப்படுத்துவதுதான். இன்னிலை மாறவேண்டும்.

**புலவர்க்கே பழக்கம்**

ஒருவர் எழுதின புத்தகத்திற்கு மறுப்போ அல்லது அதில் ஏதாவது குறையோ காணாவிட்டால், சில புலவர்களுக்குத் தூக்கமே வராது. காரணம் அவர்களிடம் மூலதனம் குறைவு. ஒருவர் எடுத்து ஆளவேண்டுமென்றிருந்த அணியை, இன்னொருவர்

கையாண்டிருப்பார். ஆகவே, எழுதியதில் குற்றங்கள் கண்டுபிடித்து அவரது பிழைப்பையும் கெடுத்துவிடவேண்டும் என்று நினைக்கிறார்கள். இலக்கியம் வளராமைக்கு இதுவும் காரணம் என்கிறார்கள்.

**அது இருக்க இது ஏன்?**

அது இருக்க இது ஏன்? என்று மேல்நாடுகளிலே கருதி இருப்பார்களானால், ஆளில்லா விமானத்திற்குப் பிறகு அணுகுண்டு பிடித்திருக்க முடியுமா? தொல்காப்பியம் நமக்கு இருக்கும்போது வேறென்ன வேண்டும் என்றிருந்தால் அகமும் சிலப்பதிகாரமும் கிடைத்திருக்க வழியுண்டா? ஒன்று இருக்க மற்றொன்று நமக்கு ஏன்? என்று எண்ணாமல் புதிதுபுதிதாக கண்டுபிடித்து தமிழகத்தை உயர்த்த நாம் வழிவகுக்க வேண்டும் என்பது அண்ணாவின் கருத்து.

**கையில் ஊமையர்**

இந்தக் காலத்துப் புலவர்கள் எந்தக் கருத்தை ஓர் அந்தாதி மூலமாகவோ, வெண்பா மூலமாகவோ விளக்குவார்களோ அதைக் குறுந்தொகை ஆசிரியரான வெள்ளிவீதியார்,

**இடிக்குங் கேளிர் நும்குறை யாக**
**நிறுக்க லாற்றினோ ஒன்றுமற் றில்ல**
**ஞாயிறு காயும்வெவ்வறை மருங்கில்**
**கையி லூமன் கண்ணில் காக்கும்**
**வெண்ணெய் உணங்கல் போலப்**
**பரந்தன் றிந்நோய் நோன்று கொளற்கரிதே**

(குறுந்தொகை பா.எண். 58)

என்ற பாடலில் கதிரவன் காய்த்தலினாலே வெம்மை கொண்டதாகிய பாறையினது ஒரு புறத்தே, கையற்ற ஊமையன் ஒருவன் தன் கண்போலக் கருதிக் காத்திருக்கும் வெண்ணெய் அவன், காவலுக்குட்பட்டு, நில்லாதாகி உருகியழிதலைப் போல என்று ஒரே அடியில் கூறிவிட்டார்.

**யாருக்குத் தெரியும்**

பல கவிகளுக்கு அவர்கள் பாடுகிற பாட்டுக்களைப் பற்றி அவர்களுக்கே தெரியாது. ஆனைமுகனைப் பற்றி அழகாகப் பாடுவார்கள். துதிக்கையைப் பார்த்ததுண்டா? அதன் அகல நீளமென்னவென்றால் தெரியாது. படித்ததை எழுதுகிறார், கேட்டதை ஒப்புவிக்கிறார். அதாவது ஒருவர் கேள்விபட்டு எழுதுவார்; சொல்லுவார். சொன்னதைக் கேட்டவர் அதையே எழுதுவார். இது

பரம்பரை என்பதே தவிரக் கண்டதை, பார்ப்பதை அனுபவபூர்வமாக எழுதுகிறார்கள் என்பதற்கில்லை.

பாரதிதாசன் மாத்திரம்தான், தாம் கண்டதை எழுதுகிறார்; பார்த்ததை எழுதுகிறார் என்று அண்ணா கூறுகிறார். இதை அனைவரும் பின்பற்ற வேண்டும்.

### ஒன்று பட்டாலுண்டு வாழ்வு

பாரதியார்கூட, 'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு ; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு' என்று கூறினார். இதனை நாம் எத்தனைப்பேர் பின்பற்றுகிறோம் என்றால் நிச்சயமாக இல்லை. தமிழகம் முன்னேற்றம் அடையாமல் தாழ்ந்து போனதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றாக அண்ணா கூறுகிறார்.

### வேற்றுமையில் ஒற்றுமை

இந்து, முஸ்லீம், கிறித்தவம் என்று இனத்தால் வேறுபாடுகள் இருந்தாலும், அவரவர் செய்யும் செயலில் ஒற்றுமை ஏற்பட்டால் உயரத்தை தொட்டுவிடலாம். ஆனால் ஒற்றுமை இல்லை என்கிறார் அறிஞர் அண்ணா.

### காதலும் வீரமும்

தமிழ் நாட்டிலே காதலைப் பற்றியும் வீரத்தைப் பற்றியும் புலவர்கள் அதிகம் பேசுவதற்கும் எழுதுவதற்கும் காரணம், தமிழ்நாட்டின் இயற்கை எழில் எங்குச் சுற்றிப் பார்த்தாலும் சாலைகள், சோலைகள், குன்றுகள், வற்றாத ஜீவநதிகள், நன்செய்கள் என்று கண்ணுக்குக் குளிர்ச்சியாக பசுமைப்படர்ந்து செழிப்புடனும் வளத்துடனும் காணப்பட்டதால் காதலும் வீரமும் தலைத்தோங்கி இருந்தன. ஆனால் இன்று அவ்வாறில்லை வளப்பகுதிகளை அழித்து கட்டடங்களை எழுப்பிவிடுகிறார்கள். வீரத்திற்கு வேலையே இல்லாமல் போய்விட்டது.

### முடிவுரை

மேற்கண்ட அண்ணாவின் சொற்பொழிவின் மூலம் தமிழகம் தாழ்ந்து போனதற்கு மொழிப்பற்றின்மை, புலவர்களைப் பாராட்டாமை, ஒற்றுமையின்மை, வேற்றுமையில் ஒற்றுமைகாணாமை, சங்க இலக்கியங்களைப் போற்றாமை, தமிழ்ப்பயிற்றுவோருக்கு மதிப்பின்மை, ஒருவரது புலமையை மட்டும் உயர்வுபடுத்தி மற்றவர்களை விட்டுவிடுதல், தன் அனுபவ வாயிலாக எழுதாமல் பிறர்அனுபவ சொற்கேட்டு எழுதுதல், புதியதைக் கண்டறியாமல் பழைய ஒன்றை வைத்துக்கொண்டு அதில் நிறைவு கொள்ளுதல், ஒருவர் மாற்றி ஒருவர் குறைசொல்லி வளரவிடாமல் தடுத்தல் போன்றவை காரணங்களாக அமைகின்றன என்பதை நம்மால் அறிய முடிகின்றது.

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக:-**

**7 (அ) சித்திரப்பாவையில் இடம்பெறும் அண்ணாமலை, ஆனந்தி என்னும் இருவர் பண்பு நலன்களை வரைக.**

முனைவர் நா. சுலோச்சனா

தமிழில் தரமான சமூக நாவல்களை எழுதி, மக்கள் மத்தியில் அறிமுகமானவர்களுள் அகிலன் குறிப்பிடத்தக்கவர். தனி மனித விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவராய் நடுநிலை பிறழாத எழுத்தாளராய்த் திகழ்பவர் அகிலன். விடுதலைக்கு முன்னும் பின்னும் சமுதாயத்திலுள்ள குறைகளை அஞ்சா நெஞ்சத்துடன் தம் நாவல்களில் எடுத்துரைப்பதில் அகிலன் நிகரற்றவர். ஒவ்வொரு மனிதனும் தன்னைக் கவர்ந்த ஒரு கொள்கைக்கு அடிமையானவனே. அந்த வகையில் காந்தீயத்திற்கு அடிமையானவர் அகிலன். மேலும் உலகத்தின் பிரச்சினைகளுக்கெல்லாம் அன்பு ஒன்றேயே அரு மருந்தாகக் காண்பவர் அகிலன். அவருடைய ஒவ்வொரு நாவலிலும் இதைக் காணலாம்.

அகிலனின் கதையை ரஷ்ய மொழியில் மொழி பெயர்த்த இஸபெல்லா கொந்திராத்தியேவா என்பவர், ''அகிலன் ஏழை மக்களின் எழுத்தாளர்'', அவர்களுடைய இன்ப துன்பங்களே அவர் கதைகள் எனக் குறிப்பிட்டுள்ளார். உண்மையான மனிதர்களையே, தம் நாவல்களில் படைத்துள்ளார். பொருளாதார ஏற்றத் தாழ்விற்கும், மனித வாழ்வின் அவலத்திற்கும் இன்றைய சமூக அமைப்பே முழுமுதற் காரணம் என்பதை அகிலனின் ஒவ்வொரு நாவலும் நமக்கு உணர்த்தும்.

நாவலாசிரியர் அகிலன் அவர்களது இயற்பெயர் வை.அகிலாண்டம் என்பதாகும். அகிலன் இதுவரை பதினேழு நாவல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவர் முதலில் எழுதிய நாவல், ''பெண்'' என்பதாகும். ஆனால் அவரது ''மங்கிய நிலவு'' என்னும் நாவல்தான் முதலில் வெளிவந்தது. பதினேழு நாவல்களில் மூன்று வரலாற்று நாவல்கள். ஏனையவை சமூக நாவல்கள். அவர் எழுதிய நாவல்கள் வருமாறு;

மங்கிய நிலவு (1944), பெண் (1947), துணைவி (1951), சிநேகிதி (1951), சந்திப்பு (1952), நெஞ்சின் அலைகள் (1953), அவளுக்கு (1953), வாழ்வு எங்கே (1957), பாவை விளக்கு (1958), வேங்கையின் மைந்தன் (1961), புது வெள்ளம் (1964), பொன்மலர்

(1965), கயல்விழி (1965), வெற்றித்திருநகர் (1966), சித்திரப்பாவை (1968), கொள்ளைக்காரன் (1969), எங்கே போகிறோம்.

இவைகளில் வேங்கையின் மைந்தன், கயல்விழி, வெற்றித்திருநகர் ஆகிய மூன்றும் வரலாற்று நாவல்கள். மேலும், பெண், நெஞ்சின் அலைகள், வேங்கையின் மைந்தன், கயல்விழி, எங்கே போகிறோம் ஆகியவை பரிசும் பாராட்டும் பெற்ற நாவல்களாகும்.

பெண், பொன்மலர், சிநேகிதி, நெஞ்சின் அலைகள், பாவை விளக்கு, வேங்கையின் மைந்தன், கயல்விழி, எங்கே போகிறோம் என்பவை மக்கள் மத்தியில் மிகவும் பிரபலமாகி, அகிலனை ஒரு சிறந்த நாவலாசிரியராக நிலைக்க வைத்தன.

சமுதாய உணர்வுள்ள திரு.அகிலனின் எல்லாக் கலைப்படைப்புக்களிலுமே அவ்வக்காலச் சமுதாயப் போக்குகள் பின்னணியாக அமைக்கப்பட்டிருந்தாலும் இதில் சமுதாயப் பின்னணி சற்று அழுத்தமாகவே பதிந்திருக்கிறது என்று கூறலாம். கதைமாந்தர் படைப்பில் உள்ள குறிப்பிடத்தக்க சிறப்பு அவர்களுக்கிடையில் காட்டும் முரண்பாடு என்று கூறலாம். முற்றிலும் மாறுபட்ட பண்புடைய இருவர் இல்லறத்தில் இணையும் போது அப்பண்புகள் எவ்விதம் அவர்களைப் பாதிக்கின்றது என்பதை அவர்களுக்கிடையில் நுண்ணிய முரண்பாடுகளைப் படைத்து, பாத்திரப்படைப்பில் ஒரு சிறப்பை நாவலாசிரியர் ஏற்படுத்தியுள்ளார். மனிதர்களுடைய சின்னஞ்சிறு உணர்ச்சிகளுக்குள்ள ஆற்றலையும் அவைகளை அவர்கள் வெளிப்படுத்தும் பாங்கையும் நிகழ்ச்சிகள் பிடித்துக்காட்டும் வகையில் படைக்கப்பட்டுள்ளன. நாவலாசிரியர் அகிலன் அவர்களின் நடை, எளிமை, தெளிவு, ஆழம், கிண்டல், அழுத்தம் கொண்ட சரளமான நடையாகும். சொல்ல வேண்டியதைச் சுருக்கமாக, தெளிவாக, உணர்ச்சி கலந்த நடையில் சொல்லுவதில் இவர் வல்லவர்.

**அண்ணாமலையின் பண்பு நலன்கள்**

சித்திரப்பாவையின் (நாவல்) தலைவன் அண்ணாமலை. அவன் ஒரு பிறவிக் கலைஞன். கலையும் இயல்பாக அமைந்த கூச்சமும் பணத்தைப் பற்றி பொருட்படுத்தாத மனப்பக்குவமும் மக்கள் கலையை வளர்த்து அவர்கள் உள்ளத்தில் நிலையான இடம் பெற வேண்டும் என்ற ஆர்வமும் அவனை நல்ல கலைஞனாக வளர்த்தன. அவன் வளர்ச்சிப் பாதையில் துணையும் சேர்ந்தது, பகையும் பாய்ந்தது.

பிறந்த வீட்டிலே தாய் அவனுடைய உள்ளத்தில் அழகுணர்வும், ஓவியச்சுவையும் பெறத் துணைபுரியத் தந்தையோ இரணியன் போல் அவனைப் பொறியியல் பள்ளிக்கு அனுப்பத் துடித்தார். அவனுடன் வளர்ந்த மாணிக்கம் அவன் சட்டையை

அணிந்துகொண்டது போல் அவன் மனத்தில் பூஜித்த ஆனந்தியைத் தட்டிப் பறித்தது மட்டுமல்ல; கொஞ்சங் கொஞ்சமாக அவனுடைய பொருளாதார வளத்தை வாய் வைத்து உறிஞ்சி, இறுதியாக, அவன் வாழ்ந்த வீட்டை விட்டு விரட்டித் தெருவிலே போகச் செய்தான். தன் நல்ல மாந்தரோடு வடித்தெடுத்த கயவனாக மாணிக்கத்தைமட்டும் படைத்து அவனை உலகமறிய அண்ணாமலையோடு மோதச் செய்து அவனிடமிருந்து கலையமுதைக் கடைந்தெடுத்து விட்டார் அகிலன்.

வீதியில் கண்ட பிச்சைக்காரியின் வறுமைத் தோற்றமும் கட்டை வண்டி இழுக்கும் தொழிலாளியும் அவன் ஓவியத்திற்குக் கருப்பொருளாயினர். ஓவிய மேதை கதிரேசன் அவன் உயிருக்குள் விளங்கிய ஆற்றலை ஊக்கங்கொடுத்து ஒளி வீசத் துணைபுரிந்தார். ஓவியக் கல்லூரி முதல்வர், அவன் கலைத் திறனைக் கண்டுகொண்டது மட்டுமின்றி அது கருகாத வண்ணம் அறிவுரை கூறி வீறுபெறச் செய்தார்.

சாரதா என்ற தோழியோ அவனுடைய கலைக்கு உற்சாகமூட்டி அதைச் செழித்தோங்கச் செய்தது மட்டுமன்றி அவனுடைய மனக்கோயிலில் தீட்டிய ஆனந்தியை மறுபடியும் அவனிடம் வந்து சேரத் துணைபுரிந்தாள்.

அவன் அழகுச் சிலையாக எண்ணிய சுந்தரி அவனுக்கு இடையறாத தொல்லைதரும் மனைவியானாள். அவன் காசுக்குக் கலையை விற்கும் கூலியாக மாற அவளும் அவளுடைய ஆடம்பர வாழ்வும் காரணம். ஆயினும் அவளது அழகுக்கு மலரிட்டு வழிபட்டான். தன் கலையை மதிக்காத போதும் தன்னிலை குலைய நடந்தபோதும் அவளையே கண்மூடித்தனமாக அடிக்கவும் தவறவில்லை. அவள் மறைவுக்குக் கண்ணீர் வடித்த ஏக்கம் தகுந்த துணையாகச் சாரதா வரக்கூடாதா என ஏங்கினான்.

அவளையே தன் மனைவியாகுமாறு கெஞ்சினான். கலைத் துணையாக அவள் தன் வாழ்வுக்கு ஏற்றவள் என்று எண்ணியதும் பிறன் மனைவியாக வாழும் ஆனந்தியைப் பெறுதல் இச்சமுதாயக் கட்டுக்கோப்பில் இயலாதென எண்ணியதன் விளைவாக இவ்வாறு அலைந்தான்.

உண்மையின் சிற்பத்திலும் தைமாத கிராமச் சூழ்நிலையிலும் மக்களும், காளைமாடுகளும் ஏறுதழுவலாக இணைந்த எழிலிலும் ஒகேனக்கல்லில் நீர்வீழ்ச்சி மங்கையாய்க் காவிரி கூறிய பொற்கனவிலும் தன் கலை உயிரை அணு அணுவாகக் கண்டான்.

இன்றைய வணிகப் போட்டி உலகில் தன் கூலிக் கலையை அடகு வைக்காமல், கயமைப் பொருளின் பொய்மை வலையைக்

கிழித்துக் கொண்டு உண்மையான கலையைப் பொதுமக்கள் அன்பின் பிணைப்போடு வளர்க்க முற்பட்டபோதுதான் அடி மனத்தில் எழுதிய ஓவியமே உண்மை ஆனந்தியாக வந்து அவனுக்கு நல்வாழ்வு தருகிறாள். கலைவாழ்வில் அலைந்து அலைந்து இறுதியில் உண்மை உலகில் கால்வைக்கும் தலைமகன் இவன்.

**ஆனந்தியின் பண்பு நலன்கள்**

சித்திரப்பாவையின் (நாவல்) தலைவி ஆனந்தி ஆவாள். பெரும்பாலான பெண் பாத்திரங்கள், நம் பழந்தமிழ்ச் சமுதாய உறவு வளர்த்த நம்பிக்கைகளில் ஊன்றியவர்களே. நம்பிக்கைகள் சரியானவையா, தவறானவையா எனச் சிந்திக்காதவர்கள் சிலர். வெளிநாட்டில் போலி நாகரிகத்தில் சிறிது காலம் மதிமயங்கியவர்கள் சிலர். பழமையின் மரபுப் பிடியை மீறிச் செயல்பட விரும்பாதவர்கள் வேறு சிலர்; இன்னும் சிலரே சமுதாயப்பிடியில் அகப்பட்டுத் திணறி அந்தப் பிடியைத் தகர்த்துக் கொண்டு வெளியேற முயன்றவர்கள்; வெளியேறியவர்கள்.

'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்' என்பது தமிழ் நாட்டுப் பழமொழி. இந்தச் சமூகத்தின் கட்டுப்பாட்டுக்குக் காலம் காலமாய்த் தமிழ்ச் சமுதாயம் உட்பட்டதால் எழுந்த நம்பிக்கை இது. இந்த நம்பிக்கை காரணமாகக் கணவன் எவ்வளவுதான் கொடியவனாக இருந்தாலும், மனைவியைத் துன்புறுத்துவதில் இன்பம் காண்பவனாக இருந்தாலும், ஒழுக்கம் கெட்டவனாக இருந்தாலும், அவனோடு கடைசி வரையில் வாழ்வதைக் கடமை என நம்பி வந்திருக்கின்றனர். நம் நாட்டுப் பெண்கள் சிலருக்குக் கழுத்தில் கட்டப்பட்ட சுருக்கக் கயிறாக அமைந்த போதும் அவர்களால் அதை மீற முடியவில்லை.

ஆனந்தியோ, மாணிக்கம் என்ற கயவனின் வெறித்தனத்துக்கு இலக்காகி, அதனால் அவன் மனைவியாகிறாள். கடைசி வரையில் அவனோடு இணங்கி வாழ எத்தனையோ பாடுபடுகிறாள். கணவன் மாணிக்கத்தின் கயமைத்தனம் எல்லையைமீறிச் சென்று அவளுடைய அன்புக்குரிய அண்ணாமலையின் வாழ்க்கையையே சீரழித்து விட்டபோது, அவளுடைய பொறுமை வெடித்துச் சிதறுகிறது. கட்டிய தாலியை மாணிக்கத்தின் முகத்தில் வீசி எறிந்துவிட்டு, அவனால் நடுத்தெருவில் விரட்டப்பட்ட அண்ணாமலையைக் காப்பாற்ற அவன் மனைவியாகிறாள்.

'கல்லானாலும் கணவன்' என்ற கூற்றை ஒப்புக் கொள்வதாக இருந்தாலும் கூட, கரடியானாலும், வெம்புலியானாலும், கயமைத்தனத்தின் மொத்த உருவமானாலும் கணவன் என்று ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதில்லையே; இவ்வாறாக, என் கதைத்

தலைவியர் சிலர், சமுதாயத்து அக ஒழுக்கம் காக்கும் உறவாகக் கருதப்படும் திருமண உறவோடு, அது நெறிகெட்டுப் போன நிலையில், முரண்பட்டுப் போராடுவதை நீங்கள் காணமுடியும். தன் கணவன் பரத்தையர் இல்லம் செல்வதைச் சங்ககாலத்தில் ஏற்றுக் கொண்ட தமிழ்ப் பெண் இந்த இருபதாம் நூற்றாண்டில் அவ்வாறு ஏற்றுக்கொள்ளவில்லை.

ஒரு நாவல் சிறந்து விளங்க வேண்டுமானால், அதன் பாத்திரப்படைப்பு சிறப்புடையதாக விளங்க வேண்டும். பாத்திரங்கள் உயிர்பெற்று உலவ வேண்டும். படிப்பவர் கண்முன்னே உண்மை மாந்தர் போல அந்தப் பாத்திரங்கள் நடமாட வேண்டும். அகிலனுடைய வெற்றிக்குப் பாத்திரப்படைப்பு முக்கியமான ஒன்றாக அமைவதை அவர்தம் சித்திரப்பாவை கொண்டு அறியமுடிகிறது. பெண்மைக்குச் சிறப்பு தருவதுதான் அகிலனின் முக்கிய நோக்கமாக அமைகிறது. இக்கதையில் இடம்பெறும் அண்ணாமலை, ஆனந்தி ஆகிய இரண்டு தலைமைப்பாத்திரங்களைக் கொண்டு பிற பாத்திரங்களெல்லாம் சிறப்பு பெறுகின்றன, கதையும் சிறப்பு பெறுகின்றன.

**7 (ஆ) 'அந்த உயிலின் மரணம்' என்ற சிறுகதை உணர்த்தும் வாழ்க்கை நுட்பங்களை எடுத்துரைக்க.**

**முனைவர் ஆ. மணவழகன்**

'உயிலின் மரணம்' என்பது ஜெயகாந்தன் எழுதிய குருபீடம் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஒரு கதையாகும்.

**கதைச்சுருக்கம்**

வேணுகோபாலன் என்பவர் தன் மனைவி வள்ளியம்மையுடன் தன்னுடைய பழமைவாய்ந்த வீட்டில் வாழ்ந்து வருகிறார். பலவகை தொழில்களில் கமிஷன் ஏஜென்டாக வேலைபார்த்து வந்த வேணுகோபாலன் தொழில்ரீதியாக பல வெளியூர்களுக்குச் சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இதனால் எப்பொழுது பார்த்தாலும் ஒருவித பரபரப்புடனும் அலைச்சலுடனுமே காணப்படுவார். இவ்வாறு இருந்து வந்த வேணுகோபாலனுக்கு அடிக்கடி மார்புவலி ஏற்பட்டது. அதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாமல் மார்புதானே என்று அலட்சியமாக இருந்து வந்தார். ஆனால் வலியானது சற்று அதிகமாகி மருத்துவரிடம் சென்று பார்த்தபோது, இவரின் இதயம் பலவீனம் அடைந்துவிட்டதாகவும், முன்புபோல அலைச்சலும், தனியாக பயணம் மேற்கொள்வதும் கூடாது என்றும் அறிவுறுத்தி அனுப்பப்பட்டார். இடையில் வலியானது சிறிதளவு குறைந்து காணப்பட வேணுகோபாலன் பழையபடியாக வேலையில் ஈடுபாடு செலுத்தினார். ஆனால் சுமார் 25 ஆண்டுகளுக்குப்பின் அவரின் வலி அதிகமாகியது. மருத்துவர் 'இன்னும் இவர் ஓராண்டுதான் உயிரோடு இருப்பார். எனவே, இவரை மகிழ்ச்சியுடனும், மனங்கோணாமலும் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று அவரின் மனைவியிடம் கூறி அனுப்பினார். இதனைச் சற்றும் எதிர்பாராத வேணுகோபலான், தான் இறக்கும் முன்பாக இச்செய்தி யாருக்கும் தெரியக் கூடாது என்று அதை ஓர் உயிலாக எழுதி, தன்வீட்டில் உள்ள பழைய பெட்டியில் வைத்துப் பூட்டினார். மேலும் தன் மனைவியிடம் இந்தப் பெட்டியைத் தான் இறந்தபிறகே, அதைத்திறந்து அதிலிருக்கும் உயிலைப் படிக்கவேண்டும் அதுவரை இந்தப் பெட்டியைத் திறக்கக்கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொண்டார். ஆனால் விதியின் வசத்தால் காலவெள்ளத்தில் தன்னுடைய மனைவி, மகள் மற்றும் தனக்கு மருத்துவம் பார்த்த மருத்துவர் உட்பட அனைவரும் இறந்துவிடுகின்றனர். இறந்துவிடப்போவதாகக் கணிக்கப்பட்ட தான் மட்டும் உயிரோடு உள்ளதை நினைத்து நகைப்பிற்குள்ளானார். இதனால் இனிமேல் எதற்கு அந்த உயில் என்று பெட்டியைத் திறந்து தான் எழுதிவைத்த உயிலை எடுத்து தூசு தட்டிப் பார்த்தார். உயிலில்

உள்ள எழுத்துக்கள் கூட இறந்து மறைந்துள்ளன என்று மனத்தால் எண்ணிக்கொண்டே தான் வாழ்ந்த இந்த சிதிலம் அடைந்த வீட்டை சற்று உற்று பார்க்கிறார். அப்போது, தம்முடன் அடிக்கடி வந்து உரையாடியும், விளையாடியும் செல்லும் சுப்புவின் மகள் ராசாத்தி கண்ணில் படுகிறாள். வேணுகோபாலன் இந்த வீட்டை தன் காலத்திற்குப் பிறகு இந்த ராசாத்திக்காவது உயில் எழுதிவிடலாம் என்று யோசிக்கிறார். ஆனால் தன் விஷயத்தில் நடந்ததை ஒருகனம் நினைத்து, உயிலின் மீது பெருத்த வெறுப்பு கொண்டவராய், 'உயில் எழுதினால் இந்த குழந்தை கூட இறந்து விடும்' என்று தன்கையில் இருந்த உயிலைத் தீயிட்டுக் கொளுத்து விடுகிறார்.

**கதைக்கரு**

'மரணம் என்பது நிர்ணயிக்கப்படாத ஒன்று'. அது எப்பொழுது வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும் வரும்' என்ற செய்தியைக் கதைக்கருவாகக் கொண்டு இச்சிறுகதை எழுதப்பட்டுள்ளது.

**கதாபாத்திரங்கள்**

'அந்த உயிலின் மரணம்' எனும் இச்சிறுகதையில் வேணுகோபால் என்பவர் தலைமைப்பாத்திரமாக அமைகிறார். துணைமைப் பாத்திரங்களாக வள்ளியம்மை எனும் பாத்திரமும், அவருடன் பேசி விளையாடும் குழந்தையாக சுப்புவின் மகள் ராசாத்தி எனும் பாத்திரமும், பெயர் குறிப்பிடாத பாத்திரங்களாக வேணுகோபாலின் மகள், மருத்துவர் போன்ற பாத்திரங்களும் படைக்கப்பட்டுள்ளனர்.

**கதை சொல்லும் விதம்**

மரணம் என்பது வரையறுக்கப்படாதது. அது யாருக்கும், எப்பொழுதும், யாரும் எதிர்பார்க்காவண்ணம் வரும். அது இன்னாருக்குதான், அந்த நேரத்தில்தான் வரும் என்பதை யாரும் கணித்துக் கூறமுடியாது. இதனை உணர்த்தவே ஆசிரியர், வேணுகோபாலின் மரணத்தைக் குறித்து மருத்துவருக்கு உணர்த்துவதைப்போன்று கதையைக் கொண்டுவருகிறார். ஆனால், மரணத்தை கணித்த மருத்துவரும் இறந்துவிடுமாறு கதையைக் கொண்டுசென்று, தன்னுடைய மரணம் குறித்து எழுதிவைத்த உயிலும் அழிந்தும், பொய்த்தும் விடுமாறு கதையை முடித்துள்ள விதம் கதையின் தலைப்பிற்குப் பொருத்தமாக அமைவதை அறியமுடிகிறது. தன் வீட்டையாவது குழந்தைக்கு எழுதிவைக்கலாம் என்றால், இந்த உயிலில் எழுதினால் அந்த குழந்தையும் இறந்துவிடும் என்றும், அழியாத சாசனமாகக் கருதப்படும் உயில்சாசனமும் ஒரு நாள்

அழிந்துவிடும் என்பதனை மானிட இனத்தின் மரணங்களின் வழி உணர்த்துகிறார். இதனால் எது எப்போது நிகழும் என்பதை யாரும் நிர்ணயித்துக்கூற முடியாது என்பதையே 'அந்த உயிலின் மரணம்' எனும் சிறுகதையின் வழியாக மரணம் வருவதை யாரும் நிர்ணயிக்க முடியாது என்று உறுதிபடுத்திக் கூறியுள்ளார்.

**சிறுகதை உணர்த்தும் வாழ்க்கை நுட்பங்கள்**

'அந்த உயிலின் மரணம்' எனும் இச்சிறுகதை 'நாளை நடப்பதை யாராலும் அறுதியிட்டுக் கூறமுடியாது' மரணம் என்பது யாருக்கும் எப்போது வேண்டுமானாலும் வரும் 'மரணத்தைக் கணித்தல் ஆகாது' என்பனபோன்ற செய்திகளை விளக்குகிறது. ஒட்டு மொத்தத்தில் வாழ்க்கை நிலையாமை பற்றியே இச்சிறுகதை பெரிதும் வலியுறுத்துகிறது.

**நாளை நடப்பதை யார் அறிவார் ?**

மனிதனின் அன்றாட நிகழ்வுகளில் நாளை நடப்பதை யாராலும் அறுதியிட்டுக் கூறமுடியாது. இதனை, இச்சிறுகதையில் வேணுகோபாலன் எனும் கதைப்பாத்திரத்தின் வழி நன்கு உணர்த்தப்படுகிறது. அதாவது உடல்நிலை சரியில்லாமல் இதய நோய்காரணமாக மருத்துவரைப் பார்க்கும் போது, 'அவரின் இதயம் மிகவும் பலவீனமாகி விட்டது. அவரைப் பொறுத்தவரை அவரின் நிலை முடிந்துவிட்டது. எனவே வீணாக மருந்துக்கும் மருத்துவருக்கும் செலவு செய்ய வேண்டாம். அவர் விருப்பம்படி அவரைச் சந்தோஷமாக வைத்துக் கொள்ளுங்கள்' என்கிறார். இதனால் வேணுகோபால் தன் இறப்பு குறித்து ஒரு உயிலை எழுதி தன் மனைவியிடம் கொடுத்து, தான் உயிரோடு இருக்கும் வரை அதைத் திறந்து படிக்கக்கூடாது. தான் இறந்த பிறகே அதை எடுத்துப் படிக்கவேண்டும் என்று சத்தியம் வாங்கிக் கொள்கிறார். ஆனால் அவருக்கு வைத்தியம் பார்த்து, காலக் கெடுவைத்த மருத்துவரும், வேணுகோபாலனின் மனைவி மற்றும் மகள் அனைவரும் பல்வேறு சூழல்களில் இறந்து விடுகின்றனர். ஆனால் கதையின் இறுதிவரை அவர் இறந்ததாகக் காட்டவில்லை. இதன்வழி நாளை நடப்பது எதுவாகவும் இருக்கலாம். அதை உறுதிபடுத்துதல் என்பது இயலாத காரியம் என்பதை அறிவியல் தொடர்புடைய மருத்துவத்தின் வழி உணர்த்தியுள்ளார்.

**மரணம் எப்போதும் யாருக்கும் வரும்**

மரணம் என்பது எப்பொழுது வேண்டுமானாலும் வரும். யாருக்கு வேண்டுமானாலும் வரும் என்பதனை, தன்னுடைய மரணம் யாருக்குத் தெரியக்கூடாது என்று அதை உயிலாக எழுதிவைத்தாரோ அவர்கள் எல்லோரும் தம்முன் இறந்துபட்டனர்.

வேணுகோபாலனுக்குத்தான் ஓராண்டு காலத்தில் மரணம் என்று மருத்துவர் கணித்தார். ஆனால் இவருக்கு முன்பே இவரது மனைவி, மகள் இறந்து போவதால் யாருக்கு வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் வரும் எனும் ஒரு நிலைப்பாட்டை இச்சிறுகதையின் வழி விளக்கியுள்ளார். வேணுகோபாலன் தமது இறுதிக் காலத்தில் தாம் வாழ்ந்த இந்த சிதலம் அடைந்த வீட்டை வேறு கதாபாத்திரங்களான ராசாத்தியின் தாய் சுப்புக்காவது உயில் எழுதிவிடலாம் என்று நினைத்து, சற்றுத் தயங்கியவராய் உயில் எழுதினால் இந்த சுப்புவும், ராசாத்தியும் கூட இறந்து போவார்கள் என்று உயிலின் தன்மையை வெறுக்கிறார். இதன் வழியாக முன் கணித்தல் கூடாது என்றும், எல்லாமே நிலையற்றது என்றும் வலியுறுத்துகிறார். ஒட்டு மொத்தத்தில் வாழ்க்கை நிலையாமை என்பதனை, 'அந்த உயிலின் மரணம்' எனும் சிறுகதை மூலம் உயில் கூட இறந்து விடும் என்பதனை, உயில் எழுதி பல காலம் ஆனபிறகு உயிலின் எழுத்துக்கள் மறைந்து போகும் நிலையில் உள்ளதாகவும், உயில் எவருக்கு எழுதினோமோ அவர்கள் அனைவரும் இறந்துபடுமாறு காட்டி சிறுகதையில் விளக்கியுள்ளார்.

**உத்திமுறை**

கதை முறையானது, பாத்திரங்களே கதையைக் கூறிச்செல்வது போல் ஆசிரியர் கதையை அமைத்துள்ளார். கதையில் தலைமைப் பாத்திரமாகிய வேணுகோபாலன் எனும் பாத்திரமே கதையைக் கூறிச் செல்வதைப் போல் அமைத்துள்ளார். சொல்லும் விதத்திலும் பிற பாத்திரங்களுக்குக் கூறுவதைப் போல் அல்லாமல் தன்நெஞ்சுக்கே, தனக்குத் தானே கூறிக்கொள்வதைப் போல் உத்திமுறையை இச்சிறுகதையில் ஆசிரியர் ஜெயகாந்தன் கையாண்டுள்ளார்.

**7. (இ) யாருக்கும் வெட்கமில்லை நாடகம் காட்டும் பிரமிளாவின் அவல வாழ்வுக்குச் சமுதாயமே காரணமாவதைத் தெளிவுறுத்துக.**

**முனைவர் கோ. விசயராகவன்**

திரைத்துறையில் நடிகராகச் சாதனை புரிந்த ஒருவர் இலக்கியத் துறையிலும் ஆளுமைத் தன்மையோடு இயங்குவது அரிதானது. ஆனால் 'சோ' என்னும் இயற்பெயர் கொண்ட 'இராம்சாமி' அவர்கள் திரைத்துறையிலும் இலக்கியத் துறையிலும் சாதனை புரிந்தவராகத் திகழ்கிறார். சமுதாயத்தைத் தனது அகக் கண்களால் ஆழ்ந்து படம்பிடித்து அவற்றின் சிக்கல்களை நையாண்டியாகவும், நாசூக்காகவும் சொல்லுவதில் சோ தனித்தன்மை உடையவராகத் திகழ்கிறார். 23 நாடகங்களையும், 8 நாவல்களையும் படைத்து இலக்கிய உலகில் கவனிப்பு பெற்றவர்.

''அரசியலுக்கு என் நாடகங்களில் அதிக இடமளிக்கிறேன் என்பது என்மீதான குற்றச்சாட்டுகளில் ஒன்று'' என்று சோ அவர்களே கூறிக் கொள்கிறார். ஆனால் 'சோ' எழுதிய 'யாருக்கும் வெட்கமில்லை' என்னும் நாடகத்தின் மையமாக அரசியல் அமையாமல், சமூகத்தில் விலைமகளாய் மாறிய பிரமிளா என்பவளின் வாழ்க்கைச் சூழலே பதிவு செய்யப்பட்டுள்ளது. பெண்மைக்கு அழகானதாகவும், அரணானதாகவும் போற்றப் பெறுவது கற்புத்திறமே ஆகும். ஆனால் 'யாருக்கும் வெட்கமில்லை' என்னும் நாடகத்தில் பிரமிளா என்னும் பெண் கதாப்பாத்திரம் தன் பெண்மையையே விலைபொருளாக்கி, குடும்பத்தின் வறுமைநிலையை மாற்றுகின்ற சூழல் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆண்-பெண் படைப்பின் நெளிவு-சுழிவுகள், பாலியல் உணர்வின் பாற்பட்டதாக அடிப்படையாகவே சமுதாயத்தில் அமைந்துவிட்டதை இந்நாடக நூல் கூறுகின்றது.

**பிரமிளா என்னும் பெண் கதாபாத்திரம்**

'யாருக்கும் வெட்கமில்லை' நாடகநூலின் ஆசிரியர் சோ, பிரமிளா என்னும் பெண்கதாப்பாத்திரத்தை மையப்படுத்துகிறார். பாலியல் தொழிலில் ஈடுபட்ட குற்றத்திற்காக பிரமிளாவைப் போலீசார் கைதுசெய்து அழைத்து வருகையில், அப்பாதுரையின் மகனாகிய வேணு தன் வழக்கறிஞர் தொழிலில் முதன்முறையாக ஒரு வெற்றியேனும் காணவேண்டும் என்பதற்காக அவளை ஜாமீனில் அழைத்து வருகிறான். பிரமிளாவை ஜாமீனில் அழைத்து வந்த வேணு பிரமிளாவிடம் அவளது ஊர், வீடு முதலியவை எங்கே உள்ளதெனக் கேட்கின்றான். தனக்கு அப்படி நிலையான ஓர் ஊரோ, வீடோ இப்போது இல்லையெனக் கூறுகிறாள்.

பிரமிளாவை ஜாமீனில் தான் வெளியே எடுத்த காரணத்திற்காகவும், அவ்வழக்கில் தான் வெற்றிபெற வேண்டும் என்பதற்காகவும் தன்வீட்டிற்கு அழைத்துச் செல்வதாக முடிவெடுக்கிறான். பிரமிளா எதிர்பாராதவிதமாக வேணுவின் வீட்டில் தன் வாழ்வோடு தொடர்புடைய பிரச்சினைகளை எதிர்கொள்கிறாள். வேணுவின் அம்மா ராஜலெட்சுமி பிரமிளா மோதிரத்தைத் திருடி எடுத்து வருவதாகக் கருதிக் கொண்டு கேட்க, அம்மோதிரம் தன்னுடையதுதான் என்கிறாள். அந்த மோதிரத்தின் முகப்பில் வரையப்பட்டிருக்கும் சுந்தரம் தன்னைக் காதலித்து ஏமாற்றி விட்டதாகவும், அவன் தனது நினைவாகவே இம்மோதிரத்தை அணிவித்ததாகவும், அதற்குப் பின்னரே தான் பாலியல் தொழிலுக்கு வந்ததாகவும் ராஜலெட்சுமியிடம் கூறுகிறாள். ஆனால் ராஜலெட்சுமி சுந்தரம் தனது மகன்தான் இவளது இழிநிலைக்குக் காரணம் என்றறிந்து இரக்கம் கொள்ளுகிறாள். அப்பாதுரையின் குடும்ப நண்பராகிய ரங்கநாதன் அவரது வீட்டுக்கு வரும்போது எதேச்சையாகப் பிரமிளாவைப் பார்க்கிறார். அவளொரு விளைமகள் எனவும், தானே அவளோடு ஒருமுறை இன்பம் கண்டுள்ளதாகவும் கூற குடும்பத்தினர் அத்தனைப் பேரும் அவளை வெறுப்பாகப் பார்க்கின்றனர்.

பிரமிளாவை வீட்டைவிட்டு வெளியேற்ற முடிவெடுக்கின்றனர். ஆனால் வேணுவின் வழக்கறிஞர் தொழிலில் முதற்படியையேனும் அவன் எட்டவேண்டும் என்பதற்காக அவர்களது வீட்டிலேயே பிரமிளாவைத் தங்க வைக்கின்றனர். வெளிநாடுகளுக்குச் சுற்றுலா சென்றிருந்த சுந்தரம் வீடுதிரும்ப, அங்கே, தான் முன்பு ஏமாற்றி அனுப்பிய பழைய காதலியாகிய பிரமிளாவைப் பார்த்து அதிர்ச்சி அடைகிறான். அவளை வீட்டைவிட்டு வெளியேற்றுமாறு பல்வேறு நிலைகளில் வாதாடுகிறான். ஆனால், ராஜலெட்சுமி அம்மாவோ பல்வேறு விதமான மனப்போராட்டங்களுக்குப் பிறகு பிரமிளாவைச் சுந்தரத்திற்கு மணமுடித்து வைப்பதாகத் தீர்மானிக்கிறாள். அம்முடிவை ஏற்றுக் கொள்ளாத சுந்தரம் வீட்டில் ஆள்யாரும் அற்ற நிலையில் அவளைத் தற்கொலை செய்து கொள்வதாகக் கடிதமெழுதி வைத்துவிட்டு ஊரைவிட்டே ஓடிவிடச் சொல்கிறான். ஆனால் பிரமிளா வேணுவுக்காக நீதிமன்றத்தில் வாதத்தை எதிர்கொள்கிறாள். பிரமிளா குற்றம் புரிந்தது உறுதிப்படுத்தப்பட்டு ஆறுமாத காலங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறாள். அத்தண்டனை தனக்குக் குறைவென்றும் தான் மரணதண்டனையை ஏற்க விஷமருந்தி விட்டு வந்ததாகவும் கூறிக்கொண்டு இறந்து விடுகிறாள்.

**பிரமிளாவின் அவலத்துக்குச் சமுதாயம் காரணமான சூழல்**

பிறப்பில் புனிதமிக்கதாகக் கருதப்படுவது பெண்மையாகும். ஆனால் அப்பெண்மைக்கான மதிப்பு மரியாதை எல்லா நிலைகளிலும்

கிடைக்கிறதா என்றால், இல்லை என்பதுதான் முடிவான வாதம். தன் தாய் தந்தையரை இளம்வயதிலேயே இழந்துவிட்ட பிரமிளா, அவளது பேரன்பிற்குரிய சித்தி வீட்டில் வாழ்வதும், அவளது சித்தப்பா இறந்ததனால் தன் தம்பிகளைப் படிக்க வைக்கும் பொறுப்பு தனக்கிருப்பதாகவும் நினைத்து பணம் சம்பாதிக்க முயலுகிறாள். இது சாதாரணக் குடும்பத்தில் பிறந்த பெண்களின் வறுமை நிலையையும் அவர்களைச் சுற்றியிருக்கும் பிரச்சினைகளையும் பிரமிளா என்னும் பெண் குறியீட்டினால் உணர்த்துகின்ற இடமாக இந்நாடகத்தில் அமைந்துள்ளது.

புதிதாக ஒரு வீட்டில் தங்கும் பெண்ணை எத்தகைய நோக்கோடும் ஐயத்தோடும் இந்தச் சமூகம் பார்க்கும் என்பதை இந்நாடகம் படம்பிடித்துக் காட்டுகின்றது. பணக்காரர்களின் போக இச்சைக்குச் சுயசம்மதத்தோடு பந்தி பரிமாறப்படும் பலியாடுகளாக விலைமகளிர் உள்ளனர் என்ற அவர்களது வாழ்க்கைநிலை பேசப்படுகிறது. அப்பாதுரை குடும்பத்தின் பணக்கார நண்பராகிய ரங்கநாதன் பிரமிளாவோடு சுகம் துய்த்ததாகச் சொல்லுவது மகள் வயதில் பார்க்கவேண்டிய ஒருத்தியை தன் இச்சைக்கு இரையாக்கியது போன்ற கொடுமைக்கு நிகரானது.

காதல் என்னும் போர்வையில் பெண்ணை இன்பப் பொருளாகப் பயன்படுத்திக் கொண்டு பின் கால்செருப்பைப்போல் கழற்றிப் போட்டுவிட்டுப் போகும் ஆண்களின் இரக்கமற்ற தன்மையை சுந்தரம் என்னும் கதாப்பாத்திரத்தின் வழியாகச் சொல்லுகிறார். விலைமகளிர் உருவாவதற்கு அவர்களைச் சுற்றியிருக்கிற சூழலும், பெண்களைப் போகப் பொருளாகப் பார்க்கும் ஒருசில ஆண்களும் காரணம் என்பதை மறுபடி ஒருமுறை சோவின் நாடகம் மனதுக்குள் அசைபோட்டுப் பார்க்க வைக்கிறது.

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக:-**

**8 (அ) சீர்திருத்தச் சுவடே இல்லாமல் இருந்த பிற்போக்குச் சமுதாயத்தை முத்துப்பட்டன் காட்டுவதை விளக்குக.**

முனைவர் நா. சுலோசனா

காதல் உணர்வு, சாதி, மதம், மொழி இனம் ஆகிய வேறுபாடுகளைக் கடந்தது ஆகும். காதலர்கள் இந்த வேறுபாடுகளைக் கடந்து ஒன்றாக இணைந்து வாழ்க்கை நடத்த விழைவது இயல்பாகும். தடைகளை உடைத்தெறிந்துவிட்டு இணைந்து வாழ்ந்த காதலர்களின் வாழ்க்கை இலக்கிய வடிவம் பெறுவது இயற்கையே. ஆனால் இத்தகைய காதலர்களைப் பற்றிய ஏட்டிலக்கியச் சான்றுகள் மிகுதியாகக் கிடைக்கவில்லையென்றாலும் நாட்டுப்புற இலக்கியச் சான்றுகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. பண்டைய சமுதாயத்தில் கலப்புத் திருமணம் புரிந்து கொண்டு வாழ முயன்றவர்களின் நிலையைப் புரிந்து கொள்வதற்கு நாட்டுப்புறக்கதைப் பாடல்கள் பெரிதும் துணை புரிகின்றன. அந்த வகையில் அமைந்ததுதான் முத்துப்பட்டன் கதையாகும்.

**கலப்புத் திருமணம்**

சங்ககாலத் தமிழ்ச் சமுதாயத்தில் தொழில் பிரிவுகள் இருந்ததேத் தவிர சாதிப் பிரிவுகள் இல்லை. ஆரியர்கள் வரவுக்குப் பின் இந்நிலையானது மெல்ல மாறத் தொடங்கியது எனலாம். பல்வேறு சாதிகளும் அச்சாதிகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுகளும் தீண்டாமையும் தோன்றி வளர்ந்தன. சாதிக் கட்டுப்பாடுகளும் மிகுந்தன. சாதிக்கட்டுபாடுகளை மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். பல்லவர் காலத்திற்குப் பின் இந்நிலை மாற்றம் பெறத் தொடங்கியது. சமுதாயச் சாதிக் கட்டுப்பாடுகள் மீறி நடைபெறும் திருமணங்கள் கலப்புத் திருமணங்கள் எனப்பட்டன. தந்தை பெரியாரோ கலப்புத்திருமணத்தை 'சீர்திருத்த மணம்' என்றே கொள்கிறார்.

**முத்துப்பட்டன் கதை**

முத்துப்பட்டன் ஒரு பிராமணன், வாலப்பகடை என்ற அருந்ததியனின் மகளிரான பொம்மக்கா, திம்மக்கா ஆகியோரைக் காதலித்து அவர்களை மணக்க விரும்பினான். இதனை அறிந்த அவன் சகோதரர்கள் அவனைக் கொலை செய்ய முயன்றனர். முத்துப்பட்டன் அவர்களிடமிருந்து தப்பிக்கிறான். வாலப்பகடை விதித்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு அவன் மகளிரை மணந்தான்.

நிபந்தனைகளின்படி அவர்களின் சேரியிலேயே வசித்தான். அவர்களின் சேரியிலேயே வசித்து அவர்களின் தொழிலான செருப்புத்தைக்கும் தொழிலைச் செய்தான்.

**நாற்பது நாளைக்குள் முப்புரிநூலும் குடுமியும்**
**மெய்யுடன் அறுத்தெறிந்து எங்களைப் போல்**
**ஒப்புடன் நீர் செருப்புக்கட்டி வந்தாக்கால்**
**எப்படியாகிலும் மக்களைக் கை பிடித்துத் தாரேன்**
**ப.39.**

என பகடை விதிக்கும் நிபந்தனையை ஏற்று முத்துப்பட்டன் பகடையின் மக்களைக் கைப்பிடித்தான். சாதியக்கட்டுப்பாடுகள் மிக்கிருந்த காலக்கட்டத்தில் இத்தகைய கதையானது மிகப்பெரிய சமூகச் சீர்திருத்தத்துக்கு உட்பட்டு விளங்குவதாகக் கருதப்படுகிறது. ஒரு நாள் அருந்ததியர்களின் மாடுகள் களவாடப்பட்டன. அதனை மீட்கும் போராட்டத்தில் இருண்ட செடிக்குள் ஒளிந்திருந்த ஒருவன் பட்டனைக் குத்துகிறான். தன்னைக் குத்தியவனைக் கொன்றுவிட்டு முத்துப்பட்டன் உயிர்விடுகிறான். இது ஆதிக்க சாதியரிடம் போரிட்டு வென்ற செய்தியை இக்கதை காட்டுகிறது.

**உடன்கட்டை ஏறுதல்**

'இறந்த கணவனுடன் அவன் உடலைச் சுடுவதற்காக அடுக்கப்பட்டுத் தீ வைக்கப்பட்ட விறகுக் கட்டையில் ஏறிஉயிர் விடலே' உடன்கட்டை ஏறுதலின் விளக்கமாகும். பழங்காலத்தில் 'அழல் புகுதல்' என்ற சொற்றொடரே பயன்படுத்தப் பட்டது என்பதை,

'நல்லாள் கணவனொடு நனியழல் புகீஇ'

எனும் தொல்காப்பியத் தொடரால் அறியமுடிகிறது. இந்தக் காலகட்டத்தில் கணவனோடு தீயில் பாய்ந்து உயிர்விடும் பழக்கம் மட்டுமே இருக்கிறது என்பதைத் 'தீக்குளித்தல்' எனும் சொற்றொடரின் வழிகாணமுடிகிறது. பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படும் முத்துப்பட்டன் கதையில்,

சிங்கரவன் ராஜாவே தீப்பாயப் போறோமே
உத்தரவு தான் வேனும் உடன்கட்டை ஏறுவதற்கு (ப.47)

'உடன்கட்டையேறுதல்' எனும் சொல்லாட்சியின் வழி முத்துப்பட்டனின் மனைவியர் அவனோடு உடன்கட்டை ஏறி உயிர் விட்டனர். இவர்கள் மூவரும் மக்கள் வணங்கும் தெய்வங்களாயினர். முத்துப்பட்டன் மனைவியர் உடன்கட்டையேறத் துணிந்தபோது சிங்கம்பட்டி ஜமீன்தார் தடுக்கிறார்.

பெண்கள் கங்கள் சாகவேண்டாம் சொன்ன புத்திதனை
சற்றேகேளும்
மங்களமதாக எந்தன் வர்ண நல்ல அரண்மனையில்
சங்கடத்தை விட்டு நீங்கள் சந்தோஷமாகி இருங்கோ
பெண்டுகாள் (ப.48)

ஜமீன்தார் முத்துப்பட்டன் மனைவியரை உடன்கட்டை ஏற வேண்டாம் எனத்தடுத்ததோடு அவர்களைத் தன் அரண்மனையில் தன்னோடு சேர்ந்து வாழலாம் என்று கூறுவது ஜமீன்தார் முத்துப்பட்டன் மனைவியருக்கு மறுவாழ்வளிக்க முன்வந்ததையும் அது மரபுக்கு மாறான செயல் என்பதையும் உணரமுடிகிறது. ஆனாலும் முத்துப்பட்டன் காலத்தில் சிங்கம்பட்டி ஜமீனே தோன்றவில்லை என்னும் கருத்தும் நிலவுகிறது. சமூகத்தில் கைம்பெண்ணுக்கு நிகழும் கொடுமையை நினைத்து முத்துப்பட்டன் மனைவியர் உடன்கட்டை ஏறி இருக்கலாம். வாழ்நாளெல்லாம் கைம்பெண் கொடுமையைத் தாங்குவதை விட இச் சமுதாயத்தில் உடன்கட்டை ஏறுவது கைம்பெண்ணுக்கு ஒரு சில நிமிடமே துன்பம் எனத் தந்தை பெரியார் உடன்கட்டையேறுவதை ஆதரிக்கும் விதமாகக் குறிப்பிடுகிறார்.

சுமார் 350 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் இக்கதை சமுதாயத்தில் மிக உயர்ந்த சாதியாகக் கருதப்படும் பார்ப்பன சாதி ஆணுக்கும் மிகத் தாழ்ந்த சாதியாகக் கருதப்படும் அருந்ததியச் சாதிப் பெண்களும் இடையே ஏற்படும் காதல் பிணைப்பைக் காட்டுகிறது. அது மட்டுமல்லாமல் சாதிய கட்டுப்பாடுகள் மிக்கிருந்த காலகட்டத்தில் இக்கலப்புத் திருமணம் ஒரளவு வெற்றி பெற்ற மணமாகக் கருதப்படும் சான்று இக்கதை ஒன்றேயாகும். இக்கதை முழுவதும் கலப்புத் திருமணம் செய்து கொண்ட காதலர்களின் நிலையைத் தெளிவு படுத்துகின்றன. மக்கள் இத்தகைய கதைகளைப் போற்றி அவர்களைத் தெய்வமாகக் கொண்டாடினர். காதலர்களின் நியாயமான ஆசைகளையும் அந்த ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள அவர்கள் நடத்தும் துணிவான போராட்டங்களையும் மக்கள் உணர்ந்திருந்தனர் என்பதையே இக்கதை எடுத்துக்காட்டுகிறது.

இன்றைய காலகட்டத்தில் தமிழ்ச் சமுதாய வரலாற்றில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அரசு கலப்பு மணம் புரிந்த தம்பதிகளை வாழ்த்திப் பரிசுகளும் அவர்களின் குழந்தைகளுக்கு ஆதரவும் சலுகைகளும் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. பேரறிஞர் அண்ணாவின் தலைமையிலான அரசே இச்சாதனையைப் புரிந்தது. அதன் தொடர்ச்சியாக இன்றயவும் தொடர்ந்து மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கின்றன.

## 8 (ஆ) தொழிலாளர் பாடல்களின் சிறப்பை மலையருவி கொண்டு காட்டுக.

**முனைவர் நா. சுலோசனா**

பெர்சி. மெக்குவினின் மலையருவியில் தொழிலாளர் பற்றிய பாடல்களைச் சிறப்புற பதிவுசெய்துள்ளார். 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்று பண்டைத் தமிழ் இலக்கியம் தொழிலை உயிராக மதித்துப் போற்றியது. நாட்டுப்புற மக்களும் தொழிலை நன்கு போற்றி வளர்த்தனர். நாட்டுப்புற மக்களின் தொழில் அமைப்பானது அவர்களது நாட்டுப்புற பாடல்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. பொதுவாகத் தொழில்களைக் கிராமியத் தொழில்கள், நகரத் தொழில்கள், அரசுத் தொழில்கள், வணிகம் என்று நான்கு வகைகளாகப் பகுத்துக் கொள்ளலாம்.

### கிராமியத் தொழில்கள்

கிராமியத் தொழில்களில் உழவுத் தொழிலே முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. மீன் பிடித்தல், உப்பெடுத்தல், முத்துக்குளித்தல் போன்ற கடல் தொழில்களும், ஆடுமாடு மேய்த்தல், சாலைபோடுதல், பூப்பறித்தல், வேட்டையாடுதல், செங்கலறுத்தல், கிணறு வெட்டுதல், வண்டியடித்தல், கங்காணித்தொழில், வீட்டு வேலைகள் போன்ற பிற தொழில்களும் கிராமியத் தொழில்களாகக் கருதப்படுகின்றன.

### நகரத் தொழில்கள்

நாட்டுப்புறத்து மக்கள் தங்கள் கிராமங்களில் தங்களுக்கேற்ற வேலையோ, கூலியோ சரிவர கிடைக்காவிட்டால் அருகில் உள்ள நகரங்களுக்குச் சென்று அங்குள்ள தொழில்களைச் செய்து வருவதும் உண்டு. அத்தொழில்களுள் மில்தொழில், மின்வாரியத் தொழில், மின்சாரநிலையத் தொழில், காரோட்டும் தொழில் போன்றவை நாட்டுப்புறப் பாடல்களால் சுட்டிகாட்டப்படுகின்றன.

### அரசுத் தொழில்கள்

அரசாங்கத் தொழில் புரிபவருக்கு அதிகாரங்கள் மிகுதியாக இருப்பதால் நாட்டுப்புற மக்கள் அவர்களை அதிகாரிகள் என்று குறிப்பிடுவர். பொதுவாக அரசு வேலை பார்ப்பவர்களுக்கு நாட்டுப்புறச் சமுதாயத்தில் நல்லதொரு சிறப்பிடம் உள்ளது. ஆளுநர், மாவட்ட ஆட்சியாளர், வட்டார ஆட்சியாளர், கிராம அதிகாரி, காவல்காரர், வழக்கறிஞர் போன்றோர் அரசுத் தொழில் செய்பவர்கள் ஆவார்கள்.

**வணிகம்**

வணிகம் ஒரு தொழிலாக இருந்தாலும் அந்நாட்டின் நாகரீகச் சிறப்பை நவில்கின்ற நற்சான்றாகவும் திகழ்கின்றது. இவ்வணிகமானது தெரு வணிகம், கடை வணிகம், சந்தை வணிகம், கடல் வணிகம் என்று நான்கு வகைகளாக நாட்டுப்புறப் பாடல்கள் வாயிலாகப் பகுத்துரைக்கப்படுகிறது.

**உழவுசார் தொழிற் பாடல்கள்**

உழவுசார் தொழிற்பாடல்கள் விதை விதைக்கும் காலம் முதல் அறுவடைக்காலம் வரை பல படிநிலைகளிலும் பாடப்படுகின்றன. நடவு நடும் பொழுதும், களையெடுக்கும் பொழுதும், கதிர் அறுக்கும் பொழுதும் ஒரே வகையான பாடல்கள்தான் பாடப்படுகின்றன. அப்பாடல்கள் எல்லாம் பொதுவாக நடவுப்பாடல்கள் என்றே குறிக்கப்படுகின்றன. இவையாவும் வேலை செய்வோர் அவ்வேலையின் பளு தெரியாமல் இருப்பதற்காகப் பாடினர். இன்றும் கிராமப் புறங்களில் இத்தகையப் பாடல்களைக் கேட்கமுடிகிறது.

வேளாண்மை தொழில்களான ஏர் பூட்டுதல், ஏர் உழுதல், விதை விதைத்தல், நாற்று நடுதல், களையெடுத்தல், கதிரறுத்தல், கதிர் சுழத்தல், பொலி குவித்தல், சூடு மிதித்தல், நெல் குற்றல் ஆகிய எல்லாத் தொழில்களும் பாட்டுத்துணையுடன் நடைபெறுவதுண்டு.

தொழிற் பாடல்களை இரு பிரிவாகப் பகுக்கலாம். ஒன்று தொழில் செய்வோர் பாடுவது. மற்றொன்று தொழில் செய்வோரைப் பற்றிப் பாடுவது.

தொழில் செய்வோர் பாடும் போது தங்களின் தொழில் தன்மைகளுக்கு ஏற்ப வெவ்வேறு வகைகளாகப் பாடுவர். அவற்றுள் வேளாண்மைத் தொடர்பான பாடல்களே தலை சிறந்தனவாகத் திகழ்ந்தன.

*ஆள் ஒண்ணுக்கு ஆயிரம் நாத்து ஏலங்கிடி லேலோ*
*அழகாத்தானும் நடுவோமையா ஏலங்கிடி லேலோ* **(மலை.145)**

என்று நடவின் போது பெண்கள் பாடுவர்.

*சிம்பிசிம்பி ஐயா எடுத்துலக்கை*
*சிற்றெலும்பை நோவுதய்யா* *(மலை.121)*

என்று பெண்கள் சுண்ணாம்பு இடிக்கும் போது பாடுவர்.

*மாஞ்சோலையும் ஏலேலோ பூஞ்சோலையும் ஐலசா*
*மலையிலேதான் ஏலேலோ பார்ப்போமடி ஐலசா* **(மலை.167)**

என்று ஆண்கள் ஓடம் விடுகையில் பாடுவர்.

தொழில் செய்கையில் பாடும் பாட்டில் அத்தொழில் பற்றிய குறிப்புகளும் கூற்றுகளும் தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. சுண்ணாம்பு குத்தும் பெண்கள் அறுவடையைப் பற்றி,

*நெல்லும் புல்லும் அறுத்தறுத்து - ஏலேலக்குயிலேல்லோ*
*நேரான கட்டுக்கட்டி - ஏலேலக்குயிலேல்லோ (மலை.122)*

என்று பாடுகின்றனர்.

தொழில் செய்வோருக்கும் களைப்பு நீங்க வேண்டும் என்பது தான் முக்கியம். எனவே தனக்குத் தெரிந்த பாட்டையெல்லாம் பாடுவது உண்டு. ஆகையால் தான் இப்பாடல்கள் வாய்மொழிப் பாடல்களாகச் சிறப்பிடம் பெற்றன.

சாந்து இடிப்பவர் பாட்டு

வீடுகளுக்குத் தளம் போடும்பொழுது சாந்து இடிப்போர் பலர் சேர்ந்து பாடுவதுண்டு. இத்தொழில் நீண்ட நேரம் நடைபெறும் தொழிலாகும். ஆதலின் பாடல்களில் வருணனைகளும் பல பொருள் அடுக்கி வருவதும் நீடித்துக் கொண்டே செல்லும் தன்மை யுடையனவாக இருக்கின்றன. ஒருவர் பாட மற்றவர் 'ஏலங்கிடிலேலோ' என்ற ஒலியைச் சேர்ந்து எழுப்புவர். அவர்கள் பாடும் பாடலுக்குச் சாந்து குத்துவது இனிய தாளமாக அமையும். சாந்துப்பாடலொன்றில் துரைமகன் ஒருவன் வரும் வண்டி மட, மட, தட, தட, திடு, திடு, கட, கட, பட, பட என்ற ஒலிகளோடு வருவதாகப் பல வரிகள் வருகின்றன. இதே போன்று குதிரையை விவரித்து மட்டக்குதிரை, குட்டக் குதிரை, பொட்டைக் குதிரை, தட்டக் குதிரை, ரெட்டைக் குதிரை என்று பல குதிரைகளாக்கிப் பல பாடல்கள் வருகின்றன.

*கட கடண்ணு வருதடி - ஏலங்கிடி லேலோ*
*கல கலண்ணு வருதடி - ஏலங்கிடி லேலோ*
*பட படண்ணு வருதடி - ஏலங்கிடி லேலோ*
*பலே பலேண்ணு வருதடி - ஏலங்கிடி லேலோ*
*மட்டக்குதிரை மாட்டிக்கிட்டு - ஏலங்கிடி லேலோ*
*மாஞ்சு மாஞ்சு வருதடி - ஏலங்கிடி லேலோ*
*குட்டக்குதிரை குதிச்சுக்கிட்டு - ஏலங்கிடி லேலோ*
*கூடிக்கூடி வருதடி - ஏலங்கிடி லேலோ (மலை.126)*

குதிரைகளின் வருகையை இப்பாடலடிகள் சுட்டிக்காட்டுகின்றன.

தொழிலாளர் பாடல்களில் சலை அமைப்போர், புகைவண்டியில் பாதை அமைப்போர், மின்சாரம் செல்லப் பாதை அமைப்போர், துறையில் துணி துவைப்போர், சமைப்போர் ஆகியோர் பாடும் பாடல்கள் உண்டெனினும் அவை குறைவாகவே கிடைத்திருக்கின்றன.

## 8 (இ) சிறுவர் உலகம் குறித்த மலையருவிப் பாடல்களின் சிறப்புகளை எடுத்துரைக்க

**முனைவர் கோ. விசயராகவன்**

குழந்தைகளின் உலகம் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும் அஃறிணை உயிர்களோடு பேசும் குழந்தைமொழியில் காணும் இன்பம் பெரியவர்களிடம் பேசுவதால் பெறவியலாதது. குழந்தைகள் சொற்களை நீட்டி ஒளிப்பு செய்து பாடும் தன்மைமிக்கவர்கள். குழந்தைப் பாடல்கள் இருநிலைகளில் அமைகின்றன. அவை,

1. குழந்தைகளே பாடுவன
2. குழந்தைகளுக்காக மற்றவர்கள் பாடுவன

என்பனவாகும். முதன் முதலாய் உலக நிகழ்வுகள் யாவற்றையும் வியந்து பார்க்கும் ஒரு குழந்தைக்கு அவ்வவற்றைப் பெயர்சொல்லிச் சுட்டும் போது குழந்தைப் பாடல்கள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. வண்ணம் மிக்க கிளையைப் போன்ற குழந்தையே நீ சாய்ந்தாடு என்று கூறி இன்னும் அன்னக்கிளி, ஆவாரம்பூ, குத்துவிளக்கு, கோயில்புறா, மயில், குயில், மாடப்புறா என்றெல்லாம் வருணித்து குழந்தையைச் சாய்ந்தாடச் சொல்லும் பாடல் எளிய ஓசையாலும் எளிய வார்த்தைகளாலும் நயமுடன் விளங்குகின்றது.

*சாய்ந்தா டம்மா சாய்ந்தாடு*
*சாயக் கிளியே சாய்ந்தாடு*
*அன்னக் கிளியே சாய்ந்தாடு*
*ஆவாரம் பூவே சாய்ந்தாடு*
*குத்து விளக்கே சாய்ந்தாடு*
*கோயில் புறாவே சாய்ந்தாடு*
*மயிலே குயிலே சாய்ந்தாடு*
*மாடப் புறாவே சாய்ந்தாடு*

என்னும் பாடல் இதற்கு எடுத்துக்காட்டாய் அமைகின்றது. குழந்தைகள் கண்ணாமூச்சி விளையாடுகின்றபோது பாடுகின்ற பாட்டு அவர்களின் விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிக்கும் விதமாகத் திகழ்கிறது. இதில் பொருளில்லாத பலசொற்களும் குழந்தைகளைக் குதூகலப் படுத்துவதற்காக அமைந்து காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

**தத்தக்கா புத்தக்கா-தவலைச் சோறு**
**நெற்றிமா நெருங்கமா-பச்சை மரத்திலே பதவலை கட்ட**

என்னும் குழந்தைகளின் கண்ணாமூச்சி வாய்மொழிப் பாட்டில்

பொருளுக்காகப் பயன்படுத்தாமல் இனிய ஓசைக்காகச் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதை உணரலாம்.

### பலிஞ்சடுகுடு விளையாட்டுப் பாடல்

குழந்தைகள் ஆர்வமுடன் விளையாடும் ஒரு விளையாட்டு பலிஞ்சடுகுடு விளையாட்டு ஆகும். இவ்விளையாட்டை ஆடும் போது அவர்கள் பாடுகின்ற பாட்டு இனிமை நிறைந்தது. ஆனால் அந்தப்பாட்டுக்குப் பொருளென்ன என்று பார்ப்பதனால் எவ்வித பயனும் இல்லை.

*கொத்துக் கொத்து ஈச்சங்காய்*
*கோடாலி ஈச்சங்காய்*
*மதுரைக்கு போனாலும்*
*வாடாத ஈச்சங்காய்*
*ஈச்சங்காய் ஈச்சங்காய்*

எனுமாறு குழந்தைகள் தங்களுக்குள்ளேயே மீண்டும்மீண்டும் சொல்லி மகிழத்தக்க வார்த்தைகளால் பாடல் அமைந்திருக்கின்றது.

### கழங்காடல் விளையாட்டுப் பாடல்

பெண்கள் கழங்காடல் என்னும் ஆட்டத்தை ஆடுவார்கள். கல்லாங்காய் விளையாட்டு என்றும் இவ்விளையாட்டு குறிக்கப்பெறும். பெதும்பைப் பருவத்துப் பெண்கள் கழங்கு விளையாடுவதாகவும் ஒன்று முதல் ஏழு வரையில் எண்ணிக்கை வரும்படியான பாடல்களைப் பாடுவதாகவும் புலவர்கள் உலா என்னும் பிரபந்த இலக்கியத்தில் குறித்துள்ளனர்.

*கொக்குச்சிக் கொக்கு*
*ரெட்டை கிலாக்கு*
*மூக்குச் சிலந்தி*
*நாக்குலா வரணம்*
*ஐயப்பன் சோலை*
*ஆறுமுக தாளம்*
*ஏழுக்குக் கூழு*
*எட்டுக்கு முட்டி*
*ஒன்பது கம்பளம்*
*பத்துப்பழம் சொட்டு*

இதில் இரண்டு முதல் பத்து வரையில் எண்களின் பெயர்கள் மறைமுகமாக உள்ளன. ரெட்டை, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து என்பன வெளிப்படையாக எண்ணும் எண்ணுப் பெயர்களாக இருக்கின்றன.

**வினாவிடைப்பாடல்**

சிறுவர் உலகத்தில் வினாவிடைப் பாடல்களாக ஐந்து பாடல்கள் காணப்படுகின்றன. இரண்டு குழந்தைகளில் ஒருவர் கேட்க, மற்றவர் விடையளிப்பது போன்று நீண்டு வளரும் பாட்டு இதுவாகும். சொன்ன வார்த்தையின் முற்பகுதியைக் கேள்வியாய்க் கேட்க, அதற்கு விடைசொல்ல, அந்த விடையின் முற்பகுதியை மீண்டும் வினாவாகக் கேட்க இவ்வுரையாடல் நீண்டுகொண்டே போகும்.

> ***ஒடு ஒடு***
> ***என்ன ஒடு? நண்டோடு***
> ***என்ன நண்டு? பால்நண்டு***
> ***என்ன பால்? கள்ளிப்பால்***

எனுமாறு விளாவிடைப்பாடல் சிறுவர் உலகத்தில் நயமுடன் அமைந்துள்ளது. நிலாப்பாட்டு, வேடிக்கைப் பாட்டு இவையும் தொகுக்கப்பட்டுக் குழந்தைகளுக்குக் குதூகலமூட்டி ஆற்றுப் படுத்துவதாக மலையருவிப்பாடல்களின் சிறுவர் உலகம் சார்ந்த பாடல்கள் அமைந்துள்ளன.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**தரமணி, சென்னை - 600 113.**

## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| சாஸ்திரக் கோவை | 130.00 |
| திருப்பவனசைப் புராணம் | 150.00 |
| யாப்பருங்கலக்காரிகை | 150.00 |
| பொதிகை நிகண்டு | 200.00 |
| தண்டியலங்காரம் | 160.00 |
| திருக்கடம்பநாத புராணம் | 140.00 |
| அகம் புற ஆராய்ச்சி விளக்கம் | 250.00 |
| திராவிடப் பிரகாசிகை | 150.00 |
| தைலவருக்கச் சுருக்கம் | 100.00 |
| ஸ்ரீ கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் | 100.00 |
| திருவாட்போக்கிப் புராணம் | 150.00 |
| சிதம்பர சபாநாத புராணம் | 80.00 |
| திருவருட்பா இங்கித மாலை | 70.00 |
| ஓங்கார விளக்கம் | 150.00 |
| நன்னெறி பதவுரை | 40.00 |
| எல்லிசாரின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் | 210.00 |
| சரசோதிமாலை - பாகம் 1 | 80.00 |
| சரசோதிமாலை - பாகம் 2 | 140.00 |
| தமிழர் வரலாறு - பாகம் 1 | 260.00 |
| தமிழர் வரலாறு - பாகம் 2 | 270.00 |
| தமிழ் வரலாறு | 260.00 |
| குறுந்தொகை மூலமும் தி.சௌரிப்பெருமாள் அரங்கனார் புத்துரையும் | 200.00 |
| தமிழ் தமிழ் - அகராதி | 1,250.00 |
| **Tamil Literature** | **300.00** |
| **Tamil Culture 1 to 12 Volumes** | **3,200.00** |

வெ.எண்.910
தமிழ்மொழி வரலாறு பாகம் 2
விலை. ரூ.120./-
ISBN 978-93-85165-30-6
9 789385 165306